எழுத்துச் சீர்திருத்தமா? எழுத்துச் சீரழிப்பா?



தொகுப்பு
இரா. இளங்குமரன்

திருவள்ளுவர் தவச்சாலை

எழுத்துச் சீர்திருத்தமா?
எழுத்துச் சீரழிப்பா?

தொகுப்பாளன்
இரா. இளங்குமரன்

திருவள்ளுவர் தவச்சாலை
திருவளர்குடி (அல்லூர்), 620101
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

நூற் குறிப்பு

நூற்பெயர் : **எழுத்துச் சீர்திருத்தமா? எழுத்துச் சீரழிப்பா?**

தொகுப்பாசிரியர் : இரா. இளங்குமரன்

பதிப்பு : 2009

தாள் : 16 கி வெள்ளைத்தாள்

அளவு : 1/8 தெம்மி

எழுத்து : 11 புள்ளி

பக்கம் : 184

நூல் கட்டமைப்பு : இயல்பு (சாதாரணம்)

விலை : உருபா. **115/-**

அச்சிட்டோர் : ஸ்ரீ வெங்கடேசுவரா
ஆப்செட் பிரிண்டர்சு
இராயப்பேட்டை,
சென்னை - 14.

வெளியீடு

திருவள்ளுவர் தவச்சாலை

அல்லூர் 620101

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

தொ. பேசி : 0431 2685328

ஆழங்கால் பட்ட அறிஞர்களின் ஆணை

தோன்றிய நாள் தொட்டே தமிழ் செவ்வியல் மொழியாய் அமைந்து இதுகால் செவ்வியல் மொழி என நடுவண் அரசால் ஏற்கப் பட்டுள்ள நிலையிலும், ஆட்சி மொழியாகவோ பயிற்று மொழியாகவோ வழிபாட்டு மொழியாகவோ முறைமன்ற மொழியாகவோ இசைமொழியாகவோ தமிழ் தமிழ்நாட்டில் கொள்ளப்படாக் கிடை நிலையதாய் உள்ளது. இதனை, ஆட்சிமொழி முதலாக நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயம் இருந்தும், அதனைப் பற்றிய அக்கறையற்றுச், செய்ய வேண்டியதே இல்லாத எழுத்து மாற்றம் செய்வதை விடாப் பிடியாகக் கொண்டுள்ள சிலர் தொடர்செயல்,

"செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

என்னும் இரட்டைக் கேட்டையும் ஒருங்கே செய்வதாம். "தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள், எழுத்து வடிவ மாற்றத்தை இதுவரை விரும்பினார் அல்லர்! விரும்புவாரும் அல்லர்" என்பது, அவர்தம் செயற்பாட்டால் எவரும் அறிந்தது! ஆயினும், சூழ்ந்திருப்பார் அழுத்தத்தால் அவரும் ஏற்றுக் கொண்டுவிடக் கூடுமோ என்னும் அச்சம் ஆர்வலர் பலர்க்கும் உண்டாகாமல் இல்லை.

மொழியாக்கமும் தம் செயன்மைச் சீர்மையும் உட்கொண்டு, வடிவ மாற்றத்திற்கு முதல்வர் அவர்கள் இடம் கொடாமல் இருப்பது இந்நாள் கட்டாயக் கடனாம்! அதனை நோக்கித் தமிழெழுத்து வடிவ மாற்றம் குறித்த ஆழங்கால் பட்ட சில அறிஞர்களின் ஆணை மொழித் தொகுப்பும் இந்நாள் வாழ்வார் எண்ணப் பதிவுகளுமே,

"எழுத்துச் சீர்திருத்தமா எழுத்துச் சீரழிப்பா?"

என்னும் தலைப்பில் வெளிப்படும் இச்சுவடியாம். இன்னும், ‘ஐ, ஔ’ வாழ்வை ஒழித்தலே எம்வீடு பேறு என்பார் விடாப் பிடியும் தமிழியலைக் கெடுக்கும் செயலே என்பதைச் சுட்டும் சுவடியுமாம்!

பாலர் பள்ளி முதல் பயிற்று மொழியாகத் தமிழ் இருந்தாக வேண்டும் நடவடிக்கை முதலியவற்றைப் புறந்தள்ளித் தமிழ் எழுத்தின் வடிவ மாற்றத்தை – மொழிநலமே எம்நலம் என வாழ்ந்த பெருமக்கள் மொழிஞாயிறு பாவாணர், பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார், மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அன்னோர் கடிந்த எழுத்துச் சீரழிப்பை – அரசு ஏற்குமானால் ஒற்றைக்கு இரட்டைக் கேடேயாம் என்பதைச் சுட்டாமல் தீராது!

வாழிய நலனே! வாழிய நிலனே!

இரா. இளங்குமரன்

திருவள்ளுவர் தவச்சாலை
அல்லூர் 620101
திருச்சி மாவட்டம்.

உள்ளுறை

01.	உண்மை வெளிப்படுகின்றது	7
02.	தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்	14
03.	தமிழ் எழுத்து மாற்றம்	15
04.	தமிழ் எழுத்து மாற்றம்	20
05.	தமிழ் எழுத்து மாற்றம்	28
	தன்மானத் தந்தையார் கொள்கையா?	31
06.	தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தேவைதானா?	40
07.	எழுத்துச் சீர்திருத்தம் எங்கே போய்முடியும்?	42
08.	எழுத்துச் சீர்திருத்தம் தேவையா?	62
09.	தமிழில் எழுத்துச் சீர்திருத்தம்	84
10.	எச்சரிக்கை	94
11.	தமிழ் எழுத்து வரிவடிவச் சீரழிப்பு	100
12.	தமிழ் எழுத்து – சில சிந்தனைகள்	104
13.	தமிழர் அறக்கட்டளை வேண்டுகோள்	112
14.	வடிவ மாற்றம்	123
15.	இது, ஒரு குண்டா?துண்டா?	128
16.	மூச்சுக் காற்று	133
17.	‘ஐ, ஔ’ ‘அய் அவ்’ தானா?	142
18.	தமிழக அரசின் எழுத்துச் சீர்திருத்தம்	156
19.	தமிழ் ஐ, ஔ எழுத்துகள்	163
20.	ஐ, ஔ	169
21.	ஒன்றே ஒன்று – ஆனாலும் ஒரு கோடி	181
22.	பின் இணைப்பு	184

1. உண்மை வெளிப்படுகின்றது (1952)

[திரு. சித்தயோகி, சாமி சுந்தரமகாலிங்கம் அவர்கள்]

"தமிழ் முரசு" தொகுதி 6 – பகுதி 15, 16, 17 மூன்றும் சேர்ந்த வெளியீட்டில் "குடியாட்சித் தமிழ்" என்ற தலைப்பில் (பக்கம் 9–16) பல்கலைப்புலவர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் ஒரு கட்டுரை எழுதியிருக்கின்றனர். அதனால், "எழுத்து மாற்றக் கழகத்"தில் நடந்த உண்மைகள் வெளிப்படுகின்றன.

இகரத்தின் மேலே சுழித்தால் ஈகாரம் உண்டாகும்; இதனை இகர ஈகார உயிர்மெய் யெழுத்துக்களைக் கண்ணாலே காணுவார் எளிதில் அறிந்து கொள்வர். உதாரணம் கி, கீ, சி, சீ முதலியன. இவ்வுண்மையான இயற்கை உருவம் மாற்றப்பட்டு இப்போதுள்ள ஈகாரம் பழக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டதுதான் **தமிழில் நிகழ்ந்த முதல் எழுத்து மாற்றம். சம்ஸ்கிருதத்தின் கிரந்த எழுத்தே இந்த ஈகாரம்.**

எழுத்து மாற்றக் கழகத்தில் சிலர் எழுத்து மாற்றம் செய்வதில் முனைந்து பலித்த மட்டும் பார்ப்போம் என்ற கருத்துடையவர் என்பதும், பலர் எழுத்து மாற்றத்தை உண்மையில் ஆதரிக்கா தவராக இருந்தாலும் அச்சிலர் முகத்தை முறிக்கமாட்டாமல் இணங்கியும் இணங்காமலும் இருந்திருக்கிறார்கள் என்பதும் புலனாகின்றன.

'ஊ'காரத்தில் மேல் உள்ள ளகர உருவமே 'ஔ'காரத்திலுள்ள ளகர உருவமும். ளகரம் அன்று இது; ளகரத்தைப் போன்ற சிறு எழுத்து; இதனை அறியாதார் ஒகரத்திற்குப்பின் அதே அளவிலுள்ள ளகரத்தை வைத்து ஔகாரம் ஆக்கினர். அதனாலேயே குழப்பம்

விளைகிறது. இதனை உணராது, மாற்றக் கழகம் ளகரத்திற்குக் கால் வாங்கவேண்டுமென்பது தவறு. ஒகரத்தின் பக்கத்தில் அதனினும் சிறிய (உரு) ளகரத்தை வைத்தாற் போதும்.

"ஞகாரத்தை ஞா என்று எழுதினால் ணகரம் போலாகி மயக்கம் தரும்; ஊன என்பதை னை என எழுதினால் இரண்டு னகரம் போல மயக்கும்; இங்ஙனமாய் குழப்பம் நேராமலிருக்கவே ஞு, ரு, று எனவும் ஊண, ஊல, ஊள, ஊன எனவும் எழுதப் பெற்றன" என்று மெய்யான காரணம் கூறுகின்றனர் நம் மீனாட்சிசுந்தரனார். அதனை அடுத்து அவர், "இக்காலம் குழப்பம் நேராது" என்பது வியப்பே! குழப்பம் எப்படி நேராது என்பது விளக்கப் பெறவில்லை.

மாற்றக் கழகத்தின் பலர் சொல்லுக்கு இணங்க ஈகாரத்தைப் பண்டைய இயற்கை உருவமாக மாற்ற இணங்கின போதிலும் இகர ஈகார உயிர்மெய் உருவங்களை யெல்லாம் இருந்த உருவத்தில் மாற்ற முனைந்தனர். "இப்போதுள்ள இகர ஈகார உயிர்மெய் உருவங்களே ஈகார மாற்றத்தைக் காட்டிக் கொடுத்தன; ஆதலின் அவைகளையே மாற்றி ஒழிப்போம் என முற்பட்டனர் அச்சிலர். அப்பலரும் ஒருவாறு அதற்கு இசைந்தவர் போலத் தென்பட்டனர். உடனே அச்சிலர் உகர ஊகாரங்களையும் கிரந்த உருவமாக்க வேண்டும் என்று கூறினர். நமது மீனாட்சி சுந்தரனாரவர்கள், "இகர ஈகார மாற்றம் செய்ய வேண்டுமென்று முடிவானவுடன் உகர ஊகார மாற்றத்தையும் செய்ய வேண்டும் என்று ஒருசிலர் மன்றாடினர். இவ்வாறு செய்வது தமிழை முழுதும் வடமொழி கிரந்த வடிவில் அமைப்பது போலாம் எனப் பலர் உள்ளம் உருகி நைந்தனர். அவர்கள் கூறுவதனை ஒப்புக் கொள்ளாதவரும் அவர்கள் உருக்கத்தினை மறக்க முடியாது. இன்று தமிழ்நாடு இருக்கும் நிலையில் இந்தப் பூசலில் இறங்குவது, "குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொள்வதாக முடியும்" என்று குறித்ததோடு நிற்காமல், "இகர ஈகாரச் சீர்திருத்தத்தினைப் படித்துப் பழகக் காலமும் வேண்டும்; உகர ஊகாரச் சீர்திருத்தமும் உடன்வந்திருந்தால் சீர்திருந்திய எழுத்துக்களைப் படிப்பது அருமையில் அருமையாகி முடிந்திருக்கும், எதிர்ப்பும் வலுப்பெற்றிருக்கும்" என்றும் தம் உண்மைக் கருத்தினை வெளியிடுகின்றனர். ஆதலின் இவ்வெழுத்து மாற்ற முயற்சியில்

ஈடுபட்டு மன்றாடிய சிலர் கருத்து தமிழ் எழுத்துக்களைக் கிரந்த எழுத்துக்களாக்கிச் சிதைக்க வேண்டுமென்பதுதான் வெளிப்படை. அச்சிலர் மிகவும் செல்வாக்குப் பெற்ற சிலர்; அவர்களுடைய சூழ்ச்சியை முற்றிலும் உணர்ந்த பலர், "இவ்வாறு செய்வது தமிழை வடமொழிக் கிரந்த வடிவில் அமைப்பது போலாம்" என உள்ளம் உருகி நைந்தனரே அன்றி வேறு செயல் இல்லாதிருந்திருக்கின்றனர். அதனாலேயே அவர்கள் இகர ஈகார மாற்றத்திற்கு இசைந்தது போல அச்சிலரைக் கொண்டு 'இப்போதே அம்மாற்றத்தைச் செய்ய வேண்டும்' என்று அரசாங்கத்துக்கு எழுதச் செய்திருக்கின்றனர். ஆனால், அச்சிலர் உகர ஊகார மாற்றத்தை வற்புறுத்தாமல் விட்டதற்குக் காரணம் நம் மீனாட்சிசுந்தரனார் கூறுகிறபடி, "எதிர்ப்பு வலுப்பெற்றுவிடும்; இன்று தமிழ்நாடு இருக்கும் நிலையில் இந்தப் பூசலில் இறங்குவது குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொள்வதாக முடியும்" என்ற அச்சமே.

"எழுத்து மாற்றம் என்பது தமிழில்தான் புதிதாக இந்தியாவில் எழுகின்றது. தமிழனது தனிப்பெருமை அது. மாற்றக்கூடும் என்ற மனப்பான்மை வந்ததே இங்குள்ள சிறப்பு; இது வாழ்க!" என்று நமது மீனாட்சிசுந்தரனார் கூறுகின்றார். ஏன்? உலகிலேயே என்று சொன்னால் வாய் வலிக்கவா செய்யும்? உலகத்திலே வேறு எம்மொழியாளரும் ஒருவரோடொருவர் காணும் போது அவரவர் தாய்மொழியிலேயே பேசி அளவளாவுவர்; உற்றாருக்கும் நண்பினருக்கும் கடிதங்கள் தம் தாய்மொழியிலேயே எழுதி யனுப்புவர்; ஆனால், உலகத்திலே முதன்முதலாகத் தோன்றிய மக்களின் நேர் இனத்தவராகிய தமிழர் உலகத் தாய்மொழியாகிய தமிழ்மொழியே தமது தாய்மொழியாக இருக்க, அதனை வாய்குளிரப் பேசியும் கைகுளிர எழுதியும் மகிழாமல், புறமொழியிலேயே பேசி எழுதுவதைத் தமக்கு உரிய தனிப்பெருமையாகக் கருதி மகிழ்வார்கள். "தமிழிலே பேசத் தெரியாது; ஆங்கிலத்திலேதான் பேசுவேன்" என்று பெரிய பெரிய பட்டம் பெற்றவர்கள் பெரும் கூட்டங்களிலே பெருமை பாராட்டிய காலமும் இருந்தது. தங்கள் நாட்டுத் தட்ப வெப்ப நிலைக்கேற்பப் பண்பட்ட முன்னோர் நாகரிக முறைகளை யெல்லாம் கைவிட்டுப் புதிய மேலைநாட்டு நடை உடை தலைமுறைகளையெல்லாம் கைக்கொண்டு தருக்கி நிற்பர்

இக்காலத் தமிழர். “தனித் தெலுங்கு மாகாணம் அமைக்க வேண்டும்; சென்னையையும் செங்கற்பட்டு மாவட்டத்தையும் கைப்பற்ற வேண்டும்” என்று தெலுங்கர் அனைவரும் பெருங்கிளர்ச்சி செய்ய, மாயோகியர் போல, “இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன?” என்று வாளா தூங்கி இருக்கும் தனிப்பெருமையினர் தமிழர்! விரிக்கிற் பெருகும். இங்ஙனமாகவே உலகத்தினர் அனைவரும் செய்ய எண்ணாத எழுத்து மாற்றத்தைச் செய்து தமிழை அழிக்க வேண்டு மென்று சிலர் கச்சை கட்டிக் கொண்டு நிற்க, “மண்டு எரிதான் வாய்மடுப்பினும் கண்துயிலும் மாசுணம்” போல இன்று இருக்கும் தனிப்பெருமை படைத்தனர் பேதைத் தமிழர். க்ஷ, ஷ, ஸ, ஹ, ஜ—வைச் சேர்த்துப் பாடங்கள் எழுதினால் அல்லாமல் முதற்பாடப் புத்தகத்தை ஏற்றுக் கொள்ளமாட்டோம்” என்று பாடப்புத்தக ஏற்புக் கழகத்தார் (Text Book Committee) கூற, மானத்தைப் பெரிதென்று பாராட்டித், “தமிழ்ப்பாடப் புத்தகத்துக்கும் இந்தக் கிரந்த எழுத்துக்களுக்கும் என்ன தொடர்பு?” என்று வாதிட்டு உண்மையை நிலைநாட்ட வலுவில்லாமல் அவ்வாணைப் படியே நடந்து வயிறு வளர்க்கும் தனிப்பெருமையினர் இக்காலத் தமிழர். “நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே” என்று வாதாடியதாகக் கூறும் தனித் தமிழ்ப்பெருமை எங்கோ ஓடிப் பறந்துவிட்டதே! “இவர்கள் விழித்தெழுந்து தமது தமிழ்த்தாயை உருக்குலைவு செய்யப் பெறாமற் பாதுகாத்துத் தனித்தமிழ் நாட்டாட்சி பெற்றுத் திகழ்ந்தோங்கும் நற்காலம் எப்போது வருமோ? தமிழ்த்தாயே” என யாம் ஏங்கா நிற்கின்றோம்.

நம் மீனாட்சி சுந்தரனாரோ, “மேலும் மாற்றங்கள் வரவில்லையே என யானும் ஏங்குகின்றேன்; அதனைப் பின்னர்த் தெரிவிக்கிறேன்” என ஏங்கா நிற்பர். இஃது எமக்கு ஒரு பண்டைய நிகழ்ச்சியை நினைப்பூட்டுகின்றது. முன்னர் உருசியா (RUSSIA)—வில் பெரும்பஞ்சம் வந்து நாடு அல்லோல கல்லோலப்பட்டுப் போயிருந்தது; அப்போது பெரியார் இலெனின், “இன்னும் ஒரு பெரும்பஞ்சம் வந்தாலல்லவோ நலம் உண்டாகும்” என ஏங்கினார். அவர் நண்பர் விளக்கம் வினாவ, இலெனின், “பஞ்சத்தினாலே விளையும் துன்பங்களினால் மோதுண்ணும் போதுதான் மக்களுக்கு நல்லறிவும் உணர்ச்சியும் உண்டாகும்”

என்று கூறினார். அடுத்துப் பஞ்சமும் வந்தது; உடனே இலெனின் உருசிய மக்களுக்குத் தலைமை தாங்கி அவர்களைக் கொடுமைகளினின்றும் விடுவித்து நலம் கண்டார். அங்ஙனமே, “தமிழ்மொழிக்கு இத்துணை மாற்றங்கள் வந்தபோதிலும், தமிழ்மக்களுக்கு நல்லறிவும், தமது தாயைப் பாதுகாக்க வேண்டும் என்னும் நல்லுணர்ச்சியும் வரவில்லையே; இன்னும் பல புரட்சிகரமான மாற்றங்கள் வந்தாலாவது நலம் விளையுமா? அப்போதாவது தமது தாயைக் காக்க முன் வருவாரா தமிழ்மக்கள்?” என்று நம் மீனாட்சிசுந்தரனார் ஏங்குகின்றனர்.

ஒரு சிறந்த தமிழ்ப் பெரியார், “f என்ற ஒலியைக் காட்டும் எழுத்து தமிழில் இல்லையே. அதனால் f என்ற எழுத்தை நாம் சேர்த்துக் கொள்வோம்” என்று சொல்லியதோடு அங்ஙனமே தமது பத்திரிகையில் எழுதவும் தொடங்கினார். ஒரு நண்பர் அவரிடம் “இது (f) ஆங்கில எழுத்தாயிற்றே!” என்று கேட்டார். அதற்கு அப்பெரியார், “ஜ, க்ஷ, ஸ, ஷ, ஹ தமிழ் எழுத்துக்களா? அவை வடமொழிக் கிரந்த எழுத்துக்களல்லவா? அவற்றைத் தம் தாய்மொழியாம் தமிழ்மொழியோடு கீரையையும் மயிரையும் கலந்து வைப்பது போலக் கலந்து எழுதும் தமிழன் f என்ற ஆங்கில எழுத்தை மட்டுமா? வேறு பிரெஞ்சு முதலிய எழுத்துக்களையும் கூடச் சேர்த்துக்கொண்டு, ‘பார்த்தீர்களா? என் பரந்த நோக்கத்தை’ என்று பெருமை பாராட்டி மகிழ்ச்சி பூப்பான்! தமிழனது தனிப்பெருமை இது! இப்படி எழுதினாலாவது உணர்ச்சி உண்டாகாதா என்றுதான் f எழுத்தைச் சேர்த்தேன். f மட்டுமா? எந்த ஒலியையும் தமிழ் வரிவடிவில் எழுதிக் காட்டலாமே! தம் மூதாதையருடைய முதிர்ந்த அறிவுச்சிறப்பை ஆராய்ந்து பார்க்கும் அறிவும் பொறுமையும் இல்லாமல் தான்தான் உலகில் ஒப்பற்ற புலவன் என்று தருக்கி நிற்பவன் இன்றைய தமிழன்!” என்று கூறி அன்று முதல் f ஒலியை ஃப் என்ற தமிழ் எழுத்துக்களினால் எழுதி வருகின்றார்.

“வரி அச்சு (Linotype) முறையை எளிதாக்க எழுத்து மாற்றம் வேண்டும்” என்று எழுத்து மாற்றத்தார் கூறுகின்றனர். இஃது உண்மையன்று. வெறும் போலிக் காரணமே. சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்து என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் கூட வெளிவராத

அன்றன்றைய பின் நிகழ்ச்சி முடிவுகள் ஒரு தமிழ்ப்பத்திரிகையில் அச்சிட்டு வெளிவந்ததை யாம் அறிவோம். இப்போதுள்ள அச்சு முறையைக் காட்டிலும் மிகமிக வசதிக் குறைவானது வரிஅச்சு முறை; பிழையான ஓர் எழுத்தை எடுத்துவிட்டுச் சரியான எழுத்தை வைப்பதற்கு எவ்வளவு நேரம் செல்லுமோ அவ்வளவு நேரத்தைவிட மிகுதியான நேரமே வரியச்சில் பிழையான எழுத்துள்ள வரியையே எடுத்துவிட்டு மறுபடி புதுவரியை முழுதும் அச்சுக்கோத்து ஆக்குதற்கு வேண்டும். அதனால் நேரம், உழைப்பு, தாள் எவ்வளவு வீணாகும்? இப்போது தமிழில் கையச்சுப் பொறி (Type Writer) இருக்கிறது; அதைப் போன்ற வரியச்சுப் பொறி அமைப்பதில் என்ன தொல்லை விளையும்? முன்னரே வரியச்சுப் பொறியொன்று தமிழில் இருப்பதும் அதனால் எழுத்து மாற்றம் ஒன்றும் இல்லாமலே தமிழ்நூல்கள் அச்சிடப் பெறுவதும் இவர்கள் அறிதல் வேண்டும். மேலும் நம் மீனாட்சி சுந்தரனார், "அச்சு எந்திரத் தொழிலாளரும் இந்த உகர ஊகாரச் சீர்திருத்தம் இன்றியே எளிதில் எந்திரத்தை அமைத்துவிடலாம் என்று உறுதி கூறினர்" என்று கூறுகின்றனர். உகர ஊகாரத் திருத்தம் இன்றியே பொறியமைக்க வல்லமையுடைய தொழிலாளர் இகர ஈகாரத் திருத்தமும் இல்லாமல் அமைப்பதற்கு வல்லமை யில்லாதவராகவா இருப்பர்? மேலும் காலுக்குச் செருப்பா, செருப்புக்குக் காலா? எழுத்துக்களுக்கு ஏற்றாற் போலவே எந்திரம் அமைத்தல் வேண்டும். இந்நாட்டிலுள்ளவராலே வழிதெரிய முடியாதாயின் அமெரிக்கா, பிரான்சு, இங்கிலாந்து போன்ற பிறநாட்டு வல்லாரிடம் கலந்து தக்க எந்திரம் அமைப்பதே அறிவுடையார் செயலாகும்.

தமிழ் மக்களை விழிப்படையச் செய்த எழுத்துத் திருத்தக் கழகத்தில் இருந்த தமிழ்ப்பெரியார் பல்கலைப்புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்களுக்கும், பேராசிரியர் சேதுப் பிள்ளையவர்களுக்கும், டாக்டர் வரதராசனார் அவர்களுக்கும் தமிழ்மக்கள் நன்றி என்றும் உரியது. இக்கட்டுரையை நம் மீனாட்சி சுந்தரனாருடைய முடிப்புரையோடு நாமும் முடிப்போம். அது வருமாறு:—

"எவ்வளவோ மாற்றம் வேண்டியிருக்கலாம். உரோமன் எழுத்திலேயே எழுதி விடலாம். ஆனால், தமிழ் மிகப் பழைய

மொழி என்பதனை மறக்க முடியாது. பழைமையை அழிப்பதில் ஏன் இந்த விறுவிறுப்பு? தமிழ் எழுத்து கண்ணைக் குத்துகிறதா? கொலை செய்கிறதா? முதலாளிக்குத் துணை போகிறதா நம் எழுத்து? இன்று நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர் நூற்றுக்குப் பத்துப் பதினைந்து பேரே. விரைவான எழுத்து மாற்றமோ உரோமன் எழுத்தோ வந்தால் என்ன ஆகும்? இந்தப் பத்துப் பதினைந்து பேரும் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக மாறிவிடுவர். ஒளியை இருட்டாக்குவதா பெருமை?"

இவ்வாராய்ச்சியினால், இப்போது நமது சென்னை அரசாங்கம் செய்யத் துணிந்திருக்கும் தமிழ் எழுத்து மாற்றம் தமிழ்மொழியின் பண்பாட்டையும் மரபினையும் கெடுத்து அதனை வடமொழிக் கிரந்தமாக்கும் முயற்சியே என்பதும், அரசாங்கம் அமைத்த கழகத்திலிருந்த பேரறிஞர் பெரும்பாலோருக்கு இம்முயற்சி உடன்பாடன்று என்பதும் வெட்ட வெளிச்ச மாகின்றமை காண்க. நமது இந்திய நாட்டு அரசியற் சட்டம் பிரிவு 29 (1) ன்படி அரசாங்கம் இம்முயற்சியில் ஈடுபடுவதற்கு முற்றிலும் உரிமையற்றது; மேலும் **தமிழ்மொழியின் பண்பாட்டுக்கும் மரபுக்கும் கேடு விளையுமாறு எவர் முயன்றாலும் தடுத்துப் பண்பாட்டினையும் மரபினையும் பாதுகாத்து உதவும் கடமையே உடையது** என்ற உண்மையை நமது அரசாங்கத்துக்கு அன்புடன் எடுத்துக் காட்டி இக்கட்டுரையை முடிக்கின்றோம்.

செந்தமிழ்ச் செல்வி
சிலம்பு – உசா (26)
பரல் – ரு (5)
01.1952

2. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் (1978)

தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி, அவர் கடைப்பிடித்து வந்த எழுத்துச் சீர்திருத்தத்தைப் பின்பற்றும் முறையில் அதனை நடைமுறைப் படுத்தியுள்ளது தமிழ்நாட்டரசு.

இது பற்றித் தமிழறிஞர்களிடையேயும், இதழாசிரியர் களிடையேயும் பல கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

இப்போதுள்ள தமிழின் வரிவடிவம் பற்பல மாறுதல்களுக்குட் பட்டே வளர்ந்து வந்திருக்கிறது. எனவே, இப்பொழுது புழக்கத்திலிருக்கும் வடிவம் மேலும் திருத்தப்பட வேண்டிய அளவுக்குக் குறைபாடுடைய தன்று. அதனை மாற்றுவதால் பெரும்பயன் ஏதும் விளையப் போவதில்லை. மாறாகக் குழப்பங்களும் இழப்புகளுமே மிகுதியாகும்.

எத்தனையோ நுண்ணிய அறிவியல் துறைகளும், புதுமைக் கலைகளும் நாளும் நாளும் வளர்ந்து வருகின்றன. தமிழ் அவ்வகையில் வளம்பெற ஆவன செய்ய வேண்டியதே பெரும்பயன் விளைக்கும் அரும்பணி. எனவே, தமிழ்நாட்டரசு எழுத்துச் சீர்திருத்தத்தில் நாட்டஞ் செலுத்துவதை விட உருப்படியான ஆக்கப் பணிகளில் ஈடுபடுமாறு வேண்டுகின்றோம்.

செந்தமிழ்ச் செல்வி
சிலம்பு ருரு (53)
பரல் ச (4)
12.1978

3. தமிழ் எழுத்து மாற்றம் (1951)

தமிழ் எழுத்து மாற்றம் ஒரு சிறிதும் பொருத்தம் அற்றது என்பதை விளக்குவோம். இது வேறு எம் மொழியாளரும் செய்யத் துணியாதது; இதனால் நன்மையே இல்லை; தீமைகளே மலிந்திருக்கின்றன.

செய்யத் துணியாத முயற்சி

(1) ஆங்கில எழுத்துக்கள் இருபத்தாறே; அதனால் பல ஒலிகளை அம்மொழியில் எழுத முடியாது. ஒரு எழுத்துப் பலப்பல இடங்களிற் பலப்பல விதமாக ஒலிக்கின்றது; இதைச் சீர்ப்படுத்த ஆங்கிலர் யாரும் துணியவில்லை. பெரியார் பெர்னார்டுசா செய்த முயற்சி பயனற்றுப் போயிற்று (அவர் ஆங்கிலர் அல்லர்.) சில மாதங்களின் முன் ஆங்கிலப் பாராளுமன்றமும் தன் ஆங்கில மொழியில் ஒரு திருத்தமும் செய்யக் கூடாது என்று முடிவுசெய்து விட்டது.

(2) வடமொழியில் 573 எழுத்துக்கள் வரை இருக்கின்றன; தெலுங்கு, மலையாளம், கன்னடத்தில் வடமொழி எழுத்துக் களோடு வேறு சில எழுத்துக்களும் இருக்கின்றன; அவைகளைக் குறைக்கவோ கூட்டவோ யாரும் முயற்சி செய்யவே இல்லை. தமிழில் 247 எழுத்துக்களே உள; அவைகளைக் கொண்டே எல்லா ஒலிகளையும் எழுதிவிடலாம். தமிழ்ப் பெரியார் மறைமலையடிகளும், மாணிக்க நாயகரும் இவ்வுண்மையைத் தெளிவுறுத்தி யிருக்கிறார்கள்.

ஆதலின், தமிழ் எழுத்து மாற்றம் செய்வது இதுவரை உலகில் யாரும் செய்யத் துணியாத, சிறிதும் பொருத்தம் அற்ற முயற்சியே.

தீமைகளே விளையும்

இன்றுவரை அச்சான தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களும், புறநானூறு முதலிய சங்க இலக்கியங்களும் படிக்க முடியாத நிலைமையை அடையும். இன்றுள்ள எழுத்துக்களிலே பயின்ற மக்கள், புது முறை எழுத்துக்களிலே பழகி அறிவது கடினம்; இன்றுவரை ஒரு சிறிது படித்த முதியோர் அனைவரும், புது முறையால், படியாதவரே ஆவர். அடுத்த சில ஆண்டுகளுக்கும் பயன்படுமாறு அச்சிடப்பட்டுள்ள பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களெல்லாம் பயனற்றனவாகும்; அதனால் அப்புத்தக வியாபாரிகளுக்கு ஆயிரக்கணக்கிற் பெருந்தொகை அழிந்துவிடும். இவைகளையும் இவை போன்ற உண்மைகளையும் அரசாங்கம் எண்ணி ஆராய்ந்தல்லவா "தமிழ் எழுத்து மாற்றம் உடனே இந்த 1951 சூலை மாதத்திலிருந்து நடைமுறைக்கு வருகிறது" என்று ஆணையிட்டிருக்க வேண்டும்?

பழைய இலக்கண இலக்கியங்களைப் படிப்பவர் சிலரே; ஆதலின் அந்நூல்களைத் திரும்ப அச்சடிக்க எவரே முன்வருவர்? "வேறு சில மாற்றங்களும் செய்யவே பெறும்" என்ற பேச்சு உலவும் உண்மையால், இப்போதுள்ள மாற்றப்படிதான் நூல்களை அச்சிட எவர்தாம் முன்வருவர்?

"அச்சு மாற்றம் செய்துள்ளோம்" என, அரசாங்கம் ஆணையிட்டுவிட்டால் மட்டும் போதுமா? நடைமுறைக்கு வரவேண்டாவா? பொதுமக்களையும் தமிழ்ச்சங்கங்களையும் அரசாங்கம் கலந்த பின்னர் அல்லவா பொருத்தமான திருத்தங்கள் இருந்தால் கொண்டுவருதல் வேண்டும்? நிற்க.

பொருத்தமற்ற மாற்றம்

இப்போதுள்ள தமிழ் அச்சுப் பெட்டி (Case) யில் நூற்று முப்பத்தொரு எழுத்துக்கள் கிடக்கின்றன. அவை வருமாறு :–

அகரமுதல் ஔகாரம் முடிய உயிர்	11	உயிர்மெய் ஈகாரம்	18
ஆய்தம்	1	உயிர்மெய் உகரம்	18
மெய்	18	உயிர்மெய் ஊகாரம்	18
உயிர்மெய் அகரம்	18	உயிர்மெய் எகரம் (ெ)	01
உயிர்மெய் ஆவுக்குக் கால் (ா)	01	உயிர்மெய் ஏகாரம் (ே)	01
உயிர்மெய் ணா, றா, னா	03	உயிர்மெய் ஐகாரம் (ை)	01
உயிர்மெய் இகரம்	18	ணை, லை, ளை, னை	04

ஆக 131

இப்போது அரசாங்கம் செய்ய வேண்டும் என்று ஆணையிட்டிருக்கும் மாற்றங்களின் நிலைமை பின் வருமாறு:—

ஈ என்ற எழுத்தினை இகரத்தின் கொம்பைச் சுழித்து எழுத வேண்டும் என்பது; இதனால் ஒன்றும் குறையவில்லை. ஔகாரத்தில் உள்ள ளகரம் உருமாற்றப்பட வேண்டும் என்பது; இதற்கு அச்சுப் பெட்டியில் ஒரு குழி மிகும். ணா, றா, னா என்பவைகளையும் ணை, லை, ளை, னை எடுத்துவிட்டு முறையே ணா, றா, னா என்றும் ணை, லை, ளை, னை என்றும் அச்சிட வேண்டும் என்பதனால் ஏழு குழிகள் குறையும்; என்றாலும் இவ்வெழுத்துக்களுக்கு ஏற்றாற் போல் அவ்வக் குழிகளிலிருந்த எழுத்துக்களுக்கு ஈடாக ண, ல, ள, ற, னக்களிற் போதுமானபடி எழுத்துக்களை மிகுவிக்க வேண்டும்; அதனால் அவைகளுக்கு இயல்பாக உள்ள குழிகளை விரிக்க வேண்டும் அல்லது புதுக்குழிகள் போட்டே ஆக வேண்டும்.

இங்ஙனமேதான் காலு(ா)க்கும் சுழி(ை)க்கும் ஈடாக அவ்வவைகளைப் பெருக்கிக் குழிகளை விரிக்கவோ பலவாக்கவோ செய்வது இன்றியமையாததாகும்.

இகர உயிர்மெய்களையும் ஈகார உயிர்மெய்களையும் எடுத்துவிட்டு, அவைகளுக்கு ஈடாய் கிகர கீகாரங்களிலுள்ள ககரத்தின் தலைமேலான அடையாளங்களை மட்டும் வைத்துக் கொண்டு, ககரம் முதிலிய அகர உயிர்மெய்களுக்குப் பக்கத்திலே சேர்த்து அச்சிடுவது; இதனால் முப்பத்தாறு குழிகள் குறையும்; இரண்டு அடையாளங்களுக்கு இரண்டு குழிகள் மிகும். ஆனால் மேலே காட்டியபடி இம் முப்பத்தாறு எழுத்துக்களுக்கு ஈடாக, ககரம் முதலிய அகர உயிர்மெய்கள் சேர்க்கப் பெறுதல் வேண்டும்; அதனால் முப்பத்தாறு குழிகளும் மிக மிக விரிக்கப்படல் வேண்டும் அல்லது பக்கத்தில் முப்பத்தாறு புதுக் குழிகளில் அவ் வெழுத்துக்கள் நிறைக்கப்படல் வேண்டும். இரண்டு அடையாளங் களுக்கு அவை தனித்தனி பதினெட்டுக் குழிகளில் இருந்தவை யாதலால் மிகப் பெரிய குழிகள் அல்லது பல குழிகள் அமைத்தல் வேண்டும்.

ஆதலினாலே நாற்பது குழிகளை எடுத்துவிட்டு ஐம்பது குழிகளை உண்டாக்கவோ அல்லது அவ்வவை உள்ள குழிகளை மும்மடங்காக அகலப்படுத்தவோ வேண்டும். திருத்தம் செய்வது என்பது எளியதோர் செயலா?

மேலும் இங்ஙனம் மாற்றப்படும் நாற்பத்து மூன்று எழுத்துக்கள் இரண்டிரண்டாக வெட்டப்படுவதால் ஒவ்வோர் எழுத்துக்குப் பதிலாக இரண்டிரண்டு எழுத்துக்களைக் கோத்தல் இன்றியமை யாததாகும்.

அதனால்,
1. வேலை நேரம் இரட்டிக்கும்;
2. வேலைத் தொல்லை இரட்டிக்கும்;
3. அச்சு இடம் இரட்டிக்கும்;

அதனால் தாள் விரிந்து செலவாகிப் பணம் வீண் செலவாகும். இவைகளையெல்லாம் அரசாங்கம் ஆராய்ந்திருக்க வேண்டாவா?

பேர்தான் தமிழ் அச்சுப் பெட்டி!

மேலும் பேர்தான் தமிழ் அச்சுப் பெட்டி (Case). இன்று அதில் தமிழ் எழுத்துக்களுக்கு இருக்கும் குழிகள் 131; வடமொழி எழுத்துக்களுக்கு இருக்கும் குழிகள் 24; தமிழ் எழுத்துக்களுக்கு இருக்கும் இடத்தில் ஐந்திலொரு பங்கு இடத்தைப் பிற மொழியாகிய வடமொழி எழுத்துக்கள் அடைத்துக் கொண்டிருக் கின்றனவே! இது அரசாங்கத்துக்கும் அறிஞர் கண்ணுக்கும் புலனாகவில்லையா?

“இவ்வெழுத்துக்களைச் சேர்த்து அச்சிட்டால்தான் தமிழ்ப் பாடப் புத்தகங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்” என்ற பிழைபாட்டை நீக்க வேண்டாவா? தமிழ்ப் பெருமக்களே! விழித்தெழுந்து தமிழ்த் தாயைத் தமிழ்த் தாயாகவே வளர்க்க முன் வாருங்கள்.

உள்ள எழுத்துக்களைக் குறைக்க வேண்டும் எனக் கருதும் இப்புதுமுறை ஆராய்ச்சியாளருக்கு வேண்டத் தகாத வேண்டப் பெறாத க்ஷ, ஸ, ஷ, ஹ, ஜ ஆகிய எழுத்துக்களைச் சேர்த்து வைக்க வேண்டும் என்ற தேட்டம் எங்ஙனம் எழுந்ததோ? இந்த எழுத்துக்களைக் கூர்ந்து பார்ப்பவருக்கு இவை தமிழ் எழுத்துக்களின் கூட்டெழுத்துக்களே என்பது புலனாகும். இவைகளின் ஒலியைத் தமிழ் எழுத்துக்களாலேயே எழுதிக் காட்டுவது எளிதில் முடியும்! உண்மை இங்ஙனமாக இக்கூட்டு எழுத்துக்களுக்குத் தனி எழுத்து எதற்கு? இடம் குறைப்பதென்பது இப்படித்தானா? அறிஞரே! ஏற்றன செய்து நலம்புரிய முன் வந்தருள்க.

செந்தமிழ்ச் செல்வி
சிலம்பு உசு (26)
பரல் க (1)
09.1951

4. தமிழ் எழுத்து மாற்றம்! (1951)

[பண்டித புலவ வித்துவ ஞா.தேவநேயன், எம். ஏ.]

விடுதலை பெற்ற இந்தியாவில், தமிழ்நாடு போம்போக்கும் தமிழ்ப்புலவர் போம்போக்கும் தமிழாக்கத்திற் கேதுவாய்த் தோன்றவில்லை. தமிழதிகாரம் மெல்ல மெல்லத் தமிழறியாத பெருமாளர் கைக்கும் தமிழ்ப்பகைவர் கைக்கும் நழுவிக் கொண்டிருக்கின்றது. "ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோயிலாண்டி" என்பது போல், தமிழும் தமிழ்ப் புலவரும் எவராலும் எங்ஙனமும் மாற்றப்படற்குரியராயினர். தமிழைப் பல துறையிலும் மாற்றுவதற்கே எல்லாரும் முழுவுரிமை எய்தியுள்ளனர்.

தமிழ் வளர்ப்பிற்கு ஒரு பொதுக்கழகம் இல்லாமை

பண்டைக் காலத்தில் பாண்டி நாட்டுத் தமிழ்க்கழகம் ஒன்றே தமிழகம் முழுமைக்கும் பொதுவாயிருந்து குல மத வேறுபாடற்றுத் தமிழாக்கம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, முது நூலாராய்ச்சியும் புது நூலாக்கமுமாகிய இருவகைத் தொண்டாற்றி, தொல்லாசிரியர் நல்லாணை வழியே எவ்வகையிலும் எள்ளளவும் தமிழ்மரபு கெடாது, தமிழைவளர்த்து வந்தது. தமிழகத்திலுள்ள பெரும்புலவர் எல்லாரும் அதில் சேர்ந்திருந்தனர். பரிசளிப்பு முறையில் பாண்டியர் அவரைப் போற்றி வந்தனர். ஆரியம் தமிழகத்து வேரூன்றும் வரையும், பாண்டியர் தொன்றுதொட்டுக் கழகம் நிறுவித் தமிழை வளர்த்து வந்ததாகத் தெரிகின்றது. கடல்கோள்களால் நேர்ந்த இட வேறுபாட்டால் கழகம் மூன்றெனப்பட்டதே யன்றி, அதன் குலைவால் நேர்ந்த இடையீட்டாலன்று. மொழியும் இலக்கியமும் பற்றிய முழு அதிகாரமும் கழகத்திற்கே இருந்தது.

தற்காலமோ, அதிகாரமற்ற முறையில், தமிழை வளர்த்தற்கோ தளர்த்தற்கோ, 'மதுரைத் தமிழ்ச்சங்கம்' என்றும், 'கரந்தைத் தமிழ்ச்சங்கம்' என்றும், 'நெல்லைத் தமிழ்ச்சங்கம்' என்றும், 'சென்னைத் தமிழ்ச்சங்கம்' என்றும், பிறவாறும் , பற்பல சங்கங்கள் தோன்றி வெவ்வேறு கொள்கையும் கோட்பாடுங் கொண்டு, ஒவ்வாத முறையில் பற்பல வினைகளும் வேலைகளும் செய்து வருகின்றன. இவை போதாவென்று இன்று 'தமிழ் வளர்ச்சிக் கழகம்' என்றும் ஒன்று தோன்றியுள்ளது. இவற்றின் தொழில்களை நோக்குங்கால், குல மத கட்சிச் சார்பான தமிழ்ச்சங்கங்களாய்த் தோன்று கின்றனவே யொழிய, எல்லார்க்கும் பொதுவான தமிழ்ச்சங்கங் களாய்த் தோன்றவில்லை. அவை அங்ஙனமிருப்பின், ஒன்றாயிருக்கும்; அல்லது இணைக்கப்பட்டிருக்கும்.

இனி, அதிகார முறையில், அரசியலார் பாடப்புத்தகக் குழுவும், பல்கலைக்கழகத் தமிழ்ப்பாடக் குழுவும் உள்ளன. இவற்றால் ஒப்பம் பெறும் புத்தகங்கள் சிலவற்றில் எழுத்துப் பிழை, சொற்பிழை, இலக்கணப் பிழை இருப்பினும் இருக்கும்.

இங்ஙனம், தமிழ்ப்புலவர் குழாங்கள் பல்வேறுபட்டுக் கிடப்பதாலும், தமிழ்ப்புலமையும் தமிழ்ப்பற்றும் இல்லாதாரும் பல தமிழ்ச்சங்க வுறுப்பினராயிருப்பதாலும், சில தமிழ்ப்பெரும் புலவர்ஒரு சங்கத்திலும் சேராதிருப்பதாலும், குற்றம் பட நூலியற்றுவாரைக் குட்டுதற்கும் வெட்டுதற்கும் ஒருவருமின்மையாலும்; வரிவடிவை மாற்றுவாரும், புணர்ச்சியைத் திரிப்பாரும், செய்யுட்களைக் களைவாரும், அயலெழுத்தையும் சொல்லையும் புகுத்துவாரும், பாடவேறுபாடு செய்வாரும், தம் சொல்லை அயற்சொல்லாகக் காட்டுவாரும், முதனூலை வழி நூலாக்குவாரும், சொல்லுக்கும் செய்யுட்கும் ஒவ்வாத பொருள் கூறுவாருமாய்; 'பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் கொல்குறும்பும்' தமிழுக்குத் தோன்றியுள்ளன. இங்ஙனம் ஆளாளுக்கோர் அம்பலம் பண்ணுவதால். தமிழை மரபுநெறி வழாது வளர்த்தற்கில்லை. சில தான்றோன்றித் தம்பிரான்மார் தமக்குச் சற்று அரசியலதிகாரம் வாய்த்தவுடன், 'நாதையற்ற கோவிலுக்கு நான்தானடா பூசாரி' என்று சில குழுக்களைக் கூட்டிச் சில நிதிகளையும் திரட்டித் தமக்குப் பேரும்புகழும் வருவதையே பயனாகக் கொண்டு, பல

தமிழ்த் தளர்ச்சி வேலைகளைச் செய்து வருகின்றனர்.

திருக்குறளைப் புறக்கணிப்பவரும் தமிழ்ப்புலவரைப் பழிப்பவரும் கூடத் தமிழ்த்தலைவராய்க் கிளர்ந்தெழுவது விந்தையினும் விந்தையே!

இருவகை யதிகாரம்

அறிவதிகாரம் (Literary Authority), ஆட்சியதிகாரம் (Administrative Authority) என அதிகாரம் இருவகைத்து. இவற்றுள், அறிவதிகாரம் கல்வியால் தானாய் வருவது; நிலைத்தது; ஆட்சியதிகாரம் பிறர் அமர்த்தத்தால் அல்லது தேர்தலால் வருவது; நிலையற்றது. அறிவதிகாரி ஆட்சி வகையில் ஆட்சி யதிகாரிக்கு எங்ஙனம் அடங்குதல் வேண்டுமோ, அங்ஙனமே ஆட்சியதிகாரியும் அறிவு வகையில் அறிவதிகாரிக்கு அடங்குதல் வேண்டும். இது என்றும் செல்லும் உலகப் பொதுவிதி. அறிவதிகாரிகளெல்லாம் ஆட்சி யதிகாரிகளாக இருக்க முடியும்; ஆயின் ஆட்சி யதிகாரிகளெல்லாம் அறிவதிகாரிகளாக இருக்க முடியாது.

ஆங்கிலத் தமிழ்ச்செய்தித் தாளாசிரியர் ஏற்றத்தாழ்வு

மேல் நாட்டிலும் கீழ் நாட்டிலும் ஆங்கிலச் செய்தித்தாளாசிரிய ரெல்லாரும் சிறந்த இலக்கிய அறிஞர்; அல்லது குறைந்த பக்கம் நல்ல மொழியறிஞர். தமிழ்ச் செய்தித்தாளாசிரியரோ பெரும்பாலும் இலக்கண விலக்கியப் பயிற்சியில்லாதவர்; புலவர் தேர்வு தேறாதவர். ஆயினும், புலவர் வழித் தாம் நிற்காது தம்வழிப் புலவர் நிற்க விரும்புகின்றனர்.

தூய தமிழ்ச் சொற்களிருப்பவும், அவற்றுக்குப் பதிலாகப் பிற சொற்களை யாண்டு கலவை நடையில் எழுதி வருவதே, தமிழ்ச் செய்தித்தாளாசிரியர் வழக்கமாயிருந்து வருகின்றது. இலக்கிய அறிவும் மொழிப்பற்றும் இல்லாதவர் தமிழுக்கு எங்ஙனம் அதிகாரிகளாக முடியும்?

ஓரிரு புலவர்க்குத் தமிழெழுத்து மாற்ற அதிகாரமின்மை

இனி, பெரும் பட்டமும் பெரும் பதவியும் பெருஞ் சம்பளமும் பெற்றிருத்தல் காரணமாக, இரண்டொரு புலவர் மட்டும் தமிழுக்கு முழு அதிகாரிகளாகி விடார். கலியாண சுந்தரனார், பண்டிதமணியார், பாரதியார் முதலிய பெரும்புலவரையும் பிற மொழியறிஞரையும் கேட்டே, தமிழ் எழுத்தில் மாற்றஞ் செய்தல் வேண்டும்.

தமிழெழுத்து மாற்றும் முழுவதிகாரமும் தமக்குண்டென்று ஓரிரு புலவர் தருக்குவரேல், அவர் பல்கலைக்கழகத் தமிழகராதியில் தமிழ் வடமொழி வழித்தாகக் காட்டப்பட்டிருப்பதை ஒட்டியோ வெட்டியோ பேசித் தம் கருத்தை நாட்டித் தம் அதிகாரத்தைக் காட்டுக.

வினையின் இயல்பையும் பின் விளைவையும் சிறிதும் கருதாது, ஒரு குழுவில் இடம் பெற்றதே போதுமென்று மகிழ்வது, புல மக்களும் பொதுமக்களுமாகிய இருசார் தமிழர்க்கும் இக்காலத் தியல்பாயுள்ளது.

தமிழெழுத்தின் சீர்மையும் பிறமொழி யெழுத்துக்களின் குறைபாடும்

இதுபோது வழக்கிலுள்ள தமிழ் அரிவரியைப் பிறமொழி யரிவரிகளோடு ஒப்பு நோக்கினால்தான், முன்னதின் சீர்மை விளங்கும்.

வடமொழி யரிவரியில் gh, bh; ங ட; bh, m; ஆகிய இவ்வீரெழுத்துக்கள் சிறிதே தம்முள் வேற்றுமையுடையன. kh என்னும் எழுத்தும் ஸ்வ என்னும் கூட்டெழுத்தும், 'ரவ' போலும் தோன்றும். முன்னும் பின்னும் கீழும் சேர்த்தெழுதும் கூட்டெழுத்துக்கள் (சம்யுக்தாக்ஷரம்) 160–க்கு மேலுண்டு. இதனால் மிக நுணுக்கியும் வரி நெருக்கியும் எழுத முடியாது. கூட்டெழுத்துக்கள் பலவற்றிற்குத் தனி அச்சுருக்கள் (Types) வேண்டும். உயிர்மெய் வரிகள் (33 x 14) 462.

வடமொழி யரிவரியையே கொண்ட இந்தி யெழுத்துக்களில் இக்குறைபாட்டோடு இடை கடை வரும் அகரவூமை யெழுத்துக்களும் (Silent Letters) உண்டு. உயிர்மெய் வரிகள் (33 x 12) 396.

தெலுங்கு அரிவரியில், ஒ, bh; ப, வ; ந, ஸ; ஆகிய இவ்வீரெழுத்துக்கள் தம்முள் மிகச்சிறிதே வேறுபட்டு மயக்கத்திற் கிடமாவன. முன்னும் பின்னும் கீழும் சேர்த்தெழுதுங் கூட்டெழுத்துக்கள் இடத்தை அடைப்பன. மொ, மோ, யி, யீ, யொ, யோ, ஹொ, ஹோ ஆகிய உயிர்மெய்யெழுத்துக்கள் ஏனையவற்றினும் வேறுபட்ட உயிர்க்குறி யுடையன. உயிர்மெய் வரிகள் (35 X 13) 455. இவையல்லாது, 'நகாரப்பொல்லு' என்னும் ஒரு தனி னகர மெய்வரியும், 'பண்டிர' அல்லது 'சகட்டிரேப்ப' என்னும் றகரமெய்யும், ஒரு மெய்க்கு அல்லது உயிர்மெய்க்குப் பின் எழுதி முன் பலுக்கப் பெறும் 'வெலப்பலகிலக' என்னும் ரகர வரியும், உள்ளன.

கன்னட அரிவரி தெலுங்கரிவரியைப் பின்பற்றியதாதலின், அதிலும் இத்தகைய குறைபாடுண்டு. கன்னட உயிர்மெய் வரிகள் (34 X 14) 476.

மலையாள அரிவரியில் (குற்றியலுகர) லு, ஞ; என்னும் ஈரெழுத்தும் kh, ch, p, v ஆகிய நாலெழுத்தும் நுணுக்கெழுத்தில் கூர்ங்கண்ணருக்கன்றி வேறுபாடு தெரியா. உகர ஊகாரமேற்ற உயிர்மெய்கள் ஓரியல் (Uniform) வடிவு கொண்டனவல்ல. முன்னும் பின்னும் கீழும் மேலும் சேர்த்தெழுதும் கூட்டெழுத்துக்கள் 300–க்கு மேற்பட்டன. இவற்றுட் சிலவற்றுக்கேனும் தனி அச்சுருக்கள் வேண்டும். ch, b, y, v ஆகிய நாலெழுத்தும் இரட்டிக்கும் கூட்டெழுத்துக்களில் கீழெழுத்து ஒன்றாகவே இருக்கும். உயிர்மெய் வரிகள் (36 X 16) 576.

தமிழிலோ ஒவ்வோர் எழுத்தும் எளிதாய் வேறுபடுத்தறியக் கூடிய தனி வடிவுள்ளது. மெய்கள் பதினெட்டே. இதனாலும், கூட்டெழுத்தின்மையாலும் தமிழெழுத்துத் தொகை பிற இந்திய மொழியெழுத்துத் தொகையினும் எத்துணையோ குறைகின்றது. உயிர்மெய் வரிகள் (18 X 12) 216. ஆய்தம் ஒன்று. ஆக, தமிழெழுத்துக்கள் மொத்தம் 235–தான்.

சில உயிர்மெய் வரிகள் தமிழில் ஒரியல் வடிவுகொண்டன வல்லவெனின், இக்குறைபாடு தெலுங்கு கன்னட மலையாளத்திலும் உள்ளதே! அதற்கென் செய்வது?

உருதுவிற்குரிய பாரசீக – அரபி யரிவரியில் உயிர்மெய் வரிகள் இல்லாவிடினும், பலவெழுத்துக்கள் ஒரே வடிவு கொண்டு மேற்கீழ்ப் புள்ளித் தொகை வேறுபாட்டாலேயே வேறுபடுக்கப் படுகின்றன. பெரும்பாலும், ஒவ்வோரெழுத்திற்கும் சொல்லின் முதலிடை கடைக்குரிய மூவேறு வடிவுண்டு. யகரவரி இகரத்தையும், வகரவரி உகரத்தையும், குறிக்கின்றன.

நுணுக்கியும் நெருக்கியும் அழகாகவும் தெளிவாகவும் மணி போல் எழுப்பெறும் எழுத்துக்களுள், தலைமையானது ரோம (Roman) எழுத்து. அதற்கடுத்தது தமிழே. தமிழ் எழுத்து வடிவை மாற்றினால், பல இன்னலும் அழகிழப்பும் நேரும்.

பிறமொழி யெழுத்துக்களில் எத்துணையோ குறைபாடிருக்கும் போது, அவற்றையெல்லாம் கவனிக்காமல் தமிழெழுத்தை மட்டும் மாற்றுவது எற்றுக்கு? மேலும், ஒரு அல்லது சில செய்தித்தாளில் எழுத்தை மாற்ற விரும்பின், அது பற்றிப் பாடப் புத்தகங்களிலும் இலக்கியத்திலும் ஏன் மாற்ற வேண்டும்? ஏற்கெனவே தமிழெழுத்து பலமுறை தகுந்த முறையில் சீர்திருத்தப் பெற்றே இற்றை வடிவெய்தியுள்ளது என்பதை, தமிழ் எழுத்து மாற்றக் கோட்பாட்டினர் அறிவாரா? அவர் விரும்புவது சீர்திருத்தமா? அல்லது (சீர்கேடான) மாற்றமா?

தமிழெழுத்தில் செய்ய வேண்டிய திருத்தம்

தமிழெழுத்தில் இப்போது செய்ய வேண்டிய திருத்தம் இரண்டே. ஒன்று 'ஈ'யை நீக்கி 'இ' யை வைத்துக்கொள்வது; இன்னொன்று ஔகார உயிரிலும் அதனையேற்ற உயிர்மெய்களிலும் 'ள' வரியைச் சற்றுச் சிறிதாக்குவது. 'இ'வரிதான் முதலாவது இருந்தது. பின்பு இடைக்காலத்தில் அது விலக்கப்பட்டுக் கிரந்த வரியாகிய 'ஈ' புகுத்தப்பட்டது. ஔகார வரியிலுள்ள 'ள' வரியும்

'ஊ' வரியிற் போல் முதலாவது சிறிதாகவே யிருந்து பிற்காலத்தில் தவறாகப் பெரிதாக எழுதப்பட்டது.

தமிழ்ப்புலவர் செய்த தவறு

இந்நூற்றாண்டில் எழுத்துப் பற்றித் தமிழுக்கு இருவகையில் ஊறு நேர்ந்த போது தமிழ்ப்புலவர் தடுத்திலர். ஒருமொழியில் பல கருத்துக்கட்கும் சொல்லிருக்கும்போது, அவற்றுக்குப் பதிலாகப் பிறமொழிச் சொற்களையும், எழுத்துக்களையும் வேண்டாது புகுத்துவது. ஒருமொழியைக் கெடுக்கும் வழியாகும்.

தமிழில் ஒரே யுயிர்கொண்ட உயிர்மெய் வரிகளெல்லாம் ஓரியல் வடிவு கொண்டிருத்தல் வேண்டுமென்பது, திருந்திய கருத்தன்று. எடுத்துக்காட்டாக ஐகார உயிர்மெய்களை எடுத்துக் கொள்ளின், அவை ஓரியல் வடிவு கொண்டிராமைக்குத் தகுந்த காரணமுண்டு. 'ஊெ' என்பதற்குப் பதிலாக 'ணை' என்று எழுதின், கூட்டெழுத்தாயெழுதுங் கையெழுத்தில் அது இரு ணகரம் போல் தோன்றும். இம்மயக்கத்தை நீக்குதற்கே, ஐகார வுயிர்க்குறி, பல சுழிகளும் வளைவுகளும் கொண்ட எழுத்துக்கட்கெல்லாம் மேலிடப் பெற்றுள்ளது. இங்ஙனமே ஆய்ந்து நோக்கின், ஓரியல் வடிவு பெறாத பிற உயிர்மெய் வரிகட்கும் காரணம் தோன்றும். அச்சு வடிவு ஒன்றையே கவனித்துக் கையெழுத்து வடிவை நோக்காதவர்க்கோ, தமிழ் உயர்மெய்வரிகள் ஒழுங்கில்லாதனவாகத் தோன்றலாம். கையெழுத்தும் முக்கியம்; ஆங்கிலத்தில் அதனையும் அச்சு வடிவில் அமைத்திருக்கின்றனர்.

'ெ' என்னும் பழைய ஐகார வுயிர்மெய்க் குறியை 'ை' என்று இணைத்தும், கு ஙு சு ஞு டு ணு முதலிய உயிர்மெய் வரிகளை ஒரே முறையில் வரையும் ஒற்றைக் குறியாகவும், எழுதுவதெல்லாம் எளிமையும் தெளிவும் மட்டுமன்று, காலச் சிக்கனமும் பற்றியதாகும். ஆதலால், எவ்வகையிலும், (மேற்காட்டிய இரு வரிகளையன்றி) மாற்றம் செய்யத் தேவையில்லை. புதிய எழுத்து மாற்றம் செய்தித்தாள்கட்கு இன்றியமையாததாயின், அவைமட்டும் அதை ஆளட்டும். ஏனையர்க்கு வேண்டா.

இன்று செய்ய வேண்டியது

புதிய எழுத்து மாற்றம் புகுத்தப்படின், பல்கலைக் கழகப் பாடப் புத்தகக் குழுவையும், தனிப்பட்டவர்க்கும் பொது மக்கட்குமுரிய எல்லா நூல் நிலையங்களையும், தமிழ் நூல் வெளியீட்டாளரையும், தமிழ்ச் சங்கங்களையும், பலவகை ஆவணங்களையும், மாணவரையும், தாக்கிப் பல இடர்ப்பாட்டை விளைவிக்கும். ஆதலால், இதைப் புகுத்தாதவாறு அரசியலாரை வேண்டிக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத் தமிழர் புதிய எழுத்து மாற்றத்தை ஒப்புக் கொள்ளவில்லையென்றும்,பழைய எழுத்தையே கடைப்பிடிக்கத் தீர்மானித்துள்ளனர் என்றும், சொல்லப்படுகின்றது. தமிழ்ச் சொற்களைப் போன்றே தமிழ் எழுத்தையும் தூய்மையாகப் பேணத் துணிந்த யாழ்ப்பாணம் தழைத்தோங்க!

செந்தமிழ்ச் செல்வி
சிலம்பு உசு (26)
பரல் ந (3)
11.1951

5. தமிழெழுத்து மாற்றம் தன்மானத் தந்தையார் கொள்கையா? (1980)

[ஞா. தேவநேயன்]

ஆரியச் சூழ்ச்சியால் அடிமைப்பட்டு ஆயிரக் கணக்கான ஆண்டுகள் அலமந்துழலும், அருமொழித் தமிழரை விடுவித்து முன்னேற்ற முயன்ற முனைவர் மூவருள் இறுதியரான, பெரியாரின் நூற்றாண்டு விழாவென்று விளம்பிய மட்டில், ஏற்கெனவே இருந்த இடம் தெரியாமல் இருந்தவரும், பெரியாரொடு ஒருமுறையேனும் பேசியறியாதவரும், தன்மான வுணர்வும் தமிழ்ப் புலமையும் தக்கவாறில்லாதவரும், தன்மானப் போர்ப் படைத்தலைவர் போன்றும், தன்னேரில்லாத் தமிழதிகாரி போன்றும், நடித்துக் கொண்டு, தமிழ் உலகப் பொதுமொழி யாகவும் தமிழன் ஒன்றிய நாட்டினங்களின் தலைவனாகவும் ஒரே வழி "விடுதலை" யெழுத்தை மேற்கொள்வதே என்று மேடைகளிற் பிதற்றியும், ஓரளவு அதிகாரம் பெற்றுக் குழுக்கள் அமைத்தும் கூட்டங்கள் கூட்டியும், தமிழ்ப் பகைவரும் தமிழறியாத பெருமாளரும் கற்றுக்குட்டிகளுமான தகுதியில்லா மக்களின் கருத்தைத் துணைக்கொண்டும், தம்வயப்பட்ட ஏடுகளிலெல்லாம் தமிழெழுத்தை மாற்றி, உலகில் இதுவரை எவரும் நிலை நாட்டாத தொன்றை நிலைநாட்டி விட்டதாகக் கொட்ட மடித்துத் திரிவாராயினர்.

அரச கோபாலாச்சாரியார் 1937 இல் தமிழ்நாட்டில் கட்டாய இந்திக் கல்வியைப் புகுத்தியதிலிருந்து, நான் இந்தியெதிர்ப்புப் பற்றிப் பெரியாருடன் தொடர்பு கொண்டு இறுதிவரை நெருங்கிப் பழகினேன். அக்காலமெல்லாம், தமிழர் "விடுதலை" யெழுத்தை **மேற்கொள்ள வேண்டுமென்று, பெரியார் ஒரு கூட்டத்தி லேனுஞ் சொன்னதுமில்லை; ஓர் இதழிலேனும் எழுதினது மில்லை.** எனக்கு முன்பே பெரியாரை யடுத்து அவர் தன்மானக்

கொள்கையைக் கடைப்பிடித்து அவருக்கு வலக்கை போல் துணையாயிருந்து வந்த பர். (Dr.) கி. ஆ. பெ. விசுவநாதம் என்னும் உலக நம்பியாரும், இதற்குச் சான்று பகர்வர்.

நான் திருச்சியிற் பணியாற்றிய காலத்தில், 1938 ஆம் ஆண்டில் பெரியார் ஈரோட்டிலிருந்து எனக்கெழுதியிருந்த 5 பக்கக் கடிதம் மரபெழுத்திலேயே எழுதப் பட்டிருந்தது. நான் சேலம் நகராட்சிக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவனாயிருந்த காலத்தில், 1947 ஆம் ஆண்டில் பேரா. தி. வை. சொக்கப்பனாரும், பேரா. பெரியசாமியும் எனக்குச் சிறப்புச் செய்ய ஏற்படுத்தியிருந்த கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய பெரியார், தம் கையினால் எனக்கு வழங்கிய வெள்ளிப் பட்டயத்திற் பொறிக்கப்பட்டுள்ள பாராட்டு வாசகம் மரபெழுத்திலேயே உள்ளது.

நான் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேலை நீங்கிக் காட்டுப்பாடி விரிவிலிருந்த போது, நான் வருமான மின்றி யிருந்த நிலைமை யறிந்து பெரியார் தாமே என் உறையுள் தேடிவந்து இருநூறு உருபா வழங்கினார். அன்றும், தமிழெழுத்து மாற்றம் பற்றி என்னிடம் ஒன்றும் சொன்னதில்லை. பெரியாருக்கு என்றும் தன்மான இயக்கத்திலன்றித் தமிழ் வளர்ச்சியில் ஈடுபாடு இருந்ததே யில்லை. நான், ஒருகால், அரைக்கால் உருபாக் காசில் இந்தியெழுத்தும் தெலுங்கெழுத்தும் இருந்தபோது தமிழெழுத் தில்லாமை பற்றிக் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்று பெரியாருக் கெழுதினபோது அவர், “நான் உங்களைப் போற பண்டிதனல்லேன். பொதுமக்களிடம் தொண்டு செய்து அவர் மூடப்பழக்க வழக்கங்களைப் போக்குபவன், நீங்களும் உங்களைப் போன்ற பண்டிதருமே சேர்ந்து அக்கிளர்ச்சி செய்யுங்கள்” என்று மறுமொழி விடுத்துவிட்டார். இதிலிருந்து, தமிழ் மொழியோ எழுத்தோ பற்றி அவருக்குக் கடுகளவும் கவலை யிருந்ததில்லை யென்பது வெட்ட வெளிச்சமாகின்றது. அவர் இந்தியை யெதிர்த்ததெல்லாம், பேராயக் கட்சியை யெதிர்ப்பதும் ஆரியச் சூழ்ச்சியைக் கண்டிப்பதும் தமிழ திரவிடர் நல்வாழ்விற்கு வழி வகுப்பதும் குறிக்கோளாகக் கொண்டதே யன்றி வேறன்று. இதை அவர் பல பொதுக்கூட்டங்களிலும் வெளியிட்டுச் சொல்லியிருக்கின்றார். ‘விடுதலை’, ‘குடியரசு’ ஆகிய இதழ்களில்

சில எழுத்து வடிவங்களை அவர் மாற்றியது, முற்றும் சிக்கனம் பற்றியதே. பெரியார் சிக்கன வாழ்வு நாடறிந்தது; உலகறிந்தது.

தமிழெழுத்து மாற்றம் என்பது தேவையில்லாத ஒரு சிறு செயல். பெரியார் செயற்கரிய பெருஞ்செயல்களைச் செய்தவர். **அவர் மீது ஒரு சிறு புன் செயலையேற்றுவது, அவர் பெயருக்கு இழுக்கேயாகும்.**

...

பெரியார் இயலும் செயலும் பல்வகைப்பட்டிருக்கவும், அவற்றுள் ஒன்றேனும் பின்பற்றாது, அவர் கருதாத எழுத்து மாற்றத்தையே மேற்கொள்வார், சாற்றை விட்டுச் சக்கையே பற்றும் பன்னாடை போல்வார். பெரியாரைப் பின்பற்றல் சிறியார்க்கு எளிதன்று.

பல்லாயிர வாண்டு பண்டாடு பழநடையாக வழங்கிவரும் தமிழ் மரபெழுத்தை, மறைமலையடிகளும் மாபெரும் புலவர் தலைவர் உ.வே. சாமிநாதையரும் போலும் தமிழதிகாரிகள் விருப்பத்திற்கு மாறாகவும், உலகெங்குமுள்ள தமிழ் நூலகமுடையார்க்கும் நூல் வெளியீட்டாளர்க்கும் பேரிழப்புண்டாகுமாறும், தமிழுக்கு ஒருவகையிலும் நலந்தரா முறையிலும், மாற்றுவதை விளம்பர விருப்பினர் உடனே விட்டொழிவாராக.

குறிப்பு : 18–4–'70 இல் பெரியார் ஈ.வே.ரா. அவர்கள் பல்லாவரம் மறைமலையடிகள் கலைமன்றத்தைப் பார்த்து வாழ்த்துரை எழுதியதில் 'மறைமலை' 'கலைமன்றம்' என்ற இருசொற்களிலும் 'லை' என்று மாற்றி எழுதவில்லை. (பழைய வடிவிலேயே எழுதினார்.)

செந்தமிழ்ச் செல்வி
சிலம்பு ருசு (54)
பரல் எ (7)
3. 1980

6. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தேவைதானா?

[முதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனார், கதிரகம், காரைக்குடி –2]

தமிழெழுத்துச் சீர்திருத்தம் தேவைதானா? அது தமிழுக்குத்தான் தேவையா? ஏனை இந்திய மொழிகட்கும், ஆங்கிலம் பிரெஞ்சு முதலான மொழிகட்கும் தேவையில்லையா? அவற்றுக்குத் தேவை அவ்வளவு இல்லை எனவும் தமிழுக்குத்தான் உடனடித் தேவை எனவும் சொல்லலாமா? இந்த எழுத்துச் சீர்திருத்தம் இல்லாமையாற்றான் மழலைப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழ் பயிற்று மொழியாக வில்லையா? இதனைச் செய்துவிட்டால், எல்லாத் துறைகளையும் ஆங்கிலம் போல் சொல்லும் ஆற்றலைத் தமிழ் எய்தி விடுமா? இவை நம் சிந்தனைக்குரிய வினாக்கள்.

அறிவியல் அணுகுமுறை

தமிழெழுத்துச் சீர்திருத்தம் பற்றிச் சில நூற்களும், பல கட்டுரைகளும் வந்து கொண்டிருக்கின்றன. நல்லன்பர்கள் இச்சீர்மையிற் பேரார்வம் காட்டுகின்றனர். தமிழுக்கு எழுத்துச் சீர்திருத்தம் என்பது தமிழ்மொழிச் சேவை, மக்கட் சேவை, அறிவியற் சேவை, அடிப்படைச் சேவை என்றெல்லாம் கொள்கைகள் பறையறையப் படுகின்றன. மொழிக்கு மரபியல் அணுகுமுறையே சிறந்தது என்பதை உணராமல், அறிவியல் அணுகுமுறை என்ற ஒரு மாயப் பார்வையை எழுத்துத் திருத்துநர் புகுத்துகின்றனர். **அறிந்தோ அறியாமலோ அன்பினாலோ வன்பினாலோ தமிழுக்குப் புதைகுழியும் சிதை குழியும் பறிக்கும் இம்மருட்சிப் போக்கினைத் தமிழினம் உணர்ந்து கொள்ள வேண்டும். எளிமை, வளர்ச்சி, அறிவியல் முற்போக்கு என்ற**

பகட்டுரையில் தமிழினம் தமிழ்ச் செவிடாகிவிடக் கூடாது; எழுத்துக் குருடாகிவிடக் கூடாது. விழிப்போடு தமிழினைக் காத்து நிலைபெறுத்தி நெறியாக வளர்க்க வேண்டிய காலம் இது. தமிழினத்தின் அழிவுக்கு இடம் கொடுத்தல் அன்பன்று. அறமன்று. ஆக்கமும் அன்று. சில தமிழ் எழுத்துத் திருத்திகளின் முனைப்புக் கூறுகளைக் காணுங்கால் , தமிழ் இதுவரை எழுத்து வடிவே இல்லாத வெறும் பேச்சு மொழி போலவும், காலத்திற்கும் அறிவியலுக்கும் ஏற்பப் புது வரிவடிவங்களை இவர்கள் படைக்க வேண்டிய குறைமொழி போலவும், இப்படைப்பு வடிவங்கள் இல்லாவிட்டால் தமிழ் செத்த மொழியாகிவிடும் என்பது போலவும் அமர்க்களம் செய்வதாகப் படுகின்றது.

கொள்கைக் கோணல்கள்

எழுத்துத் திருத்திகளுக்கு ஆங்கில 26 எழுத்துக்களே வேதக்கோல். உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் போதும். க கா கி கீ முதலான உயிர்மெய் எழுத்துக்களே வேண்டியதில்லை எனவும், உயிர்மெய் எழுத்தில்லாமல் ஆங்கில மொழி வரவில்லையா எனவும், 247 தமிழெழுத்துக்களை (இது பொய்க்கணக்கு) 28 எழுத்துக்களாகக் குறைக்கலாம் எனவும் சொல்கின்றனர். தமிழிசை யியக்கம் கிளர்ந்தெழுந்த போது, இசை முக்கியமே யன்றி, இசைக்கு மொழி முக்கியமில்லை என்று சிலர் வாதிட்டது போலவே, மொழிக்கு ஒலி முக்கியமேயன்றி, எழுத்து வரிவடிவு முக்கியமில்லை; தமிழ் எழுத்தே வேண்டியதில்லை; தமிழ் ஒலிகளை உரோமன் எழுத்துக்களிலேயே எழுதிவிடலாம் எனவும், தமிழ்க் குழந்தைகள் எல்லாம் இப்போது ஆங்கிலம் படிப்பதால் தமிழெழுத்து மிகை எனவும், உரோமன் எழுத்தாக ஆகிவிட்டால் அயல் நாட்டவர்களும் எளிமையாகத் தமிழைப் படிப்பார்கள் எனவும் அறிவுறுத்தும் எழுத்துத் திருத்திகளும் உளர்.

இந்தியாவுக்குப் பொது தேவநாகரியைத் தமிழ் ஏற்றுக் கொண்டால், ஒருமைப்பாடு சிறக்கும் என்ற கருத்தும் சிலர்க்கு உண்டு. இவர்கள் சொற்படி இவற்றைப் புரட்சி மனப்பான்மையோடு ஏற்றுக் கொண்டுவிட்டால் தமிழ் மொழியின் எழுத்துச் சீர்திருத்தம் என்ற பணிக்கே இடமில்லாமல் போய் விடுமல்லவா?நம் உயிர்

கூட எந்த உடல் வடிவில்நமக்கு இருந்தால் என்ன? தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிப் பலகோணற் கொள்கைகள் உள. ஆதலின் பொதுவாகப் படிப்பவர்கட்கு இச்சில குறிப்புக்களையாவது நினைவுபடுத்த விரும்பினேன். இவ்வாறு ஒரு புறம் இருப்ப, ஆங்கிலத்தை எளிமையாகக் கற்றுத் தருவதற்குச் சில இதழ்கள் தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்துகின்றன என்ற ஏற்றத்தையும் உணருங்கள்.

சீர்மை உண்டு

ஏனை மொழி எழுத்துக்களைப் போலத் தமிழெழுத்துக்களும் ஓரளவு மாறி வந்த வரலாறு உண்டு. ஆனால் அக்காலத்து எழுத்தெல்லாம் எழுதும் கையெழுத்துக்களே. அச்சுப் பொறி வந்த பின் முந்நூறு ஆண்டுகளாக எழுத்து வடிவுகள் எம்மொழியிலும் ஒரு நிலைபேறு எய்தி விட்டன என்ற வரலாற்றை மறக்கவோ மறைக்கவோ கூடாது. இப்போதுள்ள நடைமுறைத் தமிழெழுத்துக் களில் ஒரு சீர்மை இல்லை என்ற வாதம் உடன்படத் தக்கதன்று. பல மெல்லெழுத்துக்களின் முன்பின் வடிவு வேற்றுமைக்கு ஏற்பவும், கைவாகின் எளிமைக்கு இணங்கவும், சீர்மைகள் உள்ளன. சுழியொடு தொடங்கும் ண ல ள ன என்ற மெய்கள் ஊண ஊல ஊள ஊன என்ற ஐ வடிவங்களைப் பெறுகின்றன; இறுதிக் கோடுடைய ஙபயவ என்ற மெய்கள் ஙு பு யு வு என்று கீழ் இழுப்புக் கோடு பெறுகின்றன. கையெழுத்தின் எளிமையையும் இடச்சுருக்கத்தையும், காலச் சிக்கனத்தையும் மதிக்க வேண்டும்; வாய் வழக்குப் போலக் கைவழக்கும் இயல்பு வழக்காகும். எத்துணைப் பொறிகள் வரினும், ஒருவர் தம் கையெழுத்தைப் பொறிப்படுதல் சான்றாகுமா? முகம் போல் வேற்றுமை யிருத்தலாலன்றோ கையெழுத்துக்குத் தனித் தன்மையுளது. இது மரபியல் அணுகுமுறையாகும்.

மரபியல் அணுகுமுறை

மொழிநலத்துக்கு அறிவியல் அணுகுமுறை பொருந்தாது. மரபியல் அணுகுமுறையும் பயிற்சி யணுகுமுறையுமே மொழியைக் காக்கும், மொழியை வளர்க்கும் ஒரு மொழியின் ஒலி, வடிவு, ஒருமை பன்மை, வேற்றுமை, காலம், பயனிலை, பால் என்றிக்

கூறுகளை வரிக்கோலால் அளந்து பார்த்துச் சிதைப்பதும் செதுக்குவதும் மன்பதைக் குழப்பமாகி விடும், தொடர்ச்சி துண்டிக்கப்படும். எந்த வரிவடிவும் மக்கள் கையெழுத்துக்கும் அழகாகவும் தெளிவாகவும் சிக்கனமாகவும் இருக்க வேண்டும் என்பதை ஒருக்காலும் புறக்கணிக்க முடியாது.

எதற்கு எது?

மாற்றம் இன்றேல் வளர்ச்சி யில்லை என்பது யாரும் அறிந்த இயற்கை, எதற்கு எதனை மாற்ற வேண்டும் என்பதிலேதான் தெளிவும் பகுத்தறிவும் வேண்டும். இருநூறு முந்நூறு ஆண்டுகளாக ஆங்கிலத்தில் 26 எழுத்துக்களுக்கு ஏற்பத்தான் தட்டச்சு வரியச்சு தனியச்சு கணிப்பான்கள் மாறிவந்துள்ளன; இனியும் மாற்றம் பெறும், விரலுக்கு ஏற்ப மோதிரம்; காலுக்கு ஏற்பக் காலணி, கண்ணுக்கு ஏற்ப கண்ணாடி. எதற்கு எது மாறுதல் என்ற வாய்பாட்டை எண்ண வேண்டும். தமிழ் எழுத்துக்களுக்கு ஏற்பத்தான் கருவிகளை வயப்படுத்த வேண்டும். வயப்படுத்தும் தொழில்நுட்பத்தில் ஈடுபட வேண்டும். இதுவே தொழில் நுட்பச் சாதனை. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் கூறுநர் தட்டச்சு வரியச்சு, முதலானவை மாறா நிறையுடையனவாகவும் இவ்வச்சுக் கருவிக்குத் தக, தமிழ் எழுத்துக்களைத் தான் குறைக்கவும் சிதைக்கவும் வேண்டும் என்பதாகவும் வாதாடு கின்றனர்; கருவித் திருத்தம் பேசாமல். பொறிக் கருவிகளை நிலையாக எண்ணி மயங்கி எழுத்துத் திருத்தம் பேசுகின்றனர். தமிழுக்காக அச்சு என்பது போய், அச்சுக்காகத் தமிழைச் சரிப்படுத்தும் அடிமறி நிலையைக் காண்கிறோம். இவ்வாறு சென்றால், காலந்தோறும் மாறும் தொழில் நுட்ப வேகத்தால் அச்சுப்பொறிகள் மாற மாற, தமிழெழுத்தும் சிதைந்து மாறவேண்டிய அவகதியே ஏற்படும். இவர்கள் ஆங்கிலத்துக்குக் காட்டும் அளவுகோல் உரிமைக் கோலாகும். தமிழுக்குக் காட்டும் அளவுகோலோ அச்சுக்கு அடிமைக் கோலாகும். ஆங்கில அளவுகோலுமாகும். எனவே தமிழுக்கு இருவகையடிமை. எதற்கு எது என்ற தெளிவே இன்று தமிழ் நன்மக்கள் அறிய வேண்டிய மரபியல் முறை. தமிழின் எழுத்துக்கேற்ப அச்சுப் பொறிகளைக் கண்டுபிடிப்பதே அன்பான அழகான அறிவியல் முறை. அத்தகைய சீர்ப்பொறிகளைக் காண்பதே நம் அறிவியலாரின்

முனைப்பாக இருக்க வேண்டும்.

இழப்பும் கேவலமும்

தமிழ்மொழியின் பல்துறை நூல்கள் நெருப்பாலும் நீராலும் புற்றாலும், பூசையாலும், மொழி மாற்றத்தாலும், ஏமாற்றத்தாலும், மடமையாலும், வஞ்சகத்தாலும் அழிந்தொழிந்தன. தமிழுக்கு ஈராயிரம் ஆண்டுகளாக இழப்பு வரலாறே பெரிது. ஆங்கில மோகத்தாலும் அயல் வழக்காலும் இழப்பு இன்று நாளும் கூடி வருகின்றது. ஆங்கில வரலாறு காட்டுவதன்படி, தமிழ் எழுத்துக்கேற்ப அச்சுப் பொறிகளைக் காணாமல், பொறிகட்கு அடிமையாகத் தமிழெழுத்துக்களைச் சிதைத்தும் குறைத்தும், உள்ள நல்ல சீரை அழித்தால், இதுவரை காக்கப்பட்ட தமிழ் நூல்களும் பழைய எழுத்தென ஒதுக்கப்பட்டு அழிந்து விடுமோ என அஞ்சுகின்றோம். எழுத்திற் கூடத் திருந்தாத மொழி தமிழ் என்று தமிழர்களே சொல்லுகிறார்கள் என உலக மொழி வரலாறு ஏளனஞ் செய்யுமோ என்று நாணுகின்றோம். இன்று கற்றிருக்கும் உலகம் பரவிய நான்கு கோடித் தமிழர்கள் முதற்கண் புதுத் தற்குறிகளாக வேண்டியதிருக்குமே என்று கவல்கின்றோம்.

"முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்"

என்றார் திருவள்ளுவர். 'உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்' என்பது சங்கத்தமிழ்.

உள்ள வழக்கெழுத்தை வைத்துக் கொண்டே தமிழில் கலைக் களஞ்சியங்கள் அகராதிகள் அபிதான சிந்தாமணிகள் தோன்றியுள்ளன மழலைப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழ்நாட்டில் தமிழ் பயிற்றுமொழி யாகாதநாட்டுக் குறையைத் தவிர, தமிழ் எதனையும் சுருங்கச் சொல்ல வல்ல தன்னாற்றலிற் குறைபாடு உடையதன்று; தமிழைப் பள்ளியும் கல்லூரியும் பல்கலைக்கழகமும் தீண்டா மொழியாக வைத்திருக்கும் நாமே பிறப்பிற் குறையுடையோம். எழுத்துச் சீராளிகள்தாம் தாம் கூறும் மாற்றெழுத்து வடிவில் சிற்சில நூல்களையாவது வெளியிடலாம். குறுந்தொகை, திருக்குறள்,

சிலப்பதிகாரம், இராமாயணத்தில் ஒரு படலம், திருப்பாவை, திருவெம்பாவை, திரு.வி.க.வின் முருகன் அல்லது அழகு, கலைக்களஞ்சியத்தில் நூறு பக்கம், என்பன போலும் சிலவற்றை அவரவர் சுட்டிக்காட்டும் திருத்தெழுத்துக்களில் அச்சிடலாம். இவற்றைக் கையெழுத்திலும் விரைந்து எழுதிப் பார்க்க வேண்டும், கையெழுத்து அச்செழுத்து என இரு நிலையிலும் ஒத்திட்டு வைத்துப் பார்க்கும் போதுதான் குழப்பமும் தெளிவும் உண்டாகும். இத்திருத்தெழுத்துக்கள் இடத்தாலும், வேகத்தாலும், சீர்மையாலும், இணக்கத்தாலும், சிக்கனத்தாலும் எண்ணிய அறிவியற் பயன்களைத் தருகின்றனவா என்று செவ்வனம் சீர்தூக்க முடியும். சில நூல்களையாவது இங்ஙனம் முழுமையளவில் வெளியிடாது தனியெழுத்தளவில் பொது வாதிட்டுக் கொண்டிருப்பது நம்பிக்கையும் வலிவும் தராது. எழுத்தைத் திருத்துவதா? அச்சுக் கருவி யமைப்பைத் திருத்துவதா? என்ற வினாக்குறியில் நல்ல முற்றுப்புள்ளி கிடைப்பதற்கு, அவரவரும் தாம் திருத்தும் எழுத்துச் சீர்மையில் சில முழு நூல்களையாவது எழுதி வெளியிட்டுக் காட்டுவது நல்லது.

தமிழின் வளம்

எழுத்துக்கேற்பப் பொறிக் கருவித் திருத்தந்தான் வேண்டும் எனவும் மரபியல் அணுகுமுறைதான் மொழி முன்னேற்ற வளர்ச்சி நெறி எனவும் என் தெளிவிற்பட்ட எண்ணத்தை இகலின்றிக் கூறும் இக்கட்டுரைக்கண், தொடர்புடைய பிறிதொரு மயக்கத்தைத் தெளிவிக்க விழைகின்றேன். மொழி வயலிலா பயிராகும்? பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களுந்தான் எம்மொழியும் பயிராகி விளையும் களங்கள் என்று உணர்த்த விரும்புகிறேன். ஆங்கிலம் பயில் மொழியாக வேண்டும் என்று இலக்கியப் பெருமகன் மெக்காலே கொண்டு வந்த காலந்தொட்டே, ஒரு நூற்றாண்டாகத் தமிழில் கலைச்சொல் ஆக்கம் வளர்ந்து கொண்டுதான் வந்திருக்கின்றது. இலட்சக்கணக்கான ஆக்கக் கிளவிகள் குவிந்து உள்ளன. நூற்களிலும் கட்டுரைகளிலும் பொதிந்துள்ள புது வளச்சொற்கள் அகராதி பெறவில்லை, அதனால் வளர்ச்சி வெளிப்படையாகத் தெரிந்திலது. தமிழ்ப்பாட நூல்

நிறுவனம் 1976 வரை பொறியியல் மருத்துவம் முதலான 19 துறைகளில் 737 நூல்களைப் பட்டப் படிப்புக்குத் தக்க வகையில் தவமலிவு விலையில் வெளியிட்டு உள்ளது. புதுச்சொற் பட்டியல் ஒவ்வொரு நூலிலும் உண்டு. தமிழ்ப் பெருஞ்சான்றோர் தி.சு. அவினாசிலிங்கனார் பொறுப்பேற்ற தமிழ் வளர்ச்சிக் கழகம் எல்லாத் துறையும் தழுவிய (10 தொகுதிகள் 7565 பக்கங்கள்) பெரிய கலைக் களஞ்சியங்களை ஓவிய வனப்பாக வழக்கெழுத்தில் வெளியிட்டதோடு, பத்துத் தொகுதி குழந்தைக் கலைக்களஞ்சியங் களையும் புது இந்தியாவிற்கு வழிகாட்டியாகக் கொண்டு வந்துள்ளது.

பேரறிஞர் சென்னைப் பல்கலைக்கழகத்தின் முன்னைத் துணைவேந்தர் தாமோதரனாரின் கலைச்சொல்லகராதி மூன்று தொகுதிகள் இணையில்லாச் சிறப்புடையவை. இருபது துறைக்கு 40000 கலைச்சொற்கள் இத்தொகுதியில் உள. இவை கலைக்கதிர் வெளியீடுகளாகும், தமிழில் புதிய அறிவியல்களைப் பரப்புவதற்கும் வளர்ப்பதற்கும் என்றே நாற்பது ஆண்டுகட்கு முன் '**கலைக்கதிர்**' என்ற தமிழ்க் கதிரிதழைத் தோற்றுவித்த தனிப் பெருந்தகை **தாமோதரனார்**. அறிவியற் றமிழுக்குக் கலைக்கதிரின் ஒளி அளப்பரியது, ஊற்றம் வற்றாதது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் பத்துத் தொகுதிப்பட்ட பெருந்தமிழகராதியும், அறிஞர் சிதம்பரனார் செவ்வன் பதிப்பித்த ஆங்கிலம் – தமிழ் அகராதியும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பல துறைகளிலும் பல்லாண்டுகட்கு முன்பே தக்க பேராசிரியர்களைக் கொண்டு பதிப்பித்த அறிவியற்பாட நூற்களும், மதுரைப் பல்கலைக்கழகம் அஞ்சல்வழித் துறையிற் பதிப்பித்தசில முதுகலைப் பாட நூற்களும், தமிழ்ப்பல்கலைக்கழகம் தொகுதியாக வெளியிடும் சங்க விலக்கியக் களஞ்சியம், வாழ்வியற் களஞ்சியம், அறிவியற் களஞ்சியங்களும் பாராட்டத் தக்க ஆக்கங்களாகும். தொகுத்துச் சீர்தூக்கிச் செம்மாந்து பார்த்தால், தனித்தோர் யாத்த அறிவியல் நூற்கள். தனி நிறுவனங்கள் பதிப்பித்த துறை நூற்கள், பல்வேறு இதழ்களில் வந்த அறிவியற் கட்டுரைகள், அபிதான சிந்தாமணிகள், களஞ்சியங்கள், ஆய்வுக் கோவைகள். கருத்தரங்குக் கட்டுரைகள், சுடர்கள் என்றாங்கு அறிவியல் ஆக்கத்தை •இமயக் குன்றின் வளர்ச்சிபோல் காண்கின்றோம்.

இத்துணை ஆக்க வரலாறு இருந்தும் தமிழ் தகுதியாக வில்லை, என்று ஒரு சில மேலோர் சொல்லிக் கொண்டிருப்பது **அவர்கள் ஒருநாளும் தமிழ்பயிற்று மொழியாக வரவிட மாட்டார்கள் என்ற இகலையே காட்டுகின்றது.**

தமிழுக்கு வாயில் திறக்கட்டும்

வளர்ந்து பரந்து ஓங்கிவரும் ஆங்கிலத்துக்கு நெருங்கிய இணையாகத் தமிழாக்கத்தைச் சொல்ல முடியாது என்பது உண்மைதான்; என்றாலும் தமிழ்மொழிப் பல்கலைக்கழகம் வரை எல்லாத் துறையிலும் பயிற்று மொழியாவதற்குப் போதுமான ஆக்கச் செல்வம் நம் கையில் இருக்கின்றது. முந்நூற்றுக்கு மேலான அறிஞர்கள் எழுதிய தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் கலைக் களஞ்சியமே பெருஞ்சான்று.

தமிழ் பல்துறையிலும் பல்கலைக்கழகம் வரை பயிற்று மொழியாக வைக்கப்படாமையினால் இதுவரை ஆக்கிய பல இலட்சம் சொற்கட்குக் கூட வழங்கும் வாய்ப்பில்லையே. உள்ளதற்கே வாய்ப்பில்லாத போது மேல் வளர்ச்சி எங்கே வரும்? யாரும் வளர வேண்டுமேல், எதுவும் வளர வேண்டுமேல்பயில வாய்ப்பு வளர வேண்டும் என்பது இயற்கை விதி. ஆங்கிலம் தானே வளர்ந்து விட்டதா? அதற்குப் பெரிய வாய்ப்பை இந்தியா இன்னும் வழங்கிக் கொண்டிருக்கிறது. தமிழ் முழுப்பயிற்று மொழியாதற்குச் சொல்லாக்கம் போதும். **தமிழுக்கு இப்போது வேண்டுவது பயில் வாய்ப்பாக்கமே.**

சொற்களைக் கற்பிக்கும் வாய்ப்பு இருந்தாற்றான் ஆசிரியர்கட்குப் பயிற்சித்திறம் பிறங்கி வரும். பயிற்சி பெருகப் பெருக அறிவியற்றமிழ் எளிமைப்படும். நயப்படும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் பயிற்று மொழியாகத் தமிழை நுழையவிட்டால் இவற்றின் கதவுகள் தமிழ்க் கன்னிக்குத் திறந்துவிடப்பட்டால், எண்ணிறந்த அறிவுத்துறைக் குழந்தைகள் ஆங்கிலம் போல வளரும், தழைக்கும் செழிக்கும். இயற்கையான மக்களைத் தீண்டத் தகாதோர் என்று கோயிலுக்குள் நுழையவிடாது தடுத்த மேலார் கொடுமை சட்டத்தால்

ஒழிக்கப்பட்டது போல உலகத் தமிழ் மாநாடுகள் கண்டு வரும் இயற்கைத் தமிழ் மொழியைப் பள்ளிக்குள் பயிற்றுமொழியாக நுழையவிடாது தடுக்கும் அறிஞர்களின் முதுபேதைமையும் கடுஞ் சட்டத்தால் ஒழிக்கப்படும் இது பாரதி மேலாணை.

தீந்தமிழுக்குக் கதவைத் திறந்திடுமின்!
ஆக்கிய தமிழ்ச் சொற்களை ஆளவிடுமின்!
வடித்த கலைச் சொற்கட்கு வாய்ப்பு வழங்குமின்!

குறளியம்

7. எழுத்துச் சீர்திருத்தம் எங்கே போய் முடியும்? (1989)

[வ.சுப. மாணிக்கம்
முன்னைத் துணைவேந்தர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்]

தமிழெழுத்துச் சீர்திருத்தம் பற்றி அரை நூற்றாண்டுக் காலமாக எழுந்து வரும் கருத்துப் பூசல்கள் நமக்குத் தெரியும். தமிழெழுத்து வரிவடிவம் காலந்தோறும் மாறி வந்துள்ள நீண்ட வரலாறும் நமக்குத் தெரியாததன்று. பெரியாரின் 'எழுத்துச் சீர்திருத்தம்' துணைவேந்தர் வா. செ. குழந்தைசாமியின் 'தமிழ் எழுத்துச் சீரமைப்பு' கொடுமுடி சண்முகனாரின் 'புதிய தமிழ்வடிவம்' கொண்டல் மகாதேவனாரின் 'எழுத்தும் கருத்தும்' செ.வை. சண்முகனாரின் 'எழுத்துச் சீர்திருத்தம்' வீரா. இராசகோபாலனாரின் 'தமிழ் எழுத்துச் சீர்திருத்த மலர்' வெள்ளையாம்பட்டு சுந்தரனார் தொகுத்த 'எழுத்துச் சீர்மை' மணவையாரின் 'காலம் தேடும் தமிழ்' சு. இரத்தினசாமியின் 'தமிழ் எழுத்து வரிவடிவ வரலாறு' முதலான நூல்களும் பல இதழ்களில் எழுதிய அறிஞர்களின் கட்டுரைகளும் நம் உரிமைப் பார்வைக்கும் பகுத்தறிவுச் சிந்தனைக்கும் உரியவை.

இக்கால வளர்ச்சிக்கெனத் தமிழ் எழுத்துத் திருத்தம் தேவையேயில்லை என்பவரைப் பழமைவாதிகள் என்றோ, சமுதாய வளர்ச்சியின் எதிரிகள் என்றோ, புரியாத பிற்போக்காளர்கள் என்றோ, 21 ஆம் நூற்றாண்டின் வளர்ச்சி வேகத்தை அறியாதவர்கள் என்றோ, தமிழ்க் குழந்தைகளின் எழுத்துச் சுமையைக் கண்டும் இரங்காதவர்கள் என்றோ பழிப்பட்டம் சூட்ட வேண்டியதில்லை. அதுபோல எழுத்துத் திருத்தம் விரும்புவோரைத் தமிழுக்கு எதிரிகள் என்றோ, தமிழ்ப் பகைவர்களின் கையாட்கள் என்றோ, தமிழ் மரபு அறியாதவர்கள் என்றோ, அறிந்தும் கற்பனை வாதிகள் என்றோ, தமிழின் தனித் தன்மையைக் கெடுப்பவர்கள்

என்றோ இளிவரவு சொல்ல வேண்டியதுமில்லை. இவையெல்லாம் கொண்ட கொள்கையை வலியுறுத்தும் காரணங்கள் ஆகா; புறம்பானவை.

அறிஞர்கள் கருத்து

எழுத்துச் சீர்திருத்தத்துக்கு யார் யார் இசைந்துள்ளனர், ஆதரவு நல்கினர் என்ற பெரியவர்தம் பட்டியலைத் துணைவேந்தர் வா. செ. கு. அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இத்திருத்தத்துக்கு இசையாதோரும், வேண்டாம் என்போரும் பலருளர். தமிழாழ்வார் எனப் போற்றப்பெற்ற மொழியறிஞர் தேவநேயப் பாவாணர் வடமொழி யெழுத்துக் கலப்பு தமிழின் தூய்மையைக் கெடுக்கும் எனவும் தமிழெழுத்து வரி வடிவ மாற்றமும் தமிழுக்குத் தேவையில்லை எனவும் அழுத்தமாகக் கூறியவர். பெரியாரின் வழித்தோன்றலான அறிஞர் அண்ணா ஆட்சிக்கு வந்த பின்னும் பெரியாரின் எழுத்து மாற்றத்தைப் பின்பற்றவில்லை; கலைஞரின் ஆட்சிக் காலத்தும் இதுதான் நிலை. முத்தமிழ்க் காவலர் விசுவநாதன், சிலம்புச் செல்வர் ம. பொ. சி., தீபம் பார்த்தசாரதி, பெருஞ்சித்திரனார், புதுவைத் துணைவேந்தர் வேங்கட சுப்பிரமணியன் என்றின்ன பலர் முறையெழுத்து வடிவினையே வேண்டினர்.

இன்றும் இலங்கை மலேசியா முதலான வெளிநாட்டுத் தமிழினத்தார் முறை வடிவையே கடைப்பிடிக்கின்றனர். அரசாணையிட்ட திருத்த வடிவங்களை ஏற்றுக் கொள்ளாத பல தமிழிதழ்களும் இன்னும் நமது நாட்டில் உள. கணிசமான பொதுப் பெருமக்களும் இதனைப் பின்பற்றவில்லை.

ஆணையெழுத்து

பாடநூல்களே விடாப்பிடியாக ஆணையெழுத்தைப் பயன்படுத்துகின்றன. ஆணையெழுத்தில் அச்சிட்ட நூல் களைத்தான் பொது நூலகத்தில் வாங்க வேண்டும் என்ற விதியினால் பதிப்பாளிகள் விற்பனை கருதி இவ்வெழுத்தில் அச்சிடுகின்றனர். இந்த ஆணையெழுத்தால் பக்கங்கள் அச்சுச்

செலவுகள் கூடுகின்றன என்பதனை அறிந்தும் நிறுவனங்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டியதாயிற்று.

தந்தை பெரியார் 1935 இல் காட்டிய எழுத்துத் திருத்தங்களை அரை நூற்றாண்டுக் காலம் ஏற்றுக் கொள்ள வில்லை என்றால், அவர்மேல் அன்பில்லை என்பது பொருளன்று. அவர்தம் சமுதாயப் போராட்டக் கொள்கைகளை ஏற்று ஒத்துழைத்த தொண்டர்கள் கூட மொழி பற்றிய இந்த ஒன்றினை மேற்கொள்ள முயலவில்லை. அதற்குக் காரணங்கள்; பல மாற்றங்கள் செய்வதற்கு இந்த எழுத்து மாற்றம் தேவையில்லை என ஒரு சாரார் கருதினர். ஒரு தடவை எழுத்து வரிவடிவில் கைவைக்க இடங்கொடுத்து விட்டால், யார் யாரோ அவரவர்தம் ஆதிக்கத்திற்கேற்பப், பலர் கை வைத்துக் கொண்டேயிருப்பர்; தொடர்ச்சியின்றி மொழிச்சிதைவும் மொழிக்குலைவும் நூலழிவும் ஏற்படும் என ஒரு சாரார் அஞ்சினர். இஃது இன்றைக்கும் பொருந்தும்.

பெரியார் நூற்றாண்டு விழாவின் நினைவாக 19–10–1978 இல் 15 எழுத்துக்கட்கு மாற்றான சீர்திருத்த எழுத்துக்களைக் காட்டி அன்றிருந்த அரசு அரசாணை பிறப்பித்தது. ஆணையிட்ட சில திங்கட்குள்ளேயே, ஐகாரமும் ஔகாரமும் மாறின்றிப் பழைய **வடிவங்களிலேயே இருக்கும் என அரசு வெளியிட்டது. இதனை ஓர் எச்சரிக்கை என்று கொள்ள வேண்டும்.**

திருத்தக் காரணங்கள்

இன்ன எழுத்துக்கு இன்ன திருத்தக் குறியீடு அமைய வேண்டும் என்ற முயற்சியை மேற்கொள்வதற்கு முன், திருத்தம் வேண்டிகள் அதற்குச் சொல்லிவரும் காரணப் பாடுகளை முதற்கண் நாம் ஒத்துக் கொள்கின்றோமா? ஒத்துக் கொள்ள முடியுமா? ஒத்துக் கொண்டால், இவை தமிழ்மொழியை எங்குப் போய் எப்படிச் சாய்க்கும் என்று உன்னிப்பாகப் பார்க்க வேண்டும். இக்காரணத் தன்மைகளை நோக்கும் போதுதான் உலக மலைகளை ஒன்று சேர்த்தாற் போன்ற மலைப்பு நம்மைப் பிணிக்கின்றது.

முடிந்த நோக்கம் வேறு; தமிழன்று

“ஒருமொழிக்கு ஒலிதான் அடிப்படை; எழுத்துக்கள் ஒலிகட்கு நாம் கொடுக்கும் குறியீடுகள்; ஒலியன்களை நாம் குறைக்க வில்லை; வரிவடிவு மொழிக்கு ஒரு கருவியே. வடிவத்தை மாற்றுவதாலோ குறைப்பதாலோ மொழி பாதிக்கப்படுவதில்லை” என்பது எழுத்துத் திருத்திகளின் ஒரு வாதம். இது பயங்கரமான வாதம் ஆகும். இவ்வாதம் கற்காலத்தைச் சார்ந்தது. பல்லாயிரம் ஆண்டுகளாக ஒரு மொழிக்கும் அதன் எழுத்து வடிவுக்கும் உயிரும் உடலும் போன்ற பிணைப்பு மரபாக வரலாறாக வந்திருக்கின்றது. ஓர் எழுத்து வடிவைப் பார்த்தவுடன் இது இன்ன மொழி என்று நாம் அறிந்து கொள்வதில்லையா? ஒரு மொழியின் ஒலிக்கும் அதன் எழுத்துக்கும் மரபுத் தொடர்பில்லை என்றால், தமிழ் மொழியின் ஒலிகளை எந்த எழுத்திலும் எழுதலாம் என்ற அச்சமான ஓர் உட்கருத்து இதனுள் அடங்கிக் கிடக்கின்றது என்பதனை உணர்த்த விரும்புகின்றேன். தமிழிசைக் கிளர்ச்சியில் இசைக்கு மொழி தேவையில்லை; எந்த மொழியிலும் பாடலாம் என்ற வாதத்திற்கும் இதற்கும் வேறுபாடு உண்டா? ‘உயிர்கள் கொலைப்படுவதில்லை; உடல்களை யாதும் செய்யலாம்’ என்ற கீதையின் போக்கே இங்கு வெளிப்படுகின்றது.

இதன் முடிவு நோக்கத்தை மேலும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் வேண்டுநரின் கருத்துக்களையும் விளக்கங்களையும் தொகுத்துக் கணித்துப் பார்த்தால், இந்திய நாட்டின் ஒருமைப்பாடு நோக்கி, தேவநாகரி எழுத்துக்களைத் தமிழும் மேற்கொள்ள வேண்டும் என்று அறைவாரும் உளர். உலக வொருமைப்பாடு கருதி உரோமன் எழுத்துக்களையே தமிழ் ஏற்றுக் கொள்ளலாம் எனவும் இதனால் ஆங்கிலம் கற்கும் எல்லாத் தமிழ்க் குழந்தைகட்கும் ஒரு மொழிச்சுமை குறையும் எனவும் ஆங்கிலத்துக்குரிய தட்டச்சு, அச்சு, கணிப்பான் எல்லாவற்றையுமே இன்னொரு செலவின்றி எளிதாகப் பயன்படுத்தலாம் எனவும் உலக மக்கள் தமிழை எளிதாகக் கற்பர், தமிழ் பரவும் எனவும் வலியுறுத்தும் அறிஞர்களும் உளர். மேற்குறித்த இருவகையினருள் உரோமன் எழுத்துவாதிகளே குறிப்பிடத்தக்கவர்கள். “மும்மொழிக் கொள்கை ஏற்கப்பட்டு அது வடமாநிலங்களில் செயல்படுத்தப்படுமாயின் வரிவடிவ எளிமை காரணமாக மற்ற மொழிகளை விடத் தமிழ் அதிக மாணவர்களால்

கற்கப்படுவது சாத்தியமாகும்'' என்பது ஓர் அறிஞர் கருத்து. எனவே இவர்கட்கெல்லாம் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் ஓர் இடைகழி நோக்கே என்பது மறுக்கவோ மறைக்கவோ இயலாத உண்மை. இன்றைய அறிவியல் யுகத்தில் எவ்வகையாலும் தமிழின் தூய்மையும் தனித்தன்மையும் இன்னோர்க்குக் கசப்பாகும். முதல்வர் கலைஞர் கருணாநிதியார் பின்வருமாறு எழுதுகின்றார்: "தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்தம் செய்யும் பேரால் தமிழையே சீர்திருத்தம் செய்யப் போவதாகப் பறைசாற்றித் திரிபவர்களும், இந்தப் போர்வையில் தமிழின் ஒலி – ஓசையைக் கூட மாற்றியமைக்கும் செயல்களில் துணிந்திறங்கும் தோழர்களும் கெடுத்து விட்டிருக்கிறார்கள். ஒலியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, தமிழை ரோமன் லிபியில் மாற்றினால் கூடப் பாதகமில்லை என்று சொல்லும் ஆபத்தானவாதமும் சிலரால் துணிந்து எழுப்பப்படுகின்றது.'' எனவே கலைஞரின் கருத்து எழுத்துத் திருத்திகளின் உள்நோக்கத்தை வெளிப்படுத்தக் காண்பீர்கள்.

துணைவேந்தர் வா.செ.குழந்தைசாமி தமிழ் எழுத்துச் சீரமைப்புக்குக் கூறும் அத்தனை காரணக் கூறுகளும் உரோமன் எழுத்தின் அடித்தளத்தைக் கொண்டவை. செருமானிய இந்தோநேசிய மலேசிய மொழிகள் எல்லாம் உரோமன் வடிவத்தைப் பெற்று வளர்கின்றன என அவர் எடுத்துக்காட்டுவர். "எப்படியோ உயிர்மெய் வடிவங்களை உருவாக்குவதில் எண்ணற்ற சிக்கல்களை நாம் உருவாக்கிக் கொண்டோம்'' எனவும் "உரோமன் வரிவடிவத்தோடு ஒப்பிடும் பொழுது நமது வரிவடிவத்தின் சிக்கல்கள் புரியும்'' எனவும் அவர் சொல்வதிலிருந்தே தமிழுக்கு அவர் கொண்ட அளவுகோல் உரோமன் என்பது தெளிவாகும். உயிரும் மெய்யும் என்ற இரண்டோடு உயிர்மெய் என்ற மூன்றாவது கூட்டுறவைக் கண்டதும், அதற்கெனத் தனிக்குறியீடுகள் கொண்டதும் தமிழ்மொழிக்கே யுரிய திராவிடவியலாகும். இத்தன்மையை வடமொழியும் வடவிந்திய மொழிகளும்ஏற்றுக் கொண்டபின், அது இந்திய மொழிகளின் தன்மையாக விரிந்தது. 'இத்திராவிடவியல் சிக்கலானது, அறிவியல் வளர்ச்சிக்கு உதவாதது' என்று வா. செ. குவும் அவர் போன்ற எழுத்து மாற்றம் வேண்டுநரும் சொல்வதற்கு அடித்தளம், உரோமனை

அளவுகோலாகக் கொண்டதாகும். உயிர்மெய் என்ற கூட்டு நிலையை நாம் உடன்படாவிட்டால், தமிழ்மொழிக்கே யன்றி இந்திய மொழிகட்கும் உடன்படாவிட்டால், **இலக்கணத்தில் என்ன சிதைவுகள் ஏற்படும் எனக் கற்பனை செய்யவும் இயலாது. எழுத்துத் திருத்திகட்கு இது பற்றிய கவலை இல்லை.**

உரோமன் அளவை

கருவிகட்கேற்பத் தமிழெழுத்து வடிவங்களைச் சீரமைப்புச் செய்யவேண்டும் என்று சொல்லும் அறிஞர் வா. செ. குழந்தைசாமி 'குறியீடு என்பது உயிர், மெய் எழுத்துக்களின் பாதியளவு அகலமுள்ளதாகவும் இரு இணைகோடுகட்குள் அடங்குவதாகவும் இருக்க வேண்டும்' எனவும் நெறி கூறுவர். இந்த அளவியல் உலக மொழிகளின் பொதுமையா? எந்த மொழியின் அடிப்படையில் இந்த அளவுமுறை தமிழுக்கு இலக்கணமாகச் சொல்லப் படுகின்றது? மேலும் இரு இணைகோட்டிற்குள் தமிழ் வரிவடிவுகளை அடக்கிவிட்டால் பொறிவழி அச்சிற்கும், தட்டச்சு, தொலைபேசி, மின்னியல் தொலைபேசி ஆகியவற்றிற்கும் பெரிதும் துணைசெய்யும் என்பது இன்னோர்தம் கருத்து. உரோமன் வடிவே பிழையற்ற முழுமையான மாதிரி வடிவு என்பதும் இன்றுள்ள தட்டச்சு அச்சு கணிப்பான் முதலிய பொறியமைப்பே மாறா அமைப்பு என்பதும் இவற்றை மூலமாக வைத்து இவற்றிற்குப் பொருந்தத் தமிழ் வடிவுகளை வளைத்துத் திருத்தி அடக்க வேண்டும் என்பதும் இன்னோர்தம் அளவுப் போக்காகும். இங்ஙனம் பல்லாயிரம் ஆண்டு வளர்ந்த ஒரு தனிச் செம்மொழியை இன்னொரு மொழி நோக்கிப் பெட்டிக்குள் அடக்குவது போல நீள அகலங்களைச் செதுக்க முற்படுவது எந்த வகை அணுகுமுறையும் ஆகாது. இது கெடுவகை அடக்குமுறை என்றே படும்.

'கி' எழுதுவதற்கு மேலே ஒரு தளமும், 'கு' எழுதுவதற்குக் கீழே ஒரு தளமும், 'ணூ' எழுதுவதற்குக் கீழே ஒரு தளத்தோடு பக்கவாட்டின் நீளமும் தேவைப்படுகின்றன என்று தமிழ் வரி வடிவங்களைக் குற்றமாகக் காட்டும்போது, இன்னோர்தம் மொழியளவை நெறிகளும் அடகுவைப்பும் நம்மைக் கவலைப் படுத்துகின்றன. இது முழுதும் இன்றிருக்கும் கருவி காண்

அணுகுமுறையாகும். அவர்களே பன்முறை விளம்பியபடி, அறிவியல் வேகம் கருவியியல் மாற்றமாகச் சென்று கொண்டிருக்கும் இந்நாளில், நேற்றிருந்த தொழில்நுட்பமும் கருவி யமைவும் இன்றில்லை எனக் காணும் நிலையில், **கருவிக்கேற்ப நம் மொழியின் வடிவங்களை மாற்றுவது என்பதும் மாற்றிக் கொண்டே இருப்பது என்பதும் அறிவுடைமையாகாது. சூழ்ச்சியான தமிழ்க்கொல்லி ஆகும்.**

எதற்கு எதனை மாற்ற வேண்டும்? மாறிச் செல்வது எது? மாற்றஞ் செய்யக்கூடாதது எது? என்ற பகுத்தறிவு வேண்டும். உரோமன் அணுகியல் முறையோ கருவி அணுகியல் முறையோ ‘உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையாவுன் சீரிளமைத் திறம்’ என்று வாழ்த்திய தமிழின் தனித்தன்மையைக் கொன்றுவிடும். நம் நாட்டு அறிவியற் பேரறிஞர்கள் நம்மொழி வடிவங்கட்கேற்பத் தொழில்நுட்பம் முயன்று கண்டுபிடித்து எளிய நுண்ணிய கருவிகளை அமைத்துக்காட்டுவதே தன்மானத் தேசியமாகும். உரோமன் வடிவிற்கு ஏற்ப எங்கோ அமைத்திட்ட கருவி யமைப்புகளை எல்லாம் வல்லவை என மயங்கி, நம் மொழி வடிவங்களைச் சிதைத்துக் குறைத்து அடக்கஞ் செய்வது அறிவியல் அடிமையாகவே இகழப்படும்.

கருவி அடிப்படையாகுமா?

எழுத்துத் திருத்தம் வேண்டுவோரின் காரணத் தன்மைகளும் அடிப்படைக் கட்டங்களும் நம்மை மேலும் கவலையொடு சிந்திக்க வைக்கின்றன.

> “இன்றைய பணிகளை இன்றைய கருவி கொண்டு செய்ய வேண்டும். இன்றைய பணிகளை நேற்றைய கருவிகொண்டு செய்யும் இனத்தின் நாளைய வாழ்வு நசிந்துவிடும்.”

என்ற வா. செ. கு. வின் வாழ்வறம் முழுதும் பொருந்தும். தொழில்நுட்பத்தால் படைக்கும் கணிப்பான் முதலிய கருவிகளைப் பயன்படுத்தக் கூடா என்று யார் சொல்கின்றார்கள்? யாரே தடுக்க

முடியும்? நேற்றைய கருவிகள், இன்றைய கருவிகள், நாளைய கருவிகள், எதிர்காலக் கருவிகள் மாறிக் கொண்டேதான் இருக்கும். முன்பு மெதுவாக மாறின. இஞ்ஞான்று மனத்திலும் வேகமாக மாறுகின்றன. ஒழிவில்லா நிலையில்லா உறுதியில்லா இக்கருவி வேக மாற்றத்தைத் தமிழ்ப்புலவோரைக் காட்டிலும் அறிவியற் புலவர்கள் நன்கறிவர். கருவி மாற்றம் பற்றியோ காலத்துக்குத் தக அவற்றைப் பயன்படுத்துவது பற்றியோ பிணக்கும் மறுப்பும் இல்லை. இங்ஙனம் காலந்தோறும் மாறிச் செல்லும் கருவி யமைப்புக்களை அடிமணையாக வைத்து ஒரு மொழியின் எழுத்து வடிவங்களை மாற்ற முயலலாமா? முயல்வது அறிவுணர்வு ஆகுமா? மாறி மாறி வரும் கருவிகளை முதலாக வைத்து வடிவங்களையும் வளைத்துக் கொண்டிருந்தால் தமிழ்மொழி என்ன, எந்த மொழியும் எங்கே போய் முடியும்? மாறி வரும் அறிவியலையும் கருவிகளையும் வழிவழி அறிந்து கொள்வதற்கு மொழிப்பெட்டகமாவது ஒரு வகையில் நிலையுடையதாக விளங்க வேண்டாமா? எல்லாக் கருவிக்கும் காலங்கடந்த மனிதக் கருவி மொழி வழக்கன்றோ?

> "புத்தம் புதிய கலைகள் – பஞ்ச
> பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
> மெத்த வளருது மேற்கே – அந்த
> மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை"

என்று தமிழின் குறைபாடு அறிந்த பாரதியார் எட்டுத்திக்குஞ் சென்று அக் கலைச்செல்வங்களைக் கொணர்ந்து இங்கு சேர்க்கும்படி தூண்டினார். ஆம், அக்கலைச் செல்வங்கள் தமிழுக்கு வேண்டும் என்பதை யாரும் தடைசொல்ல மாட்டார்கள். ஆனால் அவற்றைச் சொல்லவுங் கூடுவதில்லை; சொல்லும் திறமை தமிழ்மொழிக்கில்லை என்பதனையும், மூலமாக எழுத்துச் சீர்திருத்தஞ் செய்தால்தான் சொல்ல முடியும் என்பதனையும் தமிழின் ஆற்றல் அறிந்தார் உடன்படார்; உள்ள நல்ல சீரைத் திருத்த இடங்கொடார். தமிழ்ப்பெருஞ்சான்றோர் தி. சு. அவினாசி லிங்கனார் 7565 பக்கம் கொண்ட பத்துத் தொகுதிக் கலைக்களஞ்சியங்களை முறையெழுத்தில் பதிப்பித்தார். இதுவே இந்திய மொழிகளில் முதற்கலைக்களஞ்சியம். இதுவன்றோ

பாரதியார் எதிர்ப்பார்ப்பது. ஆதலின் இன்றைய கருவிகளைப் பயன்படுத்த அதற்குரிய பயிற்சி வேண்டும் என்று சொல்வதை விடுத்து, யாதொரு தொடர்புமில்லாமல் கருவிக்கும் எழுத்து வடிவுக்கும் முடிச்சுப் போடுவது ஏதோ ஒரு பழமொழியை நமக்கு நினைவூட்டுகின்றது.

வேண்டுவது கருவிச் சீரமைப்பே

மேலை நாட்டார்க்கு அறிவியல் யுகம் பன்னூறாண்டுகட்கு முன்பே தொடங்கிவிட்டது. எல்லாத் துறையிலும் எத்துணையோ நுண் கருவிகளைக் காலந்தோறும் கண்டு சீர்கொண்டு பயன் பெற்று வருவர். அங்ஙனம் கருவி நுண்மை காணும் போதெல்லாம் அதற்குரிய சொல்லாக்கங்கள் நுண் குறியீடுகள் படைத்துக் கொண்டார்களேயன்றி 26 உரோமன் எழுத்து வரி வடிவில் கை வைத்தார்களா? இல்லை. உரோமன் எழுத்து வடிவம் எக்காலத்தும் வரும் எந்த மாற்றத்திற்கும் ஈடு கொடுக்கக்கூடிய இறைத் தன்மையுடையதா? கருவியோ அறிவியல் அணுகுமுறை யுடையது; மொழியோ மரபியல் அணுகுமுறையுடையது. கருவியோ மாறிச் செல்லும் செயற்கை யுடையது; மொழியோ திணித்த மாற்றமின்றி இயல்பான வழக்கு மாற்றம் பெற்றுத் தொடர்ச்சியும் நிலைபேறும் போற்றுவது; எனவே கருவிக்கும் எழுத்து வரிவடிவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டெனமயங்கி, உலக நகைப்புக்கிடமான அறியாமை முறையைத் திருத்தம் விரும்பிகள் பறைசாற்றக் கூடாது.

மீண்டும் நினைவு படுத்துகின்றேன். கருவிகட்கேற்ப உரோமன் வடிவங்கள் திருத்தம் பெற்றில. உரோமன் வடிவுக்கேற்பத்தான் தட்டச்சு, கணிப்பான் முதலியன அமைந்தன. ஏதோ ஒரு மொழியமைப்புக்குக் கண்ட மொழிக் கருவிகளைத் தமிழுக்கு அப்படியே ஆளல் வேண்டுமென்று துணிந்து, உரோமன் கருவிகளைத் தாயாக வைத்துத் தமிழ் வடிவங்களைப் பாயாகச் சுருட்டி மடக்கி அடக்கல் எந்த அளவுக்கும் பொருந்தாது. திருத்தந்தான் மிஞ்சும்; தமிழ் எங்கோ போய்விடும். ஆதலின் நம் நாட்டு அறிவியல் வல்லுநர்கள் நம் தமிழ்மொழி வடிவுக்கேற்ற தட்டச்சு, தொலையெழுதி, கணிப்பான் முதலியவற்றைக் காண்பதே தகும். எழுத்துச் சிதைப்பினை அறவே விட்டுவிட்டு , கருவிச்

சீரமைப்பினை விரைந்து கண்டு அறிமுகப்படுத்துவதே பொறுப்பும் கடமையுமாகும். 1978 இல் 13 எழுத்துத் திருத்தங்கள் அரசாணையால் ஏற்பட்டன. இதனால் என்ன வளர்ச்சி தமிழுக்கு வந்துவிட்டது? நாங்கள் சொல்லும் எல்லாத் திருத்தங்களும் அரசாணையாகி நடைமுறைக்கு வந்த பின்புதான், அறிவியல் யுகத்தில் முழுத் தமிழ் வளர்ச்சி காணவியலும் என்று திருத்தம் வேண்டிகள் காரணம் சொன்னாலும் சொல்லலாம்.

வளர்ச்சிச் சூத்திரம்

“வளர்ச்சி என்பது மாற்றம். மாற்றம் வளர்ச்சியின் ஒரு பகுதி; மாற்றமில்லையேல் வளர்ச்சியில்லை; மாறாத ஒன்று வளராது” என்று வா. செ. கு சொல்லும் பொது நியதி பேருண்மையாகும். இவ்வுண்மையைப் பகுத்துணர்ந்து ஆள வேண்டும் என்பது அதனை விடப் பெரும் பேருண்மையாகும். எதற்கு மாற்றம்? எவ்வளவு மாற்றம்? மாற்றத்தின் பயனளவு என்ன? இயல்பான மாறுதலா? வலிந்த மாற்றமா? அகம் எழுந்த மாற்றமா? புறம் திணித்த மாற்றமா? இது நிற்குமா? தொடருமா? இந்த அளவுப் பயனுக்கு இம்மாற்றம் வேண்டுமா? என்றெல்லாம் பார்த்துதான் மாற்றம் வளர்ச்சி தருவது பற்றித் துணிய வேண்டும். எல்லா மாற்றமும் வளர்ச்சியாகாது; கேடாவனவும் பலவுள.

தமிழ் ஒலிகளை மாற்றவில்லை எனவும் வரி வடிவைத்தான் – அச்சுக் குழிகளைத்தான் குறைக்கின்றோம் எனவும் சொல்லுகின்றவர்களே இது சிறு மாற்றந்தான் எனவும் கட்டம் கட்டமாக முழு மாற்றம் இன்னும் பல உண்டு எனவும் மேலும் அடிப் போடுவதைக் கேட்கின்றோம். இப்போது இகர ஈகார உகர ஊகாரங்களின் 72 வடிவுகளை 4 ஆகக் குறைக்க வேண்டுமென்று முயலும் எழுத்துத் திருத்திகட்கு 68 எழுத்து மாற்றம் குறைந்த அளவாகப்படுகின்றது. ஒவ்வொருவரும் அவ்வளவு குறைப்பேன், இவ்வளவு குறைப்பேன் என்று போட்டி போட்டுக் கொண்டு புதிய குறியீடுகளை வேண்டியவாறு படைத்துக் கொண்டு இகலிடுவதைப் பார்த்தால், ஒவ்வொருவரும் மாற்றமின்றேல் வளர்ச்சியின்று என்ற சூத்திரத்தைச் சொல்லுவதை எண்ணினால், தமிழின் வழக்கு வரிவடிவை முழுதும் ஒழித்துக்கட்டித், தமிழையே உரோமன் தமிழாக

மாற்றும் வரை இன்னோர்தம் அறிவியல் யுகப்போர் நீங்காது என்று எண்ணுகிறேன்.

ஒரு புறம் தமிழ் வடிவைக் குறைக்க வேண்டும் என்று வாதிடும் போது, வடமொழி யெழுத்து வடிவங்களை நிலையாகத் தமிழ் நெடுங்கணக்கிற் சேர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் ஆங்கிலத்தின் ஆறாவது எழுத்தினைத் தமிழ் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் உலகப் பல்லினத்தின் மக்கட் பெயர்களையும் அவ்வொலிப்புப் படியே ஒலிப்பதற்குத் தேவையான வேற்றொலி களைத் தமிழ் போற்றிக் கொள்ள வேண்டும் எனவும் வன்முறை செய்யும் கூட்டத்தாரையும் நாம் மறப்பதற்கில்லை. இப்போது கூறப்படுவது குறைந்த பட்ச மாற்றமே என்று வெளிப்பட ஒத்துக் கொள்ளும் துணைவேந்தர் வா. செ. கு. கட்டம் கட்டமாகப் பத்தாண்டுகட்கு ஒரு முறையோ, கருவிகளின் மாற்றத்திற்கு ஏற்பவோ தமிழ் வரி வடிவங்களைத் திருத்துவதை எதிர்கால நோக்காகக் கொண்டுள்ளார் என்பது தெளிவாகும். தமிழுக்கு உரிய தனி எழுத்து வடிவங்களைக் கருவிக்கு ஒவ்வாமை கூறி அடிக்கடி சிதைத்து அழிப்பதும், தமிழினை உரோமன் தமிழாக்குவதும், அதனால் உலக மொழியாகக் காண்பதும் இன்னோர்தம் முடிவான கேடான அழிவான மருட்கோளாகும்.

தமிழ் வரிவடிவ வரலாறு

“எல்லா நூற்றாண்டுகளிலும் தமிழ் வரிவடிங்கள் மாறிக் கொண்டே வந்திருக்கின்றன. ஆதலின் இப்போது மாற்றம் செய்வது வரலாற்றுக்குப் பொருந்தும்” என்று வடிவுத் திருத்தம் வேண்டிகள் நல்ல சான்றாகக் கூறுவதையும் காலந்தோறும் வந்த வரி வடிவ மாற்றங்களைப் படம் இட்டுக் காட்டுவதையும் அறிவோம். எழுது கருவிக்கு ஏற்பவும் எழுதப் பெற்ற பொருளுக்கு ஏற்பவும் வரி வடிவுகள் மாறி வந்துள என்பது இன்னோர்தம் வாதப்பாடு. இது அடிப்படை யுண்மையன்று. எழுத்தாணியால் எழுதினாலும் அக்கருவிகளை எல்லாம் இயக்கும் கருவியாக அன்று இருந்த மூலக் கருவி கையாகும். அவையெல்லாம் கையெழுத்து என்றே சொல்ல வேண்டும். இன்று கூட எக்கருவியால் தாளில் எழுதினாலும் ஒவ்வொருவர்தம் கையெழுத்தும் முப்பது எழுத்துக்கும்

வேறுபடுவதைக் காண்கின்றோம். உரோமன் எழுத்திற்கும் பிற வகையெழுத்திற்குங் கூட இந்த வேறுபாடு பொருந்தும். எழுநூறு கோடி உலக மக்கள் தொகையில் ஒவ்வொருவர் முகமும் தனித்தன்மைக் கூறு உடையது போல, எம்மொழியில் எழுதினும் கையெழுத்து வேறுபடுவதாலன்றோ அவ்வெழுத்தைச் சான்றாகக் கொள்கின்றோம். ஆதலின் கி. பி. 17 ஆம் நூற்றாண்டில் அச்சுப்பொறி வருவதற்கு முன் இருந்த மாற்றங்கட்குக் கருவி யடிப்படையன்று; எழுதுங் கையே அடிப்படையாகும்.

அச்சுப்பொறி வந்தபின், அக்கையெழுத்து வடிவம் அச்சுப் பதிவாயிற்று. ஆதலின் ஏறக்குறைய 300 ஆண்டுகளாக வரிவடிவிற் பெருமாற்றம் இல்லை என்பதனை வடிவுப் படமே காட்டும். எனவே வரிவடிவில் ஒரு நிலைபேற்றை 300 ஆண்டுகளாகக் காண்கிறோம். மேலும் அச்சு வடிவையே குழந்தைகளின் எழுத்துப் பயிற்சிக்கு மாதிரியாகக் கொள்வதால் நிலைபேறு தொடர்ந்து வருகின்றது. குண்டு குண்டாக அச்சாக எழுதுகிறான் என்ற வழக்குத் தொடர் பிறந்தது. தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்ட திருக்குறள் திரு. தெ. நெடுஞ்செழியன் என்பவர் கையால் வரைந்த அச்சு வடிவாகும். அச்சு வந்தபின் ஏனைய மொழிகளின் வரிவடிவும் குறிப்பிடத்தக்க நிலைபேறு எய்தியது போலவே தமிழ் வடிவும் சீர்மை பெற்றது. கையெழுத்தே முழுக் கருவியாக இருந்த காலத்து ஏற்பட்ட இயல்பான கூர்தல் மாற்றங்களை அச்சுத் தோற்றத்துக்குப் பின்னும் சான்றாகக் காட்டுவது மருளாகும்.

வீரமாமுனிவர் 18 ஆவது நூற்றாண்டில் இரு நெடில்களை ஏ, ஓ என மாற்றஞ் செய்ததைத் திருத்தம் வேண்டிகள் சான்று காட்டுவதும் ஒரு மருளாகும். அவர் செய்த மாற்றம் இன்னோர் கூறுவது போல அச்சுச் சீர்மைப்பட்டதன்று; முற்றும் தெளிவு நோக்கியது என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஒரு மொழிக்கண் வடிவாயினும் நடையாயினும் இலக்கணமாயினும் தெளிவு கருதி மாற்றங்கள் செய்யலாம்; செய்ய வேண்டும்; செய்யப்பட்டுள. அரைப் புள்ளி, காற்புள்ளி கூட மரபியலுக்கு மாறானவை எனப் புலவர்கள் கூறுவது போல ஓரன்பர் கேலி செய்கிறார். இக்கேலி தமிழுக்கு வேலியாகும். தெளிவு தருவதால்

இப்புள்ளிகள் மரபோடு மரபாகின. சில ஆண்டுகளாக 7 என்பதனை நடுக்கோடிட்ட வடிவிலும் 04–09–1989 என நாட்களைக் குறிப்பிடும் போது முன் சுழியிட்டும் எழுதும் திருத்தமெல்லாம் தெளிவுக்காம்; திருட்டுத் திருத்தத்தைத் தவிர்ப்பதற்கும் ஆம். உ ၢ ၣ உ (212) எனத் தமிழெண்கள் ஒருகால் எழுதப்பட்டதை அண்மைக்காலமாக உகஉ என எழுதுகிறோம். தான நிலையை ஒத்துக் கொண்டதால் வந்த சுருக்கமும் தெளிவுமாம். 1915 இல் பாரதியார்க்கும் வ. உ. சி–க்கும் தோன்றிய தமிழ் எழுத்துப் பூசல் ஒலி பற்றியதே யன்றி அச்சு நோக்கிய வடிவுச் சீர்மையன்று.

இவ்விளக்கங்களால் நாம் அறியத் தகுவது என்ன? அச்சுப் பொறிக்குப் பின் தமிழ்வடிவம் நிலையான தொடர்ச்சியான சீர்மை பெற்று விளங்குகின்றது. அச்சீரமைப்புப்படி இலட்சக் கணக்கான நூல்கள் கையெழுத்திலான ஏட்டுப் படிகளிலிருந்து பதிப்புச் செய்யப் பெற்றன. முந்நூறாண்டுகளாக இத்தமிழ் வரி வடிவே உலகம் அறிந்த வடிவுகளாகும். இவ்வடிவமைப்பில்தான் கருவிகளும் பயிற்சிகளும் நிகழ்ந்து குறிப்பிடத்தக்க மரபு ஏற்பட்டுள்ளது. இவ்வெல்லாம் முந்நூறாண்டின் தமிழ் வளர்ச்சிகள். நாமக்கல் கவிஞர் தெளிவான காரணம் காட்டியது போல, 200 ஆண்டுகளாக அறிவியல் வளர்ந்து வந்த காலத்து முதல் ஆங்கிலம் இந்நாட்டில் கல்வித் தளத்தைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டதால், தமிழுக்கு நுழைவாயில் 200 ஆண்டுகளாக அடைக்கப்பட்டதால், தமிழ் அறிவியல் யுகத்தின் வளர்ச்சியைத் தொட்டுப் பார்க்க வியலவில்லை. இதுவே எதிர்கால நம் சிந்தனையாகும். தமிழுக்குப் **பள்ளி யடைப்பே கொள்ளிக்கட்டை யாயிற்று.**

விளையாட்டுச் சிந்தனையா?

இரு இணைகோட்டிற்குள் அடங்குவது, பக்கவாட்டமாக அமைவது, அச்சுக் குழிகளைக் குறைத்து 27 அல்லது 31 ஆக்குவது, இன்று உள்ள கருவிகளின் அமைப்புக்கு ஏற்குமாறு வரிவடிவுகளைச் சரிசெய்வது என்பனவெல்லாம் சீர்மைகள் என்பர். இச்சீர்மையினால் குழந்தைகள் 100 வரிவடிங்களை மனப்பாடஞ் செய்வது குறையும்; மொழிச்சுமை குறையும் எனக் குழந்தை நலம் காட்டுவர். தமிழ் வரிவடிவை 31 ஆகவோ இன்னும் குறைவாகவோ

செய்துவிட்டால், இராமநாதபுர மாவட்டத்தில் பாலாறும் தேனாறும் ஓடுவது போலத், தமிழுக்கும் தமிழினத்துக்கும் கற்பனை செய்து பார்க்க முடியாத நலப் பேறுகள் கொழிக்கும் என்பது இன்னவர்தம் விளம்பரம். இந்த எழுத்துத் திருத்தங்களை ஒருமுறை அறிமுகப்படுத்தி விட்டால் எல்லாரும் எளிதாகப் புரிந்து கொள்வர் எனவும், இதுவரை முறையெழுத்தில் அச்சிட்ட பல்லாயிரம் தமிழ் நூல்களையும் நிமிடத்துக்கு 6000 பக்க அளவில் இந்த அறிவியல் யுகத்தில் சீர்திருத்த எழுத்தில் அச்சிட்டு விடலாம் எனவும் இவையெல்லாம் பிரச்சினைகளேயல்ல எனவும் இன்னோர் தரும் கூற்று வாதிடுதற்குரிய தகுதியன்று.

ஒரு நூல் கூட வெளியிடுவதற்கு உடன் நிதி கிடைக்காத நிலையில், தனிநிறுவனங்களே அல்லற்பட்டு ஏனோதானோ என்று வெளியீடுகள் செய்யும் நிலையில், தகுதி வாய்ந்த பல்லாயிர நூல்கள் மறுபதிப்பாகாமல் உ. வே. சா. போன்றோர் மீண்டும் பிறப்பார்களா என்று தவங்கிடக்கும் நிலையில், நாம் கற்பனை வாதங்கட்குப் பலியாக முடியுமா? 6 கோடித் தமிழ் மக்களுள் இன்று 3 கோடியினர் ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். எழுத்துத் திருத்தத்தால் இவரெல்லாம் முதற் குருடாவர். வயது வந்தோர் கல்வித்திட்டம் போல இவர்கட்கெல்லாம் பயிற்சி கொடுக்க எழுத்துத் திருத்தத் திட்டம் வகுக்க வேண்டுமா? மேலும் இன்று திருத்த வெழுத்திற் கற்கும் குழந்தைகள் இதுகாறும் வெளிவந்த பல்லாயிரக்கணக்கான முன்னூல்களைப் பயில, அவர்கட்கு முறையெழுத்துப் பயிற்சி கொடுக்க வேண்டுமா? படித்தோரும் குருடாவர்; படிப்போரும் குருடாவர் என்ற நிலையில் இன்றுவரை வளர்ந்த தமிழும் என்னாகும்? எங்கே போய் முடியும்? தமிழும் குருடாகும்; வழக்கறும். சொல்லுவது மிக மிக எளிது என்ற குறள்தான் நமக்கு நினைவு வருகின்றது. இத்திருத்தத்தால் பயனளவு என்ன? இழப்பளவு என்ன?

“முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்”

என்ற வள்ளுவம் எழுத்து மாற்றம் வேண்டுவோரின் மறு சிந்தனைக்கு உரியதாகும். மொழித்திருத்தம் – எழுத்துத் திருத்தம்

என்பது பொம்மை விளையாட்டன்று. அழிவு வினையாட்டாகி விடும்.

சீர்மை என்றால் என்ன?

மரபியல் அணுகுமுறையே மொழியின் சீர்மை எனப்படும். ஒலியையோ சொல்லையோ தொடரின் நடையையோ குழந்தை மூன்றாண்டிற்குள் வேண்டியவளவு பேசுகின்றதால், இயல்பான செவி வழக்கே சீர்மையாகும். கல்லாதாரின் மொழிப் பேச்செல்லாம் இயல்பு வழக்கன்றோ. இயல்பு வழக்கில் முழுத்தொடர்களாக, முழுச்சொற்களாகக் கேட்கின்றோம்; பார்க்கின்றோம்; பழகுகின்றோமேயன்றி, ஆடையாகப் பார்க்கின்றோமே யன்றி, ஒவ்வோர் எழுத்தாகவோ, இழை இழையாகவோ கண்ணொடுக்கிப் பார்ப்பதில்லை. நடைப்பழக்கத்தில் ஓடுகின்றோம், தாவுகின்றோம், பறக்கின்றோமேயன்றி அடியடியாக எண்ணுவதில்லை. சோற்றைக் கவளங் கவளமாக உண்ணுகின்றோமே யன்றிப் பருக்கைகளை எண்ணுவதில்லை. இவையெல்லாம் இயல்பான வழக்கியல் மரபுகள். மரபியல் மரபினை அறியாமல் ௵, ஊ, கெ, கே, கொ, கோ, கௌ, கு, பு, சு, து, டீ, யூ எனப் பல சீர்மையற்ற வடிவங்கள் குழந்தைகட்குப் பெருஞ்சுமை எனவும் மனப்பாடஞ் செய்ய வேண்டியவை எனவும் மனப்பாடம், சுமை என்ற கனச் சொற்களை ஈண்டுப் பயன்படுத்தல் வலிந்து கோடலாகும்.

ஆங்கிலத்தின் சீர்மை?

ஆங்கிலத்தின் 26 எழுத்துக்கள் வரிவடிவில் பெரிதும் சிறிதுமாக 104 ஆகின்றன. மழலைப்பள்ளி ஆங்கில அரிச்சுவடியில் அச்செழுத்துப் பெரியது, அச்செழுத்துச் சிறியது, கையெழுத்துப் பெரியது, கையெழுத்துச் சிறியது என இந்த 104 வடிவங்கள் உள. ஆங்கிலப் பேராசிரியர் அய்யாதுரையின் கணக்குப்படி 524 வகைகள் உள. 26 எழுத்துக்களில் உயிர் ஒரு வரிசையாக எண்ணப்படவில்லை; மெய்கள் ஒரு வரிசையாக எண்ணப் படவில்லை. மெய்களுள்ளும் வல்லினம், மெல்லினம், இதழினம், உயிர்ப்பினம், உயிர்ப்பிலாத இனங்கள் அடுத்தடுத்து இணையாகக் கிடக்கவில்லை. மேலோடிய எழுத்துக்களும் கீழிறங்கிய

எழுத்துக்களும் ஒரு கோடு அடங்கும் எழுத்துக்களும் உள. பலர் உடன்பட்டபடி c, q, x எனத் தேவையற்ற ஒலிகளும் உள. ஆங்கில மரபில் வாய் வழக்கில் மக்கட் பெயர்களையும், ஊர்களையும், மலைப்பெயர்களையும் சொல்லும் போது தலையெழுத்து என்ற பேச்சுக்கு இடமில்லை. ஆனால் அவை எழுத்து வழக்குப் பெறும்போது தலையெழுத்துக்களைப் (Capital Letters) பெறுகின்றன. மேலும் தெய்வங்களைச் சுட்டும்போது, தொடர் நடையில் His, Her என்று தலையெழுத்துக்களை ஆளுகின்றோம். நான் என்ற பொருளுடைய I பேசும்போது பெரியவெழுத்தாவதில்லை. எழுதும் போது முதலிடை கடை யெங்கும் தலையெழுத்தினையே பெறுகின்றது. எனவே வாய்வழக்கு ஒன்றாகவும் வரிவடிவ வழக்கு மற்றொன்றாகவும் இருக்கின்றது. இவை குழந்தைகட்குப் பெரிய மனப்பாடம் இல்லையா? பெருஞ்சுமையில்லையா? குதிரைப் பார்வை கூடாது.

நம்மனோர் ஆங்கிலத்தைத் தாய்மொழியிலும் மேலாகக் கருதுவதால், தாய்த் தமிழைத் திருத்துவதற்கு ஆங்கிலத்தை மாசற்ற அளவு கோலாக வைத்துக் கொள்வதால், மேலே சில சீர்மையின்மைகளைக் குறிப்பிட்டேன். இன்று ஆங்கிலத்தில் அரைக்கோடிச் சொற்கள் இருக்கலாம். ஆனால் ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய எழுத்துக்கள் என்ன? அங்ஙனம் எழுதிய பின் அவற்றை ஒலிப்பது எப்படி? என்று ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வாத எழுத்துச் சீர்மையையும் ஒவ்வாத ஒலிப்புச் சீர்மையையும் தெரிந்தாக வேண்டும். ஆங்கில அகராதிகளின் ஒருவகைப் பருமனுக்கும் பளுவுக்கும் இந்த இருநிலைகள் காரணமாகும் என்பதனை உலகம் அறியும். எழுத்துக் கூட்டே சொல்லாக விளங்கும் தமிழைக் கற்ற குழந்தைகள் cat, rat என்பதனைத் தமிழ்போல் சிஏடி என்றும் ஆர்ஏடி என்றுதானே சொல்லவேண்டும் என்று கேட்டால், நாம் என்ன சொல்கின்றோம். அது அம்மொழியின் மரபு என்பதனைத் தவிர வேறு சீர்மை சொல்லமுடியுமா? இங்ஙனம் பல்லாயிரக் கணக்கான ஆங்கிலச் சொற்களை எழுதும் போதும் ஒலிக்கும் போதும் குழந்தைகட்கு மனப்பாடம் சுமை என்று சொல்ல முன் வருகின்றோமா? ஆங்கில இலக்கணத்திலுந்தான், தமிழ் எழுத்துத் திருத்திகள் சொல்லுகின்ற நேர்கோடு இட்டாற் போன்ற சீர்மைகள் உண்டா? வேற்றுமையுருபுகள் முன் நிற்கின்றன;பன்மைப்

பொருளும் இறந்தகாலப் பொருளும் எச்சப் பொருளும் எவ்வளவோ வேற்றுமையான வடிவங்களும் பெறுகின்றன, வடிவின்மையும் பெறுகின்றன. Present, Past, Past Participle என்ற முந்நிலைகள் பெரும் பயிற்சிக்குரியவை. இவையெல்லாம் சீர்மையல்ல என்பது என் கருத்தன்று. இவற்றை நம்மனோர் தமிழுக்குச் சொல்லுமாறு, ஆங்கிலத் திருத்தச் செய்யப் புறப்பட்டால் யார் ஏற்றுக் கொள்வர்? நாமே ஏற்றுக் கொள்ள மாட்டோமே.

தமிழகத்தில் உள்ள ஆங்கில இதழ்களாவது தமிழுக்கே உரிய ஒலிகொண்ட தமிழ்க்குடிமகன், அழகப்பன், பாண்டியன், அண்ணாமலை, திருவள்ளுவர், திருக்குறள் என்ற பெயர்களைப் பதிப்பிக்கும் போது 26 எழுத்துக்களினின்றும் புறம் போய் ழ, ற, ண என்ற எழுத்துக்களைச் சேர்த்துக் கொள்வதுண்டா? சேர்த்துக் கொள்ளாமையே தகும் என்பது என் கருத்து. இதுவே மொழி மரபியல் அணுகுமுறை. "மரபுநிலை திரியிற் பிறிது பிறிதாகும்" என்று 5000 ஆண்டுகட்கு முன்பே தொல்காப்பியம் எச்சரிக் கின்றது. எழுத்துத் திருத்திகள் தமிழெழுத்து வடிவங்களைக் குழந்தைகள் மனப்பாடஞ் செய்வது குறையும், சுமை குறையும் என்று குழந்தைகட்குத் தமிழினின்றும் பெரிய விடுதலை செய்வது போல இடந்தோறும் வலியுறுத்துவதால், ஆங்கிலத்தின் அமைப்பு என்ன, சீர்மை என்ன என்று எதிர்குதிராகக் காட்ட வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. மரபியல் அணுகுமுறைதான் மொழியின் அணுகுமுறை என்ற உலகமொழி நெறியை நாம் கடைப்பிடிக்க வேண்டும். எம்மொழிக்கும் வேறு அணுகுமுறை அழிவு முறையாகிவிடும்.

மரபியல் அணுகுமுறை

வரிசையோ முன்னோ பின்னோ மேலோ கீழோ பக்கவாடோ பல்வேறு நிலைகளோ மொழியின் சீர்மையைக் குறைக்காது. நான் முன்னே சொல்லிய படி நம் செவியும் கண்ணும் மொழியின் கூறுகளை ஒற்றையாகக் கேட்பதோ பார்ப்பதோ இல்லை; அகன்ற பார்வையே மொழிப்பார்வை. கொ, கோ, கௌ என்பவை மூன்றெழுத்தென்றோ, உயிர்க் குறியீடுகள் முன்பின் என்றோ கருதுவதே யில்லை. இலத்தீன் எண்களை நாம் அறிவோம். IV

(4), IX (9), XL (40), XC (90), CD (400), CM (900), MCMXLIX (1949) என வருகின்றன. குறைத்தலும் கூட்டலும் பன்னிலைப் படுகின்றன. மேலும் உரோமன் எழுத்துக்களே எண்ணுக்கும் பயன்படுகின்றன. இதுபோல் தமிழெண்களும் எழுத்தோடு தொடர்புடையவையாகும். தேவநாகரி எழுத்தில் இகரக் குறியீடு முன்னிற்பதையும் உகர ஊகாரங்கள் கீழ் வளைவதையும் 37, 38 ஆவது மெய்கள் கீழ்ப்புள்ளி பெறுவதையும் காண்கின்றோம். அரபி, உருது, சீன மொழிகளின் வடிவங்களை நாம் மரபியல் முறையில் சீர்மைகள் என உடன்பட வேண்டும். ஒரு மொழிக்கு எழுத்தாயினும் வடிவாயினும் சொல்லாயினும் இலக்கண முடிபாயினும் மரபியல் அணுகுமுறையே சீர்முறையாகும். அத்தகைய அணுகுமுறைக்குள் பழையன கழிதலும் புதியன புகுதலும் உண்டு. அவை மரபு வழிப்பட்ட, மாற்றம் என்றே தோன்றாத, வழக்கிடை வளர்ந்து பரவிக் கலந்த இயல்பு மாறுதலாகும். கையெழுத்துக் காலத்துத் தோன்றிய வடிவ மாற்றங்களோ வீரமாமுனிவர் செய்த ஏ ஓ மாற்றங்களோ அரசாணைப்பட்ட அதிகார மாற்றங்கள் அல்ல, இம்மாற்றங்கள் தெளிவிற் பிறந்த வழக்கதிகாரமே. மக்கள் வழக்கே மூலமாகும். இத்தெளிவு கருதித்தான் 'ை' என்ற ஐகாரக் குறியீடு ணை, னை, லை, ளை என மேலே துதிக்கை போல வளைக்கப்பட்டது. ணை, னை, என வரும் சுழி மிகையால் தடுமாற்றம் ஏற்படும் என்ற தெளிவே இதற்குக் காரணம். 1 2 3 4 5 6 7 என நீண்ட தொடரெண்களை எழுதும் போது இடையிடையே காற்புள்ளி யிடுவதை ஒப்பு நோக்குக.

எழுத்துத் திருத்திகள் கையெழுத்துக்கும் வடிவங்கள் எளிதாக இருக்க வேண்டும் என்பதனை உடன்படுகின்றனர். இது நல்ல குறிக்கோள். ஆனால் ஒன்றினை மனங்கொள்ள வேண்டும். மெய் வடிவங்கள் எல்லாம் ஒரே சீர்மையான வடிவுடையன அல்ல. 18 மெய்யெழுத்துக்கள் நான்கு அல்லது 5 வகையான வடிவமைப்புடையவை. அவற்றுக்குத் தக்கபடிதான் உயிர்க்குறி யீடுகளை வரலாற்று வழிக் காண்கிறோம். மெய்யெழுத்துக்கள் இறுதியில் ஒருகோடாக இருக்கும்போதும், ஒரு கோடாக இடங்கொடுக்கும் போதும் ஙு, சு, து, நு, பு, யு, லு, வு, று, னு, என்றவாறு இணைவு செய்தனர். இவ்வகையாக ஏனை இணைவுகளையும் நோக்க வேண்டும். கையெழுத்து எளிமை

நோக்கமாதலின் நல்ல சீர்மைகள் முன்பே அச்சு வடிவில் அமைந்துவிட்டன.

பயனில்லா எழுத்துத் திருத்தம்

இறுதியாக, எழுத்துச் சீர்மைத் திருத்தங்களால் ஏதாவது பயனுண்டா? என்று பார்ப்போம். துணைவேந்தர் வா. செ. கு. அவர்கள் கணிப்பான் அமைப்பில் எழுதப்பட்ட ஒரு பத்தியைத் தினமணியில் (14–2–89) வெளியிட்டிருக்கின்றனர். அது வருமாறு:

> "நாம் வாழும் சூழ்நிலையின் தூய்மை பற்றி நாம் நீண்ட காலப் பார்வையோடும், கூடியவரை இயற்கையின் கூறுபாடுகளைப் பாதிக்காத முறையிலும், இருப்பதைப் பூமிப் பகுதியிலும் வான வெளியிலும் முழு மூச்சான முயற்சியுடன் பாது காக்கும் கூர்மையுடனும் செயல்பட வேண்டும்"

இப்பத்தியில் கணிப்பான் முறைப்படி சீர்திருத்த எழுத்துப் படி 183 எழுத்துக்கள் வருகின்றன. நாம் சொல்லும் முறையெழுத்தின்படி பொருட் குறைபாடின்றி இவை 139 எழுத்துக்களில் அமைகின்றன. எனவே புதிய சீரமைப்பு கணிப்பானுக்காக 44 எழுத்துக்கள் அஃதாவது 4 இல் 1 கூடுகின்றது. இத்திருத்தத்தால் 4 வரிக்கு ஒரு வரியும் 40 பக்கத்துக்கு 10 பக்கமும் 4000 பக்கத்துக்கு 1000 பக்கமும் கணிப்பானாற் கூடும். நீ, நிதி, நீதி, திரு, குழு, புளி, குடி, மூடி, பீடி, வீடு, கூறு, துணி, தூது, கிளி, துடுப்பு, சிரிப்பு, விரிப்பு, சுருட்டு, முருகு, விரிவு, புதுசு, துணிபு என்ற ஆயிரக்கணக்கான வழக்குச் சொற்கள் திருத்தெழுத்தில் கணிப்பானில் எல்லா வகையாலும் இரு மடங்கு நீளமாகும். இரட்டிப்புச் செலவாகும். தட்டு தாம்பாளமாகும்; கணிப்பான் விரிப்பான் ஆகும். இவ்வாறே தமிழ் நூல் முழுவதையும் கணக்கிடுங்கள். இக்கணக்கிலே, தாள் கூடும், மை கூடும், கூலி கூடும், விலை கூடும், தொடர்புடைய எல்லாங் கூடும்; காலமும் கூட ஓரளவு கூடுமேயன்றிக் குறையாது.

பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் தேர்வெல்லாம் கையெழுத்தால் எழுதுவர். முறையெழுத்தால் 2 மணியளவில் எழுதி முடிப்பதற்கு இனி மணி இரண்டரையாகும். இருபது தாள் 25 தாள் ஆகும். உண்மையாகச் சொன்னால் 5 வினாக்களின் விடையெழுதுவதற்கு இப்போது கொடுக்கும் 3 மணி யளவு 3.30 ஆகிக் கூட வேண்டும். அல்லது 4 வினாக்கள் எழுதினாற் போதும் எனக் குறைக்க வேண்டும். கல்வித்துறை, பதிப்புத் துறை, வெளியீட்டுத் துறை, இதழ்த்துறை, வணிகத்துறை, ஆட்சி யலுவல் துறை, மக்கள் தொடர்பு, மொழித் தொடர்புடைய **அனைத்துத் துறையும் நான்கில் ஒருமடங்கு பொருளாதாரத்தாலும், காலத்தாலும், உழைப்பாலும் வீணே கூடுதலாகும் என்பது வெளிப்படை.**

முறையெழுத்திற் கற்றோர்க்குத் திருத்தெழுத்துப் பயிற்சியும், திருத்தெழுத்திற் கற்பவர்க்கு முறையெழுத்துப் பயிற்சியும் அங்கிங்கெனாதபடி எங்கும் கொடுக்க வேண்டும். தமிழ் நீண்டு விட்டது என மக்களும் உலகோரும் தமிழை மேலும் குறை கூறி ஒதுக்குவர். முதற்கண் வெளிப்படுத்திய படி, தமிழைத் தேவநாகரி எழுத்தில் எழுதலாம் என்றும், உலகளாவிய உரோமன் வடிவில் எழுதலாம் என்றும் இந்திய வொருமைப்பாடும் உலக வொருமைப்பாடும் பாடுவதாய் முடியும். திருத்தம் தமிழுக்கே நிறுத்தமாகி விடும். **ஆனால் இப்போலித் திருத்தம் வாராது; முறையெழுத்தின் வழியே தமிழ் வளரும், நிலைபெறும் என்பது என் போல்வார் துணிபு.**

தினமணியின் பொறுப்பு

தினமணியிதழ் தமிழெழுத்துச் சீர்திருத்தம் பற்றி மிக்க ஈடுபாடு காட்டித் தலையங்கமும் எழுதுகின்றது. எழுத்துச் சீர்திருத்தக் கொள்கைக்குப் பல பக்கங்கள் ஆதரவு தருகின்றது. இது அந்த இதழின் அறம். அதனால் அதற்குப் பொறுப்பும் கடமையும் உண்டு. தினமணி இதழாரை நான் வேண்டுவது ஒன்றுண்டு. ஒருநாள் தினமணி இதழ் முழுவதையும் முறை யெழுத்திலும், முழுமையமைந்த சீர்திருத்த எழுத்திலும் இரு வடிவிலும் பதிப்பிக்க வேண்டும். தாள், மை, உழைப்பு, காலம்,

சுருக்கம், அகலம், செலவு, விலை என்ற கூறுகளையெல்லாம் கணிப்பானால் இருவகை வடிவிற்கும் ஒப்பிட்டுக் காட்ட வேண்டும். திருத்தெழுத்தால் என்ன வகையிற் பயனுண்டு, தமிழ் வளர்ச்சியுண்டு என அறுதி செய்ய வேண்டும். இப்படிச் செய்யலாம் எனக் குழிக்கணக்கு வகையிற் சொல்லிக் கொண்டிருப்பது அறிவியலாகாது. மேற்சொல்லியபடி இருவகை வடிவின் பதிப்பு முறை ஒப்பீடே மெய்விளக்கமாகும்.

ஒருநாள் தினமணி இதழை இருவடிவிலும் பதிப்பிப்பதோடு, கம்பர் இராமாயணத்தின் நூறு செய்யுட்களை முறையாலும் திருத்தத்தாலும் பதிப்பித்துக் காட்ட வேண்டும். மேற் சுட்டியபடி தாள் முதலிய கூறுகளையும் கணித்துக் காட்ட வேண்டும்.

எழுத்துச் சீர்திருத்தம் வேண்டும் நல்லவர்கட்கு இதுவே என் வேண்டுகோள். உண்மையாகவே தமிழுக்கு நன்மை வருமாயின், இகலின்றி ஏற்று ஒத்துழைப்பதே புலவர்தம் கடமை. கருத்துக்கும் அஞ்ச வேண்டியதில்லை; கருத்து மாற்றத்துக்கும் அஞ்ச வேண்டியதில்லை. மழலை முதல் எத்துறையிலும் முழுப் பயிற்றுமொழியாகித் தமிழ் உரிமையோடு வளர்வதே நம் இன்பம்.

தமிழின் பொது மதிப்பு

தமிழ்க் குழந்தைகள் ஆங்கிலம், பிரெஞ்சு, செருமன், வடமொழி, இந்தி, தெலுங்கு, கன்னடம் முதலான பல மொழிகள் படிக்கின்றன. அம்மொழிகட்கெல்லாம் எழுத்துச் சீர்திருத்தம் என்ற பேச்சில்லை. தமிழுக்கு மட்டும் எழுத்துத் திருத்தம் எனக் கற்பிக்கும்போது, முன்பே பிறமொழி மோகங்கள் கொண்டு வளரும் நம் குழந்தைகட்குத் தாய்த்தமிழ் பற்றிய சிறிய இழிவுணர்வும் கசப்பும் ஊட்டப்படுகின்றன. உலக மொழிகளுக்குள் தொன்மையும் தொன்மொழிகளுள் இன்றுவரை தொடர்ந்த மக்கள் வழக்கும் உடையது தமிழ்மொழி என்று ஒரு பக்கம் பல பெருமை பேசும் போது, இவ்வளவு பெருமையுடைய மொழி என்று சொல் கின்றார்களே; இதற்கு எழுத்து வடிவுகூடச் சரியில்லையாமே எனக் கேலி செய்ய இடங்கொடுத்துக் கொண்டு வருகின்றோம். இந்திய

வரங்கிலும், உலக வரங்கிலும், கல்வியுலகிலும் தமிழுக்கு உண்மையல்லாத, தேவையல்லாத பழியையும் இழுக்கையும் நாம் மூலகாரணமாகப் பரப்பி வருகின்றோம்.

எழுத்துச் சீர்திருத்தத்தின் பரப்புரை தமிழை எங்கே போய் முடக்குமோ? இத்தீய விதை என்ன விளைவு செய்யுமோ? வளர்ச்சிக்கு மெய்யான மொழி நெறிகளை எப்படி மறைக்குமோ? ஏனைப் பல மொழிகளைக் காட்டினும், ஒலியால் ஒலிப்பால் எழுத்தால் செறிவால் நுட்பத்தால் பண்பால் வரலாற்றால் நிறைவுடைய தூய செந்தமிழுக்கு மட்டும், ஏனை மொழிகட்கு இல்லாத எழுத்துக் குறையுண்டு என்று அன்னையின் அடிவயிற்றிற் கைவைக்க வேண்டாம். இதுவே ஒப்பியல் அறிவுடைமையாகும். உள்ள நல்ல சீர்மையை உணர முடியா விடினும், உள்ள சீரைக் கெடுத்து அல்லதைப் பரப்ப வேண்டாம். இந்திய வொருமை, உலக வொருமைகளை யெல்லாம் திரித்துப் பேசித் தமிழொருமையையும் தமிழ் வடிவையும் சிதைப்பது மொழி மாசாகும்; தமிழ்க் கொல்லியாகும். “உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்” என்பது சங்கத் தமிழ் காட்டிய முன்னேற்றச் சீர்மை. இவ்வுண்மையைத் தன்னறிவோடும் தமிழ் மானத்தோடும் கடைப்பிடிப்போமாக.

பதிப்பளிப்பு – மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம் 1–4–89

8. எழுத்துச் சீர்திருத்தம் தேவையா? (1995)

[சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம்]

தமிழ்மொழியின் வளர்ச்சியிலே ஆர்வம் உடையவர்களில் சிலர் தற்போதைய தமிழ் எழுத்துக்களின் அமைப்பும், எண்ணிக்கையும் தமிழ் வளர்ச்சிக்குத் தடையாக இருந்து வருகின்றன என்று கருதுகின்றனர். தமிழ் எழுத்துக்கள் சிலவற்றின் வரிவடிவத்தை மாற்றவும், எண்ணிக்கையைக் குறைக்கவும் வேண்டுமென்று தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

இவர்களிலே ஒரு சாரார், எழுத்துக்களின் எண்ணிக்கையைப் பெருக்குகின்ற வகையில் சீர்திருத்தம் காண விழைகின்றனர்.

இன்னொரு சாரார், எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் அளவிலே சீர்திருத்தம் காணக் கோருகின்றனர். ஆம்; எழுத்துச் சீர்திருத்தம் வேண்டுமென்போரும் ஒருமித்த கருத்துடையவர்களா யிருக்கவில்லை!

உயிர் எழுத்துக்கள் 12, மெய்யெழுத்துக்கள் 18 ஆகிய 30 எழுத்துக்களை மட்டுமே கொண்டு, தமிழை வளர்க்கவும் வாழ வைக்கவும் முடியும் என்று இவர்கள் வாதிடுகின்றனர். உயிரெழுத்துக்களில் சிலவற்றின் வடிவங்களைக் கூட மாற்றவேண்டு மென்றும் கோருகின்றனர்.

ஆங்கில எழுத்தைப் புகுத்த...

பிறிதொரு சாரார், ஆங்கிலத்தில் உள்ள 'எஃப்' (F) 'இசட்' (Z) என்ற எழுத்துக்களுக்கேற்ற ஒலியை உடைய எழுத்துக்கள் தமிழில் இல்லாத குறையைப் போக்குவதற்காக அந்த ஆங்கில எழுத்துக்கள் இரண்டையும் தமிழ் எழுத்துக்களின் கட்டமைப்பிலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கூறுகின்றனர்.

இன்னொரு சாரார், இப்போதுள்ள தமிழ் எழுத்துக்கள் அனைத்தையுமே கைவிட்டு, முற்றிலும் 'ரோமன்' எழுத்துக்களைக் கொண்டே தமிழை எழுதலாம் என்று சொல்கின்றனர்.

பொதுவாக, இவர்களுடைய எழுத்துச் சீர்திருத்தக் கோரிக்கைகள் அனைத்தையும், தமிழ் அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுவிட்டதாகத் தெரியவில்லை! ஒவ்வொரு கருத்துமே ஒரு சில தனிப்பட்டவர்களின் கோரிக்கையாகத்தான் இருந்து வருகின்றது.

எழுத்துக்களைச் சீர்திருத்தும் முயற்சியைப் பல ஆண்டு களுக்கு முன்பே, தமிழக அரசு மேற்கொண்டு அது பற்றித் தீவிரமாக ஆலோசித்து, 9 எழுத்துக்களை மட்டும் திருத்தினால் போதும் என்ற முடிவுக்கு வந்தது!

உயிர் எழுத்துக்களிலே 'ஐ' என்பதனை 'அய்' என்றும்; 'ஔ' என்பதனை 'அவ்' என்றும் எழுதலாம் என முடிவெடுத்து, இந்த இரண்டு எழுத்துக்களையும் உயிரெழுத்துகளின் பட்டியலிலிருந்து அகற்றி விடுவதென அரசு முடிவு செய்தது.

எழுத்துக் குறைவால் வேலை கூடும்

உயிர்மெய் எழுத்துக்களிலே 'ஞு', 'று', 'ணை', 'னை', 'லை', 'ளை', 'ரு' ஆகிய 7 எழுத்துக்களை அடியோடு கைவிட்டு, அவற்றிற்கு மாற்றாக, நெடிலுக்குப் பயன்படுத்தப்பட்டு வரும் 'ா' என்னும் குறியீட்டையும், 'ஐ'காரத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வரும் 'ை' என்னும் குறியீட்டையும் பயன்படுத்தி 'ணா' 'னா' 'றா' 'ணை' 'னை' 'லை' 'ளை' என மாற்றி எழுதலாம் என முடிவெடுத்து, அதனை ஒரு ஆணையின் மூலம் அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்தது. ஆனால், உயிரெழுத்துக்களில் திருத்தம் காண்பதைத் தமிழ் அறிஞர்களில் பலரும் எதிர்த்தனர். 'ஐ' எழுத்தானது தலைமையைக் குறிக்கும். பொருள் பொதிந்த சொல்லாகவும் இருந்து வருவதால் அதனைக் கைவிடுவதற்கு அறிஞருலகம் விரும்பவில்லை. அத்துடன்,

'ஐ' என்னும் எழுத்தை உயிரெழுத்துக்கள் பட்டியலிலிருந்து அகற்றாமலேயே 'அய்' என்று எழுதும் வழக்கமும் நடைமுறையும் இருப்பதால், அதை அப்படியே விட்டுவிடலாம் என்றும் ஆலோசனை கூறினர்.

'ஔ' என்னும் எழுத்தானது 'ஒ' 'ள' என்னும் கூட்டெழுத்துக்களைக் கொண்டதாதலாலே, இதனை அகற்றிய பின்னரும், 'ஒ'வும் 'ள'வும் உயிரெழுத்தாகவும், உயிர்மெய் யெழுத்தாகவும் நீடிக்குமாதலால் எழுத்துக்களைக் குறைக்கும் வேலைக்கு இந்தச் சீர்திருத்தம் பயன்படாது என்பது தெளிவுபடுத்தப்பட்டது.

இந்தக் கருத்தை ஏற்று 'ஐ'–யும் 'ஔ'வும் அகற்றப்பட மாட்டாது என்று அரசு மறு ஆணை பிறப்பித்தது. இதற்குமேல் தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறைக்கவோ, அவற்றின் வடிவங்களை மாற்றவோ அரசு ஆர்வம் காட்டவில்லை. ஆயினும், எழுத்துச் சீர்திருத்தக்காரர்களின் பிரச்சாரம் தொடர்கிறது.

அறிவியல் தமிழ் எது?

'அறிவியல் தமிழ்' என்பதாக ஒரு பெயரைச் சொல்லிக் கொண்டு தற்போதைய தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையானது விஞ்ஞானத் துறையிலே தமிழுக்குப் புதுவாழ்வு தேடத் தடையாக இருக்கிறது என்று சொல்லுவோரின் பிரச்சாரம் தொடர்கிறது.

எழுத்துச் சீர்திருத்தக்காரர்களின் சார்பில் வெளியான நூல்களையும் பிரசுரங்களையும் ஒன்று விடாமல் சேகரித்து, அவற்றை ஆய்ந்து பார்த்தேன், எழுத்துச் சீர்திருத்தம் கோருவோரில் முக்கியமானவர்களைச் சந்தித்துப் பேசியும் இருக்கிறேன்.

'எஃப்' (F) 'இசஃட்' (Z) என்னும் ஆங்கில எழுத்துக்களைத் தமிழில் சேர்க்க வேண்டுமென்று கோருவோர் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் தங்கள் அளவில் இந்த இரண்டு எழுத்துக்களையும்

பிடிவாதமாகப் பயன்படுத்தியும் வந்தனர். ஆனால், மக்களிடையே ஆதரவு கிடைக்காததாலோ என்னவோ, பின்னர் அவர்களே அதனைக் கைவிட்டு விட்டனர்.

தமிழ்மொழியில் உள்ள 'ழ' என்னும் எழுத்துக்குரிய ஒலியைத் தரும் எழுத்து ஆங்கில எழுத்துக்களில் ஒன்று கூட இல்லை. அதனால், 'ழ'கரத்தை ஆங்கிலத்தில் சேர்க்க தமிழறிஞர்கள் முயலுவார்களானால், அது பயனுடையதாக இருக்கும். அந்நிய மொழியொன்றை, ஒரு நாடு பயன்படுத்துகிறது என்றால், தன் சொந்த மொழி மூலமாக அந்த மொழியைத் திருத்தி அமைக்க முயல்வதுதான் மரபும் சுயமரியாதையும் ஆகும்.

இந்த முறையில்தான் பிரிட்டனில் வழங்கிவரும் ஆங்கிலம் ஒன்றாகவும் அமெரிக்காவில் வழங்கிவரும் ஆங்கிலம் அதிலிருந்து சிறிது மாறுபட்டதாகவும் இருந்து வருவதைக் காண்கிறோம். மற்றும் தமிழில் எழுதவும் படிக்கவும் மட்டுமே தெரிந்து வைத்துள்ளோர் அனைவருமே ஆங்கில எழுத்துக்களையும், அவற்றிற்கான உச்சரிப்பு முறையையும் சரிவரத் தெரிந்து கொள்ள சந்தர்ப்பம் இருக்கும் காலம் இது.

'காப்பி' என்பது சரியோ!

ஆகவே, 'எஃப்' (F) என்னும் எழுத்துக்கு 'ப' என்னும் தமிழ் எழுத்து உபயோகப்படும் இடங்களிலே, ஆங்கில எழுத்துக்குரிய ஒலியையே பயன்படுத்த, எல்லோரும் புரிந்துகொள்ள முடியும். சான்றாக coffee என்னும் ஆங்கிலச் சொல்லைத், தமிழில் 'காப்பி' என்று எழுதும் வழக்கம் இருந்து வருகிறது. ஆயினும், வாயால் சொல்லும் போது, ஆங்கில எழுத்தின் ஒலியையே பயன்படுத்துவது வழக்கமாக இருந்து வருகிறது. இதற்காக, உயர் கல்வி தேவைப்படவில்லை.

இதுபோல, z என்னும் ஆங்கில எழுத்துக்குரிய ஒலியைத், தமிழோடு இணைந்துள்ள 'ச/ஸ' 'ஜ' ஆகிய எழுத்துக்களின் மூலம் ஒலிக்க முடியும். ஆகவே, இதிலே ஒன்றும் கஷ்டம் இருக்கவில்லை!

தமிழ் எழுத்துக்களைக் குறைத்தாலொழிய, தமிழ் அல்லாத பிற நாட்டினர் தமிழைப் பயில்வது சுலப சாத்தியமில்லை என்ற கருத்து கொஞ்சம் கவர்ச்சியுடையதாக இருக்கிறது. ஆயினும், இந்தப் பிரச்னையிலே அயல் நாட்டவர் எவரேனும் கருத்து வெளியிட்டிருக்கின்றனரா என்பதையும் கவனித்தாக வேண்டும். தமிழல்லாத மொழிகள் வழங்கும் பல்வேறு நாடுகளிலிருந்து தமிழகத்திற்கு வந்த பாதிரிமார்களிலே கால்டுவெல், பெஸ்கி, ஜி. யு. போப் போன்ற அறிஞர்கள், **தமிழைப் பழுதறப் பயின்று, புலமை பெற்றதனைத் தமிழ் அறிஞர் உலகம் அறியும்.** இவர்களிலே கால்டுவெல் என்பார், தென்னிந்திய மொழிகளின் சொற்களை ஒப்பிட்டு ஆராய்ச்சி நடத்தி, "**ஒப்பிலக்கண நூல்**" என்பதாக ஒன்றைப் படைத்தார். அந்த நூல் வெளியான பின்னர்தான் தென்னிந்திய மொழிகளின் தாய்மொழி தமிழ் என்பது நடுவு நெஞ்சுடையோரால் ஒப்புக் கொள்ளப்பட்டு, உறுதிப்பட்டும் விட்டது.

பாதிரிமார் கூறவில்லையே!

ரெவரெண்ட் பெஸ்கி என்பார், தமிழ்மொழியின் வரலாற்றி லேயே 'சொல் அகராதி' ஒன்றைத் தயாரித்து தமிழ் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தார். அத்துடனன்றித், 'தேம்பாவணி' என்னும் காப்பியம் ஒன்றை, உயர்தரமான கவிதை நடையில் யாத்துக் கொடுத்து, தமிழ்க் களஞ்சியத்திலே சேர்த்தார்.

ஜி. யு. போப் என்பவர் திருவாசகத்தையும், திருக்குறளையும் ஆங்கிலத்திலே மொழி பெயர்த்தார். மற்று, தொல்காப்பியத்தையும் நன்னூலையும் படித்து, தமிழ் இலக்கணத்தை அறிகின்ற கஷ்டத்தைத் தவிர்க்க எளிதான தமிழ் இலக்கணம் ஒன்றையும் போப் பெருமகனார் படைத்துக் கொடுத்தார். அது, 'போப் ஐயர் இலக்கணம்' என்றே பெயர் பெற்றுவிட்டது!

பெஸ்கி என்பார், தமிழ் எழுத்துக்களில் 'ர' என்னும் உயிர்மெய் எழுத்துக்கு 'ா' இடுகுறியே பயன்படுத்தி வந்ததால் ஏற்பட்ட குழப்பத்தை நீக்க 'ா' என்னும் இடுகுறிக்கு வலது புறத்தின் கீழே சிறிது கோடிழுத்து, 'ர' என்னும் உயிர்மெய்

எழுத்தாக்கினார். இந்த மாறுதலை அவர் ஏற்படுத்துவதற்கு முன்பு, 'தொல்காப்பியம்' என்பதைத், 'தொலகாப்பியம்' என்று சொல்லும் வழக்கம் இருந்தது! இப்படியெல்லாம் தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டு புரிந்த அயல்நாட்டு அறிஞர்களிலே எவரும் தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை கூடுதலாக இருப்பதால் அதனைக் கற்பது கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லவேயில்லை.

வள்ளற் பெருமான் தமிழின் சிறப்பை வருணிக்குமிடத்து, 'எண்ணளவில் சுருக்கமாயும், ஒலி யிலேசாயுமுள்ள தென்மொழி' என்று கூறுகின்றார். அவர் தொல்காப்பியத்தின் முதல் சூத்திரம் மட்டுமே எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறிப்பதாக ஏற்றார் போலும்.

சத்திய வாக்குறுதி

"எழுத்தெனப்படுப அகர முதல னகர இறுவாய் முப்பஃதென்ப" என்பது தொல்காப்பியத்தின் முதல் சூத்திரம். மற்ற எழுத்துக்கள் எல்லாம் சார்பெழுத்துக்களே யாதலால் அவை அசல் எழுத்துக்களின் கணக்கில் தொல்காப்பியரால் சேர்க்கப்படவில்லை.

நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கக் கூண்டில் ஏறுகிற ஒருவர், "நான் சொல்வதெல்லாம் சத்தியம்" என்று ஒரு உறுதிமொழி எடுத்துக் கொள்வதைப் போல், 'எழுத்தெனப்படுவது முப்பதேதான்' என்று முதலில் சொல்லிவிட்டு, அதற்கு மேல்தான் தொல்காப்பியர் தமிழின் இலக்கணத்தைக் கூறுகிறார். இதனை எழுத்துச் சீர்திருத்தக்காரரில் யாரும் இதுவரை மறுத்ததில்லை.

தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்று கோருவோர், ஆங்கிலத்தையே சான்று காட்டுகின்றனர். இதனை நினைக்கும் போது நெஞ்சு வேதனைப் படுகிறது. ஆங்கிலமொழி எழுத்துக்களின் எண்ணிக்கை 26 தான் என்றும், தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையோ 247 என்றும் சொல்லி எழுத்துக்களின் எண்ணிக்கையிலே ஆங்கிலத்திற்கும் தமிழுக்கும் மலைக்கும் மடுவுக்கும் போன்ற வேற்றுமை

இருப்பதாகச் சுட்டிக் காட்டுகின்றனர். **இது வேண்டுமென்றே தமிழைச் சிறுமைப் படுத்துவதாகத்தான் தோன்றுகிறது. இது சரியான வாதம் அல்ல.**

ஆங்கில மொழிக்குரிய எழுத்துக்கள் 26 தான் என்று சொல்வதை முதலில் மறுத்தாக வேண்டும். அந்த எழுத்துக்களில் முதல் எழுத்தான 'ஏ' என்பதை எடுத்துக் கொண்டு வரி வடிவ ரீதியில் பார்த்தால் அதற்கு நான்கு வரி வடிவங்களை நாம் பயன்படுத்தி வருகிறோம். இதன்படி, ஆங்கில மொழிக்குரிய எழுத்துக்கள் 26 என்பது சரியல்ல மாறாக ஆங்கில மொழியில் வரிவடித்தில் வேற்றுமையுடைய எழுத்துக்கள் 104 ஆகும்! இப்படி, **ஒலி வேற்றுமை இல்லாத இடத்து வரிவடிவ வேற்றுமை ஏன் ஏற்பட்டது?** இதற்கு இதுவரை எந்த ஆங்கில மொழிப் புலவரும் சமாதானம் சொல்லவில்லை. தமிழ் மொழியிலே எழுத்து வடிவம் வேறுபடும் போது, நிச்சயமாக ஒலியும் வேறுபட்டே தீரும். ஒலி வேறுபடாத இடத்து எழுத்து வடிவம் வேறுபடுவது தமிழுக்குத் தேவையில்லாத ஒன்றாகிவிட்டது!

ஒலி மாறாமல் எழுத்து மாறுவதேன்?

தமிழ் எழுத்துக்களிலே ஒவ்வொன்றும் அது முன்னும் பின்னும் வரும் எந்த எழுத்தோடு சேர்ந்தாலும் அதன் ஒலியில் மாற்றம் ஏற்படுவதில்லை. கற்போடு இயைந்து காணப்படுகிறது! சேருவோரை ஒத்து, குணம் மாறும் மனிதரைப் பார்க்கிறோம். ஆனால், தமிழ் எழுத்துக்களுக்கு அப்படித் தடுமாற்றம் கிடையாது. இதற்குக் காரணம், தமிழில் உள்ள சார்பு எழுத்துக்கள்தான். சார்பு எழுத்துக்கள் இருந்ததில்லையானால் தமிழ் மொழி இன்றுள்ள வளர்ச்சியை அடைந்திருக்க முடியுமா என்பது ஐயப்பாடே.

தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையானது 247 என்றே கொண்டாலும் அந்த எண்ணிக்கையானது மொழியைக் கற்பதற்குக் கஷ்டமாக இருக்கவில்லை. 'க' என்னும் குறில் எழுத்தோடு 'ா' என்னும் குறியீட்டைச் சேர்த்து 'கா' என்னும் நெடிலாகப் பயிலுகிறோம். இந்த ஒரு எழுத்தைப் பயின்று விட்டால் கடைசி

எழுத்தாக வருகிற 'னா' வரை அவை 'ஆ' என்ற ஓசையிலேயே முடிவதைப் பார்க்கிறோம். பிற நெடில் எழுத்துக்களின் நிலையும் இதுதான். இதிலே பயில்வதற்கு என்ன கஷ்டம் இருக்கிறது?

தமிழில் உள்ள 'ா' 'ெ' 'ே' 'ை' என்னும் ஐந்து குறியீடுகளைப் பயின்று விட்டால் உயிர் எழுத்தும் மெய்யெழுத்தும் அல்லாத 217 சார்பெழுத்துக்களை மிக எளிதில் பயின்று விடலாம். இப்படி ஒரு திறமையான எழுத்தமைப்பைக் கொடுத்த சான்றோர்களுக்குத் தமிழ்ச் சமுதாயம் நன்றி செலுத்த வேண்டும்!

இன்னொரு சிறப்பையும் இங்கே நினைவூட்டியாக வேண்டும். 'உயிரெழுத்துக்கள்' – 'மெய்யெழுத்துக்கள்' என்ற அணுகு முறையை விட்டு, உயிரெழுத்துக்கள் – உயிர்மெய் எழுத்துக்கள் என்று அணுகுவோமானால், மெய் எழுத்துக்களில் ஒவ்வொன்றின் தலைப்பில் உள்ள புள்ளியை அழித்துவிட்டால் புள்ளியை இழந்த எழுத்துக்கள் நமக்குப் புதிதாக இருப்பதில்லை. ஒரு புள்ளியை வைத்து 18 எழுத்துக்களை நமக்குத் தந்த சான்றோர்கள் இருக்கும் தென்புலம் நோக்கி நாம் தொழவேண்டும். ஓர் புள்ளி 18 சார்பெழுத்துக்களைக் கொடுக்கிறது. அது போல் 'ா' என்னும் குறியீடு, 18 நெடில் எழுத்துக்களை நமக்குத் தருகிறது. இன்னும் 'ெ' எனப்படும் ஒற்றைச் சுழிக் கொம்பு இடப்படும் குறியீடு 18 எழுத்துக்களை எளிதாகப் பயிலுவதற்கு வாய்ப்பு அளிக்கிறது.

இது போல இரட்டைச் சுழி கொம்பாகிய 'ே' என்னும் குறியீடும் 18 எழுத்துக்களை நாம் பயிலப் பயன்படுகிறது. 'ஐ' காரமாகிய 'ை' என்னும் குறியீடும் இதே நிலையில்தான் உதவுகிறது.

வாதத்திற்காக ஒன்றொடோன்று சம்பந்தமில்லாத தனி எழுத்துக்கள் போல் குறியீடுகளோடு சேர்ந்த எழுத்துக்களை யெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு இருநூற்று நாற்பத்து ஏழு எழுத்துக்கள் தமிழில் உள்ளன என்று நீட்டி முழக்கித் தமிழுக்குக் குறை கற்பிப்பது என்ன நியாயமோ? அதையும் தமிழரே செய்வதா?

உயிரெழுத்தில் கை வைக்காதே!

இன்னொன்றையும் இங்கே சொல்லியாக வேண்டும். 'ஐ'காரத்தை மெய்யெழுத்துப் பட்டியலிலிருந்து அகற்ற வேண்டுமானால், 'ஐயர்' என்ற சொல்லை 'அய்யர்' என்று ஆக்க வேண்டுமானால் 'ஐ' என்னும் எழுத்தையும் அகற்றிதான் ஆக வேண்டும். அப்போது 'விடுதலை' சரியல்ல; 'விடுதலய்' என்பதுதான் சரியாகும்.

இதை ஏற்றால் 'ை' என்ற குறியீடு மறைந்துவிடும். மேலும் **இந்தக் குறியீடு தமிழ் எழுத்துக்கள் பட்டியலில் குறைந்து போகும். ஆனால், தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தில் எல்லையற்ற ஆர்வம் காட்டுவோர் ஏனோ இந்தக் குறியீட்டை இதுவரை கைவிடவில்லை!**

தமிழில் உள்ள உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டையும் உயிர் மெய்யெழுத்துக்கள் பதினெட்டையும் மட்டுமே வைத்துக் கொண்டு மற்ற எழுத்துக்களையெல்லாம் தலை முழுகிவிட்டு, தமிழைப் பயன்படுத்த முடியும் என்ற வாதத்திலே ஓரளவு உண்மை இருக்கலாம். ஆனால், அது தமிழுக்கு நன்மை செய்வதாகாது.

'கி' என்னும் உயிர்மெய் எழுத்தை அகற்றி விட்டு, 'க்இ' என்று எழுதலாமே என்பது ஒரு வாதம்! இப்படியே 'கீ' என்பதை 'க்ஈ' என்றும், 'கு' என்பதனை 'க்உ' என்றும், 'கூ' என்பதனை 'க்ஊ' என்றும் எழுதலாம் என்கின்றனர். இது சில நாளேடுகளிலும் இங்குமங்குமாக எழுத்துச் சீர்திருத்தம் என்ற பெயரில் தலைகாட்டி வருகிறது.

இதில் உள்ள பயங்கரமான ஒரு குறை என்னவென்றால், எண்ணளவில் எழுத்துக்களைக் குறைக்கப் புகுந்து, **தொழில் அளவில் எழுத்துக்களைப் பயங்கரமான அளவுக்குக் கூட்டி விடுவதாகும்.**

'கீ' என்னும் ஒரு உயிர்மெய் எழுத்திற்குத், தட்டச்சுக்காரர் ஒரு தட்டு தட்டினால் போதும். ஆனால் 'க்ஈ' என்னும் மாற்று எழுத்தைப் பயன்படுத்தினால் இரண்டு தட்டு தட்ட வேண்டும்.

இப்படியே 217 எழுத்துகளையும் தட்டச்சுக்காரர் 30எழுத்துக்களால் பயன்படுத்த முயன்றால், ஒரு பக்கத்திற்குரிய வரிகள் கூடுதலாகும். அதுபோல் பக்கங்களும் கூடுதலாகும்!

அச்சகத்தாருக்குத் தொல்லை

இதைவிட்டு, அச்சகத்தை நோக்குவோம்! அங்கே கூட இதே தொல்லைதான். தட்டச்சுத் தொழில் புரிவோரும், அச்சுக் கூடத்தில் எழுத்துக் கோப்போரும் இந்த 30 எழுத்து வாதத்தை ஒரு தொல்லையாகத்தான் கருதுவார்கள். அவர்களுக்கெல்லாம் வேலை நேரமும் அதிகரிக்கும். இவ்வளவு தொல்லைப்பட்டு இந்த 30 எழுத்தளவில் குறைப்பை ஏற்றுக் கொண்டாலும் நாம் இயந்திர யுகத்தில் வாழ்கிறோமாதலால், ஏற்கெனவே அச்சாகியுள்ள புத்தகங்களையெல்லாம் எரிப்பதற்கு என்று ஒரு நாளைத் தேர்ந்தெடுத்து, அதைக் கொண்டாட வேண்டிய அவசியம்கூட ஏற்படலாம். இந்த 30 எழுத்துக்களால் எழுதக் கூடிய மொழியானது, பெயரளவில் தமிழ் என்று சொல்லப்படலாம். ஆரம்பக் கல்விக்கு மேலே சென்றுவிட்டவர்களுக்கு ஒரு புதிய மொழியைப் படிப்பது போல்தான் இது இருக்கும். அவ்வளவு தொல்லையை ஏற்கும் அளவுக்கு என்ன லாபத்தை இந்த எழுத்துக் குறைப்பு தந்துவிடப் போகிறதோ தெரியவில்லை!

நல்ல வேளையாக, எழுத்துச் சீர்திருத்தம் கோருவோரெல்லாம் 30 எழுத்து வாதத்தை வற்புறுத்துவோராக இல்லை என்பது ஆறுதல் தருகிறது.

இதில் விந்தை என்னவென்றால், தமிழை வளர்ப்பதற்கு என்று சொல்லித் தமிழ் எழுத்தைக் குறைக்கும் கிளர்ச்சியை நடத்தி வருவோரோ 'ரோமன் லிபி'யைக் கொண்டு தமிழை எழுதலாம் என்ற வாதத்தைத் தொடங்கி யிருப்பதைப் பார்க்கிறோம்.

'ரோமன் லிபி'யில் தமிழ் எழுத்தை எழுதத் தொடங்கி விட்டால் உலகில் உள்ள 1500 கோடி பேருமே தமிழைப் பயின்று விடுவார்களாம்! அப்படி ஒரு கருத்தை இதுவரை தமிழரல்லாதோர் எவரும் வெளியிட்டதாகத் தெரியவில்லை.

இப்படி நடைமுறைக்கு ஒத்துவராத, தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படாத, ஓரளவே தமிழைக் கற்றவர்களுக்குப் பயன்படாத இந்த முப்பது எழுத்து வாதத்தை ஏற்றுக் கொண்டால், தமிழ்நாட்டிலுள்ள நூற்றுக்கு நூறு பேருக்குமே முதியோர் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்தியாக வேண்டும். ஏனென்றால் பழைய தமிழ் அவர்களுக்குப் பயிலுவதற்கு மட்டுமல்ல, பார்ப்பதற்குக் கூட விளங்காது!

தமிழில் எழுத்து அதிகமென்பது பொய்

இந்த எழுத்துக் குறைப்பு வாதத்தில் தீவிரமாக ஈடுபட்டிருப்போர், அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ள ஏழு எழுத்துச் சீர்திருத்தத்தைக் கூட தங்கள் அளவில் இதுவரை கடைப்பிடிக்கவில்லை. கடைப்பிடிப்பவர்களிலும் சிலருக்கு அரசு அறிவித்த மாறுதலை ஏற்க ஆண்டுக் கணக்கில் அவகாசம் தேவைப்பட்டது.

போகட்டும், யதார்த்தமான நிலைக்கு வந்து இந்த எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய வாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவோம்.

30 எழுத்துக்களாகக் குறைப்பது பற்றிச் சிந்திப்பது கூட நல்லதல்ல. சார்பெழுத்துக்களைக் கைவிடுவது தமிழை அழிப்பதாகும்.

வரிவடித்திலேயும் உயிர் எழுத்துக்களில் மாறுதல் செய்வதும் தேவையற்றதாகும்.

சார்பு எழுத்துக்களிலே ஏற்கெனவே 7 எழுத்துக்களுக்குச் செய்யப்பட்டுள்ள மாறுதலே போதும்.

இதற்கப்புறம் தேவைப்படும் மாறுதல் ‘இ’ ‘ஈ’ ‘உ’ ‘ஊ’ எழுத்துக்களில்தான்.

‘கி’ ‘கீ’ என்ற எழுத்துக்களுக்குள்ள குறியீட்டைத் தனியாகப் பிரித்து எடுத்து தட்டச்சிலும் அச்சிலும் பயன்படுத்த வழி செய்யலாம். இதையே ‘கீ’ என்ற எழுத்து விஷயத்திலும்

கடைப்பிடிக்கலாம். இப்படிச் செய்தால் 32 எழுத்துக்கள் குறைந்து விடும். தமிழ் மொழியின் தோற்றத்திலும் ஒரு மாறுதலையும் காண முடியாது.

அச்சு எழுத்துக்களை வார்ப்போருடன் கலந்து பேசினால், இடு குறிக்கும் உயிர்மெய் எழுத்துக்கும் இடைவெளி இல்லாதபடி இதைச் செய்துவிட முடியும். செய்ய முடியவில்லை என்றாலும் பாதகம் இல்லை. மயிரிழை அளவுள்ள ஒரு இடைவெளி ஒன்றும் தொல்லைப் படுத்தாது.

அடுத்து, 'கு' 'கூ' ஆகிய எழுத்துக்களை எடுத்துக் கொள்வோம்.

கிரந்த எழுத்துக்களாக உள்ள 'ஜ'வுடன் ' ு ', ' ூ ' எனும் குறியீடுகளைச் சேர்த்து 'ஜு' 'ஜூ' என்கிறோம். ஜும்மா மசூதி ஜூலை என்று எழுதுகிறோம். அதைப் போல் தனித் தமிழ்ப்பற்று உடையவர்கள் க்ரந்த 'ஜ' தேவையில்லை என்று விட்டாலும், கிட்டத்தட்ட அந்த ஒலியைத் தரும் 'ச' –வுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதன் காரணமாகவும் 32 எழுத்துக்கள் அச்சுப் பெட்டியிலும் (தட்டச்சு இயந்திரத்திலும்) குறைந்துவிடும்.

இதற்கு மேல் எத்தகைய சீர்திருத்தமும் தமிழ் எழுத்துக் களுக்குத் தேவையில்லை.

எனக்குள்ள ஐயப்பாடு ஒன்றையும் எடுத்துக்காட்ட வேண்டியது அவசியமாகிறது. உயிர் எழுத்துக்களும் உயிர்மெய் எழுத்துக்களுமான 31 எழுத்துக்களை மட்டுமே கொண்ட தமிழை எழுதத் தொடங்குவோமானால் அதனால் ஏற்படும் பயங்கரமான குழப்பம் நம்மை எங்கே கொண்டு போகும் தெரியுமா?

ரோமன் வழிக்குப் போகலாமா?

இந்த 30 எழுத்துக்களுக்கும் கூடத் தலைமுழுக்குப் போட்டுவிட்டு ரோமன் எழுத்திலேயே தமிழை எழுதலாமே என்ற இடத்திற்குத்தான் கொண்டு செல்லும். தமிழ் எழுத்துக்களைக்

குறைக்க வேண்டுமென்று சொல்வோர், ரோமன் எழுத்துக்களில் எழுத வேண்டுமென்ற கருத்தையும் கூடவே சொல்லி வருவதை இங்கே நினைவு படுத்தப்பட்டாக வேண்டும். இந்த அபாயத்தில் தமிழைக் கொண்டு போகாமல் இருக்க வேண்டுமானால், 30 எழுத்து வாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

இந்திய மாநில மொழிகள் அனைத்திற்குமே 'ரோமன்' எழுத்துக்களைப் பயன்படுத்தலாம் என்றும், அதன் மூலம் தேசிய ஒருமைப்பாடு வலுப்பெறும் என்றும் நம்முடைய பெருமதிப்பிற்குரிய தேசியத் தலைவர்களில் கூட பலபேர் ஏற்கெனவே சொல்லி யுள்ளனர். இப்போது, நம்மிடையே வாழ்வோரிலும் சிலர் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். இந்த வாதத்தை, பிரதேச மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்டுள்ள எந்தப் பிரதேச மக்களும் ஏற்கமாட்டார்கள் என்பது ஒருபுறம் இருக்க, தேசிய ஒருமைப் பாட்டுக்கேனும் இந்த மாறுதல் உதவி புரியுமா என்பதை யோசிக்க வேண்டும். தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஒரு மொழி ஓரளவேனும் பயன்படுகிற தென்றால் அது ஆங்கில மொழிதான். அரசியலமைப்புச் சட்டப்படி பார்த்தாலும், ஆங்கிலத்தின் இடத்தைப் பிடிக்க முயன்று கொண்டிருப்பது இந்தி மொழிதான். ஆகவே, தேசிய ஒருமைப் பாட்டுக்காக எழுத்து மாற்றத்தை ஏற்க வேண்டிய மொழி ஏதேனும் ஒன்றிருக்குமானால் – அது மாநில மொழிகள் அல்ல – ஆங்கிலமோ, இந்தியோ ஆகத்தான் இருக்க முடியும்.

ஒன்று ஆங்கிலத்தை தேவநாகரி லிபியின் எழுதலாம்; இல்லையென்றால், இந்தியை ரோமன் லிபியில் எழுதலாம். முன்னதை விடவும் பின்னது கொஞ்சம் தேசிய சுயமரியாதையைக் காத்துக் கொள்ளப் பயன்படும். ஆனால், இது தமிழ் வளர்ச்சிக்கு அப்பாற்பட்ட விஷயமாகும்.

'தட்டச்சு', 'லெனோ', 'கம்ப்யூட்டர்' ஆகிய யந்திரங் களுக்கேற்பத் தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்ற வாதத்தையும் பார்ப்போம்.

இயந்திர உலகில் எவ்வளவோ நவீன மாறுதல்கள் தோன்றி வருகின்றன. அவ்வப்போது தோன்றி வரும் இயந்திரங்களுக்கேற்ப ஒரு மொழியை மாற்றுவது என்றால், அந்த மொழிக்கு ஒரு

நிலையான தன்மை என்றும் இருக்க முடியாது. உண்மையில் இயந்திரங்களை விருப்பம் போல் மாற்றியமைக்கும் திறமை பொறியியல் வல்லுநர்களுக்கு உண்டு என்பதையும் எழுத்துச் சீர்திருத்தவாதிகள் நம்ப வேண்டும்.

ஆகவே, தமிழ் எழுத்துக்களில் இங்கொன்றோ அங் கொன்றோ கணிப்பொறிக்கு (கம்ப்யூட்டருக்கு) பொருந்தி வரவில்லை யென்றால் அந்த எழுத்துக்கு ஏற்ப கணிப்பொறியை நம் நாட்டு அளவில் திருத்துமாறு பொறியியல் வல்லுநர்களைத் தூண்டலாம். அப்படித் தூண்டிப் பார்த்து அதே முயற்சியில் தோல்வியடைந்ததாகத் தகவல் இல்லை. உண்மை என்ன வென்றால், தமிழில் அந்த முயற்சியில் ஈடுபடவே யாரும் நினைக்கவில்லை என்பதாகும்.

தமிழிலே ஒரு பழமொழியுண்டு, "தலைக்கேற்ற குல்லாவா, அல்லது குல்லாவுக்கேற்ற தலையா?" என்று. அதுபோல், **மொழிக்கேற்ப இயந்திரத்தைத் தயாரிப்பதா அல்லது இயந்திரத்திற்கு ஏற்ப மொழியைச் சிதைப்பதா? இந்த வினாவுக்கு எழுத்துச் சீர்திருத்தவாதிகள் விடையளிக்க வேண்டும்.**

கணிப்பொறியைப் பொறுத்த வரையில் கூட தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் தேவையில்லை என்று அறிஞர் பலர் கூறுகின்றனர். ஆங்கில எழுத்துக்களுக்கு ஏற்பத் தமிழ் எழுத்துக்களைக் குறைத்தாக வேண்டும் என்ற பிடிவாதம் யாருக்கும் இருக்குமென்று நான் நம்பவில்லை.

நாசவேலை

இப்படி ஒரு நாச வேலை தமிழுக்கு ஏற்பட வேண்டுமா?

'க்உ' என்னும் மெய்யும் உயிருமான எழுத்துக்களை இணைத்துத்தான் 'கு' என்னும் உயிர்மெய்யை நம் சான்றோர் படைத்தனர். ஆம்; 'கு' என்னும் எழுத்துக்குள்ளே 'க்உ' என்ற

இரண்டு எழுத்துக்களையும் ஒலித்துத் தொலைக்க வேண்டும். அந்தத் தொல்லையிலிருந்து விடுபடுவதற்கு அந்த இரண்டு எழுத்துக்களும் புணர்ந்த 'கு' என்ற உயிர்மெய்யைப் படைத்தார்கள்.

ஏற்கெனவே 7 எழுத்துக்கள் அரசின் ஆணைப்படி குறைக்கப் பட்டிருக்கின்றன. இதனால், அந்த 7 எழுத்துக்கள் தமிழ் அரிச்சுவடியில் குறைக்கப்பட்டு விட்டன. கணக்கில் குறைந்தது உண்மைதான். ஆனால், தொழிலில் ஏழு 14 ஆகிவிட்டன.

தட்டச்சுக்காரர் எழுத்துச் சீர்திருத்தத்திற்கு முன்பு 7 எழுத்துக்களைத் தட்டினால் போதும், இப்போது அதே 7 எழுத்துக்களுக்கு 14 எழுத்துக்களைத் தட்டியாக வேண்டும். அதுபோல், அச்சகத்திலும் பழைய எழுத்துக்களுக்கான பெட்டிகள் நீக்கப்பட்டு விட்டதால், 14 எழுத்துக்களைக் கூடுதலாகக் கோத்தாக வேண்டும். இந்த 7 எழுத்துக்களின் சீர்திருத்தமே நம்மை இந்தக் கதிக்குக் கொண்டு வருமானால், 30 எழுத்துக்களைக் கொண்ட தமிழை எழுதத் தொடங்கும்போது, தட்டச்சுக்காரரும் அச்சுக் கோப்பாளரும் பெரும் அவதிக்காட்பட வேண்டியிருக்கும். இதனால், நூல்களைத் தயாரிக்கும்போது வரிகள் அதிகமாகும்; பக்கங்கள் கூடுதலாகும். இதன் காரணமாக விலையும் ஏறும். இவ்வளவு தொல்லைகளையும் விலை கொடுத்து வாங்க வேண்டிய அவசியமென்ன?

அரசு தலையிடலாமா?

எழுத்துச் சீர்திருத்தத்திலே அரசு தலையிட்டு, ஆணையின் மூலம் நடைமுறைப்படுத்த முயல்வது தேவைதானா என்பதையும் கவனித்தாக வேண்டும். நாம் மன்னர்கள் சகாப்தத்தில் வாழவில்லை. கட்சி வழிப்பட்ட ஜனநாயக அரசியல் சகாப்தத்தில் வாழ்கிறோம். அரசு தலையிட்டு ஆணை பிறப்பித்து தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்துவதென்றால், ஆட்சி பீடத்தில் கட்சி மாறும் போதெல்லாம் தமிழ் மாறிக் கொண்டேயிருக்கும். இப்போதே அந்த நிலைமை இருந்து வருவதைப் பார்க்கிறோம். அரசின் ஆணைப்படி திருத்தப்பட்டுள்ள 7 எழுத்துக்களைப் பல

கட்சிகள் கடைப்பிடிப்பதில்லை என்று விரதம் பூண்டிருக்கின்றன. கட்சிகளைச் சாராதவர்களிலும் மிகப் பெரும்பாலோர் அரசு நடைமுறைப் படுத்தியுள்ள 7 எழுத்துச் சீர்திருத்தத்தைக் கடைப்பிடிக்கவேயில்லை புத்தகப் பதிப்பாளர்களும், பல்கலைக் கழகங்களும் கடைப்பிடிக்கின்றன, அரசின் ஆணை என்பதற்காக!

தமிழ் உலக மொழியாகிவிட்டது என்று நம்பி, இரண் டாண்டுக்கு ஒருமுறை உலகத் தமிழ் மாநாட்டை நடத்திக் கொண்டு வருகிறோம். உண்மையில் இந்தியாவில் வழங்கும் மாநில மொழிகளிலே தமிழ் மொழி உலகநாடுகள் பலவற்றிலே செல்வாக்குடன் விளங்கி வருகிறது. சிங்கப்பூர், மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளிலே ஆட்சி மொழிகளில் ஒன்றாகவும் இருந்து வருகிறது.

அந்த நாடுகளிலே பல்கலைக் கழகங்களிலேயும் தனித்துறையைப் பெற்று இருக்கின்றது. இன்னும், பிரிட்டன், அமெரிக்கா, சோவியத் ரஷ்யா போன்ற நாடுகளில் வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்களிலேயும் தமிழுக்கு என்று தனியான துறை அமைந்திருக்கிறது. இந்நிலையிலே தமிழக அரசு மட்டும் ஆணையிட்டு, தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்துமானால், இந்தியாவுக்கு வெளியே உள்ள நாடுகள் அதைக் கடைப்பிடிக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

அரசும் கை விட்டதா?

பதிப்பகங்களும் புறக்கணித்து வந்தன. டாக்டர் வா. செ. குழந்தைசாமியை அப்போது துணைவேந்தராகக் கொண்டிருந்த மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஒன்றுதான் அரசின் ஆணையை உடனடியாகக் கடைப்பிடித்தது.

சென்னைப் பல்கலைக்கழகம் காலத்தைக் கடத்த விரும்பி எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்பதா வேண்டாமா என்பது பற்றி ஆராய்ந்து அறிக்கை தர ஒரு தனிக் குழுவை நியமித்தது.

இந்நிலையில் அ.தி.மு.க., அரசின் கல்வியமைச்சர் திரு. அரங்கநாயகம் ‘அரசின் ஏழெழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்காத

பத்திரிகைகள், பதிப்பகங்களுக்கு அரசிடமிருந்து எந்தச் சலுகையும் கிடைக்காது' என்று அறிவித்தார்.

அதன் பின்னர்ப், பதிப்பகங்கள் பணிந்தன. பல்கலைக் கழகங்களும் கட்டாய மனமாற்றம் அடைந்தன.

இப்படித்தான் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்திற்குப் பொதுமக்களிடை ஆதரவேயில்லை. காரணம், எழுத்துச் சீர்திருத்தத்தை விரும்புவோர் இதுவரை ஆங்கில ஆதிக்கத்தை ஆதரித்தவர்களே. இனியும் ஆதரிக்கக்கூடியவர்களே! தினமணியும் இதற்கு விலக்கல்ல!

தமிழ் எழுத்துக்களை முப்பதாகக் குறைத்தால் அதன் வடிவம் எப்படியிருக்கும் என்பதனைச் சுவரொட்டி போட்டு மக்களுக்குக் காட்டினால், அந்தத் தமிழ்த்தாய் தொழுநோய் பிடித்தவளைப் போலத்தான் இருப்பாள்.

'தினமணி' கூறுவது போலக் கல்வியமைச்சரின் கருத்தை மாற்றி எழுத்துச் சீர்திருத்தவாதிகளின் கட்டாயத்திற்கு முதல்வர் கலைஞர் இணங்குவாரானால், ஒரு பெரிய விபரீதம் காத்திருக்கிறது என்பதைக் கூறி அரசை எச்சரிக்கிறோம்.

எழுத்துச் சீர்திருத்த வாதிகள் நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி வஞ்சனை பேசுகின்றனர்.

முன்னர் சுதேசமித்திரன் இகர ஈகார எழுத்துக்களில் குறியீடுகளைப் பிரித்துத் தனியே போடும் எழுத்துச் சீர் திருத்தத்தைப் பிடிவாதமாகக் கடைப்பிடித்து வந்தது. ஆனால், அதைப் பின்பற்றி வேறு எவரும் கையாளவில்லை, அதனால், அதைக் கைவிட்டு விட்டது. ஆம்; அந்த எழுத்துச் சீர்திருத்தத்தைத் தொடங்கி வைத்த திரு.சி.ஆர். சீனிவாசன் ஆசிரியராக இருந்த போதே அது கைவிடப்பட்டது. சு.மி. வாசகர்கள் விரும்பவில்லை என்று சமாதானம் சொல்லப்பட்டது.

அது போல, விடுதலையில் F Z ஆகிய ரோமன் எழுத்துக்களைத் தமிழ் எழுத்துக்களோடு இணைக்கும் புரட்சி

தொடங்கப்பட்டது, 'விடுதலை'யைத் தவிர வேறொருவரும் அதைக் கடைப்பிடிக்காததால், அது 'விடுதலை'யாலேயே கைவிடப்பட்டது.

வெற்றியா தோல்வியா?

ஏதோ எழுத்துச் சீர்திருத்தக்காரர்கள் அன்று தொடங்கி இன்றுவரை வெற்றி நடை போடுவதாக 'தினமணி' கூறுவது பொய்! பொய்! பொய்!

தமிழிலே கசடதப என்னும் எழுத்துக்களுக்கு நான்கு வர்க்க எழுத்துக்களைப் படைக்க வேண்டும் என்றார் மகாகவி பாரதியார்.

அதைக் கப்பலோட்டிய தமிழர் முழு மூச்சுடன் எதிர்க்கவே பாரதியின் வர்க்க எழுத்துச் சீர்திருத்தமும் பிறந்த போதே செத்துப் போய்விட்டது.

முன்னர் திரு. டி. எஸ். அவினாசிலிங்கனார் கல்வி மந்திரியாக இருந்தபோதும் இப்போது நடைமுறையிலுள்ள ஏழெழுத்துச் சீர்திருத்தம் ஆராயப்பட்டு, அரசால் ஏற்கப்பட்டது. ஆனால், கல்வியமைச்சர் மாறியதன்பின் அதுவும் குப்பைக் கூடையில் எறியப் பெற்றது.

அ.தி.மு.க. அரசு ஒன்பது எழுத்துச் சீர்திருத்தத்தை முதலில் பிரகடனப்படுத்தியது ஆம்; 'ஐ' என்பதை 'அய்' எனவும் ஔ என்பதை அவ் எனவும் எழுதலாமென ஆணை பிறப்பித்தது. பின் என் போன்றவர்கள் கடுமையாக எதிர்த்தன் காரணமாக ஒன்பதெழுத்துச் சீர்திருத்தம் முதல்வர் எம். ஜி. ஆராலேயே ஏழெழுத்துச் சீர்திருத்தமாகக் குறைக்கப் பெற்றது.

இப்படி, எழுத்துச் சீர்திருத்தவாதிகளின் தடுமாற்றத்தைச் சொல்ல இன்னும் எத்தனையோ சான்றுகளுண்டு.

தமிழக முதல்வரை வேண்டுகிறோம், தாய்மொழிப் பற்றாளர் பொங்கி எழுந்தால் என்ன ஆகும் என்பதை இந்தி எதிர்ப்பு விஷயத்திலே நடந்ததை அவர் அனுபவத்தில் அறிவார்.

ஆங்கிலப் பாதுகாப்பு மாநாடு தோற்றதோ?

இந்தியாளர் செய்த தவற்றை எழுத்துச் சீர்திருத்தவாதிகள் செய்ய வேண்டாம்.

1968–இல் சென்னையில் ஆங்கில ஆதிக்கப் பாதுகாப்பு மாநாட்டை நடத்தினர், ஆனானப்பட்ட டாக்டர் ஏ.ஆர். முதலியாரும் டாக்டர் ஏ.எல். முதலியாரும்.

அப்போதைய முதல்வர் அறிஞர் அண்ணாவும் முதலில் அம்மாநாட்டில் பேச இசைவு தெரிவித்திருந்தார். ஆனால், மாநாட்டை எதிர்த்துத் தமிழரசுக் கழகத்தார் ஆர்ப்பாட்டம் செய்ததால், அண்ணா அம்மாநாட்டில் பேசவில்லை.

கல்வி அமைச்சரே கைவிடுகிறார்!

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிக் கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் கருத்துத் தெரிவித்திருக்கிறார். **எழுத்துச் சீர்திருத்த விஷயத்தில் ஏற்கெனவே குறைக்கப் பட்டுள்ள எழுத்துக்கள் விஷயத்தில் தற்போதைய அரசு அதைத் தொடர்ந்து கடைப்பிடிக்குமென்று உறுதி கூறியிருக்கிறார். இதை நானும் வரவேற்கிறேன்.**

ஆனால், மேற்கொண்டு எழுத்துக்களைக் குறைக்கும் சீர்திருத்தத்தில் அரசு அவசரப்படாதென்றும் கருத்து வேறுபாடுடைய இருதரப்புத் தமிழறிஞர்களையும் கலந்து யோசித்த பிறகே முடிவு செய்யப்படும் என்றும் கல்வி அமைச்சர் கூறியிருக்கிறார்.

தி. மு. க. தரப்பினர் முன் எந்தக் காலத்திலுமே தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தில் கருத்துச் செலுத்தியதில்லை. தங்கள் ஆதர்சத் தலைவர் – தந்தை பெரியார் ஈ. வெ. ரா. வற்புறுத்தலையும் அவர்கள் தி.மு.க. தோன்றிய காலந்தொட்டே புறக்கணித்து வந்துள்ளனர்.

கலைஞர் வீட்டுப் பெயர்ப் பலகையில், 'கருணாநிதி' என்ற பெயரிலுள்ள 'ணா' என்று மாறியதொன்றுதான் தி.மு.க. வினரின் எழுத்துச் சீர்திருத்தம்.

அ.இ.அ.தி.மு.க. அரசு எழுத்துச் சீர்திருத்தத்தை – பெரியார் வற்புறுத்தியதை – ஏற்று அவரது நூற்றாண்டு விழாவின் போது நடைமுறைப் படுத்தியதையும் தி.மு.க.வினர் ஏற்க மறுத்துவிட்டனர்.

தமிழ் எழுத்துச் சீர்திருத்த விஷயத்தில் அரசு தலையிட்டு ஆணை பிறப்பிப்பதை அவர்கள் விரும்பவில்லை யென்பது தெரிந்தது. ஏதோ மனத்தைச் சரிபடுத்திக் கொண்டு, அ.இ.அ.தி.மு.க. அரசின் எழுத்துச் சீர்திருத்த ஆணையை மட்டும் கல்வியமைச்சர் இப்போது ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம் டாக்டர் வ. சுப. மாணிக்கம் ஆகியோரின் எதிர்ப்புக்கு மதிப்பளித்தே எழுத்துச் சீர்திருத்த விஷயத்தில் தி.மு.க. அரசு தயக்கங் காட்டுவதாகக் கல்வியமைச்சர் கூறினாலும், அதுதான் தி.மு.க.வின் நீண்டகாலக் கொள்கையாகும்.

கல்வியமைச்சரின் அறிவிப்பு 'தினமணி'க்கு அதிர்ச்சியைத் தந்துவிட்டது போலும். அதனால், அதுபற்றி நீண்ட தலையங்கமே எழுதியுள்ளது. கல்வியமைச்சரின் கருத்தை முதலமைச்சர் மாற்றக் கூடுமென்றும் நம்பிக்கை தெரிவித்திருக்கிறது 'தினமணி' தலையங்கம். திருந்திய எழுத்துக்களால் தமிழைக் கற்றுக் கொடுத்த ஆசான் பெரியார் ஈ. வே. ரா. என்றும் 'தினமணி' கூறுகிறது. அந்த ஆசான் விஷயத்தில் 'தினமணி'க்கு ஏற்பட்டுள்ள புதிய பக்தியை வரவேற்கிறோம்.

எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்காதவர்களைப் 'பழமை விரும்பிகள்' என்கிறது 'தினமணி'. பெரியார் மீது ஏற்பட்டுள்ள திடீர் பக்தியால் பழமை எதிர்ப்புக்கும் மதிப்பளித்து தி.மு.க. அரசைத் தன் வழிக்கு இழுக்க 'தினமணி' முயல்கிறது.

'தினமணி' சமூகப் பிரச்னைகளிலும் பழமையாளர் களிடமிருந்து விடுபட்டு, பெரியாரின் புதுமை வாதத்தை எத்தனை விஷயங்களில் ஏற்குமோ நாமறியோம்!

'தினமணி' ஆசிரியர் பீடத்தில் முன்பு இருந்த என் பெருமதிப்புக்குரிய நெடுநாளைய நண்பர் திரு. ஏ. என். சிவராமன்

அவர்களும் எழுத்துச் சீர்திருத்தவாதியே! தினமணியில் அதுபற்றி ஒரு சிறப்புக் கட்டுரையையும் அவர் எழுதியதுண்டு. அப்படிப்பட்டவரும் அ. இ. அ. தி. மு. க. அரசு நடைமுறைப்படுத்திய எழுத்துச் சீர்திருத்தத்தைத் தான் ஆசிரிய பீடத்தில் இருந்தவரை தினமணியில் நடைமுறைப்படுத்தியதில்லை. அவர் போய்ப் புதியவர் வந்த பின்தான் தினமணியும் அரசின் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றிருக்கிறது.

எழுத்துச் சீர்திருத்தத்தை எதிர்ப்பவர்கள் 'பழமைவாதிகள்' என்றால், அந்தப் பட்டத்தை மகிழ்ச்சியோடு ஏற்க நான் தயார். எழுத்துச் சீர்திருத்தவாதிகளுக்கு நானும் ஒரு பட்டம் தரலாம். அது "குழப்பவாதிகள்" என்பதாகும். எழுத்துச் சீர்திருத்தத்தை வற்புறுத்திப் பல பிரசுரங்கள் – நூல்கள் வெளிவந்துள்ளன. அவை ஒன்று போலில்லை.

வெளிவந்துள்ள பிரசுரங்கள் – நூல்கள் இருபது இருக்கலாம் என்றால், அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சீர்திருத்தத்தை வற்புறுத்துகின்றன. இந்தக் குழப்பவாதிகள் முதலில் ஒன்று கூடி, ஒருமனப்படட்டும், அப்புறம் பழமைவாதிகளைக் குறை கூறட்டும்.

உண்மை என்னவென்றால், தமிழ் ஆட்சிமொழியாகவும் கல்லூரிகளில் பயிற்சி மொழியாகவும் வருவதை யாரெல்லாம் விரும்பவில்லையோ யாரெல்லாம் ஆங்கிலமே தமிழர் வாழ்வில் தலைமை பெற்றுள்ள நிலை நீடிப்பதை விரும்புகிறார்களோ அவர்களெல்லாம் எழுத்துச் சீர்திருத்தம் பேசுகின்றனர். ஒரு சிலர் இதற்கு விலக்காக இருக்கலாம்.

'தினமணி' தேச விடுதலைக்கும் – ஏன் தமிழரின் தனி நலனுக்கும் – ஆம்; தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் கூட நல்லபடியாகப் பணியாற்றியதுண்டு. அதனால், தினமணியிடம் நமக்குப் பெருமதிப்புண்டு. ஆயினும், எழுத்துச் சீர்திருத்த விஷயத்தில் தி. மு. க. அரசை அது பணிய வைக்கப் பார்ப்பது நம்மால் ஏற்க முடியாததாகும்.

'தினமணி'க்குத் தி. மு. க. அரசு இணங்குமானால், அது பாம்புப் புற்றில் கையை விடுவது போலாகும். தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தையும் பயிற்சி மொழித் திட்டத்தையும் நடைமுறைப்படுத்துமாறு தமிழக அரசு சட்டப் பேரவையே அரசுக்கு ஆணையிடும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது. தி. மு. க. அரசே கொண்டு வந்த அல்லது ஏற்றுக் கொண்ட ஆணை அது. அது நிறைவேறி இருபதாண்டுகளாகியும் இன்னும் அந்தப் பாதையில் தமிழக அரசு அங்குலங் கூட நகரவில்லை. அது நகரும்படிச் செய்யும் கிளர்ச்சியும் தோன்றக் கூடும்.

ஆசிரியர் மாறும் போதெல்லாம் எழுத்துச் சீர்திருத்த விஷயத்தில் 'தினமணி'யின் கொள்கை மாறுமென்றால், இப்போதுள்ள திரு. ஐ. மகாதேவன் போய் (அவரே நீடிக்கட்டும்) வேறொருவர் வந்தால் 'தினமணி' திரும்பவும் பழமைவாதிகள் பக்கம் சாய்ந்து விடலாந்தானே!

எழுத்துச் சீர்திருத்தம் தேவையா?
பூங்கொடி பதிப்பகம்
12.1995

9. தமிழில் எழுத்துச் சீர்திருத்தம்

[தங்கப்பா]

தமிழகத்தில் சில அறிவியல் புலிகள் இருக்கின்றார்கள். ஐன்சுதீனுக்கும் நியூட்டனுக்கும் அப்பன்மார்கள் இவர்கள். இவர்களின் அறிவியல் வேட்கையையும் முற்போக்கு எண்ணங் களையும் சொல்லி முடியாது. இவர்கள் தமிழை முன்னேற்றுவதற் கென்றே பிறவி எடுத்தவர்கள். இன்று தமிழ்ப் புலவர்கள் கையில் மாட்டிக் கொண்டு தேங்கிக் கிடக்கும் தமிழ் மொழியின் தேக்கத்தை உடைத்து அதற்குப் புதுக் குருதி பாய்ச்சிப் புத்துயிரூட்டப் புறப்பட்டிருப்பவர்கள். அறிவியல் துறையில் தமிழை வளர்க்க நடையிடும் இவர்களின் கால்களிடையே தமிழ்ப் புலவர்கள்தாம் முட்டுக்கட்டைகளாக இருக்கிறார்கள்; இல்லை என்றால் இவர்கள் இதற்குள் வானத்தை வில்லாய் வளைத்து, மணலைக் கயிறாய்த் திரித்து அந்த வானவில்லில் நாணேற்றி அம்பெய்து அறிவியல் கனிகளை நிரப்பி இருப்பார்கள். தமிழறிஞர்கள் இதற்கு வழியில்லாமல் செய்து விட்டார்களே!

இந்தப் பிற்போக்குத் தமிழ்ப் புலவர்கள், முட்டுக்கட்டை மொழி வல்லுநர்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா? அறிவியல் அறிஞர்கள் தமிழுக்குப் புத்துயிர் ஊட்டி உய்தி கொடுக்க விரும்பி அறிவியல் கலைச்சொற்களை ஆங்கிலத்திலிருந்தும் வேறு மொழிகளிலுருந்தும் அப்படியே பெயர்த்துக் கொண்டு வந்து தமிழில் அப்பி வைக்க விடாமல் இவர்களின் கைகளைப் பிடித்துக் கொள்கிறார்கள்! அதோடு மிக மிகப் பிற்போக்குத் தனமாக அமைந்திருக்கும் தமிழ் நெடுங்கணக்கை, வளர்ந்து வரும் இருபத்தொன்றாம் நூற்றாண்டின் அறிவியல் தேவைகட்கு ஏற்ப அறிவியலறிஞர்கள் சீர் திருத்த அமைக்க முயலும் பொழுது இந்தத் தமிழ்ப் புலவர்கள், ஐயோ, சீர் திருத்தமா? கூடாது! கூடாது!

குடிகெட்டுப் போய்விடும்! தமிழ் அழிந்துவிடும் என்று ஓலமிட்டு இவர்களின் அறிவியல் முயற்சி அத்தனைக்கும் குறுக்கே நிற்கிறார்கள்...!

வளர்ச்சியை, முன்னேற்றத்தை விரும்பாத இந்தப் பிற்போக்குத் தமிழ்ப்புலவர்களால்தான் இன்று தமிழ் தேங்கிப்போய் வெறுஞ் சாய்க்கடையாய் நாற்றமடித்துக் கொண்டு கிடக்கின்றது. அறிவியல் புதுநீர் பாய்ந்து அதனைப் புதுப்பிக்க வழியே இல்லை!

நம் அறிவியல் புலிகள் இப்படித்தான் தம்பட்டமடித்துக் கொண்டு வருகிறார்கள். தங்கள் கையாலாகாத தன்மையைத் தமிழ்ப் புலவர்மேல் சுமத்தி விட்டுத் தாங்கள் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

முந்நூற்றாண்டுக்கால ஆங்கிலேயன் ஆட்சியில் ஆங்கிலமே அலுவலிலும் கல்வியிலும் முன்வைக்கப்பட்டுத் தமிழ் ஒதுக்கப் பட்டது. இதன் விளைவாகத் தமிழ்ப் புலவர் என்பவர்கள் தமிழ் இலக்கிய இலக்கண வட்டத்துக்குள்ளேயே நிறுத்தி வைக்கப் பட்டனர். வேறு துறை அறிவு அனைத்தும் ஆங்கிலத்தில் தரப்பட்டதால் ஆங்கிலம் கல்லாத தமிழ்ப் புலவர்கட்குப் பல்வேறு பொது அறிவுத் துறைகள் எட்ட முடியாதவை ஆயின. அது மட்டும் அன்று, ஆட்சியை அலுவலை நடத்தியவனும், கல்வியின் எல்லாத் துறைகளிலும் முன்னின்று பொறுப்பேற்றவனும், அறிவுலகின் முன்னோடி என்று பெயர் பெற்றவனும் எல்லாம் ஆங்கிலத்தின் வாயிலாக மேற்கல்வி பெற்றவனேயானான்.

எனவே, நாட்டை, ஆட்சியை, அலுவலைக், கல்வியை, மக்களை முன்னின்று நடத்தும் பொறுப்பில் இருந்தவர்கள் தமிழ்ப் புலவர்கள், அறிஞர்கள் அல்லர். இன்றைய நிலையிலும் கூட இப்பொறுப்பில் உள்ளவர்கள், ஆங்கிலவழி மேற்கல்வி பெற்றவர்களும்; தங்களைப் பெரும் பெரும் அறிவியல் புலிகள் என்று முகம் காட்டி உறுமிக் கொண்டிருப்பவர்களுமே ஆவார்!

பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்கல்விக் கூடங்கள் உயர்கல்வி நிறுவனங்கள் பல்கலைக் கழகங்கள் எல்லாம் இவர்கள் கையிலேயே. அறிவியல் புத்தாக்க நிறுவனங்களும் தொழில் நுட்பக்

கல்வியகங்களும் இவர்கள் பொறுப்பிலேயே. எல்லாவற்றையும் முன்னின்று வழி நடத்தும் பொறுப்பும் இவர்களுடையதே! இப்படியிருந்தும் தமிழில் இன்னும் அறிவியல் வளர்ச்சி இல்லை!

முதலில் இந்த அறிவியல் அறிஞர்கள் தமிழர்கள் தாமா என்ற ஐயம் நமக்கு ஏற்படுகின்றது. ஒருவன் உண்மையான தமிழனாக இருந்தால் அவனுக்குத் தாய் மொழிப் பற்றுச் சொல்லிக் கொடுத்து வரத் தேவை இல்லை. இயல்பாகவே அது அவனிடம் அமைந்திருக்கும். அப்படிப்பட்ட உண்மைத் தமிழன் பொறுப்பு உடையவனாக இருந்தால் நாடு விடுதலை பெற்றவுடன் முதல் வேலையாகத் தமிழை ஆட்சி மொழியாக்கவும், கல்வி மொழியாக்கவும் என்ன என்ன செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்திருப்பான். ஏனெனில், தமிழகத்தில் ஏற்பட வேண்டிய எல்லா மலர்ச்சி நிலைகட்கும் இவை இரண்டுமே அடிப்படை.

இதுவரை தமிழ் கல்விமொழி ஆட்சி மொழியாவதற்கு எந்தத் தமிழ்ப் புலவரும் முட்டுக்கட்டையாக இருந்ததில்லை. (மாறாக இம்முயற்சிகளில் அவர்களின் குரலே முன்னின்று முதல் நின்று ஒலித்திருக்கின்றது.) அப்படியிருந்தும் இந்த அறிவியல் அறிஞர்கள், தமிழகத்தின் கல்வியாளர்கள், கல்லூரி, பல்கலைக்கழக முதல்வர்கள், துணை வேந்தர்கள், தமிழ் முன்னேற்றமே உயிர் மூச்சாய் இருபத்து நான்கு மணி நேரமும் அறிவியல் வழியிலும் முற்போக்குப் பாதையிலுமே எண்ணம் செலுத்திக் கொண்டிருப் பவர்கள் என்ன கிழித்துவிட்டார்கள்?

தமிழை ஆட்சி மொழியாக்க இவர்கள் ஒட்டு மொத்தமாகக் குரல் கொடுத்தார்களா? அல்லது இவர்கள் நடத்தும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் தமிழைக் கல்விமொழியாக நடைமுறைப் படுத்துவதற்கு ஒரு துரும்பை அசைத்தார்களா?

வடநாட்டுப் பல்கலைக்கழகங்கள் கல்லூரிகளிலெல்லாம் அந்தந்த மாநில மொழிகள் முழுக்க முழுக்கப் பயிற்று மொழியாகி விட்டனவே. ஆட்சி அலுவல்கள் அவரவர்கள் தாய்மொழியில், நடத்தப்படுகின்றனவே. தமிழகத்தில் மட்டும் இது ஏன்

நடைபெறவில்லை? இங்குள்ள அரசுதான் இதைச் செய்ய வேண்டும் என்றாலும் அதைச் செய்யும்படி இந்த அறிவாளர்கள் ஏன் குரல் எழுப்பவில்லை? இவர்கள்தாமே அரசை வழிநடத்திச் செல்ல வேண்டும்! இவர்கள் உண்மைத் தமிழராக, தமிழ், தமிழர் முன்னேற்றத்தில் அக்கறை உள்ளவர்களாக இருந்தால் தாய்மொழிவழிக் கல்வி எவ்வளவு அடிப்படையானது என்பதை உணர்ந்திருந்தால் இவர்கள் குரல் தமிழுக்காக ஓங்கியிருக்க வேண்டுமே! தமிழகத்தில் இன்று பத்துக்கு மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அத்தனை பல்கலைக்கழக முதல்வர்களும் தமிழைப் பாடமொழியாக்குதல் தேவை என்றும் தமிழ் வளர்ச்சிக்கு அதுதான் முதற்படி என்றும் வலியுறுத்தி யிருந்தால், பல்கலைக்கழகப் பேராசிரியர் அனைவரும் பேரணி திரண்டு அரசைத் தூண்டியிருந்தால் இதற்குள் இது நடந்திருக்குமே! ஏன் அதை இவர்கள் செய்யவில்லை?

பச்சையான, வடிகட்டின, கையாலாகாத்தனம் என்பதைத் தவிர வேறென்ன?

தமிழன் முன்னேறாமலிருப்பதற்கு என்ன காரணம்? தமிழ் இலக்கியச் செழுமையும் இலக்கண வலிமையும் கொண்டிருந்தும் காலத்துக்கு ஏற்ப நெகிழ்ந்து கொடுக்காமல் இருப்பது காரணமா? தனித்தமிழ்க் கொள்கை காரணமா? தமிழ் நெடுங்கணக்கு குறைகள் பல உடையதாய் இருப்பது காரணமா? அறிவியல் துறைகளில் தமிழ்க்கலைச் சொற்கள் தமிழ் மக்களுக்குப் புரியும் படி தமிழ்ச் சொற்களாய் இருக்க வேண்டும் என்று தமிழறிஞர் கூறுவது காரணமா? அல்லது தமிழ் இத்தனை ஆண்டுகளாகியும் தமிழ்மக்கட்கு அலுவல் மொழியாகவும், கல்வி மொழியாகவும் ஆக்கப்படாமல் ஒதுக்கப்பட்டிருப்பது காரணமா?

தமிழ் தமிழகத்தில் அலுவல் மொழியாகவும், கல்வி மொழியாகவும் இன்னும் ஆக்கப்படவில்லை என்பதுதான் காரணம். இந்த இரண்டையும் மேற்கொள்ளாமல் தலைகீழாக நின்றாலும் வேறு எந்த வகையிலும் தமிழை முன்னேற்றி விட முடியாது; முடியாது; முடியாது.

தமிழகத்தில் இன்று செய்ய வேண்டிய முதல் சீர்திருத்தம் இதுதான். சொந்த மொழியில் கல்வி கற்றால்தான் சொந்த அறிவியல் எண்ணம் வளரும். சொந்த அறிவியல் புத்தகங்களை உருவாக்க முடியும். கல்வி வளர்ச்சிக்கு மட்டுமன்று, அறிவியல் வளர்ச்சிக்கே தாய்மொழி வழிக் கல்விதான் இன்றியமையாதது. அது போலவே தாய்மொழி ஆட்சிக்கு வந்தால்தான் தமிழன் தலை நிமிரும். மக்களுக்கு ஆட்சியிற் பங்கிருக்கும். சொந்த நாடென்று ஈடுபாடிருக்கும்.

தமிழகத்தின் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களாகவும் கல்லூரி முதல்வர்களாகவும் அறிவியல் தொழில்நுட்ப அறிஞர்களாகவும், கல்வியாளர்களாகவும் இருப்பவர்கள் உண்மையான தமிழராக இருந்தால், தங்கள் இன மொழி, முன்னேற்றத்தில் அறிவியல் வளர்ச்சியில் அவர்கட்கு உண்மையாகவே நாட்டம் இருந்தால் அவர்கள் முதலில் செய்ய வேண்டிய சீர்திருத்தம் அலுவல் மொழியையும் பயிற்று மொழியையும் மாற்றி அமைப்பதுதான்.

செய்யத்தக்க வேலைகள் இவை மட்டும் அல்ல. தமிழர்கள் பின்தங்கி யிருப்பதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. அரசியல், பொருளியல் குமுகவியல் காரணங்கள், தேவையான அடிப்படை நல்லியல்புகளும், தகுதிப்பாடுகளும் தனி மாந்தரிடம் இல்லாமை, மொத்தத்தில் பார்த்தால் நாம் தமிழர் என்ற இன உணர்வு இல்லாமை இப்படிப் பல்வேறு காரணங்கள் உள்ளன. இவை எல்லாம் மாற்றப்பட வேண்டியவையே. இவை எல்லாவற்றிலும் தமிழனின் உணர்வும் வாழ்வும் சீர்திருத்தி அமைக்கப்படற்கு உரியவையே. இவ்வாறிருக்க, இவை பற்றிய எந்த ஓர்மையும் இல்லாமல் அல்லது இவை பற்றி எவ்வகையான ஆக்க வினைப்பாடுகளையும் மேற்கொள்ள விரும்பாமல், தமிழர் அறிவியலில் பின்தங்கியிருப்பதற்குத் தமிழ் மொழியின் எழுத்துக் குறைபாடுதான் காரணம் என்றொரு கற்பனையான வழக்காடலை முன்வைத்துத் தமிழ் எழுத்தைச் சீர்திருத்தியே ஆக வேண்டும் என்று முழுமூச்சாய் முனைந்து நிற்கும் இந்தப் படிப்பாளிகளை எண்ணினால் அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை!

ஏ! படிப்பாளியே, ஏ! தமிழ்நாடு அறிவியல் அறிஞனே, ஏ தமிழகக் கல்வியாளனே, உனக்குச் செய்வதற்கு வேறு வேலை இல்லையா? நீ படித்திருக்கும் அறிவியல் துறையில் தமிழ் வளர வேண்டிய திருக்கின்றதே. அந்தத் துறையில் நீ எத்தனையோ நூல்கள் எழுதலாமே! அந்தத் துறையில் நீ பெற்ற அறிவு முழுமையும் தமிழர்க்கு அறிமுகப்படுத்தலாமே! அந்த உன்துறை உன் பொறுப்பிலுள்ள துறைதானே, அத்துறை அறிவை உன் மாணவர்க்குத் தமிழில் வழங்கும்படி அந்தத் துறையிலாவது தமிழைப் பாடமொழி ஆக்கி நடத்துவதற்கு நீ முன்வரலாமே!

ஏ! பொறியியல் அறிஞனே, உன் பொறியியல் துறையில் எத்தனை நூல்களை நீ தமிழாக்கியிருக்கின்றாய்? அல்லது சொந்தமாக எத்தனை நூல்களை எழுதியிருக்கின்றாய்? உன் மாணவர்க்குப் பொறியியலைத் தமிழில் கற்றுக் கொடுத் திருக்கிறாயா?

ஏ! விலங்கியல் அறிஞனே, விலங்கியலைத் தமிழ் மாணவர் தமிழில் கற்பதற்கு நீ இதுவரை ஆற்றியிருக்கும் பங்களிப்பு என்ன?

ஏ! வேதியியல் பேராசிரியனே, நீ தமிழனாக இருந்தால், நீ உண்மையான கல்வியாளனாக இருந்தால் உன் வேதியல் துறை அறிவு தமிழில் கொணரப்பட்டுத் தமிழ் மாணவர்க்குப் பயன்பட நீ எந்தவகையில் உதவியிருக்கின்றாய்?

ஏ! பொருளியல், மாந்தவியல், அளவையியல் அறிஞர்களே, உங்கள் உங்கள் துறையில் நீங்கள் செய்ய வேண்டிய வேலைகள் தலைக்குமேல் உள்ளனவே! அவற்றை ஏன் உங்களால் செய்ய முடியவில்லை? இவற்றை யெல்லாம் செய்யாமல் என்ன ஐயா மண்ணாங்கட்டிச் சீர்திருத்தம்? எழுத்துச் சீர்திருத்தம்?

தமிழைப் பொறுத்தவரை எழுத்துச் சீர்திருத்தம் ஒரு பெரிய செய்தியே அன்று, அது பயனளவான நடைமுறை நிலைக்குரிய ஒரு நடவடிக்கை; ஓர் அடியெடுத்து வைப்பு. செருப்பிலே எங்கே கோணல் இருக்கிறது என்பது நடந்து பார்க்கையில்தானே தெரியும்,

போட்டுப் பார்த்து எங்கே கடிக்கிறதோ அங்கே அதைச் சரிசெய்து கொள்ளலாம். ஆனால், இங்கோ நடக்கவே விரும்பாதவன் செருப்புச் சீர்திருத்தம் பற்றிப் பேசுகிறான்!

முதலில் தமிழ் நடைமுறைப்படுத்தப் படட்டும். இருக்கும் இந்த ஓட்டைத் தமிழில் முதலில் உனக்குத் தெரிந்ததை நீ எழுது. இந்த ஓட்டைத் தமிழில் அறிவியலை மாணவர்க்குப் பாடமாகக் கற்றுக் கொடு, இந்த ஓட்டைத் தமிழ் அரசு அலுவலகங்களில், மருத்துவக் கல்லூரிகளில், வழக்கு மன்றங்களில், ஆய்வுக்கூடங்களில், எங்கெங்கே ஏழைத் தமிழ்மகன் இருக்கின்றானோ அங்கங்கெல்லாம் கல்வியறிவு அவனுக்கு எட்டும்படி நடைமுறைக்கு வரட்டுமே. உன் தட்டச்சுப் பொறிகளும், கணிப்பொறிகளும் இந்த ஓட்டைத் தமிழில் கொஞ்சநாள் ஓடித்தான் பார்க்கட்டுமே என்ன கெட்டுவிடும்? அப்படி நடைமுறையில் ஓடும் பொழுது எங்கெங்கே என்ன திருத்தம் தேவை, எப்படியிருந்தால் அறிவியல் வளர்ச்சிக்கு இன்னும் எளிதாகும் என்பது தானே புலப்பட்டுவிடுமே! அந்தக் காலம் வரட்டுமே! அதற்குள் என்ன தலைபோகும் விரைவு? அப்படி என்ன தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்துக்கு உடனடி இன்றியமையாமை?

ஒரு வண்டி ஓடவில்லை. அதன் எந்திரம் பழுதா இல்லையா என்பது தெரியவில்லை. ஓட்டிப் பார்த்தால்தானே தெரியும், பழுதா, பழுதில்லையா, பழுதானால் அதில் எங்கே பழுது, என்ன பழுது என்று!

எந்திரத்தை ஓட்டிப் பார்க்கக் கூட உன்னால் முடியவில்லை. எந்திரம் ஓடுவதற்குத் தொடர்பில்லாத ஏதோ ஒன்றைப் பிடித்துக் கொண்டு இதனால்தான் எந்திரம் ஓடவில்லை என்கிறாயே? எப்படித் தெரிந்தது உனக்கு?

இதைவிட மட்டமான எந்திரங்களைக் கொண்டு வண்டிகள் ஓடிக் கொண்டிருக்கின்றனவே?

எழுத்துச் சீர்திருத்தம் இல்லாததனால்தானா இன்று தமிழில் அறிவியல் வளரவில்லை? தமிழில் கணிப்பொறி வடிவமைக்க முடியவில்லை?

சப்பான்காரன், சீனாக்காரன் எப்படி முன்னேறினான்? இன்றைக்கு, இந்த நொடிப்பொழுது சப்பான் மொழி சீனமொழி எழுத்தமைப்புகளைப் பார்த்தால் அவை தமிழைவிடச் சிக்கல் நிறைந்தனவாக உள்ளனவே. இந்தச் சிக்கல்கள் சீனாக்காரரும், சப்பான்காரரும் அறிவியலில் முன்னேறுவதைத் தடுத்து நிறுத்தவில்லையே? அவர்களைப் பின்னின்று இழுக்கவில்லையே.

ஆங்கில மொழியிற் பல்லாயிரம் சொற்களில் ஒலிப்புக்கும் எழுத்துக் கூட்டலுக்கும் இடையில் எவ்வளவு வேறுபாடு! எவ்வளவு பெரிய இடைவெளி! எ.டு. Knife, Know, Psychology, Right, Iron சொற்களின் ஒலிப்பிலாவது ஒரே தன்மை உண்டா?

எ.டு. Put - But, Cough - Rough,
Bough - Dough, Station - Bastion,
Chess - Chemistry, Woman - Women,
Sew - Few, Give - Gist

இப்படி ஆயிரக்கணக்கில் சொல்லிக்கொண்டு போகலாமே.

இப்படிப்பட்ட முரண்பாடுகளை எந்த வகையிலும் மாற்றாமல்தானே ஆங்கில மொழியில் கணிப்பொறி உருவாக்கப் பட்டிருக்கின்றது! ஆங்கிலத்தில் எழுத்துக் கூட்டலை ஒலியியல் (Phonetic) முறைப்படி மாற்றியமைத்தால், கற்பதற்கும் சரி கணிப்பொறி இயக்கத்துக்கும் சரி அது பல மடங்கு எளிதாயிருக்குமே. எனினும், இந்தச் சீர்திருத்தம் ஒன்றுகூட இல்லாமல் ஆங்கிலம் உலக அறிவியல் மொழியாக விளங்கு கின்றதே!

இவர்க்கெல்லாம் எது முதன்மையோ அதைத் தேடிப் போய்க் கொண்டிருக்கின்றார்கள். ஆங்கிலம் படித்த நம் கல்வியாளர்களால் நம் அறிவியல் அறிஞர்களால், நம் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களால் அது முடியவில்லை. விடுதலை பெற்று ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் ஆகியும் கல்வியின் மிகமிக அடிப்படையான தாய்மொழிவழிக் கல்வி என்பதைக் கூட நடைமுறைப்படுத்தும் நாட்டம் இவர்களுக்கு இல்லையே!

இந்தி, வங்காளி, மராத்தி, ஒரியா, கன்னடம், போன்ற மொழிகளிலெல்லாம் பல்கலைக்கழகக் கல்வி முழுவதும் மாணவர்க்குக் கற்பிக்கப் படவில்லையா? அங்கு மட்டும் அது முடிகின்றது; தமிழகத்தில் ஏன் முடியவில்லை?

அங்கெல்லாம் கல்வியாளர்கள் முழுக்க முழுக்க அதில் ஈடுபட்டனர்; நம் கல்வியாளர்கள் இன்னும் ஆங்கிலத்துக்கு வால் பிடித்துக் கொண்டு கிடக்கின்றனர்.

பல்கலைக்கழகங்கள் இன்றும் ஆங்கிலக் கோட்டைகளாக விளங்குகின்றன. தமிழ்ப்பகைவர்கள் அங்கே வேரூன்றி இருந்து கொண்டு தாய்மொழிவழிக் கல்வியைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப் படாமல் ஆங்கில ஆண்டான்மார்களாக இருந்து வருகின்றனர். தமிழ் உள்ளே கல்விமொழியாக நுழைந்து விடக்கூடாது என்று திட்டமிட்டு வேலை செய்து வருகின்றனர். தமிழ் பாடமொழியாவதற்கு இத்தமிழ்ப் பகைவர்களே தடையாகவும் முதல் முட்டுக்கட்டையாகவும் நிற்கின்றனர்.

இந்தக் கல்வியாளர்கள், அறிவியல் அறிஞர்கள் எனப்படு பவர்களுள், தமிழே பாடமொழியாக வேண்டும் என்ற எண்ணம் வாய்க்கப் பெற்ற ஒரு சிலரும் கூடத் தமிழை நடைமுறைப்படுத்தப் போதிய எழுச்சியும், போதிய துணிச்சலும் உடையவர்களாக இல்லை. தமிழகப் பல்கலைக்கழகங்களில் தமிழ்தான் பாட மொழியாக இருத்தல் வேண்டும் என்று எழுந்து முழங்க இவர்களுக்குத் திராணி இல்லை. தங்களால் முடிந்ததைத் தங்கள் பொறுப்புக்கு உட்பட்டதைத் கூடத் தமிழில் நடத்த இவர்களுக்குத் துப்பில்லை. வடநாட்டுப் பல்கலைக்கழகங்களைப் பார்த்தும் கூட இவர்களுக்குச் சுரணை ஏற்படவில்லை.

இரண்டுங்கெட்டான்களாக இவர்கள் இருக்கின்றனர். தங்கள் பொறுப்பைத் தட்டிக் கழிக்கவும் கையாலாகாத்தனத்தை மறைக்கவும் இவர்கள் செய்தியைத் திசை திருப்பி விடுகின்றனர். தமிழ் முன்னேற்றத்துக்குத் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தேவை என்று போலியானதொரு கருத்தை முன்வைத்து மக்களைக் குழப்புகின்றார்கள். திருடியவன், அதோ போகிறான் திருடன், என்று

வேறு திசையில் சுட்டிக்காட்டித் தான் தப்பித்துக் கொள்வது போலத் தாங்கள் செய்ய வேடியதைச் செய்யாமல் இவர்கள் தமிழறிஞர் களின் பிற்போக்குத் தனத்தால்தான் தமிழ் வளரவில்லை என்று பொய்கூறித் திரிகின்றனர்.

தமிழ் நடைமுறைக்கே வரவில்லை, அப்படி வராமல் இருப்பதற்கு எழுத்துக் குறைபாடு காரணமாகவும் இல்லை. அப்படியிருக்க இப்பொழுது ஏன் எழுத்துச் சீர்திருத்தம்?

சீர்திருத்தம் ஒன்றும் பெரிதன்று. தேவைப்படும் பொழுது செய்து கொள்ளலாம். முதலில் தமிழ் நடைமுறைப்படுத்தப் படட்டும்; தமிழே அலுவல் மொழியாகவும் கல்விமொழியாகவும் நூற்றுக்கு நூறு நிலை கொள்ளட்டும். இன்று தமிழர் அனைவரும் ஒட்டுமொத்தமாகச் சேர்ந்து போராட வேண்டியது இதற்காகவே... நம் அறிவியல் அறிஞர்கள் எழுத்துச் சீர்திருத்த முயற்சியைத் தள்ளி வைத்து விட்டு இதற்கான முயற்சிகளை மேற்கொள்ளட்டும். நாம் நூற்றுக்கு நூறு இவர்களுடன் ஒத்துழைப்போம்.

10. எச்சரிக்கை! (13.02.2010)

[பேரா. ம.இலெ.த]

“நாடா கொன்றோ, காடா கொன்றோ,
அவலா கொன்றோ, மிசையா கொன்றோ,
எவ்வழி நல்லவர் ஆடவர்,
அவ்வழி நல்லை வாழிய நிலனே!”

என்பது புறநானூறு.

ஒரு நாடு நாடாயிருந்தாலும் சரி, காடாயிருந்தாலும் சரி, மேடாயிருந்தாலும் சரி, பள்ளமாயிருந்தாலும் சரி, அந்த நாட்டின் வினைத்திறம் வாய்ந்த மக்களைப் பொறுத்தே அந்நாடு நல்லதாக அமையும் என்பது இதன் பொருள். ஒருநாட்டின் மக்கள் எந்த அளவு வினைத்திறம் உடையவராக உள்ளனரோ, அந்த அளவு அந்த நாடு முன்னேற்றமடையும். ஆம், தமிழ்நாட்டின் முன்னேற்றம் நூற்றுக்கு நூறு தமிழ் மாந்தரைப் பொறுத்ததே. வேறெதையும் பொறுத்ததன்று.

நம்மைச் சுற்றி ஆயிரம் குறைகள் இருக்கலாம். ஆனால் நாம் வலியவராகவும் வினைத்திறம் வாய்ந்தவராகவும் இருந்தால் அக்குறைகளை மீறி எழுந்து முன்னேற்றம் காண நம்மால் முடியும். நமக்குச் சிறந்த கைக்கருவி வேண்டுமென்பதில்லை. நாம் வலிமையும் மறவுணர்வும், எழுச்சியும் உடையராக விருந்தால் எந்தக் கருவியைக் கொண்டும் முன்னேற முடியும். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பது பழமொழி.

தமிழராகிய நாம் இன்று எந்தத் துறையிலும் முன்னேறாமல் இருந்தால் நூற்றுக்கு நூறு அது நம் குறையே, நம் மாந்தக் குறையே.

தமிழ்மாந்தன் இன்று வல்லவனாக இல்லை. முயற்சி யுடையவனாக இல்லை. ஏன், இனவுணர்வுடையவனாகவும் இல்லை. மண்ணைக் காத்துக் கொள்ள முடியாமல் எல்லா வகையிலும் கெட்டழிந்து நிற்கின்றான்.

பிறரின் வல்லாண்மைக் கெல்லாம் அவன் அடிபணிகின்றான். முறையாகத் தனக்குக் கிடைக்க வேண்டிய உரிமையைத் தட்டிக் கேட்டுப் பெறவும் இயலாது நிற்கிறான். தான் படிப்படியாக அழிந்து வருவதைக் கூட அவன் உணரவில்லை. கல்விக்கே அடிப்படை யான, உயிர்நிலையான தமிழ்வழிக் கல்வியைக் கூட மக்கட்கு வழங்க முடியாமலிருக்கின்றோம். நம் பல்கலைக்கழகப் பல்துறை அறிவியல் அறிவைத் தமிழில் வழங்க முன்வந்துள்ளனரா? தங்கள் தங்கள் துறைகளில் தாங்கள் கற்றவற்றைச் சற்றே முயன்றாலும் இவர்கள் தமிழில் தர முடியுமே! தண்ணீரில் குதிக்காமல் எப்படி நீச்சல் கற்றுக் கொள்வது?

நம் தமிழ் நாட்டரசு தமிழை அறிவியல் மொழியாக்க என்ன திட்டங்களை வைத்துள்ளது? தமிழில் அறிவியல் நூல்கள் படைக்க என்ன ஊக்கம் கொடுத்துள்ளது?

“இந்தி மொழி வல்லாண்மையை எதிர்க்க, இந்தியின் இடத்தில் நிறுத்த ஆங்கிலம்” – என்ற சரியான கொள்கை போய், அதை உருவாக்கியவர்களே அதைப் புரிந்து கொள்ளாமல் தாய்மொழியின் இடத்தில் ஆங்கிலத்தைப் புகுத்திவிட்டனர். தமிழர்க்கு அரசு ஏற்படுத்தித் தந்த மிகப் பெருங்கேடு இதுதான்.

நடுவணரசோடும் பிறமாநிலங்களோடும் தொடர்பு கொள்ள ஆங்கிலம் என்றும், மாநிலத்தின் பிற எல்லா நிலைகளிலும் தாய்மொழி என்றும் கொள்ள வேண்டிய கொள்கை, குழப்பத்தால் வீழ்ந்துபட்டது. ஆங்கில வாணிகரும் மேல்தட்டுக்காரரும் இன்று தமிழை ஒழிப்பதற்காக இக்கொள்கையே உயர்வு என்று தம்பட்ட மடித்து, மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் இன்று தமிழ் வளராதிருப்பதற்கு ஒரு காரணம் கூறப்படுகின்றது. தமிழில் சில எழுத்துக்கள் சீரான அமைப்புடன் இல்லையாம். அது தமிழ் கற்பவர்கட்குத்

தொல்லையாக இருக்கின்றதாம்! அதனால் சில தமிழ் எழுத்துகளை மாற்றியமைக்க வேண்டுமாம்! அப்பொழுதான் தமிழ் அறிவியலை நன்கு எழுதப் பயன்படுமாம்! என்ன ஏமாற்று வேலை!

தமிழை விடக் குறைவுடைய பலமொழிகள் இன்று அறிவியல் மொழிகளாகி உள்ளன. சீன மொழியும் சப்பான் மொழியும் பல நூற்றுக்கணக்கான எழுத்துக்களையும் குறிகளையும் கொண்டவை. அப்படியிருந்தும் அவற்றின் வாயிலாக அம்மக்கள் சிறந்த அறிவியல் வளர்ச்சி பெற்றுள்ளனர். அவர்களின் மொழிக்குறைபாடு அவர்களின் முன்னேற்றத்துக்குக் கடுகளவும் தடையாக இல்லையே!

ஏன், ஆங்கிலத்தை எடுத்துக் கொள்வோம். அதைப் போல் கோணலான மொழி உலகில் வேறு உண்டா? அதன் எழுத்துக் கூட்டலிலும் (Spelling) பலுக்கலிலும் (Pronounciation) எத்தனை முரண்பாடுகள்! ஒரே வரிவடிவத்துக்கு எத்தனை ஒலி வேறுபாடுகள்! ஆங்கில மொழியில் சீர்திருத்தம் வேண்டும். அதன் முரண்பாடுகளை அகற்றிச் சீர்மைப்படுத்த வேண்டுமென்று கூறிப் பேரறிஞர் பெர்னாடுசா தமக்குக் கிடைத்த நோபெல் பரிசுத்தொகை முழுமையையும் வழங்கிச் சென்றார். அப்படியிருந்தும் ஆங்கிலேயர் அச்சீர்திருத்தத்தை மேற்கொள்ள வில்லை. அதில் போய்க் கவனம் செலுத்தத் தேவையில்லை; ஆக்கவழி அறிவுத் துறையில் மேலும் மேலும் முன்னேறுவோம்; இதற்கு மொழி தடையாக இருக்கும் என்று எண்ணுவது கையாலாகாத் தன்மை என்று உணர்ந்து மேலே சென்று கொண்டிருக்கின்றனர்.

“சட்டி ஓட்டையாக இருந்தாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி” என்று ஓர் அழகிய பழமொழி தமிழில் இல்லையா? அப்படியிருக்க, நாம் அறிவியல் கொழுக்கட்டையை வேக வைக்க மாவைக் கூடப் பிசையாமல், சட்டி ஓட்டை, சட்டி ஓட்டை என்று கத்திக் கொண்டு சும்மா இருக்கின்றோமே! நம் முன்னோர்களின் காலத்திலும் இந்த ஓட்டைச் சட்டிதானே இருந்தது! அவர்கள் அதில் மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம், கட்டடக் கலை கவின் கலைகள் பல என்று எத்தனையோ கொழுக்கட்டைகளை வேக வைக்கவில்லையா?

எவ்வளவு சிக்கல் வாய்ந்த அறிவியற் கல்வி ஆயினும் நாம் முழுமூச்சுடனும் இடைவிடா ஈடுபாட்டுடனும் முயன்றால் அதை நம் தாய்மொழியாம் தமிழ்மொழி வாயிலாகப் பெற முடியும்; முடியும்; முடியும். தமிழினும் வளங்குறைந்த உலக மொழிகள் பல இன்று அறிவியல் மொழிகளாகித் திகழ்கின்றன. காரணம் அவ்வம்மொழி மக்களின் முயற்சி.

"தாய்மொழியில்தான் கற்போம்" என்று கங்கணங்கட்டிக் கொண்டதால் அது முடிந்தது.

நாமோ முயற்சி செய்யாத முழுச் சோம்பேறிகளாக இருந்து கொண்டு, தமிழில் அறிவியல் இல்லை. புத்தாக்கத்துக்கேற்ற கலைச்சொற்கள் இல்லை என்று வெற்றுப் புலம்பல் புலம்பிக் கொண்டிருக்கின்றோம்.

தமிழ் பயிற்று மொழியாவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள், தமிழில் பாடங்கள் நடத்தப் போதிய பல்துறை அறிவியல் நூல்கள் இல்லை. மொழிபெயர்க்கப் போதிய கலைச்சொற்கள் இல்லை. தமிழ் முன்னேறி வரும் மேலை உலக அறிவியல் செய்திகளை மாணவர்க்கு உணர்த்தப் போதாமல் இருந்து வருகின்றது. அதனால்தான் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொள்ள வேண்டும் என்கின்றனர்.

தமிழ் புதிய அறிவியல் துறைகளில் வளர்ச்சி அடையவில்லை என்றால் விடுதலை பெற்றவுடனேயே அவ்வளர்ச்சியை நோக்கி நாம் நடந்திருக்க வேண்டும். தமிழே பயிற்றுமொழி என்று சட்டமியற்றிக் கீழ் வகுப்பிலிருந்து உயர் கல்வி வரை தமிழே பயிற்றுமொழியாக நடைமுறைப்படுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டிருக்க வேண்டும். செய்தோமா? விடுதலை பெற்ற தொடக்கத்தில் முயற்சியைத் தொடங்கினோம். விறுவிறுவென்று பல வேலைகள் நடந்தன. ஆனால் நம் முயற்சியின்மையாலோ, தெளிவின்மையாலோ, போலி அரசியல் – மொழிக் கொள்கையாலோ, தொடங்கிய முயற்சிகள் இடைநின்று போயின. மீண்டும் ஆங்கிலத்தின் காலடியிலேயே விழுந்து கிடக்கலானோம்.

இன்று ஆங்கிலம் வல்லாண்மையுடனும் கோலோச்சத் தொடங்கிவிட்டது. மேல்தட்டுக்காரரின் சூழ்ச்சியாலும் ஆங்கில வாணிகரின் கொள்ளையடிப்பு வேட்கை, அடாவடித்தனங்களாலும் ஆங்கிலவழிக் கல்வியே உயர்வென்று தம்பட்டமடிக்கப்பட்டுப் பொதுமக்கள் ஏமாற்றப்பட்டுவிட்டனர். ஆங்கில வாணரின் கொடுங்கோன்மை பன்மடங்கு அதிகமாகிவிட்டது. வெள்ளைக் காரன் காலத்தில் கூடத் தமிழ் உயர்நிலைக் கல்விவரை பயிற்று மொழியாக இருந்ததே! கற்ற மாணவர்கள் எந்தச் சிக்கலும் இல்லாமல் கற்றனரே!

தமிழே பயிற்று மொழி என்ற திசை நோக்கிச் செல்ல விரும்பாதவர்கள், செல்லுமளவுக்கு முயற்சி மேற்கொள்ள விரும்பாதவர்கள் தம் அறிவுச் சோம்பலை (Intellectual Laziness) மறைப்பதற்காகத் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கையில் தூக்கிக் கொண்டுள்ளனர் என்றுதான் கூறு வேண்டும். தமிழில் சில எழுத்துக்களிடையே சீர்மை இல்லை என்கின்றனர். சீர்மையாக இருக்க வேண்டுமென்பது என்ன தேவை? சீர்மையில்லாமையால் என்ன கெட்டுவிட்டது? இரண்டும் இல்லையே. வாழைப்பழம் கோணலாக இருக்கின்றது என்று அதைக் குறை சொல்பவனை என்னென்று அழைப்பது?

சில எழுத்துகளில் சீர்மை இல்லை என்றால் அதற்குத் தக்க காரணம் உண்டு. கையெழுத்து எழுதிய பின் அதைப் படிக்கையில் எழுத்துகளிடையே மயக்கம் ஏற்படக் கூடாதென்றுதான் வடிவங்கள் வேறுவேறாக அமைக்கப்பட்டன. கூ என்பதை சூ—வினைப்போல் என்று எழுதினால் கையெழுத்தில் மயக்கம் ஏற்படும். 'பு' என்பதைப் போல் என்றெழுதினால் அதற்கும் ழுகரத்துக்கும் கையெழுத்தில் வேறுபாடு தெரியாமல் போய்விடும். 'று' என்பதைப் போல நகர உகரத்தை நு என்று எழுதினால் அதற்கும் நுகரத்துக்கும் வேறுபாடு தெரியாது. சீர்மையின்மைக்கு இப்படிப் பொருத்தமான காரணங்கள் உண்டு. அவற்றை ஒரு தனிக்கட்டுரையாக எழுத முடியும். எனவே சீர்மையில்லை என்பது ஒரு குறையாகாது. ஒரு குறையாகவே இருந்தாலும், சீனரும், சப்பானியரும், ஆங்கிலேயரும் தங்கள் தங்கள் மொழிகளின் குறைபாடுகளை அப்படியே வைத்துக் கொண்டு அறிவியல் துறையில் மேலோங்கியிருக்கின்றனரே! எப்படி முடிந்தது?

அவர்களின் அறிவாளிகள் வினைத்திறம் மிக்கவர்கள். விரிந்த பார்வை உடையவர்கள். நம் அறிவாளிகள் சோம்பேறிகள். தங்கள் தாய்மொழி வளர்ச்சியில் போதிய அக்கறை கொள்ளாதவர்கள். வெறும் உலகியலாளர்கள்.

தமிழராகிய நாம் நம்மிடம் காணப்படும் மாந்தக் குறைபாடுகளை அடியோடு களைந்து அறிவியல் துறைகளில் தாய்மொழியாகிய தமிழ் உள்ளடக்கத்தில், உருவத்தில் அன்று, காலத்தோடு ஒத்துச் செல்லும் வண்ணம் அதை நூற்றுக்கு நூறு பயன்பாட்டுக்கு உட்படுத்தி ஆக்க வழியில் முன்னேற வேண்டுமே தவிர "ஆட மாட்டாதவள் கூடத்தைக் குறை கூறினாள், அறுக்க மாட்டாதவன் அரிவாளைக் குறை கூறினான்" என்பது போல் இருந்துவிடக் கூடாது. தமிழைப் பயிற்று மொழியாக நூற்றுக்கு நூறு நடைமுறைப்படுத்துவதற்கான ஒருங்கு திரண்ட முயற்சிகளை இடைநில்லாமல் மேற்கொள்ள வேண்டும். ஆங்கிலத்தின் துணை நமக்குக் கட்டாயம் வேண்டுமென்றாலும், அதனைத் துணை மொழியாக இரண்டாம் இடத்தில் வைத்துக் கொண்டு, தேவையானால் இப்பொழுது கற்பதைக் காட்டிலும் இருமடங்கு ஆர்வத்துடன் அதனைக் கற்றுக் கொள்வோம்; தடையில்லை. ஆனால் தமிழ் பெற வேண்டிய முதல் இடத்தை, உரிமை இடத்தை மதிப்பிடத்தைக் கல்வியிலும் ஆட்சியிலும் அதற்கே வழங்குதல் வேண்டும். தமிழ்நாட்டில் தமிழுக்கே முதன்மை இருக்க வேண்டும். இருந்தே தீர வேண்டும். இதை வழங்கத் தவறினால் மிக விரைவில் நம்மை நாமே அழித்துக் கொண்டவர்களாவோம். இது எச்சரிக்கை!

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."

தெளிதமிழ்
13.02.2010

11. தமிழ் எழுத்து வரிவடிவச் சீரழிப்பு : விழிப்புத் தேவை

[விழிப்புணர்வோன்]

மறைமலையடிகள், மாணிக்கனார், பாவாணர், பெருஞ் சித்திரனார் போன்றோர் இன்று இல்லை என்ற மூடத்துணிச்சலில் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியதுபோல், முழுமக்கள் சிலர் இன்று தமிழ் எழுத்து வரிவடிவச் சீரழிப்புக் கோரிக்கைகளை மீண்டும் உலாவவிட்டுள்ளனர். 1930 – களிலிருந்தே தமிழுக்குக் கேடு சூழ்வார் இச்சீரழிப்பு முயற்சிகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். ‘சீரமைப்பு’ என்ற கயவாளித்தனமான பெயரில் முளைத்த அத்தமிழழிப்பு முயற்சிகளை, அன்றிலிருந்து இன்று வரை கடுமையாக எதிர்த்து வந்துள்ள உண்மைத் தமிழ் அறிஞர்தம் ஆணித்தரமான கருத்து வெளிப்பாட்டு ஆவண விளக்கங்களை இறுதியில் காண்க. உண்மைத் தமிழுணர்வும் தமிழாய்ந்த தகைமையும் உடைய தமிழறிஞர்கள் அண்ணாவும் கலைஞரும் தாங்கள் நடத்தி வந்த இதழ்களில் எழுத்துச் சீரழிப்புக்கு இடம் தரவில்லை; தாங்கள் தமிழக முதலமைச்சர்களாக ஆண்ட காலங்களிலும் எழுத்துச் சீரழிப்புக் கேடர் கருத்துகளுக்கு அவ்விருவரும் செவிசாய்க்கவில்லை. 1978 அக்தோபரில் தமிழக அரசு ஆணையின் படி ஊண போன்ற 4 வடிவங்களுக்கு ணை போன்ற புதுவடிவங்களும் ரு போன்ற 9 வடிவங்களுக்கு றா போன்ற புதுவடிவங்களும் ஏற்கப்பட்ட போது தமிழாய்ந்த தகைமைத் தமிழர் ஆட்சியில் இல்லை. அவ்வாணை வெளியிடு முன்னரும் பின்னரும் மாணிக்கனார், பாவாணர், பெருஞ்சித்திரனார் முதலியோர் எதிர்த்தனர். (கி. ஆ. பெ. விசுவநாதம் ஐ, ஔ, வடிவங்களை அய், அவ் என மாற்றியதன் முன்மையை விளக்கியதால் அன்றைய அரசு கூட அதனை 1979 மே மாதம் கைவிட்டது) கலைஞரின் இன்றைய ஆட்சி எழுத்துச் சீரழிப்புக்கு இடம் தராது என்பது தேற்றம். எனினும் “விழிப்புணர்வின்றேல் உரிமைகள் பறிக்கப்படும்”

என்ற முதுரையின் அடிப்படையில் சான்றோர்களாகிய தமிழறிஞர்கள் கீழ்க்குறித்த கட்டுரையாளரும் வேறு பலரும் – தெரிவித்துள்ளவற்றின் அடிப்படையில் இன்றுள்ள தமிழ் எழுத்து வரிவடிங்களைச் "சீர்திருத்தம்" என்ற நச்சுப் பெயரில் சீரழிக்கவிடக் கூடாது என்பதற்கான மறுக்கொணாத பின்வரும் காரணங்கள் தமிழர் பலரும் அறிந்து கொள்வதற்காக முன் வைக்கப்படுகின்றன.

1. தமிழிலுள்ள 247 (12+18+216+1) எழுத்துகளை எழுத இன்று 107 குறியீடுகள் உள்ளன. பிற மொழிகளின் நிலை என்ன? க, ச, ட, த, ப விற்கு (எ.கா. 'க'விற்கு, க, க்க, ga, gha என்று) வருக்க எழுத்துகளுடன் மேலும் சில மிகை எழுத்துகளைக் கொண்ட சமற்கிருதம், இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளில் எழுத்துகளின் தொகை 300 இலிருந்து 500 வரை உள்ளன. வரிவடிவங்கள் அம்மொழிகளுள் ஒவ்வொன்றிலும் 200 – 300 அளவில் உள்ளன. கூட்டெழுத்து வடிவங்களையும் சேர்த்து இருப்பினும் அம்மொழியாளர் எவரும் தமிழகத்திற் போல அரைவேக்காட்டு எழுத்துச் சீரழிப்பு (அவர்கள் மொழியில் 'சீரமைப்பு' – இட்லருடைய Final Solution போல !) முயற்சிகளில் இறங்குவதில்லை இறங்கினாலும் மொழிப்பற்றுடைய அந்தந்த மொழிமக்கள் விடமாட்டார்கள். இந்திய அரசியற் சட்டம் 29 (1) இன் படி ஒவ்வொரு மொழியினருக்கும் அவரவர் மொழி, அம்மொழியின் வரிவடிவம், பண்பாடு ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கும் அடிப்படை உரிமை (Fundamental Right to Conserve their language, its script and their culture) உண்டு என்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர். தமிழர்களைப் போல இளித்த வாயர்கள் அல்லர். மாநில மொழியின் வரிவடிவத்தை மாற்றும் கோரிக்கை வந்தால் அதன் மீது மக்கள் பொது வாக்கெடுப்பு வைத்துத்தான் முடிவு செய்ய வேண்டும் எனக்கோரும் அரசியல் சட்ட அடிப்படை உரிமை உண்டு என்பதைப் பிறமாநில மக்கள் நன்கு உணர்வர். தமிழர்களும் உணரவேண்டும்.

2. உரோமன் Roman வரிவடிவத்தை விடச் செம்மையான அழகிய வரிவடிவம் இன்றுள்ள தமிழ் எழுத்து வரிவடிவம் ஆகும். இந்தியாவில் (ஏன் உலகில்) வேறு எம்மொழிக்கும் இவ்வளவு சிறந்த வரிவடிவம் இல்லை. அதனைப் போற்ற வேண்டும், புன்மதியாளர்

கூறுவது போல் சிதைக்கக்கூடாது என்று தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ள சான்றோர் கருத்துகளைக் கீழ்க்குறித்துள்ள கட்டுரைகளில் காண்க. "உள்ளது சிதைப்போர் உளர் எனப்படார்" வ. சுப. மாணிக்கனார் கூறுவது போல் இன்றுள்ள தமிழ் வரிவடிவைத் திருத்துவதாகக் கூறுவது கேடான, அழிவான, மருட்கோள் ஆகும். பாவாணரும் உயிர் உள்ள வரை அக்கேட்டை எதிர்த்தார். இன்றைய அறிவியல் நிலைப்படியும் கூட எழுத்து மாற்றம் தமிழுக்குத் தேவையில்லை என்பதைத் தெள்ளிதின் உணர்ந்த சுசாதா 6–8–2000 ஆனந்த விகடனில் இத்தகைய எழுத்துச்சிதைப்புப் புன்மை முயற்சிகளை "நேரம்டா" என்றே தமிழன்னை நொந்து கொள்வாள் என்பதைச் சுட்டியுள்ளார்.

3. குரங்கு செடியைப் பிடுங்கிப் பிடுங்கி நீர் ஊற்றுவது போல் வரி வடிவத்தை மாற்றிக் கொண்டேயிருந்தால் இதுவரை அச்சாகியுள்ள பல இலக்கம் நூல்கள் படிக்க முடியாமல் போய்விடும். இது தமிழகத்தை உடனடியாகச் சில தலைமுறைகள் பின்னோக்கிக் கொண்டு சென்றுவிடும். பயிற்றுமொழி போன்றவற்றிலும் தமிழும் தமிழரும் ஏற்கெனவே உள்ள இக்கட்டான சூழ்நிலையில் தமிழ் வரிவடித்தையும் நோண்டிக் கொண்டேயிருப்பது தற்கொலைக்குச் சமமாகும் என்பதை மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார், இ.மு.சு., கி.ஆ.பெ. விசுவநாதம், வ.சுப. மாணிக்கம், தேவநேயப் பாவாணர் ஆகியோர் மட்டுமின்றித் தமிழாய்ந்த தமிழர் தலைவர் பேறிஞர் அண்ணா, கலைஞர் மு. கருணாநிதி முதலியவர்களும் நன்கு உணர்ந்திருந்ததனால்தான் வரிவடிவச் சீரழிப்பை ஏற்றிலர்.

4. 5000 எழுத்து வடிவங்களைக் கொண்டது சப்பானிய மொழி. ஆயினும் சப்பானிய மொழியறிஞர்களே இன்றுள்ள நிலைமையில் அவர்களின் வரிவடிவில் மாற்றம் செய்வது கேடு விளைவிக்கும் என உணர்ந்து அம்முயற்சியை அறவே கைவிட்டுவிட்டனர். (Journal of Asian Studies - 15:3 Nov 1994 Nanette Gottlieb : The Reversal of Post-war Script Reform Policy in Japan) 15000 – 30000 எழுத்துருவங்களைக் கொண்ட சீனமொழியிலும் கூட எழுத்துச் சீர்திருத்தம் செய்வார் இலர்! தமிழ்நாட்டில்தான் த்அம்இழ் எழ்உத்தஉச் ச்ஈர்அழ்இப்ப்உக் கட்உங் க்ஆய்ச்சஅல் (ச்அன்ன்இ) ஏற்இய்அ ச்இல்அ க்இற்உக்க்அர் (தும்இழ்

எழுத்துச் சீரழிப்புக் கடுங்காய்ச்சல் (சன்னி) ஏறிய சில கிறுக்கர்) இப்படி எழுதுவதுதான் வருங்காலத்தின் இறுதிச் சீரழிப்பு ஆக இருக்க வேண்டும் என்று 'நெஞ்சத்தில் அவலமின்றிச்' செப்பி வருகின்றனர்!

5. கிரந்தம் போன்ற வரிவடிவத்தைத் தெலுங்கு ஏற்று க, ச, ட, த, ப எழுத்து ஒவ்வொன்றுக்கும் வருக்க எழுத்துகளை நுழைக்க வகை செய்ததனால் தெலுங்கில் வரம்பு மிஞ்சிய சமற்கிருதச் சொற்கள் புகுந்து தெலுங்கு கெட்டது என்று சி.பி.பிரௌன் 1835 யிலேயே எச்சரித்ததை உணர்க. தமிழுக்குப் பாதுகாப்பாக உள்ள "உ/ஊ ஏறிய தனித்தனி 18 + 18 உயிர்மெய்களின்" வரிவடிவங்கள்தாம் தமிழ்த்தாய்க்குக் காவலாக இருந்து, வருக்க எழுத்துகளைப் புகுத்தித் தமிழை ஒழிக்கும் வஞ்சகச் சூழ்ச்சிக்குத் தடையாக உள்ளன. இப்பொழுது 3 (எ.கா. kka, ga, gha) X 5 வருக்க எழுத்துகளைப் புகுத்த வேண்டுமாயின் 5 வரிவடிங்களைத் தமிழில் திணிக்க வேண்டும். ('மெய் 15' + 'உ ஏறிய 15' + 'ஊ ஏறிய 15') என்ற நிலை உள்ளது. கு, கூவை உடைத்து கு கூ என்றவாறு, உகர ஊகார உயிரேறிய மெய்களின் வடிவுகளை உடைத்துவிட்டால் வஞ்சகர்களுக்கு நற்பேறாக அமைந்து உடனடியாக அல்லது அடுத்த சில திங்களுக்குள் வருக்க எழுத்துகள் 15 உம் தமிழில் நுழைந்துவிடும், பின்னர்த் தமிழும் விரைவில் இந்தி போல் மாறிவிடும்.

6. மேலை முதலாளித்துவ நாடுகளின் உலக மயமாக்கப் பெருங் கொள்ளையில் (Global Village) இந்தியா போன்ற நாடுகளில் அனைத்து மொழிகளும் (தமிழ் உள்பட) அழியும் பேரிடர்ப்பாட்டை எதிர்நோக்கி நிற்கும் இந்நிலையில் எழுத்துமாற்றம் போன்ற செயல்பாடுகளில் ஈடுபடுவது தமிழுக்கும் தமிழர்க்கும் செய்யும் பெருங்கேடு என்பதை யாவரும் உணரவேண்டும்.

அடிப்படையாகச் சுட்டிய சான்றோர் கட்டுரைகள்:

(ஆசிரியர் குறிப்பிட்டுள்ள கட்டுரைகளும் பிறவும் பின்னிணைப்பில் காண்க)

தென்மொழி

தி. ஆ. உ0சக – மீனம்

(மார்ச்சு 2010)

12. தமிழ் எழுத்து – சில சிந்தனைகள்

[வெ. கோவலங்கண்ணன்]

(சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை ஆய்வரங்கம் 28–8–1983)

பெருமதிப்புக்குரிய அவைத்தலைவர் அவர்களே!
அருமை ஆய்வரங்க அமைப்பாளர்களே!
தமிழ்பெருமக்களே! வணக்கம்!

அண்மைய காலங்களில், முதுபெருந் தமிழ் அறிஞர்கள் ஒருவர்பின் ஒருவராக மறையத் தொடங்கியதும், மாபெருங்கடலாம் தமிழ் இலக்கண இலக்கியங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில செய்யுள்களை மட்டும் படித்து முனைவர் பட்டம் பெற்றுள்ளவர்களும், தமிழ் படிப்பதால் என்ன பயன் என்று இதுகாறும் சொல்லித் திரிந்த திடீர்த் தமிழ்ப் பற்றாளர்களும், ஆங்கிலம் போல் நந்தமிழ் மொழியின் எழுத்துகளைச் சுருக்கிவிட்டால் தமிழ், தரணி எங்கும் தழைத்தோங்கும் என்றும், இல்லாவிடின் மறைந்தொழியும் என்றும் துணிந்து பொய் சொல்லி வருகிறார்கள். இந்த அறிஞர்களை நோக்கி நான் கேட்பது என்னவென்றால், ஆங்கிலம் எழுத்துச் சுருக்கத்தால் உலகெங்கும் பரவியதா? அல்லது படைபலத்தால் உலகெங்கும் பரப்பப்பட்டதா? ஆங்கிலேயரின் ஆட்சி பல நாடுகளில் நிறுவப்பட்டதால் ஆங்கிலம் உலக மொழியாகப் படிப்படியாக வளர்க்கப் பெற்றதேயன்றி, அதன் எழுத்துச் சுருக்கத்தாலன்று என்னும் வரலாற்று உண்மை நாமெல்லாம் அறிந்த ஒன்றாகும். உண்மை இவ்வாறு இருக்க, ஆங்கிலம் 26 எழுத்துகளைக் கொண்டு உலகை ஆள்கிறது, நாமும் எழுத்தைச் சுருக்கிக் கொண்டால் உலகை ஆளலாம் என்று நினைப்பது ஆய்வடிப்படையில் அறிவுக்குப் பொருந்தாததாகும்.

அடுத்து, இந்த எழுத்துச் சீர்திருத்தம் விரும்புவோர் நம் மொழியில் எண்ணற்ற வரிவடிங்கள் இருப்பதால், தட்டச்சு, கணினி, தொலையச்சு மற்றும் பல பயனுள்ள பொறிகளைத் தமிழ் மயமாக்க இயலாது என்றும், நாம் எழுத்துகளைச் சுருக்கிக் கொண்டால் இக்கருவிகளை எளிதில் தமிழில் படைத்துக் கொள்ளலாம் என்றும் பறைசாற்றுகின்றனர். பல்லாயிரம் வரிவடிவங்கள் கொண்டுள்ள சீன மொழியிலும் தமிழிலுளவற்றை விடப் பலமடங்கு எழுத்துகள் அமையப் பெற்றுள்ள இந்தி, தாய்லாந்து மொழி ஆகியவை போன்ற மொழிகளிலும், கணினி, தொலையச்சு மற்றும் பல புதுமைக் கருவிகள் புழக்கத்தில் வந்துள்ளன. இது எப்படி முடிந்தது? ஏறத்தாழ இருநூறு வரிவடிவங்களை மட்டுமே கொண்டுள்ள தமிழ் மொழியில், (அதுவும் கொம்பு, கால் போன்ற வரிவடிவங்களை ஒரு முறை மட்டும் எண்ணினால் சுமார் 50 வரிவடிவங்களுக்குள் அடங்கக்கூடிய தமிழ் மொழியில்) இப்புதுமைக் கருவிகள் படைக்கப்படாமைக்குக் காரணம் யாது? சீனம், இந்தி, அரபி மற்றும் தாய்லாந்து மொழிகளில் கணினி, தொலையச்சு போன்ற கருவிகள் எளிதில் புழக்கத்திற்கு வந்த காரணம், இந்த நாட்டரசுகள் பண வலிமையாலும் மக்கள் வலிமையாலும் விரும்பி இக்கருவிகளைப் பணம் கொடுத்து வாங்க முன்வந்தமைதான் என்பது கண்கூடு. நாம் எழுத்தைச் சுருக்கிக் கொண்டுவிட்டோம் என்று வாதத்திற்காக எடுத்துக் கொண்டாலும், தமிழில் புதுமைக் கருவிகள் வாரா. இக்கருவிகளைத் தமிழில் படைப்பதற்குத் தடையாக இருப்பது எழுத்தின் எண்ணிக்கையன்று, பணத்தோடு கூடிய தமிழர்களிடம் இக்கருவிகளை வாங்கும் வேட்கை இன்மைதான். இதுதான் அடிப்படைப் பொருளியல் நமக்குக் கற்பிக்கும் பாடம். இன்று, இங்குக் கூடியிருக்கும் நாம், தமிழில் ஆயிரம் கணினிகள் வேண்டும் என்று சப்பானியர்களிடம் அதற்குரிய பணத்தையும் கொடுத்துக் கேட்போமானால், ஒரு மாதத்திற்குள்ளாக இக்கருவிகளை நம் தமிழ் எழுத்துகள் எல்லாவற்றையும் ஓர் ஊசி முனைக்குள் வைத்துச் சிறிய அரிய கணினிகளைப் படைத்துத் தந்துவிடுவார்கள். இது இவ்வாறு இருக்க, எழுத்தைச் சுருக்கிக் கொண்டால் தமிழில் கணினி, தொலையச்சு மற்றும் புதுமைக் கருவிகள் படைத்துவிடலாம் என்று கூறுவது நடையன் அளவுக்குக் காலைக் குறைத்துக் கொண்டால் நாம் விரைந்து நடக்கலாம் என்று சொல்லுவதையே ஒக்கும்.

அண்மையில் சிங்கைக்கு வருகைபுரிந்த தமிழகத்தைச் சேர்ந்த அண்ணா தொழில்நுட்பக் கல்லூரியின் துணைவேந்தர் முனைவர் குழந்தைசாமி அவர்கள், தமிழ் எழுத்துகளைக் குறைத்தால்தான் தமிழ் வளரும் என்று கூறினார்கள். இவ்வறிஞர் தம் அறிவாற்றலை எழுத்துக் குறைப்பில் செலவிடாது தம் துறையாகிய தொழில்நுட்பத் துறையில் செலவிட்டுத் தமிழில் கணினி போன்ற புதுமைக் கருவிகளைப் படைத்திருந்தால் தமிழ் உலகம் இவரை எத்துணையோ போற்றியிருக்குமன்றோ! அவர்கள்தம் துறைகளில் தமிழை வளர்க்க, வளப்படுத்த முனையாது தமிழ் எழுத்துகளைக் குறைத்துப் பெயர்பெற முனைந்து தமிழுக்குப் பேரிழப்பை விளைவிக்க முற்பட்டுள்ளனர் என்பதனை அறியும் போது அது மிகவும் வேதனையாய் இருக்கிறது.

இனி, எழுத்துச் சீர்மை வேண்டுவார் கூறும் மற்றொரு காரணத்தைக் காண்போமாக.

தமிழ் எழுத்துகளைக் கொண்டு எல்லா ஒலிகளையும் தமிழில் ஒலிக்க முடியவில்லை என்றும், இன்றுள்ள பல எழுத்துகளை நீக்கிச் சில எழுத்துகளை மட்டும் சேர்த்துக் கொண்டால் தமிழில் எல்லா ஒலிக்குறிப்புகளையும் எழுதிக் கொள்ளலாம் என்றும் எழுத்துச் சீர்மை வேண்டுவோர் கூறுகின்றனர். இக்கூற்று எவ்வளவு பிழைபட்டது என்பதனை இனிக் காண்போமாக. ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனித்தன்மை உள்ளது. அதன் தனித்தன்மைக்கு ஏற்ப ஒலி அமைப்பும் அமைந்திருக்கும். உலகில் எந்த மொழியும் மற்றொரு மொழியின் ஒலிகளை அந்த மொழிக்குரிய நெளிவு சுழிவோடு ஒலிக்க முடியாது என்னும் உண்மையைப் பல மொழிகள் வழங்கும் சிங்கப்பூரில் வாழும் நாம் நன்கு அறிவோம்.

சீனம் மட்டிலுமோ ஆங்கிலம் மட்டிலுமோ பயின்ற நம்முடன் வாழும் நண்பர்கள், நம் அருந்தமிழ்ப் பெயர்களை ஒலிக்கும் போது கேட்டறிந்த நாம் இவர்களுக்கு நம் தமிழின் ஒலிப்புமுறை எத்துணைப் புறம்பானது என்பதனை அறிவோம் அல்லவா? எடுத்துக்காட்டு: முருகன் – மூகா. திருமகள் – திமாக என்று சொல்லக் கேட்டிருக்கிறோம் அல்லவா. ஆங்கிலேயர் நம் தமிழ்ச்

சொற்களைத் தங்கள் மரபுப்படியே ஒலிக்கின்றார்களே ஒழிய, நம் மரபுப்படி அவற்றை ஒலிப்பதில்லையே! எடுத்துக்காட்டாக ஒரு சில சொற்களைக் காண்போம்.

‘தமிழ்’ என்பதை ‘டமில்’ (Tamil) என்றும் ‘மாங்காய்’ என்பதை ‘மெங்கோ’ (Mango) என்றும் ‘அரிசி’ என்பதை ‘ரைஸ்’ (Rice) என்றும் வழங்குகிறார்களே அல்லாது தமிழின் மொழி மரபுக்கு ஏற்ப ஒலிக்க வேண்டும் என்று எந்த ஆங்கிலேயரும் சொல்லுவதில்லை; அப்படியே சொன்னாலும் ஆங்கிலத்தால் நம் ஒலிமுறையைப் பின்பற்ற முடியாது. இது இப்படியிருக்க, எழுத்துச் சீர்மை வேண்டுவாரின் உட்கருத்து யாது? தமிழ் எழுத்துகளை மாற்றித் தமிழை அழிக்க முற்பட்டிருப்பதேயன்றி அது வேறு எதுவாக இருக்க முடியும்?

எழுத்துச் சீர்திருத்தக்காரர்களின் மற்றொரு வாதத்தினையும் இனிக் காண்போமாக.

இன்றுள்ள தமிழ் எழுத்துகள் காலந்தோறும் பலவாறு மாறிவந்திருக்கின்றன என்றும், மாறுதல் என்பது எல்லாவற்றுக்கும் இயற்கை என்றும், இக்காலத்திற்கு ஏற்ப நம் எழுத்துகளை மாற்றிக் கொள்ளுவதுதான் அறிவுடைமை என்றும் சொல்லுகிறார்கள். மாந்தன் தாயின் வயிற்றில் கருவுற்றுப் பத்து மாதங்கள் படிப்படியாய் வளர்ந்து, குழவியாக இவ்வுலகில் பிறந்து தொடர்ந்து படிப்படியாக வளர்ந்து கட்டிளங் காளையாகிறான். அதன்பின் தந்தையாகிறான், தாத்தாவாகிறான். இவை போன்ற இயல்பான மாற்றங்களைத்தான் இதுவரை தமிழ் கண்டுள்ளது. இது இயற்கை என்று நாமும் ஒப்புக் கொள்ளுகிறோம். இதைப் போன்ற இயல்பான மாற்றங்களைக் கண்டு யாரும் அஞ்சியதில்லை. இதை விடுத்து மாற்றம் ஒன்று வேண்டும், புதுமை காண வேண்டும் என்னும் வேட்கையால் நம் எழுத்துகளைச் சுருக்க எண்ணுவதை விட வேறு அறியாமை என்ன இருக்க முடியும்?

இன்னும் சிலர் இருநூற்றுப் பதினாறு எழுத்துகள் தமிழில் இருப்பதால், நம் குழந்தைகள் நம் மொழியைக் கற்கப் பெரிதும் இடர்ப்படுகிறார்கள் என்று நொண்டிச் சாக்குச் சொல்லுக்கிறார்கள். இக்கூற்று உண்மைக்கு எத்துணைப் புறம்பானது என்பதனைப் பல பெற்றோர்களைக் கேட்டறிந்தாலே தெரிந்து கொள்ளலாம்.

இனி தற்போதுள்ள தமிழ் எழுத்துகளில் சீர்திருத்தம் என்னும் பெயரால் மாற்றங்கள் செய்தால் நாம் எவ்வகை இழப்புகளுக்கு – இடர்களுக்கு ஆளாவோம் என்பதனைக் காண்போமாக.

நாம் தமிழர்கள்; நமக்கு என்று ஒரு தனிப்பெருமரபு, வரலாறு உண்டு என்னும் உண்மையை இதுகாறும் நிலைநாட்டி வந்துள்ளவையாகிய நம் தனிப்பெருஞ் சொத்து, சங்கக்கால இலக்கண, இலக்கியங்களாகும். எழுத்துச் சீர்மை என்னும் பெயரால் எழுத்து மாற்றங்கள் செய்வோமேயானால் தேடுதற்கரிய இச்செல்வங்களை முற்றாக இழந்து விடுவோம். நாம் மரபு அற்றவர்கள் ஆக்கப்படுவோம். இதன் விளைவு, தமிழர் பண்படாத ஒரு விலங்காண்டி இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று தந்தை பெரியார் கூறிய கூற்று மெய்ப்பிக்கப்படுவதாகும். இத்தோடு, தமிழுக்கு எழுத்து வடிவம் இருபதாம் நூற்றாண்டு வரை இருந்ததில்லை, வெள்ளையர் ஆட்சிக்குப் பின்தான் தமிழர் படிப்படியாகப் பண்பட்டனர் என்னும் கொள்கையைத் தமிழையும் தமிழினத்தையும் அழிக்க எண்ணியுள்ள பகைவர் நிலைநாட்டி விடுவார்கள்.

அடுத்து தமிழ் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது அதன் இன்றைய எழுத்துகளா அல்லது வேறு காரணங்களா என்பதனைக் காண்போமாக.

நம் கருத்துகளையும் எண்ணங்களையும் மற்றவர்களிடம் எடுத்துச் சொல்ல நாம் சொற்களைப் பயன்படுத்துகிறோம். “சிவப்பு” என்று நாம் சொன்னதும் அரத்த நிறம் நம் கருத்தில் தோன்றுகிறது. “தொலைக்காட்சி” என்றதும் நம் கண்முன் தொலைக்காட்சியின் உருவம் தோன்றுகிறது. எல்லா மொழிகளுக்கும் சொற்கள்தாம் அடிப்படை உயிர்நாடி. ஒவ்வொரு சொல்லும் ஒரு பொருளையோ பல பொருள்களையோ, அல்லது ஒரு பொருளின் நுண்ணிய வேறுபாட்டை எடுத்துக் காட்ட பல சொற்களோ வளர்ச்சி பெற்ற எல்லா மொழிகளிலும் காணக் கிடக்கின்றன.

இன்று, ஆங்கிலம் வளமிக்க மொழி, அம்மொழியில் எக்கருத்தையும் எளிதாகவும் தெளிவாகவும் எடுத்துச்

சொல்லிவிடலாம் என்று பலர் சொல்லுவதற்குக் காரணம் அதன் எழுத்தின் சுருக்கமன்று. வெவ்வேறு கருத்துக்களையும் எண்ணங்களையும் எடுத்துச் சொல்லோவியமாகப் படைக்க அம்மொழியில் பல இலக்கச் சொற்கள் மலிந்து கிடப்பதுதான் இதற்குக் காரணம் என்பது நாமறிந்த உண்மை.

இதுபோல், பண்டைய தமிழர்கள் தங்கள் கருத்துக்களையும் எண்ணங்களையும் பிறரிடம் தெளிவாக எடுத்துச் சொல்ல, நம் தாய்மொழியாம் தமிழில், பல்லாயிரக்கணக்கான அருந்தமிழ்ச் சொற்களைப் படைத்துக் கொண்டனர். இதற்குரிய சான்றுகள் சங்க நூல்களிலும் திருக்குறளிலும் மற்றும் பிற நூல்களிலும் காணக் கிடக்கின்றன. எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் காண்போமாக.

சொல்லுதல் என்றும், சொல்லுக்கு அறை, இயம்பு, இசை, உரை, என், ஓது, கிள, கிளத்து, கூறு, சாற்று, செப்பு, சொல், நவில், நுதல், நுவல், நொடி, பகர், பறை, பன்னு, பனுவு, புகல், பேசு, மாறு, மிழற்று, பொழி, விள், விளத்து, விளம்பு என வரும். இன்று இந்த 28 சொற்களும் பொதுவாகச் சொல்லுதலைக் குறித்தாலும், ஒவ்வொரு சொல்லும் நுண்ணிய வேறுபாடுடையன.

இனி யானையைக் குறிக்கும் சொற்களைக் காண்போம். ஆம்பல், உம்பல், உவா, எறும்பி, ஒங்கல், கடமா, கரி, கறையடி, குஞ்சரம், கைம்மலை, கைம்மா, தும்பி, தூங்கல், தோல், நால்வாய், பூட்கை, பொங்கடி, மறமலி, மாதிரம், மொய், வழுவை, வாரணம், வேழம் முதலிய பொதுச் சொற்களும், சிந்துரம், பிணிமுகம், புகர்முகம் முதலிய சிறப்புச் சொற்களும் உள்ளன.

இவைபோல் பெண்ணின் பல பருவ நிலைகளைக் குறிக்கத் தனித்தனிச் சொற்களும், இலைவகைகளின் நுண்ணிய வேறுபாட்டை எடுத்தியம்பத் தனித்தனிச் சொற்களும் பண்டைத் தமிழர் படைத்துக் கையாண்டதால் நம்மொழி வளமுற்றது.

ஆனால், சங்கக் காலத்திற்குப் பின் அயலார் வருகையாலும், பகைவர் சூழ்ச்சியாலும், தமிழ் அரியணையிலிருந்து இறக்கப்பட்டது. இதன் விளைவாகத் தமிழின் வளர்ச்சி தடைப்பட்டதோடல்லாது,

13. தமிழர் அறக்கட்டளை வேண்டுகோள்

(பொறிஞர் ஆ. கருப்பையா, மேலாண்மை அறங்காவலர், தமிழர் அறக்கட்டளை)

தாய்த் தமிழ் மொழிக்கு மிகையான எழுத்துகள் இருப்பதால், தமிழ்க் குழந்தைகள் தமிழைப் படிக்காமல் புறக்கணிக்கிறார்களா?

எழுத்துச் சீரமைப்பு:

இனப் பாதுகாப்பிற்கு அவசியம், தமிழ் ஒரு பண்பாட்டுத் தேவை, அளவில் விதை – விளைவில் விழுது, மாறாத பொருள் எதுவும் வளர்வதில்லை, தலைமுறையினர் சுமையைக் குறைப்போம் என்று ஐந்து தலைப்புகளில் திருவாளர் வா.செ.குழந்தைசாமி என்பார், திருவள்ளுவர் ஆண்டு 2041, கும்பம்–12, (24.02.2010) முதல் ஐந்து நாள்கள் தமிழோசையில் தொடர்ந்து எழுதிய கட்டுரையைப் படித்தேன்.

இன்றைக்கு இருப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இது போன்ற தமிழ் எழுத்துச் சீரமைப்புக் கட்டுரைகள் பலவற்றைத் தினமணியில் வா.செ.குழந்தைசாமி எழுதினார். இவருடைய தமிழ் எழுத்துச் சீரமைப்பிற்கு ஆதரவாகத் திருவாளர். ஐராவதம் மகாதேவன் என்பாரும் எழுதினார். இவர்களின் தமிழ் எழுத்துச் சீரமைப்புக் கட்டுரைகளை எதிர்த்துத் தொடர்ந்து எழுதினேன். தமிழக அரசிற்கும், தமிழக அமைச்சர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நாளிதழ்களுக்கும், பல்கலைக்கழகங் களுக்கும், திருமாலிய, சிவனிய மடங்களுக்கும் யான் தமிழ் எழுத்துச் சீரமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து எழுதிய மடல்களின் படிகளை விடுத்தேன். தமிழ் எழுத்துச் சீரமைப்பு அவசியம் என்று எழுதிய கட்டுரையாளருக்கும் படிகள் விடுத்தேன். என்னுடைய எதிர்ப்பிற்கு மறுப்புத் தெரிவித்து யாரும் மடல் வரையவில்லை.

ஆனால், “பார்வையில் கண்ட அரசாணையில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் குறித்து இப்போது உள்ள நிலையே நீடிக்கும் என அரசு ஆணையிட்டுள்ளதால், தங்களின் கோரிக்கை குறித்து தற்போது நடவடிக்கை ஏதும் இல்லையெனத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று 02.04.1990 –இல் ஒப்பமிடப்பட்ட மடல், தமிழ்நாடு, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையிடமிருந்து எனக்கு வந்தது. அதற்கப்புறம் இருபத்திரண்டு ஆண்டுகள் வாய்மூடிக் கிடந்த வா.செ. குழந்தைசாமி மீண்டும் புதிய கோணத்தில் தம்முடைய எழுத்துச் சீரமைப்பைத் தமிழ் மொழியின் மீது திணிக்க முயல்கிறார். இவர் இன்று நடுவண் அரசின் செம்மொழித் தமிழ்த் துறையில் ஓர் உறுப்பினராகவும் இருந்து கொண்டு தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி என்ற பெருமையை அழிக்க முயல்கிறார். இவருடைய முயற்சியைத் தமிழ் உலகம் முறியடிக்கும்.

‘கல்’ என்ற சொல்லிலிருந்து கல்வி, தோண்டு, அகழ் முதலிய சொற்கள் பிறக்கின்றன. ஆகவே கற்றல் என்பது கடினமானது என்பதை உணரலாம். அது செயற்கையானது. பெரும் முயற்சியால்தான் அதைப் பெற முடியும். அதனால்தான் மூன்று அகவையில் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கின்றோம். “இளமையில் கல்வி, சிலையில் எழுத்து” என்பது அறிவர் கூற்று. குழந்தைகளுக்கு விளையாட்டுப் பருவத்திலேயே மூளையில் கல்வியைப் பதிக்க முயல்கின்றோம். மேலும், கல்வி என்பது தாய் வழி வருவது. மரபணுக்களின் பதிவிலிருந்து கிடைப்பது. அதனால்தான் தாய்மொழிக் கல்வியே உயர்ந்தது என்கின்றோம். ஆகவே, குழந்தைகளுக்குத் தாய்மொழி என்பது படித்ததைத் திரும்ப நினைவு படுத்திக் கொள்வது போன்றதாகும். தாய்மொழிக் கல்வியை மிக எளிதாக மூளை ஏற்றுக் கொண்டு விரைந்து கற்றுக் கொள்ளக்கூடியது. அதனால் தாய்மொழியும், அதன் எழுத்து வடிவங்களும் எல்லா மொழியினருக்கும் எளிமையானதாய் இருக்கின்றன. சீன மக்கள் பல்லாயிரம் எழுத்துகளைக் கொண்ட தங்களின் தாய்மொழியைக் கற்று, மேலை நாடுகளுடனும், அமெரிக்காவுடனும் போட்டி போட முடிகின்றது. அவ்வாறே சப்பானிய மக்களும் மிகையான எழுத்துகளைக் கொண்ட தம் தாய்மொழியைக் கற்றுக்கொண்டு முன்னேற முடிகிறது. இந்தியாவில் இந்தி மொழிக்கு எழுத்துகள் தமிழ் மொழியின்

எழுத்துகளை விட மிகையாக உள்ளன. ஆகவே, தங்கள் தாய்மொழியின் எழுத்துகள் மிகையாக உள்ளன என்று தாய்மொழியைக் குறை கூறிக் கொண்டு யாரும் தங்களின் தாய்மொழியைப் படிக்காமல் புறக்கணிப்பதில்லை. மேலும் இந்தி மொழியை வளர்ப்பதற்குப் பல ஆயிரம் கோடி உருவாக்களை இந்திய நடுவண் அரசு செலவு செய்து கொண்டிருக்கின்றது. தங்களின் தாய்மொழி எழுத்துகள் மிகவும் சிக்கலான வரி வடிவங்களைக் கொண்டன என்று இதுவரை உலகில் யாரும் கூறியதாக் வரலாறு இல்லை. தமிழர்களும் அவ்வாறு கூறவில்லை. வா.செ.குழந்தைசாமி என்ற கல்வியாளர் ஒருவரே, தம் தாய்மொழியாகிய தமிழ் மொழியின் வரி வடிவங்கள் கற்பதற்குச் சிக்கலானது, கடினமானது என்று புலம்புகிறார். தம்முடைய தமிழ் எழுத்துச் சீரமைப்பைத் தமிழில் திணிப்பதற்காக, அவ்வாறு புலம்புகிறார். உலகத்தில் கற்பதற்குத் தாய்மொழியை விட எளிமையானதும், இனிமையானதுமான மொழி இல்லவே இல்லை. தாய்மொழிதான் சுற்றுச் சூழலுக்கு ஏற்ற மொழி.

வரலாற்றுக்கு முந்தைய காலம் தொட்டு, தமிழ்மொழியின் வரிவடிவங்கள் சிறப்படைந்து இன்று முழுமை பெற்றுத் தனித்து நிற்கின்றன. இவ்வரி வடிவங்கள் அனைத்தும் காலம் காலமாகச் சீரமைப்படைந்தவைகளே ஆகும். தமிழ்மொழியின் எழுத்து, இயல், இசை இவைகளின் அடியொற்றி எழுந்துள்ள இலக்கியங்கள் இவைகளுக்கான இலக்கணங்கள் அனைத்தும் உலகிலுள்ள எம்மொழியையும் சார்ந்தவை அல்ல. அதனால்தான் தமிழ்மொழி உலகில் உயர்தனிச் செம்மொழியாக உயர்ந்து நிற்கின்றது. இந்திய நடுவண் அரசும் தமிழின் உயர்வையும், பெருமையையும் ஏற்றுக் கொண்டுள்ளது.

சமற்கிருதம் என்ற ஏமாற்று மொழி இந்தியாவில் ஆரிய மொழியையும், கிரந்த மொழியையும், ஐந்தில் இரு பங்கு தமிழ்மொழியையும் கொண்டு சமன் செய்யப்பட்ட செயற்கை மொழியாகும். அதன் எழுத்தொலிகள் தமிழில் இருந்து கடன் பெற்று, ஒன்றைப் பல வல்லொலிகளாக ஆக்கப்பட்ட மொழி என்றும், அதன் இலக்கணம் தமிழ் இலக்கணத்தைத் தழுவி எழுதப்பட்டது என்றும், மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர்

கூறுகின்றார். அதைப் பிராமணப் பூசாரிகள் தேவமொழி என்றும், மந்திர மொழி என்றும் கூறிக்கொண்டு மராட்டிய மன்னர் காலத்தில் கோயில்களில் நுழைந்து இன்று வரை ஏமாற்றித் தமிழர்களைச் சுரண்டி வருகின்றனர். இப்படியான ஓர் ஏமாற்று மொழியை "உலகில் வடமொழி உண்மையிலேயே வியக்கத்தக்க, இலக்கண, இலக்கிய, வளம்படைத்த, பண்டைமொழி" என்று வா.செ.குழந்தை சாமி புகழ்ந்துரைக்கின்றார். இப்படி இவரால் புகழ்ந்துரைக்கப் படுகின்ற சமற்கிருதத்தைப் பிராமணர்கள் எல்லாரும் படிப்பதில்லை. கரணியம் மக்களின் பயன்பாட்டு மொழியாக அம்மொழி இல்லாததே ஆகும்.

தமிழ் மொழியின் முப்பத்தொரு வரி வடிவங்களும், பன்னிரண்டு உயிர்மெய்க் குறியீடுகளும், நமது குழந்தைகளுக்குக் கற்பதற்குக் கடினமானவை என்றால் இந்தி மொழியையும், சப்பானிய மொழியையும், பல்லாயிரம் எழுத்துகளைக் கொண்ட சீன மொழியையும் கற்றுக் கொள்வார்களா? எழுத்துகளின் எண்ணிக்கையைப் பார்த்து மலைத்துப் போக மாட்டார்களா? ஒரு மொழியைக் கற்க வேண்டுமானால், அம்மொழியின் எழுத்துகளை மட்டும் கற்றுக் கொண்டால் போதுமா? இலக்கண இலக்கியங் களையும் கற்க வேண்டுமல்லவா? பெரும் முயற்சியின்றி எவ்வாறு மொழிகளைக் கற்க முடியும்? கணக்கு, மருத்துவம், கணினி, அறிவியல் போன்ற பாடங்களைப் படிக்கின்ற போது எவ்வளவோ புதிய சொற்களையும், புதிய சிக்கலான குறியீடுகளையும், சூத்திரங்களையும், வரைபடங்களையும் கற்க வேண்டியுள்ளது. தொல்லையானது என்று ஒதுக்கி விட முடியுமா? மாந்த வாழ்க்கையில் செய்கின்ற ஒவ்வொரு தொழிலும் மிக மிகக் கடினமானது. அதற்காக அத்தொழில்களைக் கைவிட முடியுமா? உயிரை வளர்க்கின்ற வேளாண்மை, மிக மிகக் கடினமானது. வரப்பு வெட்டுவது, உழுவது, விதை விதைப்பது, நீர் பாய்ச்சுவது, நாற்றைப் பிடுங்குவது, நடுவது, பூச்சி மருந்து அடிப்பது, உரமிடுவது, களை பறிப்பது, அறுவடை செய்வது, கதிர் அடிப்பது, தூற்றுவது, விளைச்சலை வீட்டிற்கு எடுத்து வருவது அனைத்தும் கடினமே. வேளாளன் இக்கடின உழைப்பைக் கொடுக்க அஞ்சினால் எல்லாரும் சாக வேண்டியதுதான். ஆகவே, கடினமானது என்று

எதையும் தள்ளிவிடவும் முடியாது; ஒதுக்கி விடவும் முடியாது. கடினமான உழைப்பிற்கு நமது குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

நமது மாந்த மூளையின் பெரும் பகுதி பயன்படுத்தப் படுவதில்லையாம். ஐந்து விழுக்காடு மூளையைக் கூட நாம் பயன்படுத்துவதில்லையாம். முனைவர். ஐன்சுடீன் என்ற அறிவியல் அறிஞர் ஐந்து விழுக்காடு மூளையை மட்டுமே பயன்படுத்தி மிகச் சிறந்த அறிவியல் அறிஞரானார் என்று வரலாறு கூறுகிறது. ஆகவே மூளைக்கு எவ்வளவு வேலை வேண்டுமானாலும் கொடுக்கலாம். அதனால் மூளையின் வளர்ச்சி குன்றாது, வளரும். ஆகவே தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ் எழுத்துகள் சுமையே அல்ல. ஆகவே எழுத்துச் சீரமைப்பு தேவையும் இல்லை.

நாடு ஆங்கிலக் குடி கேடர்களிடமிருந்து விடுதலை அடைந்ததும் இங்குள்ள குடி கேடர்களிடம் ஆட்சி சிக்கிக் கொண்டது. உலகத்தில் தமிழின அழிவிற்கும், தமிழ் அழிவிற்கும், தமிழ்மொழியைத் தமிழ்நாட்டிலுள்ள குழந்தைகள் படிக்காமல் ஆங்கில மொழியைத் தமிழ்க் குழந்தைகள் கற்பதற்கும் இந்தியப் பேராயக் கட்சி ஆட்சியாளரும், தமிழகத் திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி ஆட்சியாளர்களுமே கரணியராவர். தமிழ்நாட்டில், தமிழில் தொடக்கக் கல்வி இல்லை. மேல்நிலைக் கல்வி இல்லை. பல்கலைக் கல்வி இல்லை. அறிவியல் கல்வி இல்லை, மருத்துவக் கல்வி, சட்டக் கல்வி, ஆய்வுக் கல்வி முதலிய கல்விகள் தமிழ் மாணாக்கர்களுக்கு அளிக்கப்படவில்லை. தமிழ்த்துறைகளைக் கற்றவர்களுக்குத் தமிழ்நாட்டில் வேலை வாய்ப்புத் தரப்படவில்லை. தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி நடைபெறாததால், தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்களே தமிழைப் புறக்கணிக் கின்றார்கள். தமிழ்மொழி ஒரு பயனற்ற மொழி என்று ஒதுக்கிவிட்டு ஆங்கில மொழியில் சிறார்நிலைக் கல்வி முதல் மேற்கல்வி வரை பெரும் கடன் கொண்டு படிக்க வைக்கின்றார்கள். ஆகவே, பொருள் ஈட்டித் தராத மொழி எழுத்துகளே இல்லாத செவிமொழியாக இருந்தாலும் காதால் கேட்கவும் மாட்டார்கள்.

ஆங்கில மொழி

ஆங்கில மொழி இருபத்தாறு ஒலிப்புக்களையும், 104 வரி வடிவங்களையும் கொண்டது. ஆங்கில மொழியில் உயிர் எழுத்துகள் ஐந்து மட்டுமே உண்டு. உயிர்மெய் ஒலிப்புக்கான எழுத்துகள் இல்லை. ஆங்கிலம் ஒரு முழுக் கலப்பு மொழியாகும். ஆகவே 26 ஒலிப்புக்களையும், 104 வரி வடிவங்களையும் கற்றுக் கொண்ட பிறகும், அம்மொழியைப் படிக்க இயலாது. ஒவ்வொரு சொல்லிற்கும் பலுக்கல் கற்கவேண்டும்.

இது ஒரு பதினான்காம் நூற்றாண்டு மொழி; இருநூறு ஆண்டுகள் நம்மை அடக்கி ஆண்ட மொழி; மருது பாண்டியர்கள், தீரன் சின்னமலை போன்ற நம் அரசர்களைத் தூக்கில் தொங்கவிட்ட மொழி; விடுதலை மறவர் பகவத் சிங்கைத் தூக்கில் தொங்கவிட்ட மொழி; தேசத் தந்தை காந்தியடிகளின் பல்லை உடைத்துச் சிறை வைத்த மொழி; ஆயிரமாயிரம் விடுதலை மறவர்களைக் கொன்று குவித்த மொழி; ஆயிரமாயிரம் விடுதலை மறவர்களைச் சிறையில் தள்ளிக் கொடுமைப்படுத்திய மொழி; நம்மைச் சுரண்டி வறுமையில் தள்ளிய மொழி; மாந்த உயிரினத்திற்கே பகையான நுகர்வுப் பொருள்களை நம்மிடையே புகுத்திச் சுரண்டிய மொழி; நம்மையெல்லாம் நோயாளியராக்கிய மொழி; நமது பண்பாட்டை அழித்துக் கொண்டிருக்கும் மொழி; நமது தமிழ் மொழியின் உரிமையைப் பறித்துக் கொண்டிருக்கும் மொழி; தமிழர்களை உலகெங்கும் கூலிகளாகக் கொண்டு சென்ற மொழி; இலங்கையில் தமிழர்களின் மண்ணைச் சிங்களவனுக்குப் பிடுங்கிக் கொடுத்த மொழி; தமிழர்கள் தங்கள் தாய்மண்ணில் கொலை செய்யப்படுவதற்குக் கரணியமான மொழி; தமிழர்களை நாடற்றவர்களாக, வீடற்றவர்களாக ஆக்கிய மொழி; இலங்கைத் தமிழர்களை இலங்கைத் தாயகத்திலிருந்து சிங்களவர்கள் உலகெங்கும் விரட்டியடிப்பதற்குக் கரணியமான மொழி; கொலைகார மொழி; கொள்ளைக்கார மொழி; நமக்குப் பகையான மொழி; நமது சுற்றுச்சூழலுக்கு மாறுபட்ட மொழி; இன்றைய உலகச் சிக்கலுக்கெல்லாம் கரணியமான மொழி; இத்தகைய ஒரு மொழியை நமது குழந்தைகளுக்கு மூன்று அகவையிலேயே கற்பித்துக்

கொண்டிருக்கின்றோம். நமக்கு வெட்கமும் இல்லை; மான உணர்ச்சியும் இல்லை; நம்முடைய மொழியை உயர்த்தும் திறமையும் இல்லை; ஆங்கிலேயனுக்கு அன்று அடிமைகளாக இருந்தோம்; இன்று அவனுடைய மொழிக்கு அடிமைகளாகிச் சீரழிகின்றோம்.

ஆங்கிலத்தை நமது குழந்தைகளின் பிஞ்சு மண்டையில் திணிப்பது ஏன்?

ஆங்கிலேயக் குடியேற்ற ஆட்சியாளர்கள் 1947–இல் விரட்டப்பட்ட பிறகு ஆங்கில மொழியும் விரட்டப்பட்டிருக்க வேண்டும். ஆங்கிலேயன் இந்தியாவை விட்டுச்சென்ற பிறகு ஆட்சிக்கு வந்த பேராயக் கட்சிக்காரர்கள் அனைவரும் வரலாற்றை மறந்து ஆங்கில அடிமைகளாகவே இருக்கின்றனர். இந்திய அரசியல் சட்டமும், கொலைகார, கொள்ளைக்கார, ஆங்கில ஆட்சியாளரின் சட்டத்தைப் பின்பற்றியே எழுதப்பட்டது. அதனால் ஆங்கிலேயன் இந்தியப் பழங்குடி மக்களை அடிமைப்படுத்தி ஆட்சி செய்தது போலப் பேராயக் கட்சியை அமைத்துக் கொண்டு சுரண்டல் கட்சி ஆட்சி நடத்துகின்றனர்.

இந்தியப் பழங்குடியினரின் மொழி, பண்பாடு இவற்றை வளர்ப்பதற்கு எவ்வித முயற்சியும் செய்யாமல், அடிமை மொழியாகிய ஆங்கிலத்தையே அரசியல் மொழியாகவும், பிற அனைத்துத் துறை மொழியாகவும் ஆக்கிக்கொண்டு இந்தியப் பழங்குடியினர் முன்னேற முடியாமல் தடுக்கின்றனர். ஆகவே வறுமையில் வாடுகின்ற தொல் குடியினர் தங்களின் வறுமையைப் போக்கிக் கொள்ள ஆங்கில மொழியில் தங்கள் குழந்தைகளைக் கடன் பெற்றுப் படிக்க வைக்கின்ற இழிவான நிலை ஏற்பட்டுள்ளது. குழந்தைகள் மறுத்தாலும் கட்டாயப்படுத்திப் படிக்க வைக்கின்றனர். ஆகவே ஆங்கில மொழி 26 ஒலிப்புகளை உடைய மொழி என்பதால் நமது குழந்தைகளை நாம் படிக்கவைக்கவில்லை. பணத் தேவையை நிறைவு செய்து கொள்ளவே படிக்க வைக்கின்றோம்.

தமிழ்நாட்டில் தமிழ் மொழியின் நிலை என்ன?

தமிழ்மொழி முத்தமிழ் என்று பேசப்படுகின்றது. இயல், இசை, நாடகம் என்று விரித்துரைக்கப்படுகின்றது. இதுவே உலகத்தில் தமிழ்மொழிக்கு உள்ள பெருமை என்கின்றனர். ஆகவே இயல்,

இசை, நாடகங்களை வளர்த்தால் தமிழ்மொழி பெருமை அடையும்; வளரும் என்று தமிழர்கள் நம்பினர். கலைஞர்களையும், நடிகர்களையும், நடனமாடிகளையும், திரைப்படத்துறையினரையும் போற்றினர்; வளர்த்தனர். அரசியலிலும் இவர்களை நுழையவிட்டனர். தமிழக ஆட்சி, கலைஞர், நடிகர், நடிகை கைகளுக்குப் போயிற்று; திரைப்படத்துறை வளர்ந்தது. இத்துறையைச் சார்ந்தோரிடம் செல்வம் குவிந்தது. இவர்கள் பட்டங்கள், பரிசுகள் பெற்று நாட்டின் உயர்ந்த குடிமக்களாயினர். தமிழர்கள் ஏழைகளாகவும் வறியவர்களாகவும் ஆக்கப்பட்டனர். இரண்டாம் நிலை மக்களாகவும் ஆக்கப்பட்டனர். நடிகர்களுக்கும், கலைஞர்களுக்கும் சுவைஞர் மன்றங்களை அமைக்கச் செய்து தங்களுக்கு அடிமைகளாகத் தமிழர்களை ஆக்கினர். திரைப்படத்துறையினரின் சுரண்டலுக்குத் தமிழர்கள் ஆளாயினர். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று பேசிக் கொண்டு எங்கும் திரைப்படம், எதிலும் திரைப்படம் என்று திரைப்படத்தைப் புகுத்தினர். நடிகர்களுக்கும், கலைஞர்களுக்கும், நடனக்காரர்களுக்கும் வாரி வாரி வழங்கிய தமிழர்கள் கடை ஏழு வள்ளல்கள் வழியில் வந்த தமிழர்கள், சேர சோழ பாண்டிய மரபினில் பிறந்த மறக்குடித் தமிழர்கள் நடிகர்களிடமும், கலைஞர்களிடமும், திரைப்படத்துறையினரிடமும் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். எப்போதும் தங்கள் பிடியிலேயே தமிழர்கள் இருக்க வேண்டும் என்று ஆட்சிக்கு வருகின்றவர்கள் எண்ணுகிறார்கள். அதற்கான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுகின்றார்கள். ஆங்கிலப் பகை மொழியை அரசியல் மொழியாகவும், அனைத்துத் துறை மொழியாகவும், வணிக மொழியாகவும் ஆக்கிக் கொண்டு தமிழகத்தை ஆளுகின்றனர். தமிழ் மொழியை மக்கள் மொழியாக ஆக்க ஆட்சியாளர்கள் விரும்பவில்லை. தொடக்கக்கல்வி மொழியாகப், பல்கலைக்கழக மொழியாக, ஆய்வு மொழியாகச், சட்ட மொழியாக, வழிபாட்டு மொழியாக, அரசியல் மொழியாக, வணிக மொழியாகத் தமிழ் மொழியை வளர்க்க 43 ஆண்டுக் கால ஆட்சியில் எந்த முயற்சியையும் தி.மு.க., அ.தி.மு.க., ஆட்சியாளர்கள் இன்றுவரை மேற்கொள்ளவில்லை. ஆகவே, தங்களைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து காத்துக் கொண்டு உயிர் வாழவே தமிழ்க் குழந்தைகள் ஆங்கிலம் கற்கின்றனர்; முயன்று கற்கின்றனர்; தொல்லைப் பட்டுக் கற்கின்றனர்; இயற்கைக்கு மாறாகக்

கற்கின்றனர்; அழுது கொண்டு கற்கின்றனர்; கடன் பெற்றுக் கற்கின்றனர்.

தமிழ் மொழியின் எழுத்துகள்

தமிழில் அடிப்படை எழுத்துகள். உயிர் 12, மெய் 18 ஆக எழுத்துகள் 30 ஆகும். கருவி எழுத்து என்ற முப்புள்ளி எழுத்தையும் சேர்த்தால் 31 ஆகும். உயிர்மெய்க் கூட்டொலிப்புகள் 216 ஆகும். இந்திய மொழிகள் தமிழ்மொழியை அப்படியே பின்பற்றி வளர்ந்துள்ளன. தமிழ் மொழியில் உயிர்மெய்க் கூட்டொலிகள் இருப்பதால் பலுக்கலுக்கு மிக மிக எளிமையானது; கற்றுக் கொள்வதற்கும் மிகமிக எளிமையானது. தமிழ் எழுத்துகளைக் கற்றுக்கொண்டால் தமிழ் இலக்கணங்களையும், இலக்கியங் களையும் எளிமையாகக் கற்றுக் கொள்ள முடியும். உயிர்மெய்க் கூட்டொலிகளின் எழுத்தமைப்பும் உயிர் எழுத்துகளைச் சார்ந்தே அமைக்கப்பட்டுள்ளன.

தமிழில் தனி எழுத்துகள் என்றால் முன்பு கூறியது போல 31 ஆகும். உயிர்மெய் எழுத்துக் குறியீடுகள் ஆகாரத்திற்கு ஒன்று; இகரத்திற்கு ஒன்று; ஈகாரத்திற்கு ஒன்று; உகரத்திற்கு மூன்று; ஊகாரத்திற்கு மூன்று; எகரத்திற்கு ஒன்று; ஏகாரத்திற்கு ஒன்று; ஐகாரத்திற்கு ஒன்று ஆக 12 குறியீடுகளே ஆகும். ஆக மொத்த எழுத்துகள் என்றால் 43 எழுத்துகளாகக் கொள்ளலாம். இகர, ஈகாரக் குறியீடுகள் மெய் எழுத்துகளின் மேல் பகுதிகளைச் சேர்த்தும், உகர, ஊகாரக் குறியீடுகள் மெய் எழுத்துகளின் கீழ்ப்பகுதிகளைச் சேர்த்தும் கூட்டெழுத்துகளாக எழுதப்படுகின்றன. உகர, ஊகாரக் கூட்டு மெய் எழுத்துகள் வடிவமைக்கப்படக் கையாண்டுள்ள நம் முன்னோர்களின் அறிவுத்திறன் வியந்து பாராட்டக் கூடியதாக உள்ளது. ஒவ்வொரு மெய்யெழுத்தும் சிதைந்து விடாமல் அவ்வெழுத்துக்களின் வடிவங்களுக்கு ஏற்ப வடிவமைத்துள்ளனர். ஆகவே இகர, ஈகார, உகர, ஊகார எழுத்துகள் அனைத்தும் தனித்தனி எழுத்துகள் ஆகா.

அடிப்படை எழுத்துகளைத் தமிழ் கற்போருக்குக் கற்றுத் தந்த பிறகு உயிர்மெய் ஒலிக்குறியீடு பன்னிரண்டையும் எவ்வாறு மெய்யெழுத்துகளில் இணைப்பது என்பதைக் கற்றுக்கொடுத்தால் போதுமானது. தமிழ் எழுத்துகளை எழுதும் நுணுக்கத்தை

எளிதாகக் குழந்தைகள் அறிந்து கொள்வர். தமிழ்மொழி சேர, சோழ, பாண்டிய நாடுகளில் பேச்சு மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் பல்துறை மொழியாகவும் இருந்தது. முடியுடை மூவேந்தர்களாலும், தமிழ்ப் புலவர்களாலும் வளர்க்கப்பட்டது. ஆகவே தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரசும், தமிழ்ப் புலவர்களும், பல்துறை அறிஞர்களும் துணை நின்றால்தான் ஆங்கில மொழியைப் போலத் தமிழை வளர்த்தெடுக்க முடியும்.

வா.செ.குழந்தைசாமியின் தமிழ் எழுத்துச் சீரமைப்பு

இகர, ஈகார, உகர, ஊகார உயிர்மெய்க் கூட்டெழுத்துகளைத் தனி எழுத்துகள் என்று தவறாகப் புரிந்துகொண்டு தமிழ் எழுத்துச் சீரமைப்பைத் தொடங்குகிறார். திருவாளர் வா.செ.குழந்தைசாமியின் சீரமைப்புக் குறியீடுகள் 39 என்கின்றனர். இப்போது நடைமுறையில் தமிழிலுள்ள ஒலிக்குறியீடுகள் 43 மட்டுமே. நான்கு குறியீடுகளைக் குறைப்பதற்காக வரலாற்றிற்கு முந்தைய முதல் தமிழ் மொழியின் வரிவடிங்களில் மாற்றம் செய்ய வேண்டியதில்லை. இவருடைய சீரமைப்பு இகரம் முதல் ஈகாரம் வரையிலுள்ள உயிர்மெய்க் கூட்டொலிகளின் கூட்டு வரி வடிவத்தை இரண்டெழுத்துகளாக ஆக்குவதாகும். இதனால் தமிழுக்கு ஒரு நன்மையும் இல்லை. ஆகவே தமிழில் எழுத்துச் சீரமைப்பு எங்கும், எக்காலத்தும் தேவையில்லை. எழுத்துச் சீரமைப்பு தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி என்கிற பெருமையை அழித்துவிடும்.

ஆகவே வா.செ. குழந்தைசாமியின் எழுத்துச் சீரமைப்பு தமிழர்களின் முன்னேற்றத்திற்கும் உதவாது. தமிழ் மொழியையும் முன்னேற்ற உதவாது. மாறாகத் தமிழர்களையும், தமிழ்மொழியின் வரலாற்றையும் சிறுமைப்படுத்திவிடும்.

இனப் பாதுகாப்பிற்கும், தமிழ்ப் பண்பாட்டை நிலை நிறுத்தவும், விதை போலும் – விழுது போலும் இருக்கக்கூடியது தமிழ்மொழியின் பயன்பாடே ஆகும். மாறாத பொருள் எதுவும் வளர்வதில்லை. ஆகவே ஆங்கில மொழிபோல் பயன் மொழியாக மாறாத தமிழ்மொழி தமிழர்களிடத்தில் நிலைக்காது. தலைமுறை

யினரின் சுமையைக் குறைக்க வேண்டும் என்றால், ஆங்கிலப் பகை மொழியை நமது குழந்தைகளின் மூளையில் திணிப்பது தடுக்கப்பட்டு, தாய்த்தமிழ் மொழிவழி கல்வி கொடுக்கப்படுதல் வேண்டும். ஆகவே தாய்த் தமிழ்மொழியை ஆங்கிலம் போல் அனைத்துத்துறை மொழியாக உருவாக்கும் பணியில் வா.செ. குழந்தைசாமி ஈடுபடுதல் வேண்டும்.

அல்லாமல் மீண்டும், மீண்டும் தமிழ் எழுத்துச் சீரமைப்புப் பற்றிப் பேசினாலும் எழுதினாலும் தமிழ்ப் பகைவராகவே தமிழர்களால் கருதப்படுவர்.

தி.மு.க. அரசிற்கு வேண்டுகோள்

கோவையில் தி.மு.க. அரசு சார்பில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு ஒன்றை நடத்த முனைப்புக் காட்டி வருகின்றது. உலக முதல் செம்மொழியாகிய தமிழின் பெருமையை உலகத் தமிழர்கள் அனைவரும் அறிவர். உலகத்தில் தமிழ் கற்ற பிற நாட்டு மொழியியலாளர் அனைவரும் அறிவர். இனிமேல் தமிழின் பண்டைய சிறப்பைப் பறைசாற்ற வேண்டியதில்லை. சேர, சோழ, பாண்டியர் காலத்தில் மக்களின் பயன்மொழியாகவும், ஆட்சி மொழியாகவும், பேச்சு மொழியாகவும் இருந்த தமிழ் இன்று தன் உரிமையை இழந்திருக்கின்றது. தமிழரும் தம் பெருமையை இழந்து, பண்பாட்டை இழந்து, ஆங்கில மொழிக்கு அடிமைப்பட்டுள்ளனர். ஆகவே, ஆங்கிலத்தைப் போல எல்லாத்துறைகளிலும் தாய்மொழியை வளர்த்தெடுக்க வேண்டும். வணிக மொழியாகவும், கோயில்களில் வழிபாட்டு மொழியாகவும், ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவும் தமிழ்மொழி ஆக்கப்படுதல் வேண்டும். அதற்கான திட்டங்களைத் தி.மு.க. தீட்டிச் செயல்பட வேண்டும். கோவை மாநாட்டைக் கைவிட வேண்டும். திரைப்படம் போலக் காட்சியைக் காட்டி, ஏமாற்றும் வேலையில் இனியும் தி.மு.க. ஈடுபடக்கூடாது. தமிழர்களின் வரிப்பணத்தில் நடத்தப்படுகின்ற அரசு செலவு செய்யும் ஒவ்வொரு காசும், தமிழ்மொழியை ஆங்கிலம் போல் பயன்பாட்டு மொழியாக ஆக்குவதற்கும், தமிழரின் வாழ்வை வளப்படுத்துவதற்கும் செலவு செய்தல் வேண்டும்.

நாள்: தி. ஆ. 2041 கும்பம் 28 (12.03.2010)

14. வடிவ மாற்றம்

[இரா. இளங்குமரன்]

தமிழ்மொழியில் இதுகால் பரபரப்பாகவும் – கிளர்ச்சியாகவும் – ஏன் வரிந்து கட்டிக் கொண்டும் நடந்துவரும் ஆய்வுகளுள் தலைப்பட்டது தமிழ் 'எழுத்து வடிவம்' பற்றியது என்பதை நாடறியும்; இந்நாடு மட்டுமன்றி, ஆறாம் உலகத்தமிழ் மாநாடும் – மலேசிய நாடும் – அறியும்.

மாறாத – மாறக் கூடாத – ஒலிவடிவுக்கு விரிவான இலக்கணம் கூறிய தொல்காப்பியர், வரிவடிவுக்கு இலக்கணம் கூறினார் அல்லர். அது மாறும் இயல்பினது என்பதனை அவர் அறிவார். மாறக் கூடாததற்கே இலக்கணம் கூற வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டு நூல் வகுத்தார். அதனால், எழுத்தின் வரிவடிவம் பற்றிக் கூறினார் அல்லர். **வடிவச் சிக்கல் நேருமென எண்ணிய ஓரீரிடங்களில் மட்டுமே வடிவம் பற்றி உரைத்தார்.**

“தமிழ் எழுத்து வடிவம் என்ன மாறாததா” “நாங்கள் இப்படி மாற்றினால் என்ன?” என மாற்றாளர் கூறுகின்றனர். தமிழ் வடிவம் மாறி மாறி வந்ததுதான்! அதில் மறுப்பில்லை! அவ்வாறே, **மாறியதேயன்றி, மாற்றியது இல்லை என்பதை மறுக்க முடியுமா?**

எவரேனும் திட்டமிட்டு இப்படி மாற்ற வேண்டும் என ஒரு நாளில் ஒரு சட்டத்தால் மாற்றினாரா? ஒரு வீரமாமுனிவர் ஓரீரெழுத்துகளை மாற்றி அமைத்தார்; அவை அச்சு வார்ப்புக் கால வாய்ப்பால் நிலைபெற்றன என்பதை அன்றி எவரேனும் திட்டமிட்டு எழுத்து மாற்றம் செய்தனரா?

மாறுதல் இயற்கை! மாற்றுதல் செயற்கை! 'மாறுதல் என்பதே தெரியாமல்' வழிவழியாக நடைமுறையில் வருவது மாறுதல். மாற்றுதல் என்பது தன் முனைப்பின் வெளிப்பாடு!

'அ' என்னும் எழுத்தின் 'வடிவம்' சங்கக் காலத்தில் இருந்தவாறு இன்று இல்லை. சங்கக் கால 'அ' வடிவத்தைக் கண்டால் நமக்கு எப்படிப் புதுமையாக இருக்குமோ, அதுபோலவே சங்கத்தார் ஒருவர் இன்று வர நேர்ந்தால் அவர்க்கு நாம் எழுதும் 'அ' புதுமையாக இருக்கும். இந்தப் புதுமை வியப்பை அல்லது திகைப்பை இல்லாமல் செய்வது வழிவழியாகத் தன்னியல்பில் எழுத்து வடிவம் மாறிவந்த வகையேயாம்.

தட்டச்சுக் கருவி, கணினி ஆகியவற்றுக்குத் தமிழ் எழுத்து எண்ணிக்கைச் சுருக்கம் வேண்டும் என்பதும், வடிவமைப்பிலும் மாற்றம் வேண்டும் என்பதும் வடிவமாற்றர் சுட்டுவன.

தமிழ் எழுத்தினும் மிக்க எழுத்துகளையுடைய மொழிகளில் தட்டச்சுப் பொறி பயன்படுத்தப்பட வில்லையா? ஒரு மடங்கு இரு மடங்கு அல்லாமல், பன்மடங்கு எழுத்துகளையுடைய மொழிகளில் பயன்படுத்தப்பட வில்லையா? கருவிக்காக – மாறி மாறி அமைத்து காலந்தோறும் இடந்தோறும் மாறுபடும் – கருவிக்காக, மொழி வடிவை – மாற்றக் கூடாத மொழி வடிவை – மாற்ற வேண்டுமா? உடலுக்காகச் சட்டையா? சட்டைக்காக உடலா? ஒலி வடிவையே வரிவடிவாக்க வல்ல கருவி வாராதா என்ன? நிலையாப் பொறிக்கு இவ்வளவு நிலைப்புத் திட்டமா?

ஆங்கிலத்தின் எழுத்து 26 என்பதைக் காட்டி அச்சுருக்கமே சிறப்பாகப் புகழ்வார். அதன் பெரிய எழுத்து, சின்ன எழுத்து என்னும் எண்ணிக்கையை எண்ணாததென்ன? உயிரும் மெய்யும் தனித்தனியாம் அவ்வெழுத்து முறை தமிழுக்கு வந்தால் ஒரு மடங்கு எழுத்து இருமடங்கு எழுத்தாம் என்பதை எண்ணாத தென்ன? எழுத்துக் கூட்டற்கும் சொல்லாக்கத்திற்கும் ஒட்டாத ஒட்டாக அமையும் இடர்ப்பாட்டை எண்ணியும் பாராததென்ன? எழுத்தைக் கூட்டிச் சொல்லும் சொல் முறையாலேயே சொல்லாகும்

தமிழின் இயற்கையையும், எழுத்து வேறு சொல் வேறாக அமையும் அதன் செயற்கையையும் அறிவார் இரு மொழிக்கும் ஒப்ப ஒரு விதி வகுக்க முனைவரோ?

தமிழெழுத்து ஒத்த உயரத்தில் அமையாமல் சில எழுத்துகள் மேலே போகின்றமையும் கீழே போகின்றமையும் மேலும் கீழும் போகின்றமையும் (மி; ழ; ழி) காட்டி, இதனால் வரி இடைவெளி மிகுந்து தாள் வீணாகின்றது என்கின்றனர். இக்குறை எம்மொழி எழுத்துக்கில்லை? h; g; f; இவை மேன்மிகை, கீழ்மிகை, இருமைமிகை இல்லனவா?

'தமிழிசை பாடு' என்றால், 'இசைக்கு மொழி இல்லை' என்பவர், அதனைப் பிற மொழிக்குக் கருதிச் சொல்வதில்லாதது போல், தமிழ் வடிவு காண்பார் பிற மொழி வடிவுக்குக் காண்பதில்லாமை ஏன்?

ஒரு நூற்றுவர்க்கு மேலேயும் எழுத்து மாற்றர், கட்டுரையும் நூலுமாக வரைந்துளர்! கருத்துரையர் நிலையில் இருப்பவர் இன்னும் பலர்! இவர்களெல்லாம் அவரவர் வடிவில் அவரவர் காதல் கொண்டுரைப்பினும் ஒரே கருத்தில் மட்டும் ஒத்தாராய் – ஓரினத்தாராய் – உளர்! **எழுத்து மாற்றம் விரும்பாதவர், "பழமையர்! அறிவியல் வளர்ச்சி நோக்கிலர்! குறும் பார்வையர்"** என்பதே அவ்வொத்த ஒரு நோக்கு! வடிவ மாற்றம் வேண்டா என்றவர்கள் – என்பவர்கள் – ஓரிருவரை எண்ணிப் பார்த்தாலும் அவர்கள் செய்த தமிழ்த்தொண்டின் எள்முனை அளவுதானும் செய்யாதவர்களும், இப்படிச் செருக்கிச் செம்மாப்பதை நினைத்தால் அது நகை வகையுள் தலைமை வாய்ந்ததாம்! நிற்க.

இவ்வடிவ மாற்ற மயக்கில் ஈடுபட்டவர்களுள் எத்தகைய அரிய பெருமக்களும் உளர்! அதுதான் வியப்பினும் வியப்பு!

அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் – பேரறிஞர் – உலகளாவிய புகழ் வாய்ந்த பொறியர் – மாசு மறுவற்ற தமிழ்ப் பற்றாளர் – பாவன்மையும் நாவன்மையும் ஒருங்கமைந்தவர் – செயல்வீறு மிக்கவர் திரு. வா.செ.குழந்தைசாமி! அவர் வடிவ

மாற்றத்தில் காட்டும் அக்கறையை – ஆர்வத்தை – ஆய்வை அறியவரும் போதெல்லாம் மனம் நைகின்றது! ஏன்? எத்தகைய மொழிப்பயன் மிக்க வாழ்வு இவ்வாறு வழிமாறிச் செல்கின்றதே என்று!

அவர் இருக்கை எண்மையானதா? எவர்க்கும் வாய்ப்பதா? வாய்த்தவர்க்கெல்லாம் அவர்தம் தமிழூற்றம் அமையுமா? அவர் இந்த வாய்ப்பை என்ன செய்யப் பயன்படுத்த வேண்டும்? "இவர் பிறப்பால் – இவர் பதவித் திறத்தால் – இச்செயற்கரிய செயலைச் செய்தார்" என்பதையன்றோ காலம் காலமாக நாடு நினைக்குமாறு நிலை நாட்ட வேண்டும்!

எத்தனை எத்தனை ஆயிரம்பேர் நினைத்தாலும் ஆர்வமுற்றாலும் – வாய்க்காத வாய்ப்பு வாய்த்த ஒருவர் 'பொறியியற் கல்வி – தொழிற்கல்வி' ஆகியவற்றை முழுமையாகத் தமிழிலேயே பயிற்றுதற்குரிய முழுதுறு முயற்சியைச் செய்தால் – முடித்துக் காட்டினால் – செயற்கரிய செய்த செம்மலாகத் திகழ்வார்! வழி வழித் தமிழர் வழிபட்டு வணங்கவும் போற்றி வாழ்த்தவும் தக்க தலைத் தமிழ் மைந்தரென்னும் சீர்மைக் குரியவராவார்! வள்ளுவர் அன்றே சொன்னார்! சொல் சொல்லாக ஆய்ந்து சொன்னார்:

"எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்"

என்று. இது, ஏனோ தானோ என வாழ்வார்க்கு உரைத்த உரையில்லை! திரு. குழந்தைசாமி போல்வார்க்கு உரைத்த உரை! காலம் அறிந்து கடனாற்ற உரைத்த உரை!

பா எழுதவா? பலர் உண்டு! பல்லாயிரர் உண்டு!

கட்டுரை எழுதவா? பல்ல பலர் உண்டு! இத்தகைய, தொண்டில் ஈடுபட்டவர், ஆயிரத்தோடு ஒருவர்! ஈராயிரத்தோடு ஒருவர்! அவ்வளவே! ஆனால், பயிற்று மொழியாகத் தமிழைப் பல்கலைக்கழக அளவுக்கு உயர்த்துவார் ஒருவர் முன் வந்தால்

அவர் ‘ஒரோ ஒருவராக! ஒப்பிலா ஒருவ’ராகத் திகழ்வார். அந்தப் பெருமையை எய்தும் வாய்ப்பு இயற்கையாய் வாய்த்துள்ள ஒருவரிடம் அதனை எதிர் நோக்குதல் முறைமையானதுதானே!

ஒவ்வொரு பிறவிக்கும் நோக்குண்டு; அந்நோக்கறிந்து பிறர் செய்தற்கரிய செயலைத் தம் பிறப்பால் உலகம் எய்தி என்றும் நலமுறச் செய்வாரே பிறவி நோக்கறிந்து கடனாற்றிய பெருமையர்! இது உலக வரலாற்றுண்மை! அவ்வுண்மை ஏன் இங்கும் நிலைபெறக் கூடாது?

செந்தமிழ்ச் செல்வி
தி. ஆ. உ0கக௯ (சூன் 1988)
சிலம்பு ௬உ (62)
பரல் க0

15. இது, ஒரு குண்டா? துண்டா?

இரா. இளங்குமரன்

“என்ன எழுதப் பழகுகிறீர்களா?”

“இல்லை; தமிழ் எழுத்து வடிவ மாற்றம் பற்றி வரைகிறேன்”

“என்ன பதினாறு கவனகத்தில் (சோடசாவதானத்தில்) ‘இலாடச்சங்கிலி’ போடுகிறீர்களா?”

“இல்லை; தமிழ் வரிவடிவம் அமைக்கிறேன்”

“புள்ளியும் வரியும் கீற்றும் சுழியும் போட்டுப் போட்டு மாற்றுகிறீர்களே என்ன? கோலம் போடுகிறீர்களா?”

“இல்லை; தமிழ் எழுத்தை வடிவமைக்கிறேன்”

“ஆய்வு நூல் எழுதுகிறீர்களா? முனைவர் பட்டத்திற் காகவா?”

“இல்லை, இல்லை; தமிழ் எழுத்து வடிவத்தை ஒழுங்குறுத்த வேண்டிப் பாடுபடுகிறேன்; அந்த ஆய்வுதான் இது!”

இப்படி எத்தனை எத்தனை உரையாடல் நிலைகள் தமிழுக்கு! ஒரு கட்டுரையா? இரு கட்டுரையா? ஒரு நூலா? இரு நூலா? நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள்! நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள். பெரும் பெரும் மேதையர் மட்டுமா? எழுதத் தொடங்குவார் முதல், உள்ள எழுத்து வரிசையைத் தாமும் ஒழுங்குற அறியார் வரையும்! தமிழ்ப் புலவர்கள் தாம் விதிவிலக்கா! அவருள் சிலரும் ஒத்திசைப்பு! ஒத்த ஆட்டம் பாட்டம் முழக்கம் முனைப்பு!

புதியதோர் எழுத்துலகம் படைத்துத் தமிழை உய்விக்கத் தலைப்பட்டுள்ள புகழ்த் தொண்டர்கள்! எளிய ஆய்வு – எளிய பொழிவு வேண்டுமா? 'எழுத்து வடிவமாற்றம்' எனப் பெருகிவிட்ட காலநிலை!

"இனித் தமிழ் எழுத்து வடிவ மாற்றம் பற்றிய கருத்தோ, ஆய்வோ தமிழ்நாட்டு அரசுக்கு இல்லை" என அரசே முடிவு கட்டிய பின்னரும், இந்திய மொழிகளிலேயே குறைந்த எண்ணிக்கை எழுத்துகளையுடையது தமிழே எனப் பன்மொழி யாய்வர் தெளிவித்த – தெரிவித்த – பின்னரும், மீண்டும் மீண்டும் வரிவடிவ மாற்றம் – எழுத்துக் குறைப்பு – பற்றிய ஆய்வும் எழுத்தும் முழக்கமும் விட்டபாடில்லை! இந்நிலையில், சைவ சிந்தாந்தக் கழக ஆட்சியாளர் அவர்கள் மிசை (மேசை) மேல் "மின் கணனியுகத்தில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் அவசியந்தானா?" என எட்டுப் பக்க வெளியீடு ஒன்றைக் கண்டேன். அது கனடா நாட்டுத் தமிழர்களால் தரப்பட்ட ஓர் அறிக்கை!

அப்பாலுக்கு அப்பாலாம் தமிழரிடத்தும் இந்'நோய்' பற்றிக் கொண்டதோ என்னும் ஐயமும் அச்சமும் அலைக்க, அதனை எடுத்துப் படித்தேன்! அது ஒரு 'துண்டு' அன்று! 'குண்டு'! தமிழ் எழுத்துக்கு அன்று! தமிழ் வரிவடிவ மாற்றிகளுக்கு!

"மின் கணனித் தமிழ் அச்சமைப்பில் எங்களினால் 1985–1990 ஆம் ஆண்டுக் காலத்தில் கனடாவில் வெளியிடப்பட்டுள்ள தமிழ் ஏடுகள்" ஒரு பட்டியலை எட்டாம் பக்கத்தில் பொறித்துள்ளது. அதில் 33 நூல்கள் இடம் பெற்றுள! பழைய எழுத்து வடிவத்திலேயே அமைக்கப்பட்ட அந்நூல்களில், 'மின்கணனித் தமிழும் சீர்திருத்தமும்' என்பதொரு நூல். புது அகப்பொருள், புதுப் புறப்பொருள், எழுத்துப் போர்ப்பரணி என்பவற்றைப் போன்ற புது வரவுகள்! ஒடிசி, இலியத்து அனைய பெயர்ப்புக் கொடை!

முதற் பக்கத்திலே ஒரு வேண்டுகை: "இலவசப் பிரசுரம். இதைப் பிறருக்கும் காட்டுங்கள். உங்கள் நண்பர்களுக்கும் தயவு செய்து அனுப்பி வைத்துத் தமிழ்மொழி அழிவை எதிர்த்துக் குரல் எழுப்புங்கள்" என்பது!

உணர்ச்சி மிக்க முகப்பு இது! "வடமொழி தமிழில் நஞ்சைக் கலந்துவிட்டது என்று வருந்துகிறோம். அதே வேளை அந்நிய ஆங்கிலமொழியை அரவணைத்துக் கொள்கிறோம். 'ஆங்கிலேயனே வெளியேறு' என்று ஆர்ப்பாட்டமிட்ட நாம் ஆங்கிலத்தை அகற்ற அக்கறை எடாமல் இருக்கிறோம். அதே வேளை தமிழ்ப் பத்திரிகைகளும் நவீனங்களும் ஆங்கிலச் சொற்களைத் தமிழ் மக்களின் இன்னோர் தமிழாக வளர்த்து வருகின்றன.

இந்த நிலையில் இன்னொரு பேரிடியைத் தமிழ் மொழியில் இடித்துள்ளனர். இன்று அதைப்பற்றி எவரும் எதிர்த்துப் போராடுவதாகக் காணோம். ஓர் இடத்தின் பெயரை மாற்ற ஒரு போராட்டம். ஒரு கொத்து அரிசியின் விலை ஏற்றத்தைத் தடுக்க ஒரு வில் வளைப்பு. ஒரு தனி மனிதனுக்கு இழைத்த தவறுக்காகத் தன்மானப் போராட்டம் என்று எத்தனையோ அமர்களையும் சமர்களையும் புரியும் நாம், நமது தமிழ்மொழியின் அழகான எழுத்துகளை அழித்து வருகின்ற அநியாயத்தை மாத்திரம் நியாயப்படுத்தி அரவணைத்துக் கொள்கின்றோமே அதன் மர்மந்தான் என்ன?! என்று இடித்துக் காட்டுகிறது! வாய்மூடி 'வாளா'விருக்கும் தமிழறிஞர்(!)களுக்கு ஒரு சூடு:

"தமிழ் எழுத்துச் சீர்திருத்த விடயமாகப் பத்திரிகைகள் இந்தத் தவறான போக்கைக் கையாள்வதும் அதனைப் பார்த்துத் தமிழறிஞர்கள் வாளாவிருப்பதும் ஒரு தலைக்குனிவான காரியம்" என்கிறது.

எழுத்துச் சீர்திருத்தரை நோக்கி அறைகூவல் விடுகின்றது அவ்வறிக்கை:

"மின் கணனிக்குத், தொலைபேசி எழுதிக்குத், தட்டெழுதிக்கு, அச்சிடற்கு இந்த எழுத்துகள் பெரும் இடையூறாக இருக்கின்றன என்கிறார்களே. இப்படியான முடிவுகள் எப்படியானவர்களாற் செய்யப்பட்டவை? அவர்களுக்கு மேற்போந்த தொழில்நுட்ப அறிவு உண்டா? அப்படியானால் அவர்கள் எவ்வளவு தூரம் முயன்று முடியாத நிலையில் இந்த முடிவை எடுத்தனர்? ஏற்றுக் கொண்டனர்?" என்கிறது அது.

மின் கணனியில் அக்கட்டுரை அச்சாகிய அமைப்புப் பற்றியும் தெளிவாக விளக்குகிறது அறிக்கை!

“இந்தக் கட்டுரை மின்கணனி மூலம் தமிழ் அச்சமைப்புச் செய்யப்பட்டது. அதுவும் கனடாவின் வான்கூவர் நகரில் இருந்து 4000 மைல்களுக்கு அப்பால் உள்ள ரொரன்றோவிற்கு, மோடம் எனும் கருவியை உபயோகித்துத் தமிழில் அனுப்பப்பட்டது. அதுவும் அங்கே அச்சமைக்கும் போதே இங்கு மின்கணனியின் திரையில் தோன்றியது.

தமிழ் எழுத்துகளைப் பாவிக்கும் மின்கணனி இப்போதுள்ள தமிழ் எழுத்துகளையும் வட எழுத்துகளையும் அப்படியே ஓர் ஆங்கிலத் தட்டெழுதியின் எழுத்துக் காய்களில் அடக்கஞ் செய்கிறது. அப்படிச் செய்தும் இன்னும் பல தமிழ் எழுத்துகளை அடக்கப் போதிய இடமுண்டு. இப்படி இருக்கும் போது எழுத்துச் சீர்திருத்தம் செய்ய வேண்டிய அவசியம்தான் என்ன? என்கிறது அது. மேலும்,

“உருமாற்றம் செய்து சீர்திருத்தம் செய்ய சில அரசியல் வாதிகளின் ஆதரவு கொண்ட தமிழ்ப்பேரறிஞர்களும், ஆட்சி வலுக்கொண்ட தாபனங்களும் முயன்று வருவதை நாம் அறிவோம். இவர்களின் முடிவுக்கு ஏற்றவாறு பைந்தமிழ் மொழி எழுத்துகள் மூளியாக்கப்படும் பொழுது, எமது தமிழ்மொழி எழுத்துகள் வேறு ஒரு தேயத்து மொழியின் எழுத்துப் போலவே வேறுபட்டுத் தோன்றும்! இத்தைய அநியாயத்தை நாம் கண்ணாற் கண்டு சகிப்பதா?” என இரங்குகிறது! தமிழ் ஆர்வலர்கள், அறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர்களைத் தனித்தனி விளித்துக், **“காலம் கடந்துவிடவில்லை. காரியப்படுத்தப்பட்ட எழுத்து மாற்றங்கள் மீளப் பெறவும், மேற்கொண்டு எழுத்துச் சீர்திருத்தங்கள் ஏற்படாதிருக்கவும் உங்களின் நியாயப்படுத்தப்பட்ட எதிர்ப்புகளைக் காட்டுங்கள்”** என அறிக்கை நிறைகிறது.

இதுகால் ஏற்பட்டுள்ள வடிவ மாற்றத்தையும் அது ஏற்கவில்லை என்பதை, அறிக்கை அச்சும், குறிப்பும், செய்தியும்

காட்டுகின்றன! இவ்வறிக்கையை நிழல் வெளியீட்டாளர்கள் வெளியிட்டுள்ளனர். இடமும் நாளும் : ரொரன்டோ – கனடா **3.2.1990**

வாய்ச்சொல் வீரர்கள் வழங்கிய அறிக்கை அன்று இது! செய்து காட்டியவர் தரும் செய்தி! நம் வடிவச் சீர்திருத்தர் செவியில் வாங்கிக் கொள்வரா இதனை?

செந்தமிழ்ச் செல்வி
தி. ஆ. உ0உக (சூலை 1990)
சிலம்பு கூசு (64)
பரல் கக (11)

16. மூச்சுக் காற்று (1999)

[இரா. இளங்குமரன்]

“என் அன்னைக்கு மூச்சுத் திணறல்! உடனே உயிர்க் காற்றுச் செலுத்தியாக வேண்டும்” என்று மருத்துவரிடம் கெஞ்சுகிறேன்; மன்றாடுகிறேன்! ஆனால் மருத்துவர், என் உரையைக் காதில் வாங்கிக் கொள்ளாமலேயே, “அன்னையின் மூக்கு ‘சப்பை’யாக உள்ளது; உதடு தடிப்பாக உள்ளது; கை முடங்கி உள்ளது; இவற்றைச் சீர் செய்ய வேண்டும்” என்கிறார். என் அன்னை நிலை என்ன ஆகும்? என் உணர்வும் பின்விளைவும் என்ன என்ன ஆகும்?

இன்று இந்த நிலை மெய்யாக உண்டு என்றால் அது, தமிழ் மொழியை ஆட்சிமொழியாகவும், பயிற்று மொழியாகவும் ஆக்குவதற்குரிய முயற்சியில் தமிழ்ப் பற்றாளர்களும், தமிழ் அறிஞர்களும் முழுமையாக ஈடுபடாமல், தமிழெழுத்துச் சீரமைப்புப் பற்றிப் பேசியும் எழுதியும் வருவதேயாம்!

மூச்சுக்காற்றுப் போன்றது தமிழ் மொழியை ஆட்சி மொழியாகவும் பயிற்றுமொழியாகவும் ஆக்குவது, உடனடியாகச் செய்ய வேண்டியது! இன்று செய்யத் தவறினால், என்றும் ஈடு செய்ய முடியா இழப்பை ஆக்காமல் தீராதது.

“தமிழைத் தன் வேலியாகக் கொண்டது எதுவோ அதற்குப் பெயர் தமிழ்நாடு” என்பதைத், “தண்டமிழ் வேலித் தமிழ்நாட்டகம்” என்று கூறுகிறது பரிபாடல். தமிழை ஒழிய விட்டு விட்டு, அதன் எழுத்துச் சீரமைப்புப் பற்றிப் பேசுவதா உடனடித் தேவை?

‘எதிரதாக் காக்க’ வேண்டுவது எது? வந்த பின் ஆக்க வேண்டுவது எது? இவற்றை அறிந்து கொண்டு கடமை

புரியவில்லை எனில், 'அதிர வருவதோர் நோய்க்கு ஆட்பட்டே தீர வேண்டும்' என்னும் பொய்யா மொழியை அறிந்தவர்கள்தாம், எழுத்துச் சீரமைப்பில் அக்கறை காட்டுபவர்கள்!

இப்பொழுது உடனடித் தேவை, ஒரு சிறு பரப்புடைய – சுருங்கிப் போன – தமிழகத்தின் ஊடே ஊடே ஆங்கிலக் குட்டிக் குட்டித் தீவுகளைப் போட்டி போட்டுக் கொண்டு ஆக்கித், தமிழ் நிலத்தை இந்தியப் படத்தில் இல்லாமல் ஆக்குவதன்று; என்றுமுள தமிழகமாக நிலை பெறுத்தும் கடமையே!

கொலைக் கொடுமைக்குக் கூட எத்தகைய குறிபார்ப்பு – ஒருமித்த நோக்கு! அவ்வொருமித்த செயற்பாட்டை மொழிக் காவற்குச் செலவிட வேண்டும்தானே! கலைக்கடமைக்கு எவ்வளவு ஒருமிப்பு வேண்டும்!

கலைச்சொல் இல்லை, நூல் இல்லை, பயிற்றுவார் இல்லை, பொதுமக்கள், மாணவர் ஆர்வம் இல்லை, அரசுப் பொருள் நிலை இடந்தரவில்லை – இப்படிச் சொல்லியே ஏறத்தாழ எழுபது ஆண்டுகள் பாழாக்கப் பட்டுவிட்டன. இனி, எழுத்துச் சீரமைப்பு என்னும் புதுத்தடையால் எண்பது ஆண்டுகளை வீணடிப்பதா செய்யத்தக்க செம்பணி?

எழுத்துச் சீரமைப்புப் பற்றிப் பேசுவார் நல்ல தமிழ்ப் பற்றாளரே; ஐயமில்லை. அவர்கள் ஆழங்கால் பட்ட தமிழறிஞர்களே; மாற்றுக் கருத்து இல்லை! அவர்கள் தேர்ந்து தெளிந்து காலமெல்லாம் கடமை புரிந்த துறைகளில் எல்லாம் "பாரீர் பைந்தமிழை! எம் துறைப் பயிற்று மொழியும், எம் துறை ஆட்சி மொழியும் எம் தமிழே என ஆக்கிவிட்டோம்; இப்பொழுதும் அத்துறைக்கு வேண்டும் வள நூல்களைப் படைத்துப் பிற மொழியாளர் வியக்கவும், மொழிபெயர்ப்புச் செய்யவுமாம் பணியிலேயே ஆழ்ந்துள்ளோம்." என்னும் மொழி வீறு காட்டினால் அவர்களை அப்பரடிகள் போல, "யாம் வணங்கும் கடவுளாரே!" எனப் பாராட்டுவோம்! ஆனால், "பிளவுபட்ட கூரை பிழைக்காது" என்னும் ஆபிரகாம் லிங்கன் உரைக்குச் சான்றாக அல்லவோ செயல்கள் நிகழ்கின்றன!

தமிழ் நாட்டு அரசு பயிற்று மொழியாக அறிவியலைப், பொறியியலை ஆக்கினால், நடுவண் கல்விக் குழு ஏற்கவில்லை என்றால் துறைவல்ல இவ்வறிஞர்கள், அரசைத் தட்டி எழுப்பி, நடுவண் கல்விக் குழுவுக்குரிய தடையை அன்றோ தகர்த்துப் பயிற்று மொழியாக்கும் ஒருமுகச் செயற்பாடு செய்ய வேண்டும்! “அரசைக் கலைக்கக் கூடாது” என்பதற்கு எத்தனை முழக்கங்கள்? அவ்வாறு, “பயிற்று மொழி ஆவதைத் தடுக்கக் கூடாது” என ஒரு முழக்கம் இல்லாமை ஏன்?

8–2–1934 இல் உசுமானியா பல்கலைக்கழகத் துணை வேந்தர் நவாபு மாடியார் சங்கு பகதூர் நிகழ்த்திய பேருரையின் ஒரு பகுதி:

“எமது தாய் மொழியில் கல்வி வழங்குவம் எனப் பல்கலைக்கழகம் கூறிய பொழுது, பல்வகைத்தான எதிர்ப்புகள் இங்குத் தோன்றின. ‘சிசுக் கொலை’ புரிவோர் சிலர், கழகத்தின் கழுத்தை உடனே முரித்துவிட எண்ணினர். சிலர் சொல் வளம் நிரம்பாத இந்துத்தானி மொழி, புதுக் கருத்துகளைக் கூறமுடியாது தடுமாற்றமுறும் எனவும் அம்மொழியைக் கருவியாகக் கொண்டு கற்பிக்க முயலும் கலைக் கழகமும் உருப்படாது மாய்ந்தொழியும் எனவும் கூறினர். மற்றும் சிலர் ஆங்கில நாட்டிலுள்ள கலைக்கழகங்களின் நன்மதிப்பைப் பெற மாட்டாதென நினைத்தனர். யானோ, இக்கலைக் கழகத்தாரின் புதுக் கொள்கையில் முழு நம்பிக்கை வைத்தேன்... ... ... பத்தாண்டுகள் ஆயின... ... ... கழகந்தோன்றிய காலத்தே பலர் உள்ளத்தும் விளைந்த ஐயப்பாடுகள் யாவும் அகன்று ஒழிந்தன. புதுக்கலைக்கள் எல்லாம் மிக எளிதில் தாய்மொழியில் கற்பிக்கப் படுகின்றன. இக்கழகத்தே தேர்ச்சி பெறுபவர் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் உள்ள கலைக்கழகங்களின் தேர்வுகட்கு எவ்வாற்றானும் தாழவில்லை என மதிக்கப்படுகின்றனர்” என்கிறார்.

1934 இல் சென்னை மாகாணத் தமிழர் மாநாடு நெல்லையில் நிகழ்ந்தது. அதன் தலைவர் **தமிழவேள் உமாமகேசுவரனார்.** அவர் இச்செய்தியை எடுத்துக் காட்டியதுடன், “செயற்கரிய கருமமெனத் தமிழர் கருதும் செயல்களை உசுமானியக்

கலைக்கழகத்தினர் பத்தாண்டுகளில் மிக எளிதில் இயற்றியதன் பொருட்டென்ன? உண்மையான மொழிப்பற்றும் தன்னம்பிக்கையும் எண்ணிய கருமத்தை எவ்வாற்றானும் இயற்றுவோம் என்னும் மனத் திண்மையும் அல்லவா! தமிழன்பர் என மகுடமிட்டுக் கொண்டவரிடத்து இத்தகைய பெற்றிமைகள் காணப் படுகின்றனவா? புதுக் கருத்துகளைப் பேசுதற்குச் சொல்லில்லை எனவும், எழுதுதற்கு எழுத்தில்லை எனவும் பழி தூற்றி அயல் மொழிகட்கு அடிமைகளாய் இருக்கின்றனர்'' என்றார்.

ஒரு திருவிளையாடல் காலம் (64) ஆகியும், தமிழ் நிலை, அதே திருவிளையாடல் நிலையில்தான் உள்ளது.

இப்பொழுது உடனே தமிழுக்கு வேண்டுவது பயிற்று மொழி ஆவதும் ஆட்சி மொழி ஆவதுமே! சுவரை எழுப்புவோம்! பின்னே தேவைப்படும் வண்ணமும் வனப்பும் தீட்டுவோம்!

''எழுத்துச் சீர்திருத்தம் புதியது இல்லை. பன்முறை எழுத்துச் சீர்திருத்தம் செய்யப்பட்டதே; அவ்வகையில் யாம் செய்யக் கருதும் வடிவமைப்புச் சீர்திருத்தம் வழிவழி வருவதே'' என்று திருத்தியர் ஒரு கருத்தை முன் வைக்கின்றனர். இது மயக்கக் கருத்தாம்.

எவ்வொருவரும் எவ்வொரு வேளையிலும் இப்படி வரிந்து கட்டிக் கொண்டு – தருக்கம் செய்து கொண்டு – புற்றீசல் போலப் பொத்தகங்களை வெளியிட்டு அவரவர் நோக்குக்கெல்லாம் கோல விளையாட்டு விளையாடி எழுத்துச் சீரமை செய்தது இதுவரை இல்லை. செய்ய முற்பட்டதும் இல்லை.

அகரத்தை நெடிலாக்க ஆகாரத்தில் கீழ்ச்சுழி இட்டாற் போல, இகரத்தை ஈகாரமாக்க மேற்சுழி இடப்பட்டது. அதனை நிலைக்காலாக்கியவர் வீரமாமுனிவர். ஆனால், அவர் காலத்தெழுந்த ஏட்டெழுத்தில் பழைய வடிவமே அமைந்துள்ளது. அச்செழுத்தில் அமைக்கப்பட்ட மாற்றம், நாம் விரும்பினாலும் பழைய வடிவில் ஈகாரத்தை இன்று கொண்டு வர இயலாமை போல ஆயிற்று. 1835 வரை கிறித்தவ வெளியீடு தவிரப் பிற வெளியீடுகள் அச்சுச் சட்டத்தால் தடுக்கப்பட்டிருந்தன. அத்தடைக்கு விலக்காகத்

திருக்குறள் மூலம், நாலடியார் மூலம் என்பவை மட்டும் நீதிபோதனைக்காக வெளிப்பட்டன. ஆதலால் அச்சில் ஏறிய ஈகாரம் நிலைபெற்று விட்டது. ஊரைக் கூட்டாமலே, அறிவரரங்கம் காணாமலே அச்சரங்கம் ஏறி நிலைபெற்றது.

ஏ, ஓ என்பவை நெடில். இவற்றின் கோடும் சுழியும் புதிதானவை. எ, ஒ என இருந்தவை, குறில் நெடில் விளக்கம் கருதி எகரத்தில் கீழ்க்கோடும், ஒகரத்தில் கீழ்ச்சுழியும் சேர்க்கப்பட்டன. பழைய எ, ஒ குறிலாக வைக்கப்பட்டன. அவற்றின் மேல் வைக்கப்பட்ட புள்ளிகள் நீக்கப்பட்டன. இவையெல்லாம் புதிய சீர்திருத்தம் என்றோ, பெரிய மாற்றம் என்றோ மக்களால் எண்ணப்படாமல் ஏற்கப்பட்டவை.

இனிப் பெரியார் சீர்திருத்தம் என்பது அவர் காலத்திற்கு முன்னரே வழக்கில் இருந்தவை. கல்வெட்டுச் சான்றுகள் உள்ளவை. நாஞ்சில் நாட்டுக் கல்வெட்டுகளால் கவிமணி தேசிக விநாயகர் எடுத்துக்காட்டியுள்ளவை.

க், ங், ச், ஞ், ட், த், ந், ப், ம், ய், ர், வ், ழ், ற் எனும் பதினான்கு மெய்களும் ஐகாரம் ஏறக் கை, ஙை, சை என்றாயின. ஐகார அடையாளமாக இரட்டைச்சுழி (ை) அமைக்கப்பட்டு வந்தன. அப்படியே ண, ல, ள, ன என்னும் நான்கு எழுத்துகளும் 'ை' என்னும் இரட்டைச் சுழிகளே பெற்றிருந்தன. இந்த நான்கு எழுத்துகளும் மற்றை எழுத்துகளின் வேறுபட்டவை. சுழிகளால் அமைந்தவை. 'ண' மூன்று சுழி. 'ல' ஒரு சுழி. 'ள' ஒரு சுழி. 'ன' இரண்டு சுழி. இச்சுழி எழுத்துகளொடு இரண்டு சுழித்துணை எழுத்தை ஒட்டும் போது, மூன்று சுழி ஐந்து சுழியாகவும், இரண்டு சுழி நான்கு சுழியாகவும் ஒரு சுழி மூன்று சுழியாகவும் மாறிவிடும் அல்லவா! இச்சுழிகளுள் ஒவ்வொன்றைக் குறைக்கும் வகையால் மேலே துதிக்கையாக்கினர். 'வ' என்பது சுழியுடைய எழுத்தாக இருப்பினும் அதற்குத் துதிக்கை இட்டால் லகரத்தோடு மயக்கம் ஏற்படுத்தும் என எண்ணி மற்றைப் பதின்மூன்று எழுத்துகள் போல் வைத்துக் கொண்டனர். 'ல' என்பதற்குப் பின்னே வருவது 'வ' என்பதை எண்ணின் 'ல' மாற்றம் பெற்று 'வ' மாற்றம் பெறா உண்மை விளங்கும்.

பார்த்த பார்வையில் இவ்வடிவத் திருத்தம் வாய்ப்புக் கருதி மாற்றப்பட்டவை என்பதும், அதனைப் பழைய வடிவில் ஆக்குவது நெறிப்பட்டதே என்பதும், புது மயக்கம் ஏற்படுத்தாது என்பதும் உண்மையால் ஏற்கப்பட்டது.

கா முதலிய நெடில்களின் கால்கள் ண, ற, ன, என்பவற்றில் சுழியாக இருந்தன. அவற்றை மற்ற எழுத்துகளின்படியே கால் இட்டு எழுதுதல் புதிதாகத் தோன்றவில்லை. பெரிய சீர்திருத்தமாகவும் படாமல் இயல்பாக இருப்பவையாயின.

இப்பொழுது எழுத்துச் சீர்திருத்திகள் செய்ய நினைப்பதோ உகர, ஊகார எழுத்துகள். இவை இரண்டு எழுத்துகள் எனினும் 36 எழுத்துகள் என்பதை எண்ணிக்கொள்ள வேண்டும். இவ்வளவு கூடுதலான எழுத்துகள் இதுகாறும் சீரமைக்கப்படவில்லை. சீரமைக்கப்பட்டவையும் இடையே மாற்றியவற்றையப் பழைய நிலையில் நிறுத்தப்பட்டவையே அன்றிப் புதிதாக்கப்பட்டவை இல்லை; மாற்றம் செய்யாமல் இருப்பினும் மாற்றம் செய்யினும் படிக்கவும் எழுதவும் புதிதாகத் தோன்றி மயக்கம் ஏற்படுத்தாதவை. ஆகலான் அத்திருத்தங்கள் இயல்பாக எடுத்துக் கொள்ளப்பட்டன. உகர, ஊகார மாற்றம் சிக்கலானது. ஒட்டு மொத்தமானது. கால், மேற்சுழி, கீழ்ச்சுழி, உ என நான்கு குறியீடுகள் அவ்வவ் வெழுத்துக்குத் தகக் கொண்டவை அவை. ஆகலின் இம்மாற்றம் இடர்மிகச் செய்வதாம். அச்சிட்ட நூல்களையெல்லாம் புறந்தள்ளச்செய்வதாய், பழைய முறையில் கற்றுப் பழகிப் போனவர்களால் புதுமொழி எனப் புறக்கணிக்கத் தக்கதாய் இடர்நிலைப்படுத்தும்.

அச்சிடப்பட்ட அரிய நூல்களில் ஆயிரக்கணக்கானவை மறுபதிப்புக் காணாமலே இருப்பவை. இனி, மீள்பதிப்பா பெறும்? அச்சிடப்பட்ட நூல்களையெல்லாம் புத்துருவாக்க எழுத்துகளில் அச்சிட எத்தனை கோடி கோடி தேவைப்படும்? ஒரு நூலை வாங்கி வைப்பதே அரிதாக, அதே நூலைச் சீரமைப்பு எழுத்துக்காக வாங்கி வைத்தல் ஆர்வலர் அனைவர்க்கும் – அனைத்து நூல்களுக்கும் – இயல்வதாகுமா?

முன்னை நிகழ்ந்த வடிவமைப்பு மீட்டமைப்புகள் தமிழ் எழுத்துகளின் அழகைச் சிதைத்தன அல்ல; புதிய மொழியெனத் தோன்றச் செய்தன அல்ல; ஆனால் சீரமைக்க விரும்பும் உகர ஊகார மாற்றமோ, வேற்று மொழியென நமக்கு நம் மொழியை ஆக்கி வைக்கும் வடிவினவாம். எழுத்தின் வடிவழகைக் கெடுப்பனவாம்.

இயற்கையிலே கருத்தாங்கி இயற்கையிலே வடிவெடுத்து இயற்கையில் ஒலித்து இயற்கையோடு இயற்கையாய்ப் பொருளமைதி கொண்ட இயல்மொழியாம் தமிழ்மொழியின் இயற்கை வடிவைப் போற்றுதல் கட்டாயமாம்.

தொல்பொருள் துறைப்பணி என்ன? சிதைந்து பட்டவையும் மேலும் சிதைவுறாமல் பண்டை வடிவைக் காப்பது அல்லவோ! அவ்வாறாக இருப்பதை மதித்துப் போற்றும் நாம், சீரமைந்த வடிவைச் சீரமைப்புப் பெயரால் சீர்கெடுத்தல், வேண்டும் கடனாகுமோ? “சிதையா உன் சீரிளமை” எனத்தமிழைப் போற்றினாரே பேராசிரியர் சுந்தரனார். அவர் தந்த “நீராரும் கடலுடுத்த” பாடலைப்பாடி வாழ்த்திக் கொண்டே வரிவடிவ வனப்பைச் சிதைப்பதா செயத்தக்க செயல்?

உகர ஊகார வரிசை 36 எழுத்துகளையும் சீர்திருத்த நினைத்த வடிவில் சீர்திருத்தி எழுதிப் பார்க்கட்டும்; புதிய ‘வடதமிழ்’ எனப்பெயர் சூட்டத் தக்கதாகவே அமைதல் உறுதி.

“கணினி, ஒளியச்சு என்பவற்றில் பயன்படுத்தத் தமிழ் வரிவடிவு தடையாக உள்ளது; அதனைத் திருத்தியாக வேண்டும்” என்றவர் குரலும் முழக்கமும் இப்பொழுது மங்கி விட்டன! தமிழ் எழுத்தை எத்தகைய புத்தம் புதிய கருவிகளிலும் அமைக்க முடியும் என்பதை வெளிநாட்டுத் தமிழ்ப் பொறிஞர் மெய்ப்பித்து விட்டனர்! நம் நாட்டு அறிஞர்களும் ஒப்புகின்றனர். இனி, எழுதா எழுத்தாம் ஒலி வடிவு கொண்டே, வரிவடிவு படைக்கும் பொறிவரவு உளதாதலால், வடிவுச்சீரமைப்புப் பற்றிப் பேச வேண்டியதே இல்லையாய் அறிவியல் உலகம் காட்டுதற்கு முந்து நிற்கிறது.

இப்பொழுது எண்ணத்தக்க தலையான செயல், மொழியாக்கம் கருதுவோர்க்கு ஒன்றே ஒன்றேயாம். எல்லா நிலைகளிலும் தமிழை நிலைப்படுத்துதலேயாம்.

தமிழ், எல்லா நிலைகளிலும் பயிற்று மொழியாதல் வேண்டும். மழலையர் பள்ளியில் ஆங்கிலப்பாடம் என ஒன்று தவிர எஞ்சியவெல்லாம் தமிழ் வழியாகவே இயலல் வேண்டும்.

பல்கலைக்கழகப் பட்டம் தாங்கி எவராயினும் தமிழ் பயிலாமல் பட்டம் பெற இயலா நிலை இருத்தல் வேண்டும்.

தமிழக அரசு, அப்பெயர்க்கு உரிமை உடையது என்பதை மெய்யாக்குவது, தலைமைச் செயலகம் முதல் சிற்றூராட்சி வரை தமிழால் நடையிடச் செய்வதேயாம்.

மெய்யான குடியரசு என்பதை மெய்ப்பிக்க வல்லது தாய்மொழி அறிந்த நடுவரும், தாய்மொழி வழியே வாதிடும் (முறைகூறும்) வழக்குரைஞரும் அமைந்த முறைமன்றங்களாக இருத்தலேயாம்.

நடுவண் அரசுத் துறைகள் எவையெனினும் அவ்வம் மாநிலத்தில் அவ்வம்மாநில மொழியில் நடையிடவில்லையேல் மாநிலங்களைக் கொத்தடிமையாக வைத்திருக்கும் கொடுமையதே ஆகும்.

கோயில்கள் தமிழனால் – தமிழனுக்கு ஆக்கப்பட்ட இறை நிலை. அங்கே தமிழன் உணரா – அறியா அயல்மொழியில் செய்யும் வல்லாண்மை வழிபாடு அகலாத வரை இறைமையை மதியா இழிமைச் சான்றாகவே இருக்கும்.

இவற்றைப் பற்றி ஒருமித்த குரல் எழுப்பித் தமிழ்க்காவல் செய்ய வேண்டிய பொழுதில், வரிவடிவு பற்றிப் பேசித் திசை திருப்புவது தமிழ் நலம் பேணுவார் கடமை அன்றாம்.

முன்னே உயிர் பிழைக்க வையுங்கள்; குறை உண்டு எனின், பின்னே திருத்தலாம்.

குறளியம்
வேல் 19
வெற்றி 06 & 07 (1.1.99 & 1.2.99)

17. ‘ஐ ஔ’ ‘அய் அவ்’ தானா?

[ஞா.தேவநேயன்]

‘ஐ ஔ’ வரி வடிவுகள் முன் போன்றே யிருக்கலாமென்று திருவள்ளுவர் விழா முடிப்புரையில், தமிழ்நாட்டு முதல்வர் மாண்புமிகு ம. கோ. இராமச்சந்திரனார் என்னும் அழகமதியர் குடியரசு முறைக்கேற்ப முடிபு கூறியது, தமிழுலகம் அனைத்தும் மகிழ்ச்சியொடும் நன்றியறிவொடும் பாராட்டத் தக்கதாகும். இனி அது பற்றிக் கவல எள்ளளவும் இடமில்லை.

ஆயின், தமிழ் உலக முதல் உயர்தனிச் செம்மொழியென்று, கால் நூற்றாண்டாகச் சொல்லியும் எழுதியும் விளக்கியும் வரினும், தமிழின் தொன்மை முன்மைகளைப் புலவர் சிலவர் இன்னும் அறியாது, பேரனே பாட்டனுக்கு முன் பிறந்தான் என்பது போன்று, வடமொழியினின்றே தமிழுக்கு ஐகார ஔகாரங்கள் வந்தன என்று சொல்வதனாலும், அது கண்டு மாணவர் பலர் மயங்குவதனாலும், அம் மயக்கறுக்கவே இதனை எழுதத் துணிந்தேன்.

திரவிட ஒப்பியல் இலக்கணம் ஆய்ந்தெழுதிய கால்டு வெலாரே, தமிழ் நெடுங்கணக்கு வடமொழியைப் பின்பற்றியதென்று கூறியிருக்கின்றாரே யென்று, சிலர் வினவலாம். அவர் தமிழாய்ந்த கால நிலைமைகளை நோக்கினால், அவர் அங்ஙனம் கூறியதற்குக் காரணம் தெளிவாகப் புலனாகும்.

அந் நிலைமைகளாவன:–

1. தொல்காப்பியமும் பதினெண் மேற்கணக்கும் சிலப்பதிகாரமும் தமிழ்ப் புலவர்க்கும் தெரியாது மறைந்து கிடந்தமை.

2. மறைமலையடிகள் போன்ற வழிகாட்டி எவருமின்றி அவர் தன்னந் தனிமையாகத் தமிழாய்ந்தமை.

3. அரசியல் துறையிலோ, குமுகாயத் துறையிலோ, இலக்கியத் துறையிலோ, மொழித் துறையிலோ, தமிழரிடை இன்றிருக்கும் விழிப்பு அக்காலத் தில்லாதிருந்தமை.

4. எல்லா வகையிலும் தமிழர் ஆரியர்க்கு முற்றும் அடிமைப் பட்டிருந்தமையும், தென் சொற்கு வடசொன் மூலங்காட்டுவதிற் பெருமை கொண்டமையும்.

5. பிராமணர் நிலத்தேவரென்றும், வடமொழி தேவமொழி யென்றும் தமிழ்ப் பொதுமக்களால் நம்பப்பட்டமை.

6. மாக்கசு முல்லர் கூட்டம் சமற்கிருதமே ஆரிய மூலமொழி யென்றும், அனைத்துலகத் தாய்மொழியென்றும், கொட்ட மடித்துக் கொண்டிருந்தமை.

7. கால்டுவெலார் குமரி நாட்டுண்மை யறியாது, கொற்கையே தமிழ் நாகரிகத் தோற்றகம் என்று கொண்டமை.

8. அவர் ஏதேன் தோட்டக் கதையை எழுத்துப்படி உண்மை யென்றும், தமிழரின் முன்னோர் மேனாட்டினின்று வந்தவ ரென்றும் நம்பியமை.

அரை நூற்றாண்டு தமிழ்நாட்டு நடுவில் வாழ்ந்து தமிழ் பேசித் தமிழாய்ந்த பின்பும், தமிழில் அண்ணன் தம்பி அக்கை தங்கையென்று மூத்தவரையும் இளையவரையுந்தான் குறிக்கச் சொல்லுண்டென்றும், brother sister என்பது போல உடன் பிறந்தாரைக் குறிக்கும் பொதுச்சொல் இல்லையென்றும், அவர் கூறியிருப்பதை நோக்கும்போது, தமிழ் நெடுங்கணக்கைப் பற்றிய அவர் தவற்றுக் கூற்று தானாக வலியிழத்தலைக் காண்க.

உடன்பிறந்தான் உடன்பிறந்தாள் என்னும் உலக வழக்கும்,

"உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டாம்"

(மூதுரை 20)

என்னும் இலக்கிய வழக்கும், அவர்க்குத் தெரியாமற் போனது மருட்கை விளைப்பதே.

சிலப்பதிகாரக் காடுகாண் காதையில் "அடியிற்றன்னளவு...... தென்னவன் வாழி" (17–22) என்னும் பகுதிக்கு வரைந்த உரையில், அடியார்க்கு நல்லார்,

"..... கடல் பொறாது.... அவனது தென்றிசைக் கண்ணதாகிய பஃறுளியாற்றுடனே பலவாகிய பக்க மலைகளையுடைய குமரிக்கோட்டையும் கொண்டதனால், வடதிசைக் கண்ணதாகிய கங்கையாற்றினையும் இமய மலையினையும் கைக்கொண்டு ஆண்டு, மீண்டும் தென்றிசையை ஆண்ட தென்னவன் வாழ்வானாக வென்க..... கடல் எறிந்து கொண்ட எல்லையளவும் வடபால் தனதாக்கி மீண்டும் தென்றிசையை ஆண்டவனென ஒப்பாக்கலுமொன்று...."

என்று கூறியிருப்பதால், பனிமலை வரைப்பட்ட அளவு (எழுநூற்றுக்காவதவாறு) ஏறத்தாழ ஈராயிரங்கல் தொலைவு தெற்கே நீண்டிருந்த நிலப்பரப்பு முழுகிப் போயிற்றென்று அறியப்படும். இங்ஙனம் முழுகிப் போனது முற்றும் முத்தமிழ் நாட்டுள் பாண்டி நாடென்னும் ஒரு நாடே.

"அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழ நாட்டெல்லையிலே முத்தூர்க் கூற்றமும் சேரமானாட்டுக் குண்டூர்க் கூற்றமும் என்னுமிவற்றை இழந்த நாட்டிற்காக ஆண்ட தென்னவன் வாழ்வானாக வென்றவாறு" என்றதனால், இன்றுள்ள முகவை மதுரை நெல்லையாகிய மும் மாவட்டப் பாண்டி நாடு பழம்பாண்டி நாடன்றென்பதும், சேர சோழ நாடுகள் முதற்காலத்தில் பனிமலை வரை பரவியிருந்து பின்னர்ப் படிபடியாய்த் தெற்கே தள்ளி வந்துவிட்டன என்பதும், பெறப்படும்.

பழம் பாண்டி நாடான குமரிக்கண்டம் முழுதும் முழுகிப் போனமையினாலும், தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட தனித் தமிழிலக்கியம் அனைத்தும் அழிக்கப்பட்டுப் போனமையினாலும், தமிழ்நாட்டு முதற்கால வரலாற்றிற்குத் தொல்பொருட் கலைத்துறை துணை செய்யாதென்று தெற்றெனத் தெரிந்துகொள்க.

ஆகவே, திரு. தி. நா. சுப்பிரமணியன் குறித்த கி.மு. 3 ஆம் நூற்றாண்டுப் பிராமிக் கல்வெட்டுகளும், 19–1–1979 ஆம் பக்கல் இந்துச் செய்தித்தாளில் வெளியிடப்பட்ட தகடூர் மாவட்ட அம்மன் கோயிற்பட்டிப் பிராமிக் கல்வெட்டும், வடவரும் வடநாட்டு மதங்களும் தென்னாட்டிற் புகுந்த இடைக் காலத்தனவாதலாலும், வடவர்க்கு இடப்பட்ட தானங்களைக் குறிப்பனவாதலாலும், வடவெழுத்திற் பொறிக்கப்பட்டனவாதலாலும், பண்டைத் தமிழெழுத்தை யறிவிக்குஞ் சான்றுகளாகா.

குமரிநாட்டுத் தொடக்ககால வரலாற்றை அறிதற்குத் துணையாக, இன்று எஞ்சியுள்ள பழம்பொருட்டுறைச் சான்று தமிழ் என்னும் மொழி ஒன்றே. ஏட்டெழுத்தும் வெட்டெழுத்தும் கருவி வேறுபாட்டால் வடிவு வேறுபடுதற்கு இடமிருத்தலாலும், பொதுவாக ஏட்டெழுத்து பெருவழக்கும் வெட்டெழுத்து அருவழக்கும் உடையனவாதலாலும், வடவர் தென்னாடு வந்ததிலிருந்து தமிழைக் கெடுத்தும் குறைத்தும் மறைத்தும் வருவதனாலும், மூவேந்தரும் ஆரியப் பூசாரிகட்கு அடிமையராகிக் கல்வித் துறையிலும் மொழித்துறையிலும் அவர் விருப்பம் போற் செய்து கொள்ள விட்டுவிட்டமையாலும், தமிழையும் தமிழரையும் பற்றித் தமிழரால் தமிழில் எழுதப் பட்ட பண்டை ஏட்டுச் சுவடி ஒன்றும் இன்றின்மையால், சமண புத்தக் கல்வெட்டுகளைக் கொண்டு குமரித் தமிழெழுத்தைக் காண முயல்வது, ஆமணக்கு விதைத்து ஆச்சா விளைப்பது போன்றதே.

பிராமியெழுத்து பல்வேறு வடிவத்தில் வழங்கி அசோகன் காலத்தில் வளர்ச்சியடைந்ததாகத் தெரிகின்றது.

திரு. தி. நா. சுப்பிரமணியனார், தம் ‘பண்டைத் தமிழ் எழுத்துக்கள்’ என்னும் பொத்தகத்திற் பின்வருமாறு வரைகின்றார்:

“சரித்திர வாயிலாக நாம் அறியும் காலத்திலேயே பிராமி நெடுங்கணக்கு நிலையை அடைந்துவிட்டது. அஃது அந்த நிலையை எப்பொழுது அடைந்தது என்பது தெரியவில்லை. ஆயினும், பழைய காலத்திலேயே இந்நாட்டில் பலவகை லிபிகள் வழங்கி வந்தனவென்பது, பண்டை நூல்களினின்றும் தெரிய வருகின்றது.

“சற்றேறக் குறைய கி.மு. 300 ஆம் ஆண்டில் எழுதப்பட்டதாகக் கொள்ளப்படும் ஸமவாயங்க ஸூத்ரம், கி.மு. 168 ஆம் ஆண்டில் எழுதப்பட்டதாகக் கொள்ளப்படும் பண்ணாவணா ஸூத்ரம் முதலிய ஜைன நூல்களில், அக்காலத்தில் பதினெட்டு வகை லிபிகள் வழங்கி வந்தனவென்பது கூறப்பட்டிருக்கின்றது. மஹாவஸ்து என்னும் நூலில், முப்பது வகை லிபிகளின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. லலிதவிஸ்தரம் என்னும் நூலோ, புத்தர் காலத்தில் அறுபத்து நான்கு வகை லிபிகள் இருந்தனவென்று தெரிவிக்கின்றது...

“அந்த நூல்களில் உள்ள அட்டவணைகளில் காணப்படும் பெயர்களுள் பல ஒத்திருக்கின்றன. அவற்றுள் நான்கு முக்கியமானவைகளாகவும், சரித்திர உண்மைக் கேற்பனவாகவும் உள்ளன. அவை பின்வருமாறு :–

1. ப்ராஹ்மீ (Brāhmi) அல்லது பம்பி (Bambhi)
2. கரோஷ்டீ (Kharosthi) அல்லது கரோட்டி (kharotthi)
3. த்ராவிடீ (Dravidi) அல்லது டாமிலீ (Dāmili)
4. யவனானியா (Yavanāniyā) அல்லது யவனாலியா (Yavanāliyā) (பக். 95)

நெடுங்கணக்கு வண்ணமாலை முதன்முதல் தமிழிலேயே தோன்றிற்று. அதைப் பின்பற்றிய வட நாட்டெழுத்தே பிராமி.

சமணமும் புத்தமும் கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் தோன்றின. அவற்றிற்கு முந்தினது ஆரிய வேதமதம் அல்லது வேள்வி மதம். ஆரியர் இந்தியாவிற்குட் புகுந்தது கி.மு.2000. ஆரிய மொழிகட்கு அடி மூலம் வட திரவிடம். அது தென்றமிழின் திரிபு.

கரோட்டி வடமேலை யிந்தியாவிற் சில நூற்றாண்டு வழங்கிக் கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் மறைந்தது.

யவனானி என்பது கிரேக்க எழுத்து. யவனம் என்பது கிரேக்க நாட்டிற்கொரு பெயர். கிரேக்கம் உள்ளிட்ட மேலையாரியம் வட திரவிட் திரிபென்பது மேற்கூறப்பட்டது.

பிராமி என்பது தமிழ் நெடுங்கணக்கின் வடநாட்டுத் திரிபென்பதும் மேற்கூறப்பட்டது. அல்லாக்கால், திராவிடீ என்று ஏன் தமிழெழுத்தைப் பிரித்தல் வேண்டும்? இவையெல்லாம் தமிழர் அடிமைத்தனத்தின் விளைவே.

தலைக்கழகக் காலத்திலேயே, இற்றைத் தமிழெழுத்தைப் பெரும்பாலும் ஒத்த எழுத்துமுறை தோன்றிவிட்டது. தமிழெழுத்தினின்றே கிரந்தமும் தேவநாகரியும் திரிந்துள்ளன. அதனால், தமிழெழுத்து பல நூற்றாண்டு கல்வெட்டுத் தமிழுக்கு விலக்கப்பட்டிருந்ததாகத் தோன்றுகின்றது.

சமற்கிருதமும் வேதமொழியும் உட்பட ஆரிய மொழிகளெல்லாம் அடிப்படையில் தமிழாயிருப்பதால், அதற்கு முரணான எழுத்து வரலாறு இனிச் செல்லாது.

தமிழல்லாத பிற பெருமொழிகள் பிற்காலத்தன வாதலால், அவற்றின் வண்ணமாலைகள் படவெழுத்து, கருத்தெழுத்து, அசையெழுத்து, ஒலியெழுத்து என்னும் நால்வகை நிலைகளைக் கடந்தமை வரலாற்றால் அறியக் கிடக்கின்றது. தமிழோ வரலாற்றிற்கெட்டாத தொல்பழங்காலத்திலேயே நெடுங்கணக்கு வண்ணமாலை தோன்றப் பெற்றதினால், அதன் வளர்ச்சி நிலைகளை இறைவன் தவிர வேறெவரும் அறிய முடியாது.

இவ்வுண்மையை அறியாததனால், தி. நா. சுப்பிரமணியனார், எழுத்தின் ஒலிவடிவு வரிவடிவு என்னும் இருவகை வடிவுகளின் இருவேறு நிலைமைகளைப் பற்றிய யாப்பருங்கல விரிவுரை மேற்கோள் நூற்பாக்களைப் பிறழவுணர்ந்து அவை எழுத்தின் நால்வகை வளர்ச்சி நிலைகளைக் குறிக்கின்றன வென்று எழுதிவிட்டார்.

அந் நூற்பாக்கள் வருமாறு :–

1. "உருவே யுணர்வே யொலியே தன்மையென
இருவகை யெழுத்தும் ஈரிரண் டாகும்"

2. “காணப் பட்ட உருவம் எல்லாம்
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவி லோவியன் கைவினை போல
எழுதப் படுவ துருவெழுத் தாகும்”

3. “கொண்டவோர் குறியாற் கொண்ட அதனை
உண்டென் றுணர்த்துவ துருவெழூத் தாகும்”

4. “இசைப்படு புள்ளின் எழாஅல் போலச்
செவிப்புல னாவ தொலியெழுத் தாகும்”

5. “முதற்கா ரணமுந் துணைக்கா ரணமும்
துணைக்கா ரணத்தொடு தொடரிய வுணர்வும்
அவற்றொடு புணர்ந்த அகத்தெழு வளியின்
மிடற்றுப் பிறந் திசைப்பது தன்மை யெழுத்தே”
(யா. வி. பக. 535)

இவற்றின் பொருள் விளக்கம் வருமாறு:–

1. வரியெழுத்து ஒலியெழுத்து என எழுத்து இருவகைப்படும். அவற்றுள், வரியெழுத்து உருவும் உணர்வும் என்றும், ஒலியெழுத்து ஒலியும் தன்மையும் என்றும், இவ்விரு வகைப்படும்.

2. ஓவியம் வரைதலும் எழுத்து வரைதலும் எழுதுதல் எனப்படும். எழுத்தும் ஒருவகை ஓவியமே. ஓவியன் ஓர் உருவத்தை உட்புலனாகக்கொண்டு அதைக் கட்புலனாக எழுதுவது போன்று, எழுத்தாளன் ஓர் ஒலியை உட்புலனாகக் கொண்டு அதைக் கட்புலனாக எழுதுவது உருவெழுத்து.

எழுத்து என்பது உண்மையில் ஒலியே. “எழுதப் படுதலின் எழுத்தா கும்மே” (முத்து. 1) காலத்தாலும் இடத்தாலும் நெட்டிடையிட்டவர்க்குப் பயன்படுமாறு, செவிப்புலவொலி கட்புல வரியாக எழுதப்பட்டது.

தேர்ச்சி பெற்ற வழுவாத ஓவியன் வரைவே உண்மையான உருவத்தைக் காட்டும். அல்லாக்கால், குதிரை யோவியம் கழுதையும் நாயும் பன்றியும் போலத் தோன்றலாம். எழுத்து வரிவடிவும் திருத்தமாய் எழுதப்படல் வேண்டும். இன்றேல்; குறித்த ஒலியை உணர்த்தாது; அல்லது வேறோர் ஒலியை உணர்த்தும்.

3. கட்புலனான வரிவடிவு, எழுதினானுக்கும் பிறருக்கும் உட்புலனாக ஓர் ஒலியை உணர்த்துவது உணர்வெழுத்து.

4. ஒருவன் ஒலித்த எழுத்தொலி, அவனுக்கும் பிறருக்கும் செவிப்புலனாவது ஒலியெழுத்து.

5. ஒருவன் ஓர் எழுத்தொலியைத் தானே ஒலித்து அது பிறக்குந் தன்மையறிவது தன்மை யெழுத்து.

மயிலைநாதர் உரையிலும் இலக்கண விளக்கப் பாயிரத்திலும் மேற்கோளாக வரும் நூற்பாக்கள், ஒலியைப் பெயர் என்று மாற்றியும், உணர்வை உண்முடிவு என்றும் குறிக்கின்றன. இம்முறையையே திவாகரமும் பிங்கலமும் தழுவுகின்றன.

தமிழ் உலக முதன்மொழி யென்பது மட்டுமன்று; அதன் செம்மையான அமைப்பும், பொருளிலக்கணச் சிறப்பும், உரைநடை வேண்டா எழுநிலச் செய்யுளிலக்கியமும், முத்தமிழ்ப் புணர்ப்பும், நாற்பொருள் நோக்கும், பல்புலத்துறையும், தமிழர்க்குத் தனியெழுத்தில்லையென்று கருதுவாரைப் பகுத்தறிவற்ற அஃறிணை யாக்குகின்றன.

நெடுங்கணக் கமைப்பு (உயிரெழுத்து 12)

ஆ – அ (சேய்மைச் சுட்டு)

ஈ – இ (அண்மைச் சுட்டு)

ஊ – உ (முன்மைச் சுட்டு)

இம் மூன்றே முதன்முதல் மாந்தன் வாயிலும் தமிழன் வாயிலும் பிறந்த உயிரெழுத்துக்கள். இவையே, ஆரியமொழிகள் எல்லாவற்றிலுமுள்ள சுட்டுச்சொற்களின் அடிவேர்கள்.

ஈ – ஏ, இ – எ.

ஊ – ஓ, உ – ஒ.

அ + இ = ஐ. அ + உ = ஔ.

ஐ, ஔ இரண்டும் புணரொலிகள் (Diphthongs)

"அகர இகரம் ஐகார மாகும்"
(தொல். மொழி. 21)

"அகர உகரம் ஔகார மாகும்"
(தொல். மொழி. 22)

"ஆஈ ஊஏ ஐஓ ஔஎனும்
அப்பால் ஏழும்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப"
(தொல். நூன். 4)

இவை தொல்காப்பியர் வகுத்தன வல்ல. "நூன்மரபு" என்னும் இயற்பெயரை நோக்குக. "மொழிமரபு", "தொகைமரபு" என்னும் இயற்றலைப்புகளையும் நோக்குக.

"நூன்மரபு" முதல் "மரபியல்" வரை தொல்காப்பியம் முழுதும், முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலந்தொகுத்தவையே.

"ஐவியப் பாகும்." (தொல். உரி. 87)

"ஈரள பிசைக்கும் இறுதியி லுயிரே
ஆயியல் நிலையுங் காலத் தானும்
அளபெடை நிலையுங் காலத் தானும்

அளபெடை யின்றித் தான்வருங் காலையும்
உளவென மொழிப்பொருள் வேறு படுதல்
குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்றும்."
(தொல். சொல். 281)

(சேனா. உரை) "ஔஔ வொருவன் றவஞ்செய்த வாறு என்றவழிச் சிறப்புத் தோன்றும். ஒரு தொழில் செய்வானை ஔஔ வினிச்சாலும் என்றவழி மாறுபாடு தோன்றும். ஔஉ வொருவ னிரவலர்க் கீந்தவாறு, ஔஉ வினிவெகுளல் எனவும்; ஔவவன் முயலுமாறு, ஔவினித் தட்டுப்புடையல் எனவும்; அளபெடுத்தும் அளபெடாதும் வந்த வழியும், அப்பொருள் தோன்றியவாறு கண்டுகொள்க. இதனை இக்காலத்து ஓகாரமாக வழங்குப"

இதனால், குமரிநாட்டு வழக்குள் மட்டுமன்றி, இற்றைத் தமிழ்நாட்டுப் பண்டை வழக்குகளும் பல இறந்தொழிந்தன என அறிந்துகொள்க.

வடவர், குமர + ஈசன் = குமரேசன், குல + உத்துங்கன் = குலோத்துங்கன் என்னும் புணர்ச்சியை யடிப்படையாகக் கொண்டு ஏகார ஓகாரங்களையும் புணரொலிகளாகக் கொள்வர். அவை ஈகார ஊகாரத் திரிபுகளேயன்றிப் புணரொலிகளல்ல.

இனி, ஐகார ஔகாரங்கள் வடமொழியினின்று தமிழுக்கு வந்தனவென்று கூறும் தமிழ்ப் புலவரும் உளர். இது பழைய பாண்டியன் தமிழ்க்கழகம் போன்ற ஓர் அறிவரவையின் தேவையையே வலிதாய் உணர்த்துகின்றது.

வேத ஆரியரின் முன்னோர் எழுத்தறியாத முல்லை நாகரிக மக்களாய் இந்தியாவிற்குட் புகுந்தனர். முதன் முதலாகத் தோன்றிய ஆரிய இலக்கியமான இருக்கு வேத மந்திரங்கள், எழுதாக் கிளவியாகவே செவிமரபாக நீண்ட காலம் வழங்கி வந்தன. இதனைச் சுருதி (கேள்வி) என்னும் வேதப் பெயரே தெரிவிக்கும். ஆரியப் பூசாரியர் தமிழரொடு தொடர்பு கொண்டு வேதமொழி விரிவடைந்த பின், தமிழ் நெடுங்கணக்கைப் பின்பற்றி யமைக்கப்பட்ட ஆரிய வண்ணமாலையொடு சமற்கிருதந் தோன்றிற்று.

வடமொழி வண்ணமாலை பின்மையது. குறிலுக்குக் கரச் சாரியையும், நெடிலுக்குக் காரச் சாரியையும், ஐகாரௌகாரங்கட்குக் கான்சாரியையும், மெய்யெழுத்திற்கு அகரச் சாரியையும் (அ) ஆய்தவெழுத்திற்கு அஃகேனச் சாரியையும், தமிழிலேயே தோன்றின.

வடமொழியிற் கான்சாரியையும் அஃகேனச் சாரியையும் இல்லை; காரச் சாரியையைக் குறிலுக்குங் கொடுப்பர். தமிழில் "தாமினிது பிறக்கும் தகார நகாரம்" (தொல். பிறப். 11) என்று செய்யுளில் இசை நிறைக்கவன்றி, வேறுவகையில் வராது.

ட, ட்ட, ண என்னும் வருடொலிகளும் (Linguals or Cerebra's) ளகரமும் வடமொழி தமிழின்று கடன் கொண்டவை. இவை ஆரிய மொழிக் குடும்பத்திற் குரியனவல்ல.

பிராதி சாக்கியங்கள் என்னுங் கிளை வேத இலக்கணங் களும், ஐந்திரம் என்னும் வடமொழி முதற்பேரிலக்கணமும், தமிழிலக்கணத்தைப் பின்பற்றி யெழுந்தவையே. ஐந்திரம் தமிழகத்திலேயே தோன்றித் தமிழகத்திலேயே அழிந்ததாகத் தெரிகின்றது.

"புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
விண்ணவர் கோமான் விழுநூ லெய்துவிர்"

என்னும் சிலப்பதிகார அடிகள் (11 : 98 – 9) கவனிக்கத்தக்கன.

ஐந்திரத்திற்கு முந்தியது அகத்தியம் என்னும் முத்தமி ழிலக்கணம். அகத்தியரே தென்னாடு வந்து தமிழ்கற்ற முதல் ஆரியர். அவர் வந்த காலத்தில் மகேந்திரம் என்னும் மாவேந்தமலை கடலில் முழுகிக் கிடந்தது. அது குமரியாறு தோன்றிய மலையா யிருந்திருக்கலாம். அகத்தியர்க்கு முந்திய காலமெல்லாம் தனித் தமிழர் காலமென்றும், அவரொடு தொடங்கியது ஆரியத் தொடர்புக் காலமென்றும் அறிதல் வேண்டும்.

ஐகார ஔகாரங்கள் தமித்து நில்லாது சொல்லுறுப்பாக வரும் போது, முறையே அய் அவ் என்றொலித்துத் தனித்தனி ஒன்றரை மாத்திரை கொள்ளும்.

"அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐ என் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"
(மொழி. 23)

"அகரத் திம்பர் வகரப் புள்ளியும்
ஔஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"

ஐகாரம் சொல்லிடையில் யகரத்தை யடுத்து வரும்போது, ஒரு மாத்திரையாகவும் குறுகும்.

"ஓரள பாகும் இடனுமா ருண்டே
தேருங் காலை மொழிவயி னான"
(தொல். மொழி. 24)

எ – டு. இடையன், அரையன்

தமிழிற் போன்றே பிறமொழிகளிலும் புணரொலிகள் உள.

எபிரேயம் (Hebrew)	– ai, au
அரபி (Arabic)	– ai, au
இலத்தீனம் (Latin)	– ae, oe, au, ei, eu, ui
கிரேக்கம் (Greek)	– ai, au, ei, eu, oi, ou, ui (முதலெழுத்து குறில்)
	– āi, ēi, ōi (முதலெழுத்து நெடில்)
சமற்கிருதம்	– (ஏ, ஓ) ஐ, ஔ.
பழையாங்கிலம் (Old English)	– ea, eo, ie, io (குறும்புணரொலி)
	– ēa, ēo, ie, io (நெடும்புணரொலி)

ஆங்கிலம் (English) – i (ai), u(i + ōō) - (ஒரு வரிப் புணரொலிகள்)

– oi, ou

(இரு வரிப் புணரொலிகள்)

இந்த மொழிகளிலெல்லாம் புணரொலிகளை நீக்க ஒருவரும் கருதவில்லை. உயிர்மெய் யெழுத்திற்குத் தனிவடிவு வகுத்தது போன்றே, புணரொலிகட்கும் தனிவடிவு வகுத்தனர் தமிழர். இது அவரது மேனிலைப்பட்ட மெய்ப்பொருள் அறிவையே காட்டுகின்றது. மேலையர் இற்றை அறிவியல் கம்மியத்தில் உயரியரேனும், மொழித்துறையிற் குமரித் தமிழருக்குச் சமமானவ ரல்லர். ஓரொலிக்குப் பல வரியும் ஒரு வரிக்குப் பல வொலியும் வகுத்திருப்பதும், ஒலிக்காத வரியை நீக்கா திருப்பதும், இடையிட்ட இரு வரிகளைக் கொண்டு ஓரொலி புணர்ப்பதும், எத்துணை கற்பினும் ஆசிரியனுதவி யின்றி ஒரு சொல்லைப் பலுக்க முடியாவாறு மொழியமைத்திருப்பதும், இவ் வுண்மையை எளிதாய் மெய்ப்பிக்கும். ஆதலால், **இனிமேலாயினும், ஆங்கில முறையில் தமிழைக் கெடுக்க முனையாதிருக்க.** மேலும், மெய் முன்னும் உயிர் பின்னும் வரும்போதெல்லாம் எல்லா மொழியிலும் இணைந்தே யொலிக்குமென்றும் எழுத்தென்பது உண்மையில் ஒலியேயன்றி வரியன்றென்பதும், உயிர்மெய்யை உயிரும் மெய்யுமாகப் பிரிப்பது ஓர் உயிரியை (பிராணியை) உயிர் வேறு மெய் (உடம்பு) வேறாகப் பிரிப்ப தொத்ததென்றும், ஆங்கில எழுத்து முறை விரும்பியர் தம் அறியாமையை யுணர்ந்து அமைந்திருப்பாராக.

ஈ – ஏ, இ – எ.

எ–டு:

ஈனொரு	– இன்னொரு
ஈன்	– ஏன்
ஏனோர்	– மற்றோர்
ஏன்	– ஏனை

சீ – சே
சிவப்பு – செவப்பு

ஊ – ஓ, உ – ஒ.

எ–டு.

ஊது – ஓது (காதில் மெல்லச் சொல்)
உய் – ஒய்
குத்து – கொத்து

செந்தமிழ்ச் செல்வி
சிலம்பு 53
பரல் 6

18. தமிழக அரசின் எழுத்துச் சீர்திருத்தம் (1978)

[பாவலரேறு பெருஞ்சித்திரன்]

எதையாவது செய்து மக்களிடம் நல்ல பெயர் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நடிகர் திரு. இராமச்சந்திரன் அரசு படாதபாடு படுகின்றது. ஆனால், தான் செய்ய விரும்புவதெல்லாம் நல்லவைதாமா, தேவைதாமா, செய்ய வேண்டிய எல்லாவற்றுள்ளும் இன்றியமையாதவைதாமா என்றெல்லாம் எண்ணிப் பார்ப்பது அதற்கும் நல்லது; மக்களுக்கும் நல்லது. மற்றபடி, கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையார்க்கு உடைத்துப் பெருமை தேட விரும்புவது இதற்கும் தெரியும்; சட்டமன்றம் போகும் ஓர் ஆட்டுக்குட்டிக்கும் தெரியும்.

அத்தகைய வீண், ஆரவாரத் தேங்காய் உடைப்பு வேலைகளில் ஒன்று, அண்மையில் பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி, அது செய்த எழுத்துச் சீர்திருத்தம். ஏதோ தம்மை ஒரு கமால்பாட்சா என்று கருதிக் கொண்டும், பெரியாருக்கு ஏதோ பெருமை சேர்க்கும் திட்டம் என்று எண்ணிக் கொண்டும் எழுத்துச் சீர்திருத்தத்தை அறிவித்துள்ளது போலும் தமிழக அரசு! எழுத்துச் சீர்திருத்தம் தேவை என்பதற்குத், தமிழ்மொழி துருக்கி மொழியும் அன்று; முதல்வர் நடிகர் இராமச்சந்திரன் அவர்கள் ஒரு புரட்சியாளரும் அல்லர்; வேண்டுமானால், திரைப்படத்தில் அவர் புரட்சி நடிகராக விருக்கலாம். ஆனால் திரைப்படம் வேறு, புரட்சி வேறு என்பது அவருக்கே இக்காலத்திற்குள் நன்கு தெரிந்திருக்கும். திடீர் அறிவிப்புகளும் கட்டளைகளும் திரைப்படத்திற்குச் சுவையைத் தரும். உலக நடைமுறைக்கு அருவருப்பையும் வெறுப்பையும் அழிவையுமே தரும்.

எனவே, தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் நிலையான நன்மைகளை ஏதேனும் செய்ய வேண்டும் என்று தமிழக அரசு உண்மையிலேயே விரும்பினால், அதற்குப் பற்பல ஆய்வுகள் திட்டங்கள் உள்ளன. அவை திடீர் அறிவிப்புகளால் விளையக் கூடியன அல்ல. நிலையான அடிப்படையை உண்டாக்கும் அறிவாராய்ச்சியின் மேல் கட்டப்பெற்ற திட்டவட்டக் கட்டடமாக அவை அமைதல் வேண்டும். அவற்றையும் கூட அவ்வத்துறை அறிஞர்களைக் கேட்டுச் செய்வதுதானே முறை. மற்றபடி அதிகாரம் கிடைத்து விட்டதென்று மேட்டைப் பள்ளமாக்குவதும், பள்ளத்தை மேடாக்குவதும் வீண் வேலை; வெட்டி வேலை! (இதில் முதலமைச்சர் இராமச்சந்திரனார் நாள்தோறும் அறிவிக்கும் நூற்றுக்கணக்கான எத்துப் புரட்டுத் திட்டங்கள் அடங்கா.)

தமிழ் பற்றி எண்ணுவதென்றால் அதில் பல துறைகள் உண்டு. இலக்கியம் கற்ற அறிஞர், இலக்கண அறிஞராக இருப்பார் என்று எதிர்பார்க்க முடியாது. அதே போல் இலக்கணந் தெரிந்தவர்கள் எல்லாரும் இலக்கிய ஆசிரியர்கள் ஆகிவிட முடியாது. இனி, இவ்விரு துறையினரும் மொழியமைப்புகளைத் தெரிந்த மொழியறிஞர்கள் ஆக மாட்டார்கள். மொழியாய்வு ஒரு தனித்துறை; எழுத்து ஆய்வும் ஒரு தனித்துறை. இரு துறைகளும் ஒன்றுக்கொன்று நெருக்கமுடையன. கண்ணும் காதும் நெருக்கமான உறுப்புகளாயிருப்பினும் ஒரே மருத்துவரால் ஆயக்கூடியன அல்ல. இப்படியிருக்க வெறும் தட்டெழுத்துக் காகவும், மின்னணுப் பொறிக்காகவும் எழுத்துகளை வெட்டிச் சிதைப்பது, எல்லாரும் எளிமைக்காகக் குடுமி வைத்துக் கொள்ள வேண்டும் என்பதும் மொட்டையடித்துக் கொள்ளவேண்டும் என்பதும் போன்ற வெட்கக் கேடான மூடச் சீர்திருத்தமே!

அண்மையில் பெரியார் பெயரால் அரசு கொண்டு வந்துள்ள எழுத்துச் சீர்திருத்தம் இவ்வாறான ஓர் அஃரைகுறைச் சீர்திருத்தமே. (நல்ல வேளை! இக்கால் உள்ள தமிழ் வளர்ச்சித் துறை நெறியாளர் திரு. கொண்டல் சு. மகாதேவனின் மண்டை வீங்கித் தனத்தால் 'உயிரும் மெய்யும் மட்டும்' என்னும் ஒருவகை முண்டச் சீர்திருத்தத்தை அரசு ஏனோ செயற்படுத்தவில்லை! அம்மட்டில் தமிழ் பிழைத்தது!)

இனி, இக்கால் கொண்டு வரப்பெற்ற எழுத்துச் சீர்திருத்தம் பெரியாரின் திட்டமும் அன்று; ஒரு வெங்காயமும் அன்று! அந்நிலை ஏற்கெனவே இருந்த அமைப்புத்தான். பெரியாரோ பிறரோ ஏதோ புதிதாகக் கண்டுபிடித்த சீர்திருத்தம் அன்று அது. (மேலும், பெரியார் குமுகாய, இன, மூட நம்பிக்கை, சாதியொழிப்பு, மதப் பேதைமை முதலிய சீர்திருத்தங்கட்காகவே தலைமேல் வைத்துப் போற்றி வணங்கப்பட வேண்டியவரே யன்றி, மொழித் திருத்தத்திற்காகவோ எழுத்துத் திருத்தத்திற்காகவோ அன்று என்பதை அவரைச் சார்ந்த அனைவரும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.) ஐகாரம் (ை) முன்பே, இக்கால் கொண்டு வந்துள்ள சீர்திருத்தத்தில் உள்ளதுபோல், எல்லா உயிர்மெய்களுடனும் தனித்துத்தான் எழுதப்பெற்று வந்தது. இப்பொழுதுள்ள ஐகாரம் (ை) உயிரெழுத்து ஐ யின் மேற்பகுதிக் குறியீடே. அது முன்காலத்தில் ஓலைச்சுவடிகளில் எழுதும் எளிமை கருதி ஐகாரக் கொம்பு (ை) ஆக மாற்றப் பெற்றது. அது முன்பு உயிர்மெய்யெழுத்தாக எழுதும் பொழுது கை, ஙை, னை, ணை என்றுதான் எழுதப் பெற்று வந்தது. கையெழுத்து முறையில் னை–யை எழுத வேண்டுமானால் நான்கு சுழிகளும் ணை–யை எழுத வேண்டுமானால் ஐந்து சுழிகளும் தொடர்ந்து இடுவது, எழுதும் விரைவைக் குறைத்ததுடன், ஒன்று இரண்டு என்று சுழிகளை எண்ணிக் கொண்டு எழுதவேண்டிய வீண் வேலையையும் கட்டாயத்தையும் உண்டாக்கியது. எனவேதான் ஐகார(ை)த்தின் ஒற்றைச் சுழியை மட்டும் எழுத்துடன் இணைத்து எழுதும் பழக்கத்தைக் கையாண்டனர். அதனையும் படுக்கையாக இணைத்து எழுதினால் இரு சுழி 'ன'க்கும் முச்சுழி 'ண'வுக்கும் வேறுபாடு தெரியாதாகையால் மேலே தூக்கி நிறுத்தி னை – ணை – லை – ளை என்று எழுதும் முறையைக் கையாண்டனர். மற்றபடி மற்ற உயிர்மெய்யெழுத்துகளான க, ங, ச, ஞ, ட, த, ந, ப, ம, ய, ர, வ, ழ, ற ஆகிய 14 எழுத்துகளுக்கு மட்டுமே தனித்து ஐகாரத்தை (ை) முன்னாக இப்பொழுது இருப்பது போலவே எழுதி வந்தனர். 14 எழுத்துகளுக்கு மட்டும் ஐகாரத்தைத் தனித்து எழுதிய தமிழ் முன்னோர்கள் ல, ள, ன, ண ஆகிய நான்கு எழுத்துகளுக்கு மட்டும் எழுதத் தெரியாமல் விட்டு விட்டனர் என்று இப்பொழுதுள்ள சீர்திருத்த மேதைகள் கருதிவிட வேண்டா. அவ்வளவு மூடர்களல்லர் நம் முன்னோர்கள். ஏதோ அறிவு அல்லது பகுத்தறிவு

இப்பொழுது மட்டும் வானத்திலிருந்து 'பொதுக்'கென்று பொத்துக்கொண்டு குதித்து வந்ததாக நினைத்துக் கொள்ளக் கூடாது. நம் முன்னைய மொழியறிஞர்களின் ஓர் எள் மூக்கத்துணை மூளைத்திரட்சிக்கும் நம் மூளைத்திரட்சி அனைத்தும் உறை போடக் காணாது. அவர்களின் மதிப்பை நாமே உயர்த்திக் கொள்வதும் நம்மின் ஒருவகை அறியாமை அல்லது காரறிவாண்மை யாகுமே யன்றிப் பகுத்தறிவாகாது.

இனி, ற, ன வுக்கு கால் (ா) போட்டு எழுதும் செய்தியும் இத்தகையதே. 'ா' வீரமாமுனிவர் காலத்தில்தான் உருவானது என்பது நம் எல்லார்க்கும் தெரியும். அதற்குமுன் கால் (ா) வெறும் நேர் கோடாகவே (|) இருந்தது. 'ற'ணா, 'ன'னாவுக்குப் பக்கத்தில் கோடு இட்டு எழுதுவது, எழுதும் கையோட்ட விரைவில் 'று'னாவையும் 'னு'வன்னாவையும் குறித்து விடலாம் என்ற குழப்பத்தை நீக்கவே அவர்கள், நேர்கோட்டைக் கால் 'ா' ஆக்கி எழுதினர். மேலும் இப்பொழுதுள்ள எகர ஒகரக் குறியீடுகளான ஒற்றைச் சுழிக் (ெ) கொம்பும், இரட்டைச்சுழிக் (ே) கொம்பும் எங்கோ புதியனவாக முளைத்த எழுத்துகள் அல்ல. எகர ஒகரத்தின் மாறிய வடிங்களே! அவற்றையும், குழப்ப நீக்கத்தையும், எழுதும் எளிமையையும் கருதியே இக்கால் வழங்கிவரும் முறையில் எழுதி வந்தனர். இவையெல்லாம் எண்ணியும் எழுதியும் பார்த்தால் விளங்காமல் போகா.

இப்பொழுதுள்ள தட்டச்சு, மின்னணு முறைகளின் எளிமைக்காக நீண்ட நெடுங்காலமாக ஏற்பட்டு வந்து, திருந்தி (படிமுறை வளர்ச்சியில்) பண்பட்டு வழங்கும் இப்பொழுதுள்ள எழுத்துமுறைகளை மாற்றுவது என்பது, குல்லாவுக்காகத் தலையையும் செருப்புக்காகக் காலையும் வெட்டிச் சிதைக்கும் முறையே ஆகும். இன்னும் இதைவிட இழிவானதும் கேடானதுமான சீர்திருத்தம், மண்டைக்கனம் பிடித்த கொண்டல் மகாதேவனின் முண்ட எழுத்தாராய்ச்சி! அவர் ஆங்கில மொழிக்கு 26 எழுத்துகளே என்னும் மேதை. ஒலி முறைக்கும், எழுத்து முறைக்கும் வேறுபாடு தெரியாத அறிஞர் (!) அவர். ஒலிப்பது எழுத்தாகாது என்று அவர் அறியாமல் (26 x 4) 104 எழுத்துகளுள்ள ஆங்கிலத்திற்கு 26 எழுத்தே என்று தருக்கிக் கூறி வருகிறார். எழுதப்படும் வரி

வடிவமே எழுத்து என்பது இலக்கண நூலின் முதற்பாடம்! அதனை அவர் அறிந்தும் அறியாதவர் போல், ஆங்கிலமொழி எழுத்துகள் குறைந்த மொழியென்றும், தமிழ்மொழி எழுத்துகள் மிகுந்த மொழியென்றும் மொழிநூல் பற்றி ஏதுமறியாப் பொதுமக்களிடம் கரடியாடி 'உயிரும் மெய்யும்' என்ற ஓர் அறிவற்ற எழுத்துச் சீர்திருத்தத்தைப் பல மேடைகளில் பேசியும், தாள்களில் ஓயாமல் எழுதியும் காட்டி வருகிறார். தமிழ் வளர்ச்சித்துறையில் தப்பித்தவறி அமர்த்தப்பட்டுவிட்ட இம்மண்டைக் கொழுப்பு நிறைந்த சுண்டைக்காய் அறிஞர், எதையாவது புதுமையாகச் செய்து காட்டித் தம் பெயரைத் தமிழ்மொழி வரலாற்றில் என்றென்றும் நிலைநிறுத்திவிட நினைக்கின்றார் போலும்! இவர் மட்டும் ஏதோ அறிவியலும் தமிழும் கற்றவர் போலும், மீதிப் பெயருக்கு அறிவியல் அறியாவியல் போலும் கருதிக்கொண்டு தம் பதவிப் பெருமையாலும், அதிகார வலிமையாலும் ஏதோ அடிக்கடி அரற்றி வருவதை நாம் கண்டு கொள்ளாமல் இது நாள் வரை இருந்தோம். இவரின் விடாப்பிடியான தூண்டுதல்களாலேயே இற்றையுள்ள திரு. இராமச்சந்திரனின் அரசு, தமிழ் எழுத்துகளில் கைவைக்கும் துணிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இனி, அரசு அறிவித்துள்ள ஐ, ஔ என்னும் உயிரெழுத்து களை அய், அவ் என்று எழுதக் கட்டளையிட்டது முழு மூடத்தனமானதும், தமிழ் அறிவற்றதுமான ஓர் அடாவடிச் செயலேயாகும். அய், அவ் என்று எழுதுவது எப்படித் தனி உயிரெழுத்தாகும்? உயிரும் மெய்யும் சேரந்த எழுத்தன்றோ அது. ஐ–யை அய் என்று எழுதத் தொடங்கினால் ஐகாரத்திற்கு (ை) இங்கென்ன வேலை? 'கை'யைக் 'கய்' என்றும் 'பை'யைப் 'பய்' என்றும் எழுதத் தொடங்கி விடலாமா? இஃது என்ன மூடத்தனம்? குழப்பம்? இவற்றால் எத்தனைச் சொற்குழப்பம், பொருட்குழப்பம் இலக்கணக் குழப்பம் நேரும் என்பதை இவர்கள் அறியாமற் போனது ஏன்? உயிரெழுத்து என்பது தனி ஓர் எழுத்து! உயிரும் மெய்யும் கலந்து எழுதினால் அஃது எப்படி உயிரெழுத்து ஆகும்? இஃது என்ன பேரறியாமை! இந்த மூளைக் கிறுக்குத் தனங்களை யெல்லாம் இவர்களைச் செய்யச் சொல்லி இவர்களுக்கு அதிகாரம் கொடுத்தது யார்? இராமச்சந்திரன் என்ன தமிழறிஞரா?

தமிழறிஞராயினும் எப்படி இவர் ஒருவர் நினைப்பதே சரியென்றாகும்? அதனை அறிஞர் உலகம் ஒப்ப வேண்டாவா? நாளைக்குத் தமிழ்மொழியே பிடிக்காத 'துக்ளக்' இராமசாமிகள் ஆட்சிக்கு வந்தால் ஆங்கில 'F'ஐயும் 'Z'ஐயுமன்றோ தமிழ் எழுத்துகளாக மாற்றுவதற்குக் கட்டளையிடுவார்கள். இஃது இறுதியில் எங்கே போய் நிற்கும்? எதில் போய் முடியும்?

இனி, முடிவாக, இப்பொழுதுள்ள தமிழ் எழுத்துகளில் ஏதேனும் அறிவியல் முன்னேற்றத்தடை, உண்மையிலேயே இருக்குமானால் அத்தடை நீக்கப்படும் முயற்சிகளுக்கு எழுத்துச் சீர்திருத்தம் எந்த அளவில் தேவை என்று உண்மைத் தமிழ் அறிஞர் குழு ஒன்றை அமர்த்தி ஆய்ந்து, அதன் முடிவை முதலில் மக்களுக்கு அறிவித்து, வரும் விளக்கமான ஆய்வறிவுரைகளுக்குப் பின், அவற்றைச் செயல்படுத்துவது பற்றி எண்ண வேண்டுமே தவிர, தான்தோன்றித் தனமாய் எதையும் அரசு செய்துவிட முயற்சி செய்வதோ, அறிஞர் பெருமக்களையும், பொது மக்களையும் அறவே மதியாமல் புறக்கணித்து விடுவதோ, அறிவுடைமையாகாது; அதிகார வெறித்தனம் கொண்டது ஆகும் என்று இது தொடர்புள்ள அரசு அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் தெரிவித்துக் கொள் கின்றோம்.

இனி, எழுத்துச் சீர்திருத்தம் அறவே வேண்டுவதன்று என்னும் கொள்கையுடைவரல்லம் நாம், காலத்திற்குத் தகுந்த மாற்றங்கள் எதிலும் எங்கும் வேண்டப்படுவனவே! அவற்றைக் கருத்துக்குத் தகுந்த மாற்றமாகவும் செய்தல் வேண்டும் என்பதே நம் கொள்கையாகும். அடாவடித்தனமாக ஒரே மட்டையடியில் கொணரும் அறிவு நிலைச் சீர்திருத்தங்கள் மிக ஆய்வுக்குப் பின்னரே கைக்கொள்ளப் படுதல் வேண்டும். 'துக்ளக்' தலைநகர மாற்றம் போன்றதன்று தமிழ் எழுத்துச் சீர்திருத்தம். தமிழ்மொழி எவ்வாறு இயற்கை அமைப்பும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் பண்பட்ட வளர்ச்சியும் உடையதோ, அப்படியே, தமிழ் மொழியின் ஒலியமைப்பும், வரி வடிவமும், இயற்கையோடியைந்த பல்வகையான படிநிலை வளர்ச்சிகள் கொண்டனவாகும். அவ்வரி வடிவங் களுக்கும் ஒலி வடிவங்களுக்கும் மெய்ப்பொருள் விளக்கங்களும் உண்டு. அவற்றையெல்லாம் பெரியார் சீர்திருத்தம் என்னும்

பெயரால் ஒரேயடியாகத் தீர்த்துக் கட்டுவது அடாத செயல்! குற்றமுடைய செயலும் ஆகும்! எனவே தமிழக அரசு இக்கால் வெளியிட்டுள்ள தமிழ் எழுத்துச் சீர்திருத்தக் கட்டளையைத் தள்ளிப் போட்டுத் தக்க முறையில் மறு ஆய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்

மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு

தென்மொழி
சுவடி 15
ஓலை 5 (நவம்பர் 1978)

19. தமிழ் ஐ ஔ எழுத்துக்கள்

[திரு. கா. அப்பாத்துரை எம்.ஏ., எல்.டி.]

'தமிழ் எழுத்துக்களில் ஐ, ஔ தமிழுக்கே தொன்முதல் உரிமையுடையனவா, அல்லவா?' என்ற ஐயம் பலருக்கு ஏற்பட்டுள்ளது. காரணங்கள் கீழ் தரப்பட்டுள்ளன:

(1) 'ஔ' தமிழில் தனித்து உயிராகவும், உயிர்மெய்யாகவும் மிக அருகலாகவே வழங்குகிறது. இடையிலும், கடையிலும் அது வருவதில்லை. ஔ சொல்லின் முதலில் அவ், அவு எனவும் எழுதப் பெறுகின்றன, ஒலிக்கப்பெறுகின்றன. வகரமடுத்தன்றி அது வருவதும் இல்லை. (எ—டு. ஔவை — அவ்வை, மௌலி — மவுலி)

(2) 'ஐ' என்ற எழுத்தும், அய், அயி என எழுதப்படவும், ஒலிக்கப்படவும் செய்வதுண்டு. அதாவது யகரத்தின்முன் தனிக்குறிலின்பின் அய் எனவும் மற்ற இடத்தில் அயி எனவும் வருகிறது. தவிரத் தனிக்குறிலல்லாத விடத்தில் யகர அகர உயிர்மெய்யின் முன் அது அகரமாகவே ஒலிக்கப்பெறுகிறது. சில சமயம் அங்ஙனம் எழுதவும் பெறுகிறது. (எ—டு. ஐயை — அய்யை, மையல் — மயல், பழைய — பழய)

(3) தனி எழுத்தாகவும் ஓரெழுத்தொரு மொழியாகவும் வரும்போதன்றி இவை நெடிலல்ல; நெடிற்குறுக்கம் அல்லது குறில் என இலக்கணப் புலவரால் வகுக்கப்பட்டுள்ளன.

எனவே, வடமொழி எழுத்து முறை பின்பற்றி ஐ, ஔ தமிழ் நெடுங்கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கலாமோ என்று சில வடமொழி உயர்வுப் பற்றாளரும், இன்று பல தமிழ்ப்பற்றாளரும் எண்ணு கின்றனர். அகர இகரம் ஐகாரமாகும், அகர உகரம் ஔகாரமாகும் என்ற தொல்காப்பிய நூற்பாக்கள் இதற்கு ஆதாரமாகக் காட்டப்படுகின்றன.

எதிர்த்தரப்பு விளக்கமும் விடையும்

(1) தமிழ் நெடுங்கணக்கு வடமொழியையோ, ஆரியத்தையோ பின்பற்றியதன்று. உலகில் ஆரிய மொழிகள் எதற்கும் நெடுங்கணக்கு முறையோ, எழுத்துவடிவோ எங்கும் இருந்த தில்லை. உலகுக்கு வரிவடிவு தந்த நாட்டினங்கள் எகிப்திய, சால்டிய, இந்திய (திராவிட அல்லது தமிழ்) சீன இனங்களே. இவற்றுள்ளும் இன்றைய இந்திய மொழிகள் அனைத்துக்கும் அடிப்படையான நெடுங்கணக்கு வரிசை மரபு இந்தியாவுக்கு மட்டுமே தனிச் சிறப்புடையதாதலாலும், பிறநாட்டு நெடுங்கணக்கு வரிசையில் இன்றளவும் இத்தகு வரிசைமுறை காணப் படாததாலும், ஆரியர் வருமுன்பே இந்தியாவில் எழுத்துமுறை இருந்ததாலும், இன்றைய தமிழ் நெடுங்கணக்கு வரிசையும் பிற இந்திய மொழிகளனைத்தின் நெடுங்கணக்கு வரிசையும் (திராவிடத்துக்கு) தமிழ்ப் பேரினத்துக்கு உரியதேயாகும்.

(2) ஐ (அ + இ) ஔ (அ + உ) இரண்டும் தனி உயிர்களல்ல. இணை உயிர்கள் என்று இலக்கணப் புலவர் எடுத்துக் காட்டியுள்ளார். இன்று ஆங்கில முதலிய மொழிகள் பலவற்றுள்ளும் இவ் இணைஉயிர்கள் உண்டு. வேறு இணை உயிர்கள் பல இக்கால மொழியிலும் பண்டை ஆரிய மொழிகளிலும் உண்டு. உ ஆ இ (oi) தற்கால ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன் மொழிகளில் உண்டு. ஆயினும் இவை புதிய ஒலிகள். பண்டை ஆரியத்திலும் அதன் வழி கிரேக்க மொழி, லிதுவேனிய மொழிகளிலும் (ai, ái, oi, ói, ei, éi, au, áu, ou, óu, eu, eú என்ற) 12 இணை உயிர் ஒலிகள் உண்டு. ஆனால், இன்றைய உலகில் பழைய ஆரிய இணை உயிர்களில் மீந்திருப்பவை ஐ, ஔ இரண்டு மட்டுமே. வடமொழியில் இவை கூட மீந்திராமல் மாறிவிட்டன. இன்றைய

வடமொழி ஐ, ஔ, ஆரிய ஐ, ஔ அல்ல. ஆரிய ஆய், ஆவ் என்பவற்றின் குறுக்கமே. வட இந்தியரால் இன்றும் ஐ, ஔ இரண்டும் இ ஆ, (□ :), உ ஆ (□':) என்றுமே ஒலிக்கப் பெறுகின்றன. ஐ, ஔ என்ற பிறமொழி ஒலிகளை, அவர்கள் ஆஇ, ஆஉ என்றே குறிக்கின்றனர். (எ—டு. ஆங்கிலம் Pie; தமிழ் பை, இந்தி எழுத்தில் பாஈ) இதனால் ஏற்படுவது யாதெனில் ஐ, ஔ பண்டைய ஆரிய மொழியில் இருப்பினும் அவற்றின் ஒலிப்பு தமிழ் ஐ, ஔ அல்ல; இந்தியாவுக்கு வந்த பின்னும், பிறநாட்டில் ஆரியரல்லாதவருடன் கலந்த பின்னும் ஆரிய மொழிகளின் 12 இணை உயிர் எழுத்துக்களுள் ஆரியரல்லாத இனத்தார்க்குப் பழக்கமான ஐ, ஔ மட்டுமே நிலை பெற்றும் புதிதாக உருப்பெற்றும் நின்றன. மீதி அழிந்தன. ஆகவே இந்தியாவில் ஐ, ஔ வடமொழியிலிருந்தோ ஆரியதிலிருந்தோ தமிழுக்கு வரவில்லை. தமிழிலிருந்தே ஆரியத்திற் புகுந்தன என்று காண்டல் எளிதாகும்.

(3) தமிழில் ஔ அருகலாக வருவதனால் அது தமிழ் எழுத்தல்ல வென்பது ஙா, ஙெ தமிழில் வராததால் அது பிற மொழிக்குரியவை என்பது போன்றதே. தமிழில் அது வகரத்தோடுதான் வருகின்றதெனில் (அ) ஆங்கிலத்தில் ‘க்யூ’ (Q) எப்போதும் ‘யூ’ (U) உடன்தான் வருகிறது; தமிழில் (ஆ) நகரம் தகரத்துடன் மட்டுமே வருகிறது என்று காட்டலாம். பௌவம், கௌவை, கௌவு, வௌவுதல், வௌவால் முதலிய தனித் தமிழ்ச் சொற்களில் அது இடம் பெறுகிறது.

(4) ஐ, ஔ இணையுயிராதலால் அஇ, அஉ என ஒலிக்கப் படலும் அயி, அவு என உடம்படு மெய் புணர்ந்து வரலும் இயல்பே. அவை மொழிக்கு இன்றியமையாததல்ல வாயிருப்பதும் அதனாலேயே. எல்லா மொழிகளிலும் அவற்றின் நிலை இதுவே. எல்லா மொழிகளையும் போலவே தமிழிலும் பிற திராவிட மொழிகளிலும் அது மற்ற உயிர்கள், மெய்களைவிட விரைந்த மாறுபாடுடையன. எனினும், இகர உகரக் குறுக்கத்தையும் தனி எழுத்தான ஆய்தத்தையும் சார்பெழுத்தாகவே கொண்டு, மகரக் குறுக்கத்தைச் சார்பெழுத்தாகக் கூடக் கொள்ளாத் தொல்காப்பியம் வெறும் இணையுயிரான ஐ, ஔ இரண்டையும் முதலெழுத்தாகவே

கொண்டது குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியர் காலத்தில் அவை தமிழுக்கு இன்றியமையா எழுத்தாகவே கொள்ளப்பட்டன என்பதில் ஐயமில்லை.

(5) தொல்காப்பியத்துக்கு முற்பட்ட காலத்திலேயே, பழந்தமிழ் அல்லது முத்தமிழ் அல்லது திராவிடம் ஐந்துக்கு மேற்பட்ட மொழிகளாகப் பிரியுமுன்பே, ஐ, ஔ திராவிட ஒலிகளுள் தனிப்பட்ட ஒலிகளாயிருந்தன என்பதைத் திராவிட மொழிகளின் ஒப்புமையால் அறியலாம். திராவிட மொழி ஒப்புமை ஆராய்ச்சியாளர் இதனை இன்றும் நன்கு ஆராய்தல் பயன்தரும். இன்று திராவிட மொழி ஆராய்ச்சிக்கு அரசியல் ஆதரவு தராமலும் ஊக்கம் கெடுத்தும் வருவதால் திராவிட மொழிகளின் புலவர் கூடிக்கலக்க முடியாதிருந்து வருகிறது. ஆனால் பழந்தமிழ் ஐ, மலையாளத்தில் அ, தெலுங்கு கன்னடத்தில் எ எனத் தனிச் சிறப்புடன் மாறுதலுற்றுங் காண்கின்றது. எனவே, அது திராவிடத் தொல் முதல் ஒலி என்பதில் ஐயமில்லை.

(6) தொல் முதல் திராவிட ஐ, ஔ அல்லாமல் பல திராவிட மொழிகளிலும் புதிதாக ஐ, ஔ ஒலிகள் அகர இகர அகர உகர இணைப்பால் ஏற்படுவதும் உண்டு. தமிழில் நறா – நறை – நறவு; அம்மா – அம்மை; கடமா – கடமை; நிலா – நிலவு; சுறா – சுறவு என ஆ ஐ ஆகவும் அ வு (ஔ) ஆகவும் மாறுகின்றன. செந்தமிழிலக்கணம் ஔ இறுதியில் வராதெனக் குறித்ததால் நறவு, சுறவு ஔகாரமாகக் கணிக்கப்படவில்லை.

(7) ஐ, ஔ என்பவற்றை அய், அவ் என்று குறித்தால் அவை ஐகார ஔகாரக் குறுக்கங்கள் ஆகுமேயன்றி, இலக்கணப் புலவர் குறித்த நெடிலாக முடியாது. அ இ, அ உ எனக் குறித்தால் அது தமிழ் மரபாகாது. அயி, அவு எனக் குறித்தால் அவை நிரை அசை அல்லது இணை அசையாகும். தனி அசை அல்லது நேரசை ஆகா. **இணையுயிரின் (Diphthong) தன்மை அறியாதவரே ஐ, ஔ தனி ஒலிகளோ எழுத்தோ அல்ல என்பர்.**

(8) இறுதி ஐ – அவு ஆகலாம் (புலை – புலவு) இவற்றுள் ‘அவு’ இந்துஸ்தானியில் ஆவ் ஆகிறது. (தமிழ் புலவு – இந்தி புலாவ்) தவிர, தமிழிலேயே ஐ குறுக்கமாக நில்லாத போது ஆய்

ஆகிறது. அவ - ஆவ் ஆகிறது. அழுத்தம் பெறாதவிடத்து ஐ ஔ என்பன அய், அவ் என ஒலித்து அழுத்தம் பெற்றவிடத்து ஆய், ஆவ் ஆகின்றன என்பதை ஈண்டுக் காணலாம்.

(எ-டு.) ஐ (அய்) < ஐ (ஆய்)

தந்தை, (விளி வேற்றுமை) தந்தாய்.

வந்தனை } முன்னிலை ஒருமை குறுக்க வடிவு { வந்தாய் (குறுகாவடிவு)

நட (தன்வினைப் பகுதி) நடவு, நடத்து (பிறவினைப் பகுதி - குறுக்கம்) நடாவு, நடாத்து (பிறவினைப் பகுதி - குறுகா வடிவு)

முடிவுரை

ஐ, ஔ இரண்டும் பண்டைத் திராவிட ஒலிகள். அவற்றின் முழு ஒலிப்பு ஆய், ஆவ். குறுகிய ஒலிப்பு அய், அவ். முழு ஒலிப்பு அயி, அவு என்றும் வருமாயினும் இவை ஈரசை அல்லது நிரை யசை ஆயின. வடநாட்டுத் தாய்மொழியாளரும் இம்மரபு பற்றியே ஐ, ஔகாரங்களை ஆய், ஆவ் என ஒலித்தனர். இக்காலத் தமிழரும் தமிழ்நாட்டு வடமொழிப் புலவரும் தமிழர் மரபில் நின்ற வடவரும் அதனை அய், அவ் என்று ஒலித்தாலும் பண்டை வடமொழி ஒலி பண்டைத் தமிழ் மொழியொலியே என்பதை வடமொழிப் புணரியல் (சந்தி இலக்கணம்) காட்டும்.

(எ-டு.) தஸ்மை + அதாத் = தஸ்மாயதாத்
(= அவனுக்கு) (= கொடுத்தாள்)

ததௌ + இயம் = ததாவியம்
(= கொடுத்தாள்) (= இவள்)

தமிழின் ஐ, ஔ எழுத்தும் பிற தமிழ் எழுத்துக்கள் யாவும் நெடுங்கணக்கு வகையும் இலக்கணமும் யாவும் தமிழே; தூய திராவிடமே. இவை எதுவும் வடமொழிக்கோ, ஆரியத்துக்கோ உரியனவல்ல. ஆயினும், வடநாட்டில் பெரும்பாலான சூத்திர,

தாழ்த்தப்பட்ட மக்கள் எனப்படுபவர் தமிழினத்தவரே ஆதலாலும்; எழுத்து முறை, இலக்கணம், இலக்கியம் வகுத்தவர் தமிழரும் தமிழினத்தவருமே ஆதலானும்; தமிழைப் பின் பற்றியே வடவர் நாகரிகப் பண்பு பெற்றனராதலானும், வடமொழி எழுத்து ஒலி, நெடுங்கணக்கு முறை, புணர்ச்சியிலக்கணம் ஆகியவை பேரளவு தமிழைப் பின்பற்றின என்று காணலாம்.

செந்தமிழ்ச் செல்வி
சிலம்பு 26
பரல் 6

20. ஐ, ஔ

[இரா. இளங்குமரன்]

ஐ, ஔ என்பவை தமிழ் நெடுங்கணக்கு குறுங்கணக்கு ஆகிய இரண்டிலும் இடம்பெற்ற நெட்டெழுத்துகள். அகர முதல னகர இறுவாய் என எண்ணப்பட்ட முப்பது எழுத்துகளுள் இடம் பெற்றவை. (1)

"ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ" நெட்டெழுத் தேழே எனப்பட்டவை (4). ஈரளபு இசைக்கும் எனப் பட்டவை (4). ஔகார இறுவாய்ப் பன்னீரெழுத்தும் உயிர் எனப்பட்டவை (8).

"குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே" (41)

என்பதை அடுத்து,

"ஐ ஔ என்னும் ஆயீ ரெழுத்திற்கு
இகர உகரம் இசைநிறை வாகும்" (42)

என அளபெடை யமைதி பெற்றவை.

"நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி"

என்று ஏற்கப் பட்டவை (43).

"குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே"

என்று தள்ளப் பட்டவை (44).

"ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி
இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி நெறியே" (45)

என்பதன் முதனிலையாம் இடத்தில் இருப்பவை.

இவை எல்லாம் ஆசிரியர் தொல்காப்பியர் காலத்திற்கு முற்படவே தமிழ் வழக்கில் இருந்தவை. என்ப, என்ப, என்மனார் புலவர், மொழிப, மொழிப எனப்பட்டவை.

நெட்டெழுத்து, ஈரளபு இசைப்பது, ஓரெழுத்து ஒருமொழி யாவது, அளபெடையாவது என்பவை 'அய்', 'அவ்' என்பவற்றில் உண்டா?

அய், அவ் என்னும் வடிவு உயிர் வரிசையில் வருமா? எகர ஒகரம் புள்ளி பெறவில்லையா எனின், குறில் நெடில் வேறுபாடு காட்டப் புள்ளி பெற்றதை அன்றித், தனியோர் எழுத்துப் பெற்றதா? நெட்டெழுத்துக்குரிய மாத்திரை இரண்டு என்றும், ஐ, ஔ நெட்டெழுத்து என்றும், நெடிலே அளபெடுக்கும் என்றும், அளபெடுக்கும் எழுத்து இன எழுத்து என்றும், நெட்டெழுத்து மொழி நிறைபுடையது என்றும் கூறிய இலக்கணம் எதுவும் 'அய், அவ்' என்பவற்றில் உண்டா?

ஐ, ஔ என்பவற்றை ஈரளபு இசைக்கும் நெடில் என்பதை அன்றி, ஒன்றரை மாத்திரை, ஒரு மாத்திரை என்றாரா தொல்காப்பியர்?

"ஐ, ஔ என்பவற்றைத் தனித்துக் கூறும் போது குறுகாது" என்றார். அவை சொல்லில் வரும்போது மாத்திரை குறுகும் இடமும் உண்டு என்றாரே அன்றி எல்லா இடங்களிலும் குறைந்து வரும் என்று கூறினரா? குறுகாத இடமும் உண்டு என்பது தெளிவு இல்லையா?

"ஓரெழுத்து மொழியாய் வருவன ஈரளபு இசைக்கும் நெடில்களே" எனின், அவ்வகையவை தாமே ஐயும் ஔவும், அவைசார் உயிர்மெய்களும். ஐ நெடிலாதலால் ஓரெழுத்து ஒரு மொழி என்னும் தகுதியைப் பெற்றமைக்கு அவ் 'ஐ'யே சான்று.

ஐ என்பதற்குரிய பொருள்கள் எத்தனை?

ஐ - ஐந்து என்னும் எண்; ஐவர், ஐவிரலிப் பூ, ஐவண்ணம்.

ஐ - அழகு; ஐவாய் - அழகிய வாய்

ஐ - உணர்வுக்குறி; “ஐயோ இவன் அழகு” ‘ஐ ஐ யோ’ ‘ஐ ஐ ஆ’ (ஐயையோ, ஐயையா) ஐ யா வோ

ஐ - சொல் ஈறு கிள்ளை, பிள்ளை, அன்னை, தந்தை, குதிரை

ஐ - தந்தை, தலைவன், தமையன், அரசன், தாய், தாயைப் பெற்ற தாய்; பாட்டி. பெருமகள் - காவுந்தி ஐயை

ஐயை - அருமைக்குரிய மகள்; மாதரியின் மகள்

ஐ - வேற்றுமை உருபு.

இவை வாழ்வியலில் காண்பவை.

“ஐ வியப் பாகும்”

என்பது தொல்காப்பியம்.

ஐ என்பதற்கு அகராதி தரும் பொருள்:

அரசன், அழகு, ஆசான், இரண்டன் உருபு, இருமல், எசமானன், ஓரிடைச்சொல், ஒரெழுத்து, கடவுள், குரு, கோழை. சாரியை (உ-ம்) ஒற்றினோ டேற்றை, சவ்வீரம், சிலேட்டுமம், சிவன், சுவாமி, நுண்மை, பிதா, யானையைப் பாகன் அதட்டும் ஓசை, முன்னிலை ஒருமை வினை விகுதி (உ-ம்) துடை, பண்புப் பெயர் விகுதி (உ-ம்) தொல்லை, வினைமுதற் பொருள் விகுதி (உ-ம்) பறவை, செயப்படுபொருள் விகுதி (உ-ம்) கொடை, கருவிப் பொருள் விகுதி (உ-ம்) பார்வை {வெள்ளிவிழா - தமிழ்ப் பேரகராதி}

ஔ : அழைத்தல் வியப்பு தடை இவற்றைக் காட்டுமோர் உபசருக்கம், அனந்தம், ஓரெழுத்து, ஔ என் ஏவல், ஔகாரம் (மேற்படி)

அய், அவ் என்பவற்றுக்கு இப்பொருள்கள் உண்டா?

அய்யவி – சிறு கடுகு
அய்யோ – துன்பச்சொல்
அவ் – அவை, அந்த

என்பவை தாமே இவற்றின் பொருள்; கடுகும் துன்பும் 'அய்' என்பதற்கு இல்லையே! அவியும் ஓவும் ஒட்டினால் அல்லவோ அப்பொருள்களைப் பெறும். அய், அவ் வேட்கையர் என்ன சொல்வர்?

'அரியே ஐம்மை' என்பதை (தொல். 839) 'அய் மய்', என்றால் மென்மைப் பொருள் தருமா? எனின், ஐ, ஔ என்பவற்றுக்கு உள்ள பொருள்களை யெல்லாம் அய், அவ் என்பவற்றுக்குத் தந்து விடுங்கள் என்பர்! மாற்றியாக வேண்டும் என்பதை அன்றி மற்றைச் சிந்தனை அவர்க்கு இல்லையே!

ஐ வரிசையில் வரும் ஓரெழுத்து ஒரு மொழிகள் எத்தகைய ஆழிய பொருள்களை யுடையவை! வேர் விளக்கம் உடையவை! விரிவாக்கம் பெற்றவை.

'வை' என்பதோர் எழுத்து. ஓரெழுத்து ஒருமொழி. பெருவழக்குச் சொல். "கண்ட கண்ட இடத்தில் வைப்பதா? இதை அங்கே வை." ஏவல், தொழில், வினை மட்டுமா?

'வை' வசைமொழி இல்லையா?

'வை'இய மொழி என்றாரே தொல்காப்பியர். ஏன்? அதன் விளக்க வரைவாகத்தானே வள்ளுவர்,

"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு"

என்றார்! இசைச் சொல்லை ஒருவர் மறந்தாலும் தம்மை ஒருவர் கூறிய வசைச் சொல்லை மறவாமல் என்றும் மனத்தகத்துக் கொண்டிருத்தல் உண்மையால்தானே 'வை'இய மொழி எனப்பட்டது.

'வை' என்பது நெல். நேரடியாக 'வை' என்பதை நெல் எனப் புரிய முடியவில்லை. ஆனால், நெல்தாளை, 'வைக்கோல்' என்பதும்; அதன் படைப் பையை 'வைக்கோல் போர்' என்பதும் கேட்டபின் 'வை' என்பது நெல் எனப் புரிகின்றது.

"வருமுன்னர்க் ச. வாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போ. க் கெடும்"

என்னும் குறளில் வரும் வைத்தூறும் புரிகின்றது.

"தையும் மாசியும் வையகத் துறங்கு"

என்னும் ஔவை மொழியில் வரும் 'வை அகம்' என்பது, வைக்கோலால் (கூரை) வேயப்பட்ட அகம் (வீடு) என்பதன் பொருளும் புரிகின்றது.

சோளம், கம்பு, கேழ்வரகு, சாமை, தினை, குதிரை வாலி, காடைக் கண்ணி, வரகு என உணவுப் பயன் பயிர்களுக்கும் நெற்பயிர்க்கும் வேறுபாடு உண்டு. சோளச்சோறு, கம்மஞ்சோறு, வரகுச்சோறு, கற்றாழஞ் சோறு, என்பவற்றில் வரும் சோறும் மூளை எனப்படும் சோறும் நெல்வழியாக அல்லது 'வை' வழியாக வந்தவையே. 'சொல்' என்பது நெல். சொல்லால் ஆக்கப்பட்டது சொன்றி, சோறு. எண்ணெய் (எள்ளில் இருந்து எடுக்கப்பட்டது) என்பது எப்படிக் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், ஆலிவ் எண்ணெய் என அமைந்ததோ அப்படி அமைந்தது சோறு என்பதாம்.

மற்றைப் பயிர்களுக்கும் நெற்பயிருக்கும் உள்ள கதிரையும் அதன் மணியையும் அல்லது அரிசியையும் எடுத்துப் பார்க்க வேறுபாடு புலப்படும்.

சோளம் கம்பு அரிசிகளுக்கு மேல் உள்ள உமியையும் நெல் உமியையும் பார்க்க. நெல் மணியை மூடியிருக்கும் பெட்டி போன்ற அமைப்பைப் பார்த்தால், போர்வையால் பொதிந்து மூடி வைத்தது போல பெட்டிக்குள் வைக்கப்பட்ட அணிகலம் போல – அரிசி இருத்தலை அறியலாம். அதன் (நெல்) அமைப்பைக் கண்டு அதன் அருமை உணர்ந்த பெருமக்கள் நெல் போன்றவற்றை 'நெற்று' என்றனர். நெல் + து = நெற்று.

துவரை நெற்று, பயற்று நெற்று, மொச்சை நெற்று என்று பயறு வகைகளுக்குப் பெயர் சூட்டினர். அவ்வளவில் அமையாமல் தேங்காய் நெற்றுக்கும், விலங்கு, பறவை, மாந்தர் நெற்றிக்கும் பெயர் சூட்டினர்.

'வை' என்பதற்கு அமைந்த அப்பொருள் நிலை 'வய்' என்பதற்கு உண்டா?

'வை' ஆம் நெல் மூக்கைப் பாருங்கள்! மழிப்புத் தகட்டினும் கூர்மையாய் ஊசிபோல் முகப்புக் கொண்டிருத்தலால்தான் ஆசிரியர் தொல்காப்பியர் 'வையே கூர்மை' என்றார்! வை, வைந்நுனைப் பகழி எனக் கூரிய நுனையையுடைய அம்புக்கு ஆயிற்று. 'வய்' என்பது ஓரெழுத்து ஒருமொழியா? குறிலொற்றுத்தானே அது?

இனி, வைப்பு, வைப்பகம், வையம், வையகம், வைப்புழி என்றெல்லாம் உலகைக் குறிப்பதாயிற்று. அப்படி என்ன உலகம் வைத்திருக்கிறது என்றால், "எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா! இறைவா!" என்று மறுமொழி தருகிறாரே! இன்னும் புலப்பட வில்லையா? உயிரில் பொருள் உயிர்ப்பொருள் என்பவற்றை எண்ணி முடிக்க எவராலும் முடியுமா?

கல் வகை எத்தனை? புல் வகை எத்தனை? இப்படி எத்தனை எத்தனை வகைகள்? வையம், வையகம், வைப்புழி எனப்படும் மண் வைத்திருக்கும் பொருள்களையேனும் எண்ண முடியுமா? நம்மை வைத்திருக்கும் அது நமக்காக எவ்வெவற்றை வைத்துள்ளது?

உணவு வகை மட்டுமா? மருந்து வகை மட்டுமா? காட்சி வகை மட்டுமா? கருத்து விளக்க வகை மட்டுமா? நம்மைக் காலமெல்லாம் வைத்து வளர்த்து வரும் அது கால முடிவிலும் தன்னோடு வைத்துக் கொள்கிறது!

ஓடும் அருவி நீர், ஆற்று நீரை அன்றி ஊற்று நீரை வைத்து ஊட்டுகிறது. தோண்டிச் சென்றால் மண் எண்ணெய், கல் எண்ணெய், கரி எண்ணெய், நிலக்கரி, தங்கம், மணி என்பவை என்ன! இவ்வளவும் வைத்துள்ளது 'வை'யா? 'வய்'யா?

வை என்பதை எல்லாம் 'வய்' என்பதற்கு வைத்துக் கொள்ள வேண்டியதுதானே என்பர்! ஆம் மொழியை முடமாக்க முடிவு செய்தவர் வேறு என்ன சொல்வார்?

இட்டுக் கட்டும் வெற்றுச் சொல் ஒன்றுதானும் இல்லாத ஒருமொழி தமிழ்மொழி. 'அய்'யோ 'அவ்'வோ அப்படி வேர் விளக்கம் கொள்ள வாயாதவை.

எடுத்துக்காட்டுக்காகச் சொல்லப்பட்ட ஒன்று 'வை' என்னும் ஓரெழுத்து ஒருமொழி.

ஐ, கை, தை, நை, பை, மை, என்பனவும்; ஔ, கௌ, தௌ, நௌ, பௌ, மௌ, வௌ என்பனவும் ஓரெழுத்து மொழிகளாய் அமைந்தவை என்பதை உணர்க. இவற்றின் வேர் விரிவு விளக்கம் காண்பார், இவற்றை விட்டொழிக்க எண்ணார்!

ஐ, ஔ என்பவற்றை நெட்டெழுத்தாகக் கொள்ள வில்லையேல் இவற்றுக்குப் பொருள் விளக்கம் இல்லையாம். ஏன்? 'நொ, து' என்பவை குறில்கள் தாமே! இவ்விரண்டும் பொருள் தரவில்லையா? இவ்வாறு ஐ, ஔ என்பவற்றைக் குறிலாகக் கொண்டு பொருள் கூறலாமே எனலாம். ஆனால் நொ, து நிலையை அறியாப் பார்வையின் விளைவில் வந்த வினா இதுவாம்.

நோ என்னும் நெடில் குறுகி நின்று நோய், நோவு, துன்பம் முதலாம் பொருள் தந்ததை அன்றி 'நொ' என்னும் குறிலுக்கு அப்பொருள் இல்லை.

தூ என்னும் நெடில் குறுகி நின்று உரை, உண் முதலாம் பொருள் தந்ததை அன்றித், 'து' என்னும் குறிலுக்கு அப்பொருள் இல்லை. துய்ப்பு, துப்பு, துச்சில், துக்கடி, துக்கடா, தும்மல், தும்பி என்று வருவன துச்சு, துக்கு, தும்மு என்னும் அடிச் சொல்வழி வந்தவை அன்றி 'து' என்னும் குறில்வழிப் பொருள், அவை அல்லவாம்.

ஆதலால் ஐ, ஔ என்பவற்றைக் குறிலாகக் கொள்ளலும், குறிலுருவும் பொருள் தரும் எனக் கூட்டி மொழிதலும் ஆகாவாம்.

ஐ, கை, தை, நை, பை என்பவற்றை அய், கய், தய், நய், பய் என்று எழுதினாலும் அவற்றை ஐ, கை, தை, நை. பை என்று ஒலித்தல் அல்லாமல் மொழியும் நிரம்பாது சொற்பொருளும் நிரம்பாது. இயல்பாக ஒலித்துப் பார்த்து, இயலளவால் கேட்டுப் பார்த்து இரண்டன் வேறுபாடும் காணல் வேண்டுமேயன்றி, மாற்றுதலே எம் விடாப்பிடி என்பார்க்கு எம்மருந்தும் இல்லை!

ஐ, ஔ என்பவை மற்றை நெடில் போல் ஓரொலி உடையவை இல்லை. வடமொழியில் இருந்து வாங்கிக் கொண்டவை இவை; மற்றை ஈரளபிசைக்கும் நெட்டெழுத்தொடும் ஒட்டாதவை என்பர். இவ்வாறு கூறுபவர் தொல்காப்பியர் ஆணை மொழி மீறி அடாப்பழி சுமத்துபவர்.

தொல்காப்பியர் காட்டிய மொழிவரம்பு கண்டும், காணமாட்டேம் எனக் கண்ணைக் கட்டி மூடிக் கொண்டு அவரைக் கண்மூடி என்று கரைபவர்! கனத்த குரலெடுப்பவர். தொல்காப்பியர்,

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

என்று வரம்பு கட்டினார். வடசொல் ஒருகால் புகுந்தாலும், அவ்வட எழுத்துப் புகல் ஆகாது என்றவர். அவரே வட எழுத்தை எடுத்து இணைத்துக் கொண்டார் என்பது அறனழிப்பாம்; முறை கேடாம். சொல்லில் வரும் எழுத்தே ஆகாது என்றவர், நெடுங்கணக்கு அடங்கலிலே அவ்வட எழுத்தை எடுத்து வைத்துக் கொண்டார் என்பது மனமறிந்த பொய் வழியாம்.

இனி, வடமொழியில் உள்ள ஒரு சொல் தமிழிலும் இருந்தால் உடனே கச்சை கட்டிக் கொண்டு வடமொழியில் இருந்து எடுத்துக் கொண்ட சொல் என்பது ஒரு போலி வெறித்தனம். "வேற்று மொழிச் சொல்லை எம் தெய்வ மொழி ஏற்காது" என்பது மொழித் திரிபுக் கொள்கை. மாந்தரால் ஆக்கப்படாத தெய்வமொழி ஒன்று உண்டு என்பது மூளைக் கோறாறினால் கூறிக் கொள்ளலாமே அன்றி முறையறிந்தார் கூற மாட்டார்.

'அகல வாயைத் திற' – பிறக்கும் ஒலி 'அகரம்'! வாயைத் திறந்து காற்று வெளிப்பட்ட அளவினை அன்றி எவ்வுறுப்பும் எம்முயற்சியும் செய்யாமல் வருவது அகர ஒலி. இவ்வகரம்தானும் தமிழில்லை என்பார் பேரறிஞராகப் பாராட்டப்படும் மண் இம்மண்.

தமிழ் என்னும் மொழிப் பெயர்தானும் தமிழ் இல்லை என்னும் உச்சிக் கிளைப் பிடியர் எதை ஒப்புவார்?

'உலகு' என்றால் உடனே 'லோக்' வந்துவிடும்!

உலகுக்கு உள்ள வேர்ச் சொல், இருவகை வழக்கு, விரிவாக்கம் ஆட்சிப் பழமை என்பவை பற்றி எல்லாம் எண்ணாமல் கூறுவார் எதனை ஒப்புவார்?

மொழிஞாயிறு பாவாணரைத் தமிழ் வேர்ச்சொல் ஆய்வில் ஆழ இறங்கத் தூண்டியதே இவ்வெதிரிடையார் போக்கே (குற்றமே) யாம்!

மேல் இணைப்பு

ஐ, ஔ ஒன்றரை மாத்திரை என்று தொல்காப்பியர் கூறினாரா? யாப்பருங்கல உரை, வீர சோழியம் என்பவை ஒன்றரை மாத்திரையாய்க் குறுகும் என்றன. மொழி முதற்கண் ஐகாரம் குறுகின் ஒன்றரை மாத்திரை அளவினது என்பது அவிநயம். மொழி முதற்கண் குறுகாது என்பது இளம்பூரணர் உரை (தொல். எழு.

57) சிவஞான முனிவரும் இக்கருத்தினரே.

நேமிநாதமும் நன்னூலும் மூவிடத்தும் குறுகும் என்கின்றன. ஐ, ஔ என்பவற்றைத் தனித்துக் கூறும் போதோ, ஓரெழுத்து ஒரு மொழியாய் வழங்கும் போதோ நெடில் நிலையில் இருந்து மாறுமா?

எ–டு: ஐ, கை, தை, நை, பை, மை, வை;
ஔ, கௌ, தௌ, வௌ;

நெடில் நிலை மாறாத இவற்றின் தகுதியை அய், அவ் என்பவை அடையுமா?

"அகர இகரம் ஐகார மாகும்" (54)

"அகர உகரம் ஔகார மாகும்" (55)

"அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"
(56)

முதல் நூற்பாவிற்கு, "அகரம் இகரம் ஐகாரம் ஆகும் – அகரமும் இகரமும் கூட்டிச் சொல்ல ஐகாரம் போல இசைக்கும். அது கொள்ளற்க" என்றும், இரண்டாம் நூற்பாவிற்கு, "அகரம் உகரம் ஔகாரம் ஆகும். அகரமும் உகரமும் கூட்டிச் சொல்ல ஔகாரம் போல இசைக்கும். அது கொள்ளற்க" என்றும் மூன்றாம் நூற்பாவிற்கு அகரத்தின் பின்னர் இகரமே அன்றி யகரமாகிய புள்ளியும் ஐ எனப்பட்ட நெட்டெழுத்தாம், அவை வடிவு பெறத் தோன்றும் என்றெழுதி ஐவனம் அய்வனம் என வரும் என்றார். மேலும், மெய் பெறத் தோன்றும் என்றதனான், அகரத்தின் பின்னர் உகரமே யன்றி, வகரப் புள்ளியும் ஔகாரம் போல வருமெனக் கொள்க என்றவாறு. ஔவை – அவ்வை எனக் கண்டு கொள்க" என்றார்.

அ + இ = ஐ

அ + உ = ஔ

எனக் கொள்ள வேண்டா என்றதைச் சிவஞான முனிவர் தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தியில், "ஆகும் என்றதனை ஆகாதென விலக்கப்படும் என்பாரைப் 'பன்னீ ருயிரும் மொழி முதலாகும்' என்புழியும் ஆகும் என்பதனால் பன்னீருயிரும் மொழி முதலாகா என விலக்கப்படும் போலும் எனக் கூறி மறுக்க" என்கிறார்.

முன்னிரு நூற்பாக்களுக்கும் வயிரம் – வைரம் (அ இ); கவுதாரி – கௌதாரி (அ உ) எனத் தெளிவு கூறும் பாவாணர்,

"அய்வனம், அய்யர் என்றாற் போல்வன செய்யுளில் எதுகை நோக்கி வரும் திரிபு வடிவங்களாகும் என்பார்! நேர் வடிவங்கள் இருக்க அவற்றை ஒழித்துத் திரிபு வடிவங்களைத் தேடிச் சேர்க்கத் துணிவானேன்?" என்று வினாவுவது தவறாகாதே!

தொல்காப்பியம் பாட்டு தொகை திருக்குறள் கீழ்க்கணக்கு சிலம்பு மேகலை இறையனார் களவியல் எனக் கொண்ட பழந்தமிழ்ச் சொல்லடைவில் ஓரிடத்துத்தானும் 'அஇ, அவு' என்னும் வடிவோ, அய் (ஐ), அவ (ஔ) என்னும் வடிவோ இடம் பெற்றதைக் காட்ட முடியுமா? இருந்தால்தானே காட்ட முடியும்.

அவ்வை, அவ்வையர் என்னும் திரிபு வடிவங்கள் சிலம்பிலும் மேகலையிலும் மூவிடங்களில் வந்துள.

"அவ்வை உயிர்வீவும் கேட்டாயோ தோழி" (சிலம்பு. 3:29:8)

"அவ்வை மகளிவன்தான் அம்மணம் பட்டிலா
வையெற்று ஐயையைக் கண்டாயோ தோழி" (சிலம்பு. 3:29:8)

"தவ்வைய ராகிய தாரையும் வீரையும்
அவ்வைய ராயினீர் நும்மடி தொழுதேன்" (மணி. 11: 136–137).

இவை திரிபு வடிவங்கள்.

ஐ முதலாகிய சொற்கள் பழந்தமிழ் அடைவில் 113 இடம் பெற்றுள. வருமிடங்களோ ஐவனம் மட்டும் 14 இடங்கள். ஓரிடத்துத்தானும் 'அய்வனம்' வரவில்லை. ஐயரும், 'அய்யர்' என ஓரிடத்துத்தானும் வரவில்லை. ஐயர் வந்த இடங்கள் 25. எதுகை மோனைக்காகக் கூட திரிபு வடிவங்கள் பயன்படுத்தப்படவில்லை என்பதை இவற்றால் உணரலாம்.

ஔ, ஔகாரம், ஔகார இறுவாய் என்னும் மூன்றே பழந்தமிழ் அடைவில் இடம் பெற்றவை. ஔ - அவ் என வரல் பற்றி எண்ணிப் பார்க்கவே தேவையில்லை! 'ஔவையார்' என்பதும் தொகுப்பாளர் உரையாளர் வடிவே அன்றி, நூலொடு - பாடலொடு - கூடியதன்றாம்! இதனிலையே இவ்வாறாக அவ்வையாரைப் பழந்தமிழர் பயன்படுத்தினர் எனலாமோ?

"ஐ, ஔ வேண்டா என்பதே எம்முழக்கம் அதற்கு எம் துணிவே துணிவு!" என்பாராயின் அவர் முழங்கட்டும்! அவர் முழக்கத்தை அவர் வீட்டுச் சுவரும் ஒப்பாது!

21. "ஒன்றே ஒன்று ஆனாலும் ஒரு கோடி" (1990)

[இரா. இளங்குமரன்]

ஒன்று – தொடக்க எண்!

கோடி – கடைசி எண்!

கோடி – கடைகோடி; கடைசி என்னும் பொருளில் இன்றும் இருவகை (பேச்சு, எழுத்து) வழக்குகளிலும் உண்டு.

கோடியின் மேல்வரும் எண்ணும் அடுக்கிய கோடி, கோடி கோடி, கோடா கோடி, கோடானு கோடி – என வழங்குதலும் இருவகை வழக்குகளிலும் உண்டு!

ஒன்றையே கோடியாகக் கருதுதலும் உலகியல் செய்தி! உளவியல் செய்தி! கிட்டற்கு அரிய ஒன்று – கிட்டுதற்கு அரிய ஒருவர்க்குக் கிட்டுமானால் ஒன்றே கோடியாகும்!

வறிய ஏழைக்குக் கிடைத்த புதுத்துணி ஒன்று அவனால் கோடியாகக் கருதப்பட்ட நிலையில் இருந்து கிளர்ந்ததே புதுத்துணிக்குக், 'கோடி' எனும் பெயர்! அது, பெற்றவன் உள்ளக் களிப்பால் – காலத்தின் மதிப்பால் – 9ிட்டிய எண்ணத்தின் வழிவந்த எண்ணிக்கைச் சிறப்புச் சொல்! இதனைக்,

"காலத்தி னால்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்னும் நம்மறை நவில்கின்றது.

மயங்கி விழுந்தான் முகத்தில் தெளிக்கும் ஒரு குவளைத் தண்ணீர், எவ்வளவு மதிப்புக்குரியது! அது, உயிர்க்கொடை யல்லவோ ஆகிவிடுகின்றது! உயிர்பெற்ற அவன், அதன் மேல் செய்யும் தொண்டுகளுக்கெல்லாம் அச்செயல் அன்றோ முதலாய், மூலவைப்பாய், முழுக்கொடையாய் ஆகிவிடுகின்றது! பசியாத வனுக்குப் பத்துவகைக் கறியுடன் சோறு போட்டென்ன ஆவது? கேட்டுக்கு மேல் கேடுதானே ஆக்கும்! ஆனால் மயங்கியவனுக்குத் தெளிக்கும் தண்ணீர் மாப் பெருங்கொடையல்லவோ!

இன்று தமிழன்னை மயங்கிக் கிடக்கிறாள்! மயங்காத அவளை – மூவாயிர ஆண்டு மோது வடமொழிக்கும் ஈடு தந்து பீடுற நின்ற அவளை மயங்கிக் கிடக்க, வல்லாண்மைச் சூழ்ச்சியிலே வல்லோர் செய்து விட்டனர்! செய்தும் வருகின்றனர், தொடர் தொடராக!

ஆங்கிலவரின் ஆங்கிலத்தால், தன் விழிகளைத் தகவாக விழித்து உலகவர் பார்வைக்கும் உரிமை உற்றவள் அவள்! 'உலக முதன்மொழி அவளே' எனப் பிறர் பிறகும் துணிந்து கூறக் துலங்கி வருபவள் அவள்! ஆனால், ஆங்கிலங் கற்ற இற்றைத் தமிழ்ப் போலி ஆங்கிலரால் தமிழன்னை இன்று விழி பிதுங்குகிறாள்! நாக்குத் தள்ளப் படுகிறாள்! தூக்கிலே மாட்டிக் தொங்க விட்டு அலைக்கழிக்கவும் படுகிறாள்! முற்றாகக் கழுத்தை நெரிக்க முயல்வார் வல்லாண்மை தலையெடுக்கும் முன், நல்லாண்மை நடவடிக்கையால் தாயின் உயிரைக் காத்தே தீர வேண்டும்! புற்றீசல் போலாகக் கிளம்பியுள்ள ஆங்கில வழிப்பள்ளிகள் அனைத்தும் தமிழ்வழிப் பள்ளிகள் ஆக்கப் படவேண்டும்! மறுத்தால் இரக்கமற்ற அவர்கள் மேல் இரக்கம் காட்டுதல் 'அறக் கொடுமை' எனத் துணிந்து முடியே ஆகவேண்டும்! வேறு வழியே இல்லை!

"இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து"

"ஊரைக் கெடுக்கும் ஒழுக்கக் கேடரை ஊரார் கூடிக் கரும்புள்ளி செம்புள்ளி குத்திக் கழுதைமேல் ஏற்றல் ஒரு காலத்து வழக்கமாக இருந்தமை முதியோர் அறிவர்! ஆனால் இற்றை ஆங்கிலத் தமிழ்ப் புதியர் என்ன செய்தனராம்!

தமிழில் பேசிய ஒரு குழந்தையைத் தமிழில் பேச மாட்டேன் என அட்டையில் எழுதிக் கழுத்தில் மாட்டிப் பள்ளி வளாகத்தைப் பன்முறை சுற்றச் செய்து – மற்றையோரைக் கை தட்டி எள்ளச் செய்து – அந்தத் தமிழ் மலரின் நெஞ்சத்தைக், கொஞ்சமும் இரக்கமில்லா நஞ்ச நெஞ்சத்தால் வாட்டினராம்! இது மெய்யானால் தமிழ்பேசிய அக்குழந்தையைப் படுத்திய இழிபாடா! இல்லை! இல்லை.

தமிழ் உணர்வாளர்களை எல்லாம் ஒருங்கே கரும்புள்ளி செம்புள்ளி குத்திக் கை கொட்டி நகைத்த கண்ணிலாச் செயல் ஆகும்! இந்நிலை தமிழ் மண்ணில் நிகழவிட்டு வைப்பது கொடுமையில் கொடுமையாம்!

ஆதலால், ஆங்கிலம் ஒரு மொழிப்பாடமாக இருக்கட்டும்! தமிழே பயிற்று மொழிப்பாடமாக அமையட்டும். இந்த நிலை, பாலர் பள்ளி முதல் பல்கலைக்கழகம் ஈறாக ஆகட்டும்! "தமிழே பயிற்று மொழி" இதில் எங்கும் எதிலும் விலக்கில்லை! எவர்க்கும் விலக்கில்லை! என்னும் ஒரே ஓர் ஆணையைத் தமிழ்க் காவலர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பிறப்பிக்கட்டும்! அவ்வொன்றும் தமிழுக்குக் கோடி நன்மை செய்தது ஆகும்!

முத்தமிழ் அறிஞர் முதல்வர் மலர்
மீ.சு. இளமுருகு பொற்செல்வி 1990

மேலாய்வுக்குக் காண்க

> எழுத்துச் சீர்திருத்தத்திற்குத் தமிழ் அறிஞர்கள் எதிர்ப்பு
செந்தமிழ்ச் செல்வி 56

> உயிர்மெய் வடிவம் ஓரியலின்மை
செந்தமிழ்ச் செல்வி 53

> எகர ஒகர இயற்கை

> தமிழ் நெடுங்கணக்கு

> எழுத்து மாற்றம் திருவைந்தெழுத்தைச் சிதைக்கும்
செந்தமிழ்ச் செல்வி 26

> தமிழ்த்தாய்க் கொலை 1, 2, 3

> நெடுங்கணக்கு அரிவரி **செந்தமிழ்ச் செல்வி (1934)**

> பெரியார் சீர்திருத்தம் என்னும் பெயரில்
தமிழ்தான் திறந்த மடமா? **தென்மொழி (1979)**

> எழுத்துச் சீர் (குறைப்பு) திருத்த
–மா.பூங்குன்றன் **தென்மொழி**

> எழுத்துச் சீர்மை மறுப்பும் மறுபக்கமும்
தமிழியம் ஆய்வுக்களம் பேரா. மலேசியா

> தமிழ் வளர்ச்சி மன்றம்
இரண்டாவது மூன்றாவது கூட்டக் குறிப்புரை.

> Manickam, V.Sp. (1980) 'Script Reform in Tamil' (1977 Seminar Paper) in "Sociolinguistics and Dialectology" (Edrs : Agastia lingam; and K. Karunakaran; Annamalai University, pp 522-29;)

தமிழ், எல்லா நிலைகளிலும் பயிற்று மொழியாதல் வேண்டும். மழலையர் பள்ளியில் ஆங்கிலப் பாடம் என ஒன்று தவிர எஞ்சியவெல்லாம் தமிழ் வழியாகவே இயலல் வேண்டும்.

பல்கலைக்கழகப் பட்டம் தாங்கி எவராயினும் தமிழ பயிலாமல் பட்டம் பெற இயலா நிலை இருத்தல் வேண்டும்.

தமிழக அரசு, அப்பெயர்க்கு உரிமை உடையது என்பதை மெய்யாக்குவது, தலைமைச் செயலகம் முதல் சிற்றூராட்சி வரை தமிழால் நடையிடச் செய்வதேயாம்.

இவற்றைப் பற்றி ஒருமித்த குரல் எழுப்பித் தமிழ்க்காலவல் செய்ய வேண்டிய பொழுதில், வரிவடிவு பற்றிப் பேசித் திசை திருப்புவது தமிழ் நலம் பேணுவார் கடமை அன்றாம்.

இரா. இளங்குமரன்

திருவள்ளுவர் தவச்சாலை

அல்லூர் 620101

திருச்சிராப்பள்ளி மாவட்டம்